மனம் வெந்துருகி ஒன்றும் சொல்லாதவனாய், வியர்வரும்பிச் சோர்வெய்தி ஒழியாத பெருமூச்சு விடுபவனாய்க் கண்களில் துக்கக் கண்ணீர் ஊற்றெடுக்கும் படி யிருந்தான். எ - று. (௬௬௭)

என்னு யிர்த்துணைத் தம்பியை யின்னுயி ரொழித்து
மன்னு மாமணி கவர்ந்தனன் மழைமுகில் வண்ணன்
பின்னொ ருத்தரிங் கிதுசெயப் பெறுகிலர் பெருநீர்த்
தொன்னி லம்புரப் பவற்கிது பிழையெனச் சொற்றான்.

(இ - ள்.) எனது உயிர்த்துணைவனாகிய இளவலை இனிய உயிர் செகுத்து, சூற்கொண்ட மேகம்போலும் நிறந்தங்கிய கண்ணனே சிறந்த சியமந்தகமணியை அபகரித்துக்கொண்டான். வேறெவரும் இப்படிக் கொல்லத்தக்கவர்களல்லர். பெரிய கடல்சூழ்ந்த பழய உலகத்தைக் காக்கும் மன்னவனுக்கு இது தவறு பாடாகுமென்று சத்தியசித்து சொன்னான். எ - று. (௬௬௮)

இதுவு ணர்ந்தன னுயிர்புரந் தெழுமுகில் வண்ணன்
கதுமெ னப்புகுந் தவன்புகு நெடுவரைக் கானிற்
குதிரை யின்குளம் படிச்சுவ டோர்ந்தனன் குறுகி
யதிர்ம ணிக்கழ லரசுபட் டொழிப்புகுந் தறிந்தான்.

(இ - ள்.) இவன் கூறிய வார்த்தையை, சீவர்களைக் காக்கும் மேகவண்ணனாகிய கண்ணபிரான் தெரிந்து, அந்தப் பிரசேனனென்பவன் வேட்டைக்குப் போன பெரிய மலையையுடைய காட்டில் அதிவிரைவாகச் சென்று, குதிரையின் குளம்புச் சுவட்டினைக் குறியாகப் பார்த்துக்கொண்டுபோய் நெருங்கி, சத்திக்கின்ற நவரத்தினங்கள் பதித்த வீரக்கழலணிந்த அம்மன்னவன் இறந்தவிடத்திற் சென்றுணர்ந்தார். எ - று. (௬௬௯)

வயங்கு பொன்முடி பூழ்தியிற் புரண்டதும் வயிரத்
தயங்கு திண்புயம் வகிர்படப் பிளந்ததுந் தரைநீத்
தியங்கு சோரிசோர்ந் திழிவது நோக்கின னிவனைப்
பயம்ப டாதிது செய்ததா ரெனமனம் பனித்தான்,

(இ - ள்.) பிரகாசிக்கும் பொன்னாலாகிய கிரீடமானது புழுதியிற் புரண்டுள்ளதையும், வீரத்தன்மைவாய்ந்த வலிதங்கிய தோளானது பிரிவுபட்டுப் பிளந்துள்ளதையும், தசைகளைவிட்டுப் பெருகுகின்ற இரத்தம் பரவியோடுவதையும் பார்த்து, இந்தப் பிரசேனனைப் பயமில்லாமல் இப்படிக் கொலைசெய்தவன் யாவனென்று மனநடுக்குற்றனர். எ - று. (௬௭௦)

மாய னத்தலை நின்றகன் றேகிவா ளெயிற்றுச்
சீய வளருகிர்ச் செம்புனற் சுவட்டடி தெரிய
வாய வெஞ்சின மடங்கல்கொன் றதுவென வறிந்து
தீய வள்ளுகிர்க் கோளரி யிறந்துழிச் சென்றான்.

(இ - ள்.) கண்ணபிரான் அங்கு நின்றும் அகன்று சென்று, வாட்படை போலுங் கூர்மைவாய்ந்த பற்களையுடைய சிங்கத்தின் கூரிய நகங்களோடு கூடிய உதிரநனைதோய்ந்த அடிகளின் குறி தெரியவும், அந்தக் கடுங்கோபமுடைய சிங்கந்தான் கொன்றதென் றுணர்ந்து, அக்கொடிய சிங்கமானது இறந்துகிடக்கும் இடத்திற்குப் போயினர். எ - று. (௬௭௧)

இறந்து நீங்கிய கோளரி நோக்கின னிதனை
மறந்து றந்துயிர் செகுத்ததா ரெனமனத் தளர்ந்தான்
புறந்தி ரிந்தன னுளியவெம் போத்தடி போகச்
சிறந்த சிந்தைய னாங்கதன் சுவட்டிடைச் சென்றான்.

(இ - ள்.) உயிர் நீங்கிக்கிடந்த சிங்கத்தைக்கண்டு, இதனைக்கொடுமைக்குப் பயப்படாதவர்களாய் உயிர் தொலைத்தவர்கள் யாரென்று, மனதிற் கருதியவராய் வெளியே யுலாவுகையில், அங்கே கொடிய ஆண் கரடியின் அடிச்சுவடு சென்றிருப்பதால், மேம்பட்ட ஆலோசனையுடைய கண்ணபிரான் அச்சுவட்டின் வழியே சென்றனர். எ - று. [உளியம்=கரடி.] இங்கே சாம்பவன். (௯௭௨)

சென்ற போத்தடி நெடுவனப் பிலத்துழைச் செல்ல
வொன்றி யூடுபுக் குறற்கரும் பாதலத் துற்றா
னன்று தொட்டிலுட் டூக்கிய சியமந்தக மதனைக்
கன்று சிந்தையிற் பறித்தனன் கடனிறக் கடவுள்.

(இ - ள்.) கடல் நிறங்கொண்ட கண்ணபிரான், நடந்திருந்த கரடியின் அடிச்சுவட்டின் வழியே அக்காட்டிலுள்ள பிலத்துட் பிரவேசித்துப்போய், ஒருவரும் அடைதற்கரிய பாதலலோகமெய்தினர். அப்பொழுது தொட்டிலிற் றூங்கவிட்டிருந்த சியமந்தக மணியைக் கோபங்கொண்ட மனத்துடன் பறித்தெடுத்தனர். எ - று. (௯௭௩)

தூங்கு தொட்டினின் றாட்டிய சுரிகுழற் சேடி
யேங்கு நெஞ்சின ளரற்றினள் முன்றில்வீழ்ந் திரங்கி
யோங்கு வெங்குர லுணர்ந்தனன் சாம்பவ னுற்றான்
வீங்கு வெஞ்சினத் திருவர்க்கும் விளைந்தன வெம்போர்.

(இ - ள்.) அசைந்துகொண்டிருக்கும் தொட்டிலிற்கருகே நின்று அதனை யசைத்துக்கொண்டிருந்த சுருண்ட கூந்தலையுடைய தாதியானவள், ஏக்க மெய்தின மனமுடையவளாகிப் புலம்பினாள். முற்றத்தில் விழுந்து வருந்திக் கதறுங் கடுங்குரலைச் சாம்பவனறிந்து ஆங்கெய்தினான், மிக்க கோபமுடைய இவ்விரு வீரர்க்கும் கொடும்போர் நிகழ்ந்தது. எ - று. (௯௭௪)

ஒய்யெ னப்புகு மிருவரு மொன்பதிற் றிரட்டி
வைகல் வெஞ்சமர் விளைத்தனர் சாம்பவன் மருளாச்
செய்ய சிந்தனை தெரிந்தன னுலகெலாந் திதிக்கு
மைய னாங்கொலென் றயிர்த்தன னடைந்தன னச்சம்.

(இ - ள்.) விரைந்து போர்செய்யப் புகுந்த இரண்டுபேரும் பதினெட்டு தினங்கள்வரையில் கொடும்போர் செய்தார்கள். சாம்பவன் மயங்கிச் செம்மையாகிய அறிவினால் உலகத்தையெல்லாங் காக்கும் கடவுளோவென்று ஆலோசித்துச் சந்தேகித்துப் பயங்கொண்டனன். எ - று. (௯௭௫)

உந்தி யம்புயத் திருந்துல குயிரெலா மளிக்குந்
தந்தை தந்தையென் றுணர்ந்திலன் றாமரைத் தடங்கட்
பைந்து ழாய்முடிப் பாப்பணைப் பள்ளியெம் பரனே
விந்தை கேள்வநின் சரணமே சரணென வீழ்ந்தான்.

(இ - ள்.) உந்திக் கமலத்திலிருந்து உலகங்களையெல்லாம் படைக்கும் பிரமனுடைய தந்தையென்று தேவரீரை அறியாமற் போயினேன். தாமரை மலர்போலும் பரந்த விழிகளையும் பசிய துளவமாலையணிந்த முடியையும் சேஷ சயனத்தையுமுடைய எமது பரமனே! திருமகள் நாயகரே! தேவரீர் திருவடிகளே கதியென்று நமஸ்கரித்தான். எ - று. (௫௭௬)

தானு வந்திடு தவத்தினாற் றனிப்பயந் தெடுத்த
தேனெ னுஞ்சிறு குதலையுஞ் சிமந்தக மணியு
ஞான நாயக பெறுதியென் றளித்தன னயப்பாற்
பூந் துளவினோன் பூதலம் புகுந்தான்.

(இ - ள்) சாம்பவன், தான் விரும்பிய தவத்தினால் சிறப்பாகப்பெற்றெடுத்த தேனென்று சொல்லத்தக்க சிறிய குதலைச்சொல்லையுடைய (சாம்பவதியெனும்) பெண்குழந்தையையும் சிமந்தக மணியையும், ஞான நாயகரே! பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசையோடு கொடுத்தனன். அழகிய தேனுடைத்தாகிய துளவமாலையணிந்த கண்ணபிரான் அவற்றைப்பெற்றுக் கொண்டு பூலோகமெய்தித் தமது துவாரகையையடைந்தனர். எ-று. (௫௭௭)

புகுந்து சத்திர சித்தனை வருகெனப் புகன்று
திகழ்ந்த மாமணி கொடுத்தனன் சிமந்தக மணிபோ
யகன்ற வாறெலா மருளின னவனுளத் தடைத்து
மகிழ்ந்து மாமணி யொடும்பெற வளித்தனன் மகளை.

(இ . ள்.) துவாரகைக்கு வந்து சத்திர சித்தனை வருகவென விளித்து, விளங்கிய சிமந்தகமணியைக்கொடுத்து, அச்சிமந்தகமணிபோய் நீங்கியிருந்த வகையெல்லாஞ் சொல்லினர். அவற்றையெல்லாம் அவ்வரசன் மனதிலுணர்ந்து மகிழ்வுற்றவனாய், சிறந்த அம்மணியோடு (சத்தியபாமையெனும்) தன் புத்திரியையுங்கொடுத்தான். எ - று. (௫௭௮)

சாமபவன் சாம்பவதியெனும் புத்திரியையும், சத்திரசித்து சத்தியபாமையெனும் புத்திரியையும் முறையே கொடுத்தனா.

திருமகட்குநா யகனுமற் றுவணித் திங்கள்
வருச துர்த்தியி னோக்கலு மிங்ஙன மயங்கி
யிருநி லத்தினோ ரிகழ்ச்சிபெற் றெழிநதன னென்றாற்
பெருகு மாதவத் துறையுளீர் காண்பரோ பெரியோர்.

(இ - ள்.) இலக்குமி கணவராகிய கண்ணபிரானும், ஆவணி மாசத்தில் வரும் சதுர்த்தி திதியிற் சந்திரனைப் பார்த்தவுடனே இவ்வாறு மயக்கமெய்தி, பெரிய பூலோகத்தாரால் அவமதி யெய்தினரென்று சொல்லப்படுமாகில், மிக்க பெருந்தவ நெறியில் ஒழுகும் முனிவர்களே! பெரியோர் அத்தினத்திற் சந்திரனைப் பார்ப்பார்களோ? எ - று. (௫௭௯)

இதனை மார்கழித் திங்களிற் சட்டியி னிழைத்த
விதிவ ழுக்குறு தன்பொடு நோற்பதும் விதியா
லுதிகொள் வேற்படை வச்சிர மாவினோற் றடுத்த
முதிர்பெ ரும்பிணிச் சாகரங் கடந்தனன் முன்னாள்.

(இ - ள்.) இவ்விரதத்தை மார்கழிமாச சஷ்டிதிதியிலும் ஆகமமுறை மாறாது அன்புடன் அநுஷ்டிப்பதும் முறையாகும். பூர்வத்தில் கூர்மைவாய்ந்த வேற்படைதாங்கிய வச்சிரமாலியெனும் மன்னவன் அத்திதியில் இவ்விரதத்தை யநுஷ்டித்துத் தனக்குச் சம்பவித்திருந்த முதிர்ந்த பெருவியாதியென்னுங் கடலைத்தாண்டினன். எ - று. (௩௪0)

அன்றி மைந்தரிற்சிறந்தன னவனிகாத் தளித்து
வென்றி வெண்குடை விளங்கினன் மென்மருங் கனுக்குங்
குன்ற வெம்முலைத் திலோத்தமை மனையெனக் கொண்டா
னென்று மீறிலாக் கயிலைபெற் றிருந்தன னின்னும்.

(இ - ள்.) அன்றியும், புத்திரபாக்கியத்திற் சிறந்தவனாய், உலகினைக் காவல் பூண்டு பாதுகாத்து வெண்கொற்றக் குடையுடையவனாய் விளங்கினன். நுண்ணிய இடையை வருந்தச்செய்யும் மலைபோலும் பூரித்த தனங்களையுடைய திலோத்தமையை மனைவியாகக்கொண்டு, எக்காலத்திலும் இறுதியில்லாத கைலாயபதவி யெய்தி இதுகாறும் அங்கே வீற்றிருக்கின்றான். எ - று.

உருக்கு செம்பொனைத் தொழுகுபுன் புரிசடை யுடையீ
ரருட்பெ ருங்கட லைங்கரன் விரதமுற் றறைந்தேந்
திருக்கு வெள்ளெயிற் றசுரர்வெங் குலமுத றீர
முருக்கு வேற்படை யறுமுகற் குள்ளன மொழிவாம்.

(இ - ள்.) உருக்கிய செம்பொன்போன்று நீண்டு முறுக்கிய சிறுசடையையுடைய முனிவர்களே! பெரிய கருணைக்கடலாகிய விநாயகப்பெருமான்விரதங்கள் முற்றுஞ் சொன்னோம். வஞ்சனையுடையவர்களாகிய வெள்ளியபற்களையுடைய கொடிய அசுரகுலத்தின் வேரறும்படி கொன்றருளிய வேற்படைதாங்கிய அறுமுகப் பெருமானுக்குரிய விரதங்களைச் சொல்லுகின்றோம். எ - று.

ஐப்ப சித்தலைச் சுக்கிர வாரத்தி னலரி
யுற்ப வித்திடு காலையி லொண்புனல் குடைந்து
கொறகொள் வேற்படைக் குமரனை யுளம்படக் குணியா
முற்செ யப்படு தினக்குறை முறையினன் முடித்து.

(இ - ள்) ஐப்பசிமாசத்தில் வரும் முதற்சுக்கிரவாரத்தில், சூரியனுதிக்குங் காலைப்பொழுதில் சிறந்த நீரில் ஸநானஞ் செய்து, வெற்றிபொருந்திய வேலாயுதமேந்திய குமாரசுவாமியை மனதிற் பொருந்தத் தியானித்து, காலையிற் செய்யவேண்டிய நித்திய கர்மாநுஷ்டானங்களை முறைப்படிசெய்து முடித்து.

ஒளிப்ப சும்பொனாற் சூரடு மறுமுக னுருவந்
தெளித்த வன்பொடு மியற்றிய பின்னரிற் றிரைநீர்
களிப்ப சும்பொனிற் றசும்புநெற் பரப்பிய நாப்பண்
குளிப்ப வைத்துமாந் தழைமணிக் கும்பமேற் கொடுத்து.

(இ - ள்.) சூரனை வதைத்த ஆறுமுகப்பெருமான் திருவுருவத்தை, பிரகாசம் பொருந்திய பசும் பொன்னாலே, மனந்தெளிந்த அன்புடன் செய்வித்த பிறகு, நெல்லைப்பரப்பி அதனிடையே, அலைகளையுடைய குளிர்ந்த நீர் நிரம்பிய பசும்பொன்னாற்செய்த குடத்தை யழுந்தவைத்து, அழகிய அக்குடத்தின்மேல் மாவிலையைச்செருகி. எ - று. (௩௪௪)

இயற்று பொன்னுருக் கௌவிய சுத்தியி னிலக்கி
யுயர்த்து கும்பமீ தமைத்துநூல் விதிமுறை யுரைத்த
முயற்சி யாரண மந்திரப் பவித்திர முற்றச்
செயப்ப டுந்திரு வருச்சனை முதலிய திருத்தி.

(இ - ள்.) அமைத்துள்ள பொன்னுருவத்தைப் பஞ்ச கௌவியத்தினாற் சுத்தி செய்து நெல்லின் மீது வைத்திருக்கும் கலசத்தின்மீதமர்த்தி, ஆகம விதிப்படி தொடர்ச்சியாயுள்ள வேத மந்திரசுத்தி முடியும்படி செய்யப்படுவதாகிய சிறந்த அர்ச்சனாதிகளைத் திருத்தமாக முடித்து. எ - று. (௬௮௫)

மங்கை பாகன தாலயம் புகுந்துற வணங்கிப்
பொங்கு தீபமே முதலிய வமுதொடும் பொலிவித்
தெங்க ளீசனைத் தெக்கணம் வலன்றிரிந் தேத்திக்
கங்கு லிற்பெறு பலாதியுண் டத்தினங் கழித்து.

(இ - ள்.) பின்னர், பார்வதி பாகராகிய சிவபெருமானது ஆலயத்திற் சென்று நிலமிசைப்படிய நமஸ்கரித்து, விசேடித்த தீபம் நைவேத்தியம் முதலியவற்றுடன் விளக்கமாகச்செய்வித்து எங்கள் பரமேசுவரனை வலப்புறமாகப் பிரதக்ஷிணஞ்செய்து தோத்திரித்து, இரவிற் கிடைத்த பழ முதலியவற்றைப் புசித்து அத்தினமகற்றி. எ - று. (௬௮௬)

அற்றை நாட்படுங் கங்குனீத் தலரிவந் தெழுந்த
பிற்றை நாட்புனல் குடைந்துதங் குறைநிறை பின்னர்க்
கற்றை வார்சடை யெம்பிராற் கைதொழு தமைத்த
மற்றை விம்பமுங் கும்பமு மறையவர்க் குதவி.

(இ - ள்.) அன்றையதினத்தின் இரவைக்கழித்து, அருணோதயமாகிய மறுதினம் நீரில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களைச் செய்து முடித்தபிறகு, தொகுதியாக நீண்டுள்ள சடையையுடைய எமது சிவபெருமானைக் கைகூப்பி வணங்கி, ஸ்தாபித்துள்ள அக்கலசத்தையும் அதன்மேலுள்ள சண்முகேசன் திருவுருவத்தையும் அந்தணருக்குத் தானமளித்து. எ - று. (௬௮௭)

அடிசி லாரமு தாங்கவர்க் கினிதென வருளிப்
படிசி ரம்படப் படிந்தவர்ப் போக்கிய பின்னர்க்
குடில வேணிநம் பரனடி யவரொடுங் கூடிக்
கடிகை யொன்பதிற் பாரணந் துய்த்துள களிப்பார்.

(இ - ள்.) அந்தணருக்குச் சிறந்த அமுதத்தை இனிமையானதெனச் சொல்லும்படி படைத்து, பூமியிற் சிரசானது படியும்படி நமஸ்கரித்து அவர்களையனுப்பிய பின்னர், கங்காநதியைத் தரித்த சடையையுடைய சிவபெருமானது திருவடியார்களுடன் கலந்து, ஒன்பது நாழிகைக்குள்ளாகப் பாரணஞ்செய்து மனக்களிப்படைவார்கள். எ - று. (௬௮௮)

ஈது முற்படு விரதமற் றிதனையிப் பரிசே
யோது சித்திரை முதலிய வருடமொன் றுற்ற
தீதில் கார்த்திகை யாதிரண் டெய்துமத் தினத்திற்
காது சூர்ப்பகை யருள்பெற நோற்பது கடனே.

(இ - ள்.) இதுவே முதன்மையான விரதம், இவ்விரதத்தை இப்படியே சொல்லப்படுகின்ற வருடமொன்றில் வரும் சித்திரை முதலிய பன்னிரு மாதங்களிலும் குற்றமில்லாத கார்த்திகை நட்சத்திரம் வரும் பன்னிரு நாட்களில், சூரபத்மனைக் கொன்றருளிய பகைவராகிய குமாரக் கடவுளின் திருவருளை யடையும்படி அநுஷ்டிப்பது கடமையாம். எ - று. (௩௮௯)

முருக னன்புறு விருச்சிகத் திங்களே முதலாய்
வருட மொன்றினிற் சட்டிநா லாறவை வருநா
ளருளி னப்படித் திருவுருக் கும்பமீ தமைத்தே
யுருகு காதலி னேற்பவ ரும்பரிற் பொலிவார்.

(இ - ள்.) முருகக் கடவுளுக்கு விருப்பந்தங்கிய கார்த்திகை மாதமுதலாக வருஷமொன்றிற்கு இருபத்துநான்கு சஷ்டிகள். அவை சம்பவிக்குந் தினங்களில், இவ்வகையே அன்போடு திருவுருவமைத்துப் பூரண கும்பத்தின்மீது ஸ்தாபித்து, மனமுருகும் பேரவாவுடனே அநுஷ்டிப்பவர்கள் தேவர்கள்போல விளங்கிப் பிரகாசிப்பார்கள். எ - று. (௩௯௦)

நீல வண்டறை பசுந்துழாய் நெடும்புயல் வண்ணன்
கோல வுந்தியந் தாமரை நான்முகக் குரிசில்
கால மோர்ந்திவை வான்முறை நோற்றனர் கடுங்கா
ரால மன்னவா ளசுரரைக் கடந்தன ரந்நாள்.

(இ - ள்.) அவ்வாதிகாலத்தில், நீல நிறந்தங்கிய வண்டுகள் ரீங்காரஞ்செய்யும் பசிய துளவமாலையணிந்த நெடிய மேகவண்ணராகிய திருமாலும், அழகிய நாபிக்கமலத்திலுதித்த நான்கு முகங்களையுடைய பிரமனும், இவ்விரதத்தை யநுஷ்டிக்குங் காலநியதியை யுணர்ந்து அநுஷ்டித்தவர்களாய், கொடுமையாய்க் கறுத்தவிடம்போன்ற காந்தியுடைய அசுரர்களைச் சயித்தார்கள். எ - று.

முழுநி லாக்குடை முசுகுந்தன் மனுமுறை புரந்தோ
னெழுவு திண்புய னேற்றனன் கணங்களுக் கிறையா
யொழுகு வெள்ளரு வித்திருக கயிலைபெற் றுயர்ந்தா
னுழுத வத்தினி ரவனையெத் தேவருந் தொழுவார்.

(இ - ள்.) எல்லோரும் வணங்கத்தக்க தவமுடைய முனிவர்களே! பூர்ண சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையின் நிழலில் மனுமுறைப்படி அரசு செய்திருந்த உயர்ந்த வலிதங்கிய தோள்களையுடைய முசுகுந்த சக்கிரவர்த்தி, இவ்விரதத்தை யநுஷ்டித்துச் சிவகணங்கட்குத் தலைவனாய், வெள்ளிய அருவியாறு இழிந்துகொண்டிருக்கும் திருக்கைலாயபதவியடைந்து மேன்மையெய்தினான். அச்சக்கிரவர்த்தியைத் தேவர்களெல்லாரும் வணங்குவார்கள். எ - று.

நாரதப்பெரும் பெயரினோன் முதலநம் போல்வார்
பேரருட்பெற நோற்றனர் வழுவுறு முறை பிழையார்
மேரு மால்வரை முதலிறந் திறபபினும் விளியாச்
சார்வ ரும்பெரும் பதவிபெற் றின்னமுஞ் சரிப்பார்.

(இ - ள்.) நாரதரென்னும் பெரும்பெயர்பெற்றோன் முதலிய நம்மைப் போன்ற முனிவர்களும், விதிவழுவாத வகையாக முருகக் கடவுளின் மேன்மை

தங்கிய திருவருளெய்தும்படி இவ்விரதத்தை யநுஷ்டித்தவர்களாய், பெருமை மிகுந்த மேருமலை முதலியன அழிந்தொழியினும் அழியாததாய், அடைதற் கரிதாயுள்ள பெரும்பதவிகளையடைந்து இன்னும் வசித்திருப்பார்கள். எ - று.

இத்த னிப்பெரு விரதநோற் றிழைப்பவ ரிறவா
முத்தி பெற்றவ ரெத்தனை பேரென மொழிவா
மத்த னாரிருங் கயிலையிற் றிருந்தன ரவரைச்
சித்த மோரினு நம்முழைத் தீமையுஞ் சிதறும்.

(இ - ள்.) இந்த ஒப்பற்ற பெரிய விரதத்தை யநுஷ்டித்து அழியாத முத்தி யெய்தியவர்களும் இப்போதும் அநுஷ்டித்து வருபவர்களும் எத்தனை பேர்களென்று சொல்லி முடிப்போம்? இவ்விரதத்தை யநுஷ்டித்தவர்களெல்லாரும் சிவபெருமானது திருக்கைலாயகிரியில் வீற்றிருந்தார்கள். அவர்களை மனதிலே தியானஞ்செய்தாலும் உடனே நமது தீவினைகளும் அழிந்துபோம். எ - று.

ஆத லான்மொழி விரதமூன் றவற்றினு ளடிகா
ளோதி லொன்றெனு நோற்பது வேண்டுமா லுமையாள்
காதன் மைந்தனைக் கருத்துற நினைப்பினுங் கதிமற்
றேது வேண்டுது மதுநமக் கெய்துவ தெளிதே.

(இ - ள்.) ஆனபடியால் நாம் சொல்லி முடித்த குமாரக் கடவுளின் விரதங்கள் மூன்று அவற்றில், [அடிகாள்] சுவாமிகளே! குறைத்துச் சொல்லுமிடத்தில் ஒரு விரதத்தையாகிலும் அநுஷ்டித்தல் வேண்டும். உமாபிராட்டியாருடைய ஆசைப் புதல்வராகிய இளைய பிள்ளையாரை மனதிற்பொருந்த ஒருமுறை நினைத்தாலும், நாம் எப்பதவியை விரும்புகின்றோமோ அது நமக்கடைவது சுலபமாம். எ - று. (௩௬௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கடுங்காலக் கொடுவடவைக் கொழுந்தனைய புரிசடையீர் கடனீர் ஞால, மடுங்காலத் திரிசூலப் படைமுதலோன் விரதமுத லறிந்த வெல்லா, மொடுங்காத வழியுரைத்தேம் வயிரவற்கொன் றுளவிரத முரைக்கே முள்ளஞ், சுடுங்காமத் தழலவிக்கு நீர்மையீர் கேண்மி னெனச் சொல்ல லுற்றான்.

(இ - ள்.) கடுமைதங்கிய இயமனையொத்த கொரேமமைந்த வடவாமுகாக்கினியின் கொழுந்துபோன்ற நிறமமைந்த முறுக்கிய சடையையுடைய நைமிச முனிவர்களே! மனதைச் சுடுகின்ற காமாக்கினியைத் தணிக்கின்ற தன்மையுடையவர்களே! கடல்சூழ்ந்த உலகத்தையழிக்கும் சர்வசங்காரகாலத் தலைவராகிய சூலப்படைதாங்கிய சிவபெருமானுக்குரிய விரதங்கள் முதலாக யாம் அறிந்தின்னவரையில் சுருங்காதவண்ணம் விளக்கிச்சொன்னோம். இனி, வைரவக் கடவுளுக்குரிய விரதமொன்றுண்டு. அதனையுங் கூறுவோம். கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லலாயினர். எ - று. (௩௬௬)

பூருவதின் றெழும்பரிதி யுத்தரஞ்சென் றியங்கியதைப் புதிய திங்கட், சாருமுதற் செவ்வாயிற் புலரியெழூஉ தருநதியிற் றோய்ந்த பின்னை, ரோர்வுருதங் கருமமுடித்திரசதத்தாற் பொன்னினாலுருவச் சூலப்,போர் விளைத்து நிலம்புரக்கும் வயிரவனைத் திருவுருவம் பொலியச் செய்து,

(இ - ள்.) கிழக்குத் திக்கினின் றுதிக்குஞ் சூரியன் வடதிசையாய்ச் சாய்கின்ற உத்தராயணத்தின் முதலாகிய தைமாதத்தில்வரும் முதற் செவ்வாய்க் கிழமையில், விடியற்காலத்தில் நித்திரை விட்டெழுந்து சிறந்த நதி நீரில் ஸ்நானஞ் செய்தபிறகு, உணர்தற்கரிய தங்கள் நித்தியானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு வெள்ளியாலாயினும் பொன்னாலாயினும் சூலாயுதத்தாற் போர் செய்து உலகத்தைக் காவல்பூண்ட வைரவக் கடவுளின் திருவுருவத்தை விளங்கச்செய்து. எ - று. (௫௧௭)

முன்புரைத்த பரிசுமணிப் பூரணகும் பந்திருத்தி முதல்வன் றன்னை, யன்புடனுங் கதினமைத் தப் பூசனைக்கென் றுரியவெலா மமைத்த பின்ன, ரென்பெருக்கு முடிபுனைந்த சிவபெருமான் றிருக்கோயி லெய்திமைதீர், பொன்புரையு நெடுந்தீப முதலளித்து வலன்றிரிந்து பணிந்து போற்றி.

(இ - ள்.) முன்னுரைத்தவகையே, அழகிய பூரணகலசந் தாபித்து, வைரவக் கடவுள் வடிவத்தை அன்போடு அக்கலசத்தின் மேலெழுந்தருளச்செய்து பூசித்தற்கு வேண்டிய வெல்லாப் பொருள்களையுஞ் சேகரித்த பின்னர், எலும்பு மாலையையும் வெள்ளெருக்க மலரையும் திருமுடியிலணிந்த சிவபெருமானுடைய ஆலயத்தையணுகி, களங்கமற்ற பொன்போலும் நிறமமைந்த பெரிய தீப முதலியவற்றைக் கொடுத்து பிரதக்ஷிணஞ்செய்து பணிந்து துதித்து.

பொருதிரைய நெடும்பரவை புடைகிடக்கு நெடுஞாலம் பொதிந்த கங்கு, லொருபொழுதுண் டிருக்கவல்லோ ருபவாசத் தொழிந்தகங்கு லொழிந்த பின்னர், வருபுலரி யெழுந்தாநறும் புனலாடிச் செய்வசெய்து மதிப்பூங் கண்ணி, தருசடில மௌலிவிம்பங் கும்பமொடு மறையோர்க்குத் தான நல்கி.

(இ - ள்.) எறிகின்ற அலைகளையுடைய நெடிய கடல்புடை சூழ்ந்துள்ள பெரிய பூலோகத்தில், நிரம்பிய இரவில் ஒரு முறையுண்டு உபவாசமிருப்பவர்கள், உபவாசத்தாற் கழிந்த இரவு நீங்கியபின்னர் வரும் விடியற்காலத்தி லெழுந்திருந்து நல்ல நீரில் ஸ்நானஞ்செய்து செய்யவேண்டிய நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, சந்திரனை அழகிய சிரோமாலையாகவணிந்த சடையையுடைய வைரவக் கடவுளின் திருவுருவத்தை, அதை ஸ்தாபித்துள்ள கலசத்துடன் அந்தணருக்குத் தானமாகவளித்து. எ - று. (௫௧௮)

ஆங்கவர்க்கு வழிபாடு பலவியற்றிப் போசனந்தந் தளித்த பின்னர்த், தேங்குநதி மதிபுனைந்த செழுஞ்சடிலச் சிவபெருமா னடியர்க் கூவிப், பாங்கிருத்தி யறுசுவையிற் பாரணங்கொண் டினிதுவப்பர் பசிய சட்டை, யோங்குவயி ரவக்கடவுட் குவந்திடுமா விரதமீ தினமொன் றுண்டால்.

(இ - ள்.) அவ்வேதியருக்குச் செய்யவேண்டிய பலவகைப்பட்ட உபசாரங்களையுஞ் செய்து திருவமுதளித்த பின்னர், தேக்கெடுக்குங் கங்காநதியையும் பிறைச் சந்திரனையுமணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானடியர்களை வருவித்து அவர்களைப் பக்கலிலிருத்தி, அறுசுவையோடு கூடிய அமுதைப் பாரணங்கொண்டு இனிமையாக மகிழ்வார்கள். பசிய சட்டையணிந்த பெருமை

யிக்க வைரவருக்குக் களிப்பை விளைக்கும் சிறந்த விரதம் இஃதாகும். இன்னுமொரு விரதமுள்ளது. எ - று. (௨௦௦)

சித்திரைத்திங் களினெடுத்த பரணிநா ளிவ்வாறு சிதையா வண்
ணம், பத்திபடு கும்பவிம்பம் படநோற்ப தின்னுமொன்றைப் பசியின்
வந்து, முத்திதரும் பரணிநாண் முறைநோற்ப திவ்வண்ண முயன்று
நோற்பார், தத்தருவித் திருக்கயிலைப் பேரரசு தமதெனவீற் றிருப்பர்
தப்பார்.

(இ - ள்.) சித்திரை மாதத்தில்வரும் பரணி நக்ஷத்திர தினத்தில் இவ்வகையே தவறாதபடி வரிசையாக வருகின்ற கலசமும் திருவுருவமும் அமையும்படி அநுஷ்டிப்பது. மற்றொன்று ஐப்பசி மாதத்தில் வந்து நன்மையைத்தரும் பரணி நக்ஷத்திரத்தன்று இம்முறையாக அநுஷ்டிப்பது. இவ்வகையாக இம்மூன்று விரதங்களையும் முயன்று அநுஷ்டிப்பவர்கள் தவறாதவர்களாய் அருவிநீர் பெருகும் திருக்கைலாயகிரியின் சிறந்த அரசாட்சி தம்முடையதாகத் தவறாமல் வீற்றிருப்பார்கள். எ - று. (௨௦௧)

ஓராழித் தனித்தடந்தே ருதயவனோ ரொருமூவர் படையினா
லும், பேராத கஞ்சுகம்பெற் றினிதுவந்தா னாதலினெம் பெருமானோ
ன்பு, சீராய மூன்றினின்மற் றொன்றேனு நோற்கினவர் தீமை யெல்
லா, மாராயி னெரிபடுபஞ் செனமாயுங் கயிலையிற்சென் றடைவர்
மாதோ.

(இ - ள்.) ஒற்றைச் சக்கரமுடைய ஒப்பற்ற விசாலமான தேரையுடைய சூரியன் இவ்விரதத்தை யநுஷ்டித்து, சிறந்த திரிமூர்த்திகளின் ஆயுதங்களாலும் அழியாத [கஞ்சுகம்] அங்கியைப் பெற்றுக்கொண்டு இனிதாகக் களித்தான். ஆதலால் எமது வைரவக் கடவுளின் விரதமாகச் சிறந்த மூன்றனில் ஒன்றையெனினும் அநுஷ்டிப்பார்களானால், ஆலோசித் துரைக்குமிடத்தில் அவர்கள் செய்த பாவங்களெல்லாம் தீப்பொறிபட்ட பஞ்சுப்பொதிபோல அழிந்துவிடும். திருக்கைலாயத்திற் சென்று சேர்வார்கள். எ - று. (௨௦௨)

ஈதுவயி ரவக்கடவுட் கியன்றுநிகழ் திருவிரத மிதுமுன் போகக்,
காதுநெடுங் கொடுவடவை கொப்புளிக்கு நெடுஞ்சுரிகைக் கரத்தனாகித்,
தீதிழைக்கும் பேரகந்தைத் தக்கனியற் றியவேள்வி சிதைய நூறிப்,
போதருமெம் பரமனெந்தை வீரபத்ரற் குளவிரதம் புகலக் கேண்மின்.

(இ - ள்.) இது வைரவக் கடவுளுக்கு இயற்கையாய் வழங்கிவரும் விரதமாகும். இதுமுடிய, சொல்லத்தக்க மிகக் கொடுமைவாய்ந்த வடவாக்கினியைக் கொப்புளிக்கும் நீண்ட வாட்படை தாங்கிய திருக்கரமுடையராய், தீமை புரியும் அகங்காரமுடைய தக்கன் செய்த யாகத்தைக் கெடும்படி யழித்து, திருக்கைலாயத்திற் கெழுந்தருளிய எமது பெருமானும் தந்தையுமாகிய வீரபத்திரக் கடவுட்குரிய விரதத்தைச் சொல்லுவோம். கேட்பீராக. எ - று. (௨௦௩)

தெரிந்தெழுசித் திரைத்திங்கண் முற்படுசெவ் வாய்க்கிழமை விடி
யல் சென்று, பெருந்திரைநீர் குடைந்தெழுந்து முன்னியமக் குறைமு
டித்த பின்னர் வெண்ணூல், வரிந்தமணிக் குடமமைத்துப் பொன்னினா
லெந்தைபிரான் வடிவத் தோடு, பொருந்துபது மையமைந்தக் குடத்
திருத்தி யருச்சனையும் புரிந்து போற்றி,

(இ - ள்.) வருஷாரம்பத்தில் வரும் சித்திரைமாதத்தில் முதற் செவ்வாய்க் கிழமையை யறிந்து, விடியற்காலத்திற் போய், பெருத்த அலைகளையுடைய நதிநீரில் ஸ்நானஞ்செய்தெழுந்து, காலையிற் செய்யத்தக்க சந்தியாகிரியைகளைச் செய்து முடித்த பிறகு, வெண்ணூல் சுற்றிய அழகிய கலசத்தை ஸ்தாபித்து, பொன்னூலே எமது தந்தையும் பெருமானுமாகிய வீரபத்திரக் கடவுளின் திருவுருவத்தைப் போன்றமைத்த விக்கிரகத்தை அக்கலசத்தில் எழுந்தருளச்செய்து அர்ச்சனை முதலியன முறைப்படிசெய்து துதித்து. எ - று. (௨௦௪).

கொள்ளைநீர் சடைக்கரந்த பரமனமர்ந் துடையதிருக் கோயில் புக்கு
வெள்ளநீ ரபிடேக முதலியபூ சனைக்குரிய விரும்பி யீந்து
வள்ளைவார் குழையொருபா கத்தனை யுளவலஞ்சூழ்ந்து வணங்கி மீண்டு
நள்ளிரா வுணவொழிவ ரல்லரேற் பலாதிநுகர்ந் திருப்பர் நல்லோர்.

(இ - ள்.) கங்கையின் பெருக்கைச் சடையிலணிந்துகொண்ட சிவபெருமான் அன்போடெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலையடைந்து, கங்கா தீர்த்த முதலிய அபிடேகம் பூசை இவற்றிற்கு வேண்டிய உபகரணங்களை ஆசையோடு கொடுத்து, வள்ளைபோலும் நீண்ட செவிகளையுடைய உமாபிராட்டியை வாம பாகத்திலுடைய சிவபெருமான் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ் கரித்துத் திரும்பி நடுராத்திரிவரையில் உணவின்றி யிருப்பார்கள். விருத்தர்க ளாயின் பழ முதலியன உண்பார்கள். எ - று. (௨௦௫)

காலையெழுந் தெம்மானைக் கருத்தமைத்துப் புனலாடிக் கருமமுற்றி, மாலைமணிக் குடத்தமைத்த பதுமையபோ சனத்தோடு மறையோர்க் கீந்து, வேலைதரப் பரந்தெழுந்த காளகண்ட விடையோன்ற னடியார்க் கூவிப், பாலிருத்தி யறுசுவையிற் பாரணங்கொண் டினிது வந்து பரிவர் மேலோர்.

(இ - ள்.) மேலோராயுள்ளோர் உதயத்திலெழுந்து எமது சிவபெருமானை மனதிற் றியானித்து ஸ்நானஞ்செய்து நித்தியகர்ம முடித்து மாலையணிந்த அழகிய கலசத்தில் ஸ்தாபித்த வீரபத்திரக் கடவுளின் திருவுருவத்தை அந்தணருக் கமுதுபடைத்து அவர்கட்குக் கொடுத்து, பாற்கடலிற்றோன்றிப் பரவியெழுந்த ஆலாலத்தைக் கண்டத்திலடக்கிய இடபாரூடராகிய சிவபெருமானது அடியவர்களை வருவித்துப் பக்கலிலமர்த்தி, ஷட்ரஸோபேதமான வுணவைப் பாரணஞ் செய்து இனிதாக உவப்போடு அநுஷ்டிப்பார்கள். எ - று. (௨௦௬)

ஆயிரநெட் டிதழ்விரிக்கு மம்புயவா சனத்திருக்கு மையன் செய்ய, பாயிரநூற் படிநோற்றுப் பசும்பலகைத் திறல்வீர பத்தி ரற்குக், காய்சினத்தி னொடும்புகுந்து தக்கனொடுங் கொடியவெம்போர் கடந்த ஞான்று, மேயதடந் தேர்நடத்துந் தனிப்பாகு செலுத்திவென்றி விளங்கா நின்றான்.

(இ - ள்.) நெடிய ஆயிர இதழ்களோடு மலர்ந்த தாமரை மலர்ப்பீடத்தி லிருக்கும் பிரமன், செவ்வையாகிய பாயிரத்தோ டுரைத்துள்ள ஆகம முறைப்படி யநுஷ்டித்து, சிறந்த பரிசாயுதந்தாங்கிய வலிதங்கிய வீரபத்திரக் கடவுளுக்கு, அவர் கடுங்கோபத்துடன் சென்று தக்கனுடன் மிக்க குரூரமாகிய கடும் போர் செய்த காலத்தில், அவர் ஆரோகணித்த பரவிய தேரைச் செலுத்துஞ் சாரதியாகவிருந்து வெற்றிகொண்டு விளக்கமெய்தி யிருக்கின்றான். எ - று.

இமையாத நாட்டங்க ளாயிரம்பெற் றுடையபிரா னிதனை
நோற்று, னமையாத பெருவளத்தின் பெருஞ்சினைய கற்பகம்பெற்
றடைந்தா னன்றிச, சுமையாட ராகிலத்தி னீங்கிதனை நோற்றவர்வெந
துயரந் தீர்ந்தா, ருமையாளை யொருமருங்கி னுடையபிரான் சேவடி
பெற் றுய்ந்தா ரன்றே.

(இ - ள்) இமைகொட்டாத ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன் இவ்விரதத்தை யநுஷ்டித்து, அளவிடப்படாத பெருஞ்செல்வத்தைத் தரும் பருத்த கிளைகளையுடைய கற்பக நாட்டின் அரசுரிமையைப் பெற்றான். அதுவேயன்றி அசைகின்ற ஆதிசேடனுக்கு ஒரு தலைச்சுமையாகிய இப்பூலோகத்திலே, இவ்விரதத்தை அநுஷ்டித்தவர்களெல்லாரும் கொடிய துன்பங்களினின்று நீங்கியவர்களாய், உமாதேவியாரை ஒப்பற்ற வாமபாகத்திலுடைய சிவபெருமானது திருவடியை யடைந்து கடைத்தேறினார்கள். எ - று. (௪0௮)

அருமறைநூ லந்தணர்நோற் றுதியுணர்ந் தறிஞானத் தடைந்தா
ரன்றிப், பொருகழன்மன் னவர்நோற்றுப் பகைசெகுத்துப் பொதுக்
கடிந்து புரந்தார் மற்றை, யிருவருணத் தவர்நோற்றுப் பெருவளனு மி
ருங்கதியு மெய்தா நின்றார், கருணையுரு வெடுத்தனைய மாதவத்தீ ரத
னிலைமை கழறற் பாற்றோ.

(இ - ள்) அரிய வேதங்களை யறிந்த மறையோர் கணக்கில்லார் இவ்விரதத்தை யநுஷ்டித்து, சிவபெருமானை உள்ளபடி யறியும் மெய்ஞ்ஞான நிலைமை யெய்தினார்கள் ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த மன்னர்கள் அநுஷ்டித்து,பகையை யழித்துப் பொதுத்தன்மை நீக்கி அரசு செய்தார்கள். மற்றுமுள்ள வைசியர் சற்சூத்திரராகிய இருவருணத்தவர்களும் அநுஷ்டித்துப் பெருஞ்செல்வத்தையும் உயர் பதவியையும் அடைகின்றார்கள். ஆதலால், கருணையே வடிவெடுத்தார்போன்ற பெருந்தவமுடைய முனிவர்களே! இவ்விரதத்தின் தன்மை சொல்லி முடிக்குந் தகுதியுடையதோ? எ - று. (௪0௯)

கொடிப்புரிசை மூன்றுநகைத் தெரித்தபிரான் விரதமுதற் குளிர்
பூந் தோடு, விரித்தகம லாலயத்தோன் றொழுங்கடவுள் வீரபத்திர
விரத மீறு, மெடுத்துமறை மொழியிருபத் தொன்றுநுமக் கிசைத்தன
மற்றிவற்றை நோற்பான், றொடுக்குறினுங் கலைக்குள்ள தொன்மரபு
விதித்தபடி சொல்லக் கேண்மின்.

(இ - ள்) அவசங்கள் கட்டிய மும்மதில்களையும் சிரித்தெரித்தருளிய சிவபெருமானுடைய விரதங்கள் முதலாக, குளிர்ச்சிவாய்ந்த அழகிய கமலாசனமுடைய பிரமன் வணங்கும் வீரபத்திரக் கடவுளுடைய விரத மிறுதியாக, வேதங்களெடுத்துச் சொல்லிய இருபத்தொரு விரதங்களையும் உங்கட்குச் சொன்னோம். இவ்விரதங்களை அநுஷ்டிக்க ஆரம்பிக்க வேண்டுமானால், அவ்விரதாநுஷ்டானங்களுக் குள்ளனவாகிய பழமைவாய்ந்த கிரமப் பாடுகளைச் சிவாகமங்களிற் கட்டளையிட்ட வகையே நாம் கூறக் கேட்பீர்களாக. எ - று.

அரசரா தியமூன்று வருணத்தோர் சங்கரசா தியரா லந்த, விரத
நோற் றுறத்தொடங்கின் மறையோர்க்கொண் டியற்றுவித்தல் விதியா
லன்றிப், பரவையா கமத்துறையுட் படிந்துசிவ னருச்சனையிற் பயியுந்
தெய்வக், குரவரா லவைநோற்க வேண்டுவரா கமங்களுமப் பரிசு
கூறும்.

(இ - ள்.) க்ஷத்திரியர் முதலிய மூன்று வருணத்தாராலும் (அநுலோமர் பிரதிலோமர் அந்தராளர் விராத்தியரென்னும்) சங்கர ஜாதியாராலும் அந்த விரதம் நோற்கத் தொடங்கப்படுமாயின், வேதியரைக்கொண்டு விதிப்படி நடப்பித்தல் முறையாம். அல்லாமலும், சிவாகமப் பெருங்கடலில் மூழ்கிச் சிவார்ச்சனையில் விருப்பெய்திய தெய்வீகம்பொருந்திய சைவாசாரியரால் அவ்விரதாநுஷ்டானத்தை விரும்புவோர் அநுஷ்டிக்கக்கடவர். சிவாகமங்களும் இதுபற்றி அப்படியே சொல்லும். எ - று. (௪௧௧)

ஏழைபா கத்தரனைக் குறித்தெடுத்த விரதமூ வேழி வற்றுள்
வாழியோர் விரதமிழைத் துளரன்றி யிழைப்பவர்க்கு வழிபா டெய்தி
யாழிநீ ருலகத்திக் கதைகேட்போர் கேட்டவர்க்கண் டருளிற் றாழ்வோ
ரூழியீற் றினுமுலவார் கடைமுறையிற் கயிலைபுகுந் துறைவ ரன்றே.

(இ - ள்.) உமாதேவியாரை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானைக் குறித்துக் கூறிய விரதங்கள் இருபத்தொன்று. இவ்விரதங்களில் மங்கலகரமாகிய ஒரு விரதத்தையேனும் அநுஷ்டித்தவர்களே யல்லாமல், அநுஷ்டிப்போர்க்கு வழிபாடு செய்து, கடல்சூழ்ந்த பூமியில் இச்சரிதையைக் கேட்டவர்களும், கேட்டவர்களைத் தரிசித்து அன்போடு பணிந்தவர்களும், ஊழிக்காலத்தி னிறுதியிலும் அழியமாட்டார்கள். தங்கள் தேகாந்தத்தில் கைலாயகிரியிற்சென்று வாழ்வார்கள். எ - று. (௪௧௨)

நோற்பவர்நோற் பவர்க்குரிய பகுர்ந்தளிப்போர் நோற்பவரா னு
வலுங் கேள்வி, யேற்பவரிக் கதைபடிப்போ ரிருசெவிதாழ்த் துளங்கா
ழ்ப்போ ரிவைநோற் பித்த, போற்றரிய குரவரடி வீழ்ந்திறைஞ்சித்
தமக்கியன்ற புரிந்தோர் செங்கண், மாற்பொருகோட் டிமிலேறு கட
வுள்பிரான் றிருக்கயிலைமன்னி வாழ்வார்.

(இ - ள்.) சிவ விரதங்களை யநுஷ்டிப்பவர்களும், விரதாநுஷ்டானஞ் செய்வோர்க்கு வேண்டுவனவற்றைப் பாகித்துக்கொடுத் துதவுபவர்களும், விரதிகளாலே சொல்லப்படும் நூற்கேள்வியைச் சிரவணஞ் செய்பவர்களும், இச்சரித்தை வாசிப்பவர்களும், இருசெவிகளையுஞ் சாய்த்துகேட்டுமனங் களிப்பவர்களும், இவ்விரதங்களை யநுஷ்டிக்கச்செய்த ஆசிரியர்களுடைய பாதங்களில் நமஸ்கரித்து வணங்கித் தம்மாற்கூடிய உபகாரஞ்செய்தவர்களும் செவந்த கண்களையும் பெரிய போர்புரியுங் கொம்பையும் முசுப்பையுமுடைய இடபவாகனராகிய சிவபெருமான் வீற்றிருக்குந் திருக்கைலாயகிரியில் நிலைபெற்று வாழ்வார்கள். எ - று. (௪௧௩)

சிவவிரதமான்மியசருக்க முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௪௧௩.

பத்தாவது

சிவபுண்ணியமான்மியசருக்கம்.

கலிநிலைத்துறை.

முக்கு றும்பெறி சிந்தனை மூசிவண் டரற்று
மைக்க ருங்குழல் பாகன்மா மலரடி பதித்தீ
ரிக்க ணஞ்சிவ விரதமுற் றிசைத்தன நமக்குச்
செக்க ரஞ்சடை யெம்பிரான் புண்ணியந் தெரிக்கேம்.

(இ - ள்.) ஆணவாதி முக்குற்றங்களைக் கடிந்த சித்தத்தை, வண்டுகள் மொய்த்துப் பண்பாடும் மேகம்போற்கரிய கூந்தலையுடைய உமாபிராட்டியாரை வாமபாகத்தி லிருத்திய சிவபெருமானுடைய செந்தாமரை மலர் போலுந் திருவடிகளிற் பதித்த முனிவர்களே! இதுகாறும் உங்களுக்குச் சிவ விரதங்களை யெல்லாஞ் சொன்னோம். இனி, செவ்வானம்போலும் அழகிய சடையையுடைய எமது சிவபெருமானுக் குரிய புண்ணியங்களைச் சொல்லு கின்றோம். எ - று. (க)

எந்தை யீசனுக் கிமயமீன் றளித்தபைங் கிளிக்குந்
தந்தி மாமுகற் காறிரு தடம்புயத் தவற்குச்
சிந்தை கூர்தரு சிவகணத் தவர்க்கெனச் சிறந்த
புந்தி கூர்தரு சிகரமுற் றாலயம் புரிவார்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானுக்கும், இமாசலமன்னன் பெற்ற பச்சைக்கிளிபோன்ற உமாபிராட்டியாருக்கும், சிறந்த யானைமுக முடைய விநாயகக் கடவுளுக்கும், பூரித்த பன்னிரு திருப்புயங்களையுடைய குமாரக் கடவுளுக்கும், சிறந்த மனமுடையவர்களாகிய சிவகணங்களுக்கும் உரியனவெனச் சிகரங்களோடு கூடிய திருக்கோயிலைக் கட்டுபவர்களும். எ-று.

நீடு கோபுர மண்டப முதலிய நிரப்பி
யாடு வெண்டிரைத் திருக்குளஞ் சாமரை யலங்க
லூடு கூவனெய்த் தீபம்வெண் சாந்திவை யுதவி
மாடு நின்றெழு நறும்புகை முதலிய வகுப்பார்.

(இ - ள்.) நீண்ட கோபுரங்களும் மண்டபங்களும் முதலியன முடித்து, வெள்ளிய அலைகள் அசைந்துகொண்டிருக்கும் திருக்குளங்களும் சாமரைகளும் மாலைகளும் ஆழமுள்ள கிணறுகளும் நெய்விளக்கு சுண்ணச்சாந்து இவை முத லியவைகளும் உபகரித்து, மூர்த்திகட்கருகே நின்று நல்ல தூப முதலியவை களைக் கொடுப்பவர்களும். எ - று. (௩)

சாற்று வெண்டுகில் வெண்குடை வாகனந் தரளம்
பூத்த செம்மணிப் பொலன்கல னமுதிவை பொருந்த
வார்த்த ருந்தொழிற் றூதிய ரன்புட னளிப்பார்
சேற்ற செந்நெலங் கழனிமற் றவர்க்கெனச் சேர்ப்பார்.

(இ - ள்.) சொல்லிய வெள்ளை வஸ்திரம் வெள்ளைக்குடை வாகனங்கள் முத்து மாணிக்க முதலியவற்றுடன் கூடிய பொன்னாபரணங்கள் திருவமுது இவற்றுடன், பொருந்தும்படி பாடி அரிய நடனஞ்செய்யும் தாதிகளையும், உண்மை யன்போடுதவுபவர்களும், சிவபெருமானுக்கென்று செக்நெல் விளை யத்தக்க சேற்றையுடைய கழனிகளைத் தானஞ் செய்பவர்களும். எ - று. (௪)

மாலை வெண்பிறைக் கண்ணியோன் றிருமுடி வதியச்
சீல வெண்மலர் நந்தன வனம்பல செய்வார்
பால லோசனற் கெனத்திரு விழாவுறப் பணிப்ப
ராலை யம்புகுந் தரனடி வழுத்தியன் பளிப்பார்.

(இ - ள்.) மாலைப்பொழுதிலுதிக்கும் வெள்ளிய பிறைச்சந்திரனைச் சிரோ மாலையாக வணிந்த சிவபெருமான் திருமுடியிலே சாத்தும்படி புனிதமாகிய அஷ்ட புஷ்பங்கள் நிறைந்த பல நந்தன வனங்களை உண்டு செய்பவர்களும், நெற்றி விழியையுடைய சிவபெருமானுக்கென்று திருவிழா நடக்கும்படி நியமனஞ் செய்பவர்களும், திருக்கோயிலுட்சென்று அன்போடு சிவபெருமான் திருவடிகளைத் துதி செய்பவர்களும். எ - று. (௫)

தொல்லை யாலய மழிந்தன புதுக்கிமென் றுவர்வாய்
வல்லி பாகனுக் கருச்சனை முதலிய வகுப்பார்
புல்லை யேற்றுடை யெம்பிராற் கடித்தொழில் புரிவார்க்
கல்ல றுத்துளம் விளக்கிய குரவரா யவர்க்கு.

(இ - ள்.) பழமையாயபழுதுபட்ட ஆலயங்களைச் சீரணோத்தாரணஞ்செய் வித்து, மெல்லிய பவளம்போலும் உதட்டினையுடைய மரகதக் கொடிபோன்ற உமாபிராட்டியாரை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானுக்குப் பூசை முதலிய வற்றை நடத்துபவர்களும், [புல்லை] வெண்மை கலந்த செம்மை நிறமுடைய இடபவாகனம் பொருந்திய எமது சிவபெருமானுக்குத் திருவடித் தொண்டு செய்பவர்களுக்கும், அஞ்ஞானத்தை யகற்றி மனதைத் தெளிவுபடுத்திய ஆசாரி யர்களா யுள்ளவர்களுக்கு. எ - று. (௬)

மனையின் மாட்சிகொண் டினிதிருந் தில்லறம் வளர்ப்பான்
வினையின் வேண்டுற வேண்டிய யாவையும் விருப்பா
னினையு மன்பினுற் பலபொருட் படுகுறை நிரப்பி
யனைய வர்க்கென விலலெடுத தகஞ்சிறந் தளிப்பார்.

(இ-ள்.) இல்லறத்திற்குரிய ஒழுக்கங்களை மேற்கொண்டு இனிதாக வாழ்ந்து இல்லற தர்மத்தை வளர்க்கும்பொருட்டு, முயற்சியோடு தேடவேண்டிய பல பொருள்களை யெல்லாம் ஆசையோடும் நீங்காத அன்போடும் குறைவின்றி மிகுதியாகக் கொடுத்து, அத்தகையினர்க்கென்றே வீடுகட்டி மனக்களிப்போடு தானஞ்செய்பவர்களும். எ - று. (௭)

தன்ன கப்படு களங்கநீத் தளிப்பவர் தமைக்கண்
டின்ன லத்தொடு மெதிரெழுந் திறைஞ்சினின் றேத்திப்
பின்ன லஞ்சடை யெம்பிரா னடியவர் பேரன்
புன்னி யுன்னிநெஞ் சினிதின் றன்புட னுவப்பார்.

(இ - ள்.) தன் மனதிலுண்டான அஞ்ஞானத்தை விலக்கி அருள் செய்பவராகிய ஆசிரியரைக் கண்டவுடனே இனிய உபசாரத்தோடு எதிர்சென்று பணிந்து அவர் திருமுன்னின்று துதிசெய்து, பின்னலோடு கூடிய அழகிய சடையையுடைய எமது சிவபெருமானுக்கு அடியவர்கள் செய்யும் பேரன்பை மிகவுங் கருதி மனமுருகி ஆசையோடு களிப்பவர்களும். எ - று. (௮)

ஈங்கு ரைத்திடு மிவற்றினுட் டமக்கென வியன்ற
தோங்கு சிந்தையி னொன்றினைத் தாங்களு மொலிநீர்
தேங்கு செஞ்சடை யானுறை திருநெடுங் கயிலை
தாங்கு முச்சிவீற் றிருந்தொழி யாவளந் தழைப்பார்.

(இ - ள்.) இங்கே சொல்லப்படும் இப்புண்ணியங்களில் தம்மாற் செய்யக் கூடியதாகிய ஒன்றையாகிலும் அதிக கவனத்தோடு செய்தவர்களும், ஒலிக்கின்ற கங்காசலமானது தேங்கிக்கொண்டிருக்கும் செவந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் அழகும் பெருமையுந்தங்கிய கைலாயகிரியினுச்சியில் வதிந்திருந்து நீங்காத செல்வத்தில் மேம்படுவோர்கள். எ - று. (௯)

கோடி கற்பமக் கயிலைவீற் றிருந்துமைப் கொடியோர்
மாடி ருக்கிய முக்கணன் மலரடி வதிவா
ரோடு நீடிய பசும்பொனு மொக்கவே நோக்கி
நாடு வீரிவர் பெறும்பயன் யாவரே நவில்வார்

(இ - ள்.) அக்கைலாயகிரியில் கோடிகற்பகாலம் வாழ்ந்திருந்து, மரகதக் கொடிபோலும் உமாபிராட்டியாரை ஒரு பாகத்திலமர்த்திய திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானுடைய தாமரை மலர்போலுந் திருவடிகளிற் கலப்பார்கள். ஆதலால், ஓட்டையும் மாற்றேறிய பசும்பொன்னையும் ஒன்றாக மதித்து நாடுகின்ற நைமிசாரணிய முனிவர்களே! இப்புண்ணியர்களடையும் பேற்றை எவர்தாங் கூற வல்லவர்? எ - று. (௧௦)

கலிவிருத்தம்.

என்று சூத னுரைத்தன யாவையு
மொன்று சோர்வுறா தற்றற வோர்ந்தரு
ணின்ற நேய முனிவரர் நீதியோ
யின்று கேட்பதொன் றுண்டென் றிசைத்தனர்.

(இ - ள்.) என்று சூதமுனிவர் சொல்லியவற்றையெல்லாம், ஒன்றுந் தவறாமல் மனதிற் பதியும்படி தெரிந்துகொண்ட, அன்பே குடிகொண்ட சிவநேயந்தங்கிய நைமிசாரணிய முனிவர்கள், நீதிநெறியையுடைய சூதமுனிவரே! இப்போது தேவரீரைக் கேட்டுக்கொள்ளுவதொன்றுளது என்றார்கள். எ - று.

தேவ தேவனைத் தேவன் றிருவரு
ளாவ தீதென் றறிவிக்கு மையனை
மேவ ருந்திரு வேடத்தி னுண்பொரு
ளோவ றத்தெளிந் தோர்களை யோர்கிலேம்.

(இ-ள்.) தேவர்கட்குத் தேவனாகிய சிவபெருமானையும், அப்பெருமான் திருவருணிலையையும் இப்படியிப்படியெனத் தெரிவிக்கும் ஞானாசாரியரையும்,

யாவரும் அடைதற்கரிதாகிய திருவேடத்தின் நுட்பமாகிய பொருளையும் கெடுதலின்றி ஆராய்ந்துணர்ந்தவர்களையும் நாங்கள் இதுகாறும் தெரிந்திலோம்.

எடுத்த மூவகை யாகு மிவற்றைநெஞ்
சடுத்த றிந்தில மாதலி னையநீ
விடுத்த கொன்றை மிலைச்சிய வேணிநெஞ்
சொடுக்கு தொண்ட ரியற்கை யுரைத்திபால்.

(இ - ள்.) விரித்துச் சொல்லிய மூவகையாகிய விவற்றை மனதில் யோசித்தறிந்தோ மில்லையாதலால், ஐயரே ! கொன்றைமாலையணிந்து தொங்க விட்டிருக்குஞ் சடையையுடைய சிவபெருமான் பால் மனத்தினை யொடுக்கிய தொண்டர்களின் இயல்பினைத் தேவரீர் அடியேங்கட் குரைத்தருளவேண்டும்.

ஈத றிந்தில திப்பிறப் பெய்திய
தீது தீர்சிவ புண்ணியஞ் செய்வதற்
கோது சிந்தை யொருப்படு மோவெனச்
சூத மாமுனி சொல்லுதன் மேயினான்.

(இ - ள்.) இதனை யுணரமாட்டாமல், இப்பிறவியை யடைந்ததற்குக் காரணமாகிய குற்றந்தீர்ந்த சிவபுண்ணியங்களைச் செய்வதற்குச் சொல்லுகின்ற மனமானது ஒற்றுமைப்படுமோ? என்று நைமிசாரணிய முனிவர் வினவ, பெருமை தங்கிய சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார். எ - று. (கச)

மாக ரந்தணர் மற்றுள மானிடர்
யோக ஞான முனிவ ருலப்பறு
நாகர் சித்த ரியக்கர் நடுநிகழ்ந்
தேகு சங்கர சாதியி ராக்கதர்.

(இ - ள்.) தேவர்களும் வேதியர்களும் வேறுயுள்ள மனிதர்களும் யோக முனிவர்களும் ஞான முனிவர்களும் கெடுதலற்ற நாகலோக வாசிகளும் சித்தர் களும் இயக்கர்களும் நடுவில் விளங்கி யழிகின்ற சங்கர சாதியிலுதித்தவர்களும் இராக்கதர்களும். எ - று. (கரு)

சேணெ றிக்கந் தருவர் தைத்தியர்
மாணெ றிக்குடை மன்ன ரிவர்களி
னீணெ டுந்திரை நேமி யடுங்கடு
ஆறு கர்ந்தவற் காட்பட லுண்டரோ.

(இ - ள்.) ஆகாயவழியிற் சஞ்சரிக்குஞ் சந்தர்வர்களும் தைத்தியர்களும் மாட்சிமை தங்கிய சன்மார்க்கமுடைய அரசர்களுமாகிய இவர்களில், மிக நீண்ட நெடிய கடல்சூழ்ந்த உலகத்தை யழிக்கவந்த ஆலகாலத்தைத் திருவமுது செய்த சிவபெருமானுக்கு அடிமை பூணுதலுண்டு. எ - று. (கசு)

வரமு னித்தலை வீரவ் வருணமாச்
சிரம மென்பத வர்க்கிலைச் சேவுடை
யரன ருச்சனை யாவர்க்கு மாமவர்
பரம னென்னப் பணியப் படுவரால்.

(இ - ள்.) சிறந்த முனித்தலைவர்களே! அவ்வகைப்பட்ட வருணம் ஆச்சிரமம் என்னும் வேறுபாடு அத்தொண்டர்கட்கு இல்லை. இடபக் கொடியையுடைய சிவபெருமானது அர்ச்சனையானது எல்லோருக்குமாகும். அப்படிப் பூசிப்பவர்களே சிவபெருமானென்று பலராலும் வணங்கப்படுவோர்கள். எ - று.

ஈச னெந்தை பிரானடிக் கீர்ந்துணர்
வாச நன்மல ரிட்டுவ ணங்குவார்
மாசி லாச்சிர மத்தின் வருணத்திற்
பேசி லாங்கவர் போற்றப் பெரியரே.

(இ - ள்.) எமது தந்தையும் கடவுளுமாகிய சிவபெருமான் பாதங்களுக்கு, குளிர்ந்த பூங்கொத்தாய் மணமுடைய அன்றலர்ந்த மலர்களால் அர்ச்சித்து வணங்குபவர்களாகிய அவர்களே, சொல்லுமிடத்தில் குற்றமற்ற ஆச்சிரமத்திலும் வருணத்திலும் துதிசெய்தற்குரிய பெரியோராவர். எ - று. (௧௮)

அன்ன வர்க்கதி யாச்சிர மப்பெயர்
மன்னு மீதென் மனச்செருக் கன்றிது
பன்னு நான்மறை முற்றும் படிப்படி
சொன்ன தாமிது சத்தியஞ் சொற்றனம்.

(இ - ள்.) அப்படிப்பட்டவர்களுக்கே அதியாச்சிரமிகள் என்னும் பெயர் நிலைநிற்கும். இப்படிச் சொல்வது எமது மனோகர்வமல்ல. இச்சொற்கள் பலரும் கூறும் நான்கு வேதங்கள் முழுவதும் முறை முறையாகக் கூறியதாம். இதனைச் சத்தியமாகச் சொன்னோம். எ - று. (௧௯)

செய்ய மேனிச் சிவனடி யார்க்கய
லெய்தக் காணு மிலக்கணம் பத்துள
மெய்யி லெய்து மிலக்கண மெம்மைசா
லையி ரண்டகத் துள்ளன மூன்றரோ.

(இ - ள்.) செவந்த திருமேனியையுடைய சிவபெருமானுடைய தொண்டர்களுக்குப்புறம்பாக அடையும்படி காணத்தக்க பத்து இலக்கணங்களுள்ளன. தேகத்திலடையத்தக்க உண்மை மிகுந்த பத்து இலக்கணங்களுள்ளன. மனதின் கண்ணுள்ளனவாகிய மூன்று இலக்கணங்களுள்ளன. எ - று. (௨௦)

அலக்க ணீக்கு மரனடி யார்க்கென
விலக்க ணங்க ளிருபத்து மூன்றுள
பலப்ப டுத்து முதற்படு பத்தையும்
புலப்ப டுத்தி நமக்குப் புகலுவாம்.

(இ - ள்.) துன்பங்களை யகற்றும் சிவபெருமானுடைய அடியார்களுக்கென்று கூறிய இலக்கணங்கள் இருபத்து மூன்றுள்ளன. முதலிற் கூறிய பிரயோசனமளிக்கும் பத்திலக்கணங்களையும் உங்களுக்குத் தெளியும்படி சொல்லுவோம். எ - று. (௨௧)

வாசப் பூதி யுருத்திர மாமணி
பூசிப் பூணல் குரவரைப் பூசித்த.

வாசைப் பாட்டி லரனைப் புகழுத
லீசற் குள்ளன நாம மியம்புதல்.

(இ - ள்.) மணந்தங்கிய திருவெண்ணீற்றையும், சிறந்த உருத்திராக்கமணியையும் முறையே பூசுவதும் அணிவதும், ஆசாரியனுக்கு வழிபாடு செய்தலும், ஆசைகொண்டு சிவபெருமானைத் தோத்திரிப்பதும், சிவபெருமானுக்குரிய திருநாமங்களைச் சபிப்பதும். எ - று. (௨௨)

எந்தை யீச னருச்சனை யோம்புத
றந்தி ரசிவ தன்மம் புரிகுதன்
முந்தை யோன்கதை கேட்டன் முறைமையாற்
புந்தி கூர்ந்தர னாலயம் போற்றுதல்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானுடைய வழிபாட்டினை நடத்துவதும், சிவாகமங்களிற் கூறப்பட்ட சிவதர்மங்களைச் செய்வதும், ஆதிதேவனாகிய சிவபெருமான் சரிதைகளைச் சிரவணஞ் செய்வதும், கிரமப்படி மனவிருப்போடு சிவாலயத்தைப் பாதுகாப்பதும். எ - று. (௨௩)

ஒத்த பத்த ரிடத்தல தோரிடந்
துய்த்த னீத்தலத் தொண்டரிற் றொண்டராய்ச்
சித்த மன்புற வீதன்முன் செப்பிய
பத்து மிங்கிவை காணப் படுதிரால்.

(இ - ள்.) தம்மைப்போன்ற தொண்டர்களிடத்தி லல்லாமல் மற்றோரிடத்தில் உண்ணுதலை நீக்குதல், அத்தொண்டர்கட்குத் தொண்டராய் அவர்கள் மனமானது சந்தோஷிக்கும்படி கொடுத்தல் ஆகிய இவை பத்தும் முற்கூறிய பத்துப்புறத் திலக்கணங்களென்று காண்பீர்களாக. எ - று. (௨௪)

தொண்டர் மெய்யிற் றுலங்கு மிலக்கண
முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதும்
குண்டை யூர்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்ட முற்றொரு விம்மிதங் காட்டுதல்.

(இ - ள்.) தொண்டருடலில் விளங்கும் இலக்கணங்கள் பத்து உளவெனச் சொல்லியவற்றைச் சொல்லுவோம். இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானது தன்மையைச் சொல்லுமிடத்தில் கழுத்து முழுவதும் ஒருவிம்மிதங் காட்டலும். எ - று. (௨௫)

ஏத்து மெந்தை யியற்கை யுணர்தொறு
நாத்து டித்தெழும் பாத னகைப்புறம்
பூத்த முத்தந் துடித்தல் விபூதிகொண்
டார்த்த ணிந்ததம் மங்கங் குலுங்குதல்.

(இ - ள்.) பலரும் துதிசெய்யும் எந்தையாகிய சிவபெருமானது தன்மையை உணரும்பொழுதெல்லாம், நாவானது துடித்து வார்த்தைசொல்ல வியலாமையும், உள்ளே தோன்றிய நகைப்பைப் புறத்தே காட்டிய உதடு துடித்தலும், திருவெண்ணீற்றைக் கையிலெடுத்துச் சபித்துத் தரித்திருக்கும் தமதுடல் குலுங்குதலும். எ - று. (௨௬)

மயிர்ப்பு றம்புள கித்தல் வரன்முறை
வெயர்த்த றன்வச மன்றி விளம்புநாப்
பெயர்த்தி டாதலா னந்தப் பெருங்கணீ
ரயற்ப டுத்துதல் வாய்விட் டழுதலே.

(இ - ள்.) உடலின்மீது மயிர்க்கூச் செறிதலும், வரன்முறைபோல வெயர்வுண்டாதலும், தன் வசப்படாது பேசும் நாவானது பேசவராமற் றழுதழுத்தலும், பெரிய ஆநந்தக் கண்ணீர் வெளிப்படுதலுஞ், வாய்விட்டழுதலும்.

பரவ சத்தின ராகிப் படர்சடை
யரனு ளம்படத் தன்னை யயர்க்குதல்
விரவு பத்தும் விடுத்துரைத் தோமிவை
வரமு னித்தலை வீர்மனக் கொள்விரால்.

(இ - ள்.) பரவசமுடையராய். படர்ந்த சடையையுடைய சிவபெருமான் திருவுள்ளங் களிகொள்ளும்படி தம்மை வெறுத்தலாகிய உடலிலக்கணங்கள் பத்தினையும் விளக்கிச்சொன்னோம். சிறந்த முனிசிரேஷ்டர்களே! இவற்றை நீங்கள் மனதிற்கொள்ளக் கடவீர்கள். எ. று. (உஅ)

உளத்தி லக்கண மூன்றென் றுரைத்தன
மளக்கி லஞ்செழுத் துன்னல கப்பட
வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்
களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்.

(இ - ள்.) அகத்திலக்கணங்கள் மூன்றென்று சொன்னோம். அவையாவை யெனில், பஞ்சாக்ஷரத்தைச் சபித்தலும் உள்ளீடாகச் செய்துவரும் மானத பூசையும், கரிய விஷந்தங்கிய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானையுந் தன்னையும் வேறறக்காணுதலுமாம். எ - று. (உகூ)

எம்மை யாளுறுந் தொண்டர்க் கிலக்கண
மும்மை யேழு மிரண்டு மொழிந்தன
மெம்மை யானந்த மெய்ப்பொரு ளோர்ந்தறி
செம்மை யீருணர்ந் தீரினிச் செப்புவாம்.

(இ - ள்.) எம்மை யடிமைகொள்ளுந் தன்மையுடைய அடியார்களுக்குள்ள இலக்கணங்கள் இருபத்து மூன்றனையுஞ் சொன்னோம். உண்மையானந்தமாகிய நித்தியப்பொருளைத் தேர்ந்து தெளிந்த செம்மைபொருந்திய முனிவர்களே! அவற்றைத் தெரிந்துகொண்டீர்கள். மேலே சொல்லுவோம். எ - று. (௩0)

பின்னு ரைத்துள மூன்றும் பெரிதுளத்
துன்னி யோம்பிய வுத்தம ரைப்பிறைப்
பொன்னு யிர்த்த புரிசடைப் புங்கவ
னென்ன வோர்ந்துளத் தெண்ணுவ ரெம்மனோர்.

(இ - ள்.) இறுதியிற் சொல்லியுள்ள மூன்று அகத்திலக்கணங்களையும் மனதில் மிகவுஞ் சிந்தித்துச் செய்யும் புண்ணியர்களை, எம்போன்றவர்கள் யாவரும் இளம்பிறைச் சந்திரனை யணிந்த பொன்னிறந்தங்கிய புரிந்த சடையையுடைய சிவபெருமானென்று தெளிந்து மனதிற் கருதுவார்கள். எ - று.

எண்ணி யோது மிலக்கண மியாவையு
நண்ணி ரால ராயினு நாயகன்
கண்ணெ னத்தகு மாமணி கைபுனை
வெண்ணி றப்பொடி தாங்கிய வேடத்தோர்.

(இ - ள்.) நாம் தொகைப்படுத்திச்சொன்ன இலக்கணங்களையெல்லாம் பொருந்தாதவர்களாலும், சிவபெருமான் திருவிழிகளென்று சொல்லத்தக்க கிரமமாக அணிகின்ற சிறந்த உருத்திராக்க மணியையுந் திருவெண்ணீற்றையும் அணிந்திருக்குந் திருவேடமேற்றவர்களும். எ - று, (கஉ)

ஆச றுத்து விளக்கு மருட்சிவ
தேசி கற்பணி வோர்சிவ தொண்டரைப்
பூச னைக்குரி யாரெனப் போற்றுவோ
ரீச னொப்பரென் றேத்துவ ரெம்மனோர்.

(இ - ள்,) அஞ்ஞானத்தை விலக்கித் தெளிவிக்குந் திருவருணிறைந்த சைவாசாரியரை வணங்குவோர்களும், சிவனடியார்களைப் பூசைபுரிதற் குரியவர்களென்று தோத்திரஞ் செய்வோர்களும் சிவபெருமானை யொப்பாவார்களென்று எம்போல்வார் துதிசெய்வார்கள். எ - று. (கங)

எடுத்த யாக்கை யிடும்பை யிகந்தவர்
தொடுத்த நல்லறத் தின்பயுந் துய்த்துநீர்
படுத்த வையப மளிக்கிர மெய்திவாழுந்
தொடுக்கு மைம்புலச் செய்கை யொடுங்குநாள்.

(இ - ள்.) அத்தகையினர்தாமெடுத்த தேக துன்பத்தை நீங்கியவர்களாய், தாம் செய்தவந்த புண்ணிய பலனையும் அநுபவித்து, கடலாற் சூழப்பட்டுள்ள உலகமானது தாய்மையடையப்படி வாழ்ந்திருந்து, ஒடுக்குதற்குரிய ஐம்புலக் குறும்புகள் ஒடுங்குஞ் சமயத்தில் எ - று. (கச)

கற்றை நல்லொளி காற்றுங் கதிர்மணி
யுற்ற மான நடுவகத் தும்பரிற
பெற்ற தேவ வுருக்கொடு பேரொளி
யுற்ற வெண்குடை மீச்சென் றொளிரவே.

(இ - ள்.) கூட்டமாகிய பேரொளியோடு நிறைந்த கிரணம் வீசும் இரத்தினங்களிழைத்த விமானத்தின்மீதுள்ள ஆதனத்தில், தாம் பெற்ற தெய்வவுடலோடு மிக்க காந்தியுள்ள சந்திரவட்டக்குடை அதியுன்னதமா யோங்கி விளங்கவும். எ - று. (கரு)

வண்ண வால்வளை வானவர் மங்கையர்
வெண்ணி றக்கொடுஞ் சாமரை வீசிடக்
கண்ணெ கிழ்ந்தலர் கற்பக நாண்மலர்
விண்ணி ழிந்து மிடைந்து நெருங்கவே.

(இ - ள்.) வெள்ளிய வொளிபொருந்திய அழகிய வளையலையணிந்த தேவமாதர்கள் பெரிய வெண்ணிறந்தங்கிய சாமரைகளை வீசவும், தேனைத் துளித்துக்கொண்டு மலர்ந்த கற்பக விருக்ஷத்தின் புதிய மலர்கள் ஆகாயத்திலிருந்திறங்கி ஒன்று சேர்ந்து நெருங்கவும். எ - று. (கசா)

விண்வ ருஞ்சிறு மென்மைய ராரிசை
பண்வ ருமபல பாடலி னோடிய
தண்வ ருஞ்சிறு தாமரைத் தாளிணைக்
கண்வ ருஞ்சிறு தண்டை கலிப்புற.

(இ - ள்.) தேவலோகத்தினின்று வந்த இளம்பருவம் வாய்ந்த மென்மைத் தன்மையுடைய அப்சரசுகள், குளிர்ச்சி தங்கிய தாமரை மலர்போன்ற சிறிய பாதங்களிரண்டிலணிந்த சிறு தண்டைகளொலிக்க, பண்ணோடு கூடிய பல இசைப்பாடலோடு நடனஞ் செய்யவும். எ - று. (௩௭)

தேவ துந்துமி திக்களந் தேங்குறக்
காவ லெண்மருங் கைதொழு தேத்துற
மேவ ருந்தனி வீணை தெறிப்பொலி
பாவ ரும்பல விசையொடும் பம்பவே.

(இ - ள்.) தேவதுந்துமிகள் திசைதோறும் பரவி யொலி செய்யவும், அஷ்டதிக்குப் பாலர்களும் கைகளைச் சிரமிசைக் குவித்துத் துதி செய்யவும், அடைதற்கரிய ஒப்பற்ற வீணையின் (சப்தசுரங்களாகிய) நரம்புகளைத் தெறிக்கு மொலியானது, பரவியுள்ள பல வாத்தியங்களோடு முழங்கவும். எ - று. (௩௮)

ஆழி யந்தனித் தேருடை யாதவன்
வாழி மாநிலத் தோர்வெள்ளை மாமதச்
சூழி வாரணத் தோனுல கத்துளோர்
பாழி நாண்மல ரெந்தை பதத்துளோர்.

(இ - ள்.) ஒற்றைச் சக்கரம் வாய்ந்த அழகிய இரதத்தையுடைய சூரியன், சிறந்த பெரிய உலகத்தார்களும், முகபடாந் தரித்து மதஞ்சொரியும் (ஐராவதமெனும்) வெள்ளை யானையையுடைய இந்திர லோகத்தார்களும், அன்றலர்ந்த செந்தாமரைமலர் வாழ்க்கையையுடைய எமது தந்தையாகிய பிரம [சத்திய] லோகத்தார்களும். எ - று. (௩௯)

பணங்க ளாயிரந் தாங்கிய பாப்பணை
மணங்க மழ்ந்தது ழாய்முடி வானவன்
கணங்கொ ளுட்டுறை தேவர்க ளந்தண
ரிணங்கி நின்றெதி ரேத்தி யரங்கவே.

(இ - ள்) ஆயிரம் பணமுடிகளைத் தாங்கிய ஆதிசேடனாகிய படுக்கையையுடைய மணங்கமழுந் துளபமாலை தரித்த திருமாலின் கணங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வைகுந்தத்தில் வசிக்கும் தேவர்களும் முனிவர்களும் ஒன்று கூடி நேர் நின்று தோத்திரித்துப் பிரார்த்திக்கவும். எ - று. (௪௰)

வேத நாதம் வெளிப்பட மென்மெலப்
போதல் செய்து கயிலைப் பொருப்புறை
நாத னைக்கட் புலப்பட நண்ணுவார்
நீதி நீர்த்தனி நின்பஞ் சிறப்பரால்.

(இ - ள்.) வேதவொலி முழங்க, சாவகாசமாகப் போய்க் கைலாயகிரியில் வீற்றிருக்கருளும் சிவபெருமானைத் தமது விழிகட்குப் பிரத்தியக்ஷமாகும்படி

யுடையவர்களாய், தமது துன்பங்க ணீங்கி இனிய இன்பத்தின் மேம்பட்டு விளங்குவார்கள். எ - று. (௪௧)

இப்ப தஞ்சிவ தொண்டரை யேத்துறு
மப்பெ யர்க்கென் றானளித் தானெனிற்
செப்ப ருஞ்சிவ தேசிக ரல்லரோ
முப்பொ ருட்குமு தற்பொரு ளாகுவார்.

(இ - ள்.) இந்த வகைக் கைலாயபதவியானது, சிவபெருமானது தொண்டர்களைத் துதி செய்பவர்களுக்கென்றே சிவபெருமான் சிருட்டித்தனனென்று சொல்வோமாயின், சொல்லுதற்கரிய சிறப்புகளையுடைய சிவாசாரியர்களன்றோ திரிமூர்த்திகட்குந் தலைமையான பொருளாவார்கள். எ - று. (௪௨)

ஆத லானம் மருந்தவத் தையர்கா
ளூகா நீர்சிவ புண்ணியச் செய்கையை
போத லாவதன் றோர்ந்தது ணர்த்துது
மேத மோர்ந்தெறி சிந்தையி ருத்துவீர்.

(இ - ள்.) ஆதலால் அருந்தவஞ்செய்த முனிவர்களே! குற்றங்களை விலக்குஞ் சிவ புண்ணியங்களின் செய்கைகள் சொல்லற்கியன்றனவல்ல. நாம் அறிந்த வற்றைத் தெரிவிக்கின்றோம். குற்றங்களைத் தெரிந்து நீக்கிய மனதை இதிற் சேர்க்கக் கடவீர்கள். எ - று. (௪௩)

என்னை நீர்சிவ புண்ணியத் தெய்திய
தொன்னி லைப்பொருள் சொல்லெனச் சொற்றபொற்
கன்னி தென்னிம யாசலக் காரிகை
மின்னு வாண்மழு வோனைவி னாயினாள்.

(இ - ள்.) வேதங்கள் துதிசெய்யுஞ் சிறந்த கன்னியும், அழகிய இமாசல புத்திரியுமாகிய உமாதேவியார், மின்னலை வீசும் மழுப்படை தாங்கிய சிவபெருமானை, சிவ புண்ணியத்திலுள்ள புராதன நிலைமையான உண்மைப்பொருள் யாது? அதனைத் தேவரீர் உரைத்தருளவேண்டுமென வினாவினார். எ - று.

கள்ள றாமலர்க் கற்றைசு மந்தெழு
மள்ளி ருட்படு கூந்தலி மாசலைக்
குள்ள வாறுமு றையினு ணர்த்தினன்
வெள்ள வார்சடை சென்னி விமலனே.

(இ - ள்.) தேன் நீங்காத மலர்த்தொகுதியைத் தாங்கிக்கொண்டோங்கிய, நெருக்கமுள்ள, இருள்போன்ற கூந்தலையுடைய உமாதேவியாருக்கு, கங்கை யாற்றை யணிந்த நெடிய சடையையுடைய சிவபெருமான் உள்ளபடியே முறைப்படி யுபதேசித்தனர். எ - று. (௪௫)

கலிநிலைத்துறை.

கேட்டு வந்தரு ளுமையுளத் ததிசயங் கிளைப்ப
மீட்டு மெய்ப்புள கெழுந்தன ளிருக்கைவிட் டெழுந்தா
பாட்டு ளைந்தடந் தாமரை படிந்தெழீஇத் தருணத்
தோட்டு முண்டகத் தளிர்க்கரங் குவித்திவை சொன்னாள்.

(இ - ள்.) சிரவணஞ்செய்து களித்தருளிய உமாபிராட்டியார் திருவுள்ளத்தில் வியப்புண்டாகத் திருமேனி புளகித்து மீண்டும் தமதிருக்கைவிட்டெழுந்திறங்கி, சிவபெருமானது உபய பாதங்களாகிய பரந்த தாமரை மலர்களில் வணங்கியெழுந்து, இளமைதங்கிய இதழ்களையுடைய தாமரை மலர் போலுந் தளிர்த்த திருக்கரங்களைக் குவித்து இவற்றை விண்ணப்பஞ் செய்தனர். எ - று. (௪௬)

அளப்ப ரும்பெரு யோனியுக் கருநர கடைந்து
துளக்க மெய்திய மன்னுயிர் வரன்முறை தொகுத்து
விளக்கு புண்ணிய மியற்றுந ராகிநின் விரைப்பூந்
தளப்ப னித்துணைத் தாமரைத் தாள்பெற வேண்டும்.

(இ - ள்.) அளவிடுதற்கரிய பல யோனிகளிலுற்று, கடுநரகிலெய்தி நடுக்கமெய்திய நிலைபெற்ற ஆன்மாக்கள் வரிசைப்படத் தொகுத்துச்சொல்லும் சிவபுண்ணியங்களைச் செய்பவர்களாய்,தேவரீருடைய மணமும் அழகிய இதழ்களுமமைந்த குளிர்ச்சி தங்கிய தாமரை மலர்போன்ற உபய பாதங்களைப் பெறுதல் வேண்டும். எ - று. (௪௭)

அருள வேண்டுவ தென்றன ளிமயமீன் றளித்தாள்
பெருகு மாயிர முகநதி முடித்தருள் பெருமான்
மருவ ருங்குழ லாயெம புண்ணிய மாக்கள்
கருதி யோர்வதற் கரிதெனப் பின்னருங் கழறும்.

(இ - ள்.) இமாசலமன்னன் அருந்தவப் புதல்வியாகப்பெற்ற உமாதேவியார், அநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். பிரவாகமெடுத்த ஆயிர முகங்களுடைய கங்காநதியை யணிந்தருளிய சிவபெருமான், இயற்கை மணந்தங்கிய கூந்தலையுடைய உமையே! எமது சிவபுண்ணியங்களைச் செய்யும் ஆன்மாக்களை நினைந்துணர்தற் கரிதென்று மேலும் திருவாய்மலர்ந் தருளுகின்றார். எ - று. (௪௮)

உரைத்து நிற்சிவ புண்ணிய மெனச்சில வுளவால்
வரைக்கொ ழுந்துயிர்த் துதவிய மரகதக் கொம்பே
நிரைத்த வால்வளை நினக்கவை நிகழ்த்துது மென்ன
விரைத்த வார்சடைப் பனிப்பிறைக் கண்ணியோன் விளம்பும்.

(இ - ள்.) இமாசலமன்னன் பெற்றெடுத்த மரகதக் கொம்பினையொத்த உமையே! கேள். வரிசைப்படுத்திய சங்கவளையலை யணிந்தவளே! எடுத்துச் சொல்லுமிடத்தில், சிவபுண்ணியங்களென்று மற்றுஞ் சிலவுள. உனக்கவற்றைச் சொல்வோமென்று மணம் வீசும் நீண்ட சடையினிடத்தில் குளிர்ந்த பிறைச் சந்திரனாகிய அரும்பையணிந்த சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (௪௯)

சினக ராலயந் தூர்ப்பது திருமெழுக் கிடுதல்
புனன்மு கந்தெமை யாட்டுவித் தெமக்கெனப் புரிதல்
றினனு மாலயத் தகவையி லெழுந்தபுற் சீத்த
லீனைந றூந்துணர் நாண்மல ரெடுத்துட னல்கல்.

(இ - ள்.) திருக்கோயிலில் திருவலகிடுதலும், திருமெழுக்கிடுதலும், நீரை முகந்து நமக்கு அபிஷேகித்தலும், நமக்கென்று தொண்டுசெய்தலும், நாடோறுந் திருக்கோயிலிலுண்டான புல்லைப் பறித்தலும், தேன்சிந்தும் வாசனையுடையபுதிய பூங்கொத்துகளையெடுத்து உடனே கொடுத்தலும். எ - று. (௨௰)

இவையு ளப்படுத் திரங்கின ராகிநின் றியல்வா
ரவம திப்பற வறிவுபெற் றவ்வறி வதனாற்
றவறில் பக்குவ மடைந்துளத் தூய்மையுந் தழுவிச்
சிவக திப்படு புண்ணியஞ் சிலசில தெரிவார்.

(இ - ள்.) இத்தொண்டுகளை மனதிற்கருதி இரக்கமுற்றவர்களாய் அந்நிலையினின்று நடத்துபவர்கள், எல்லோராலும் மதிக்கத்தக்க பேரறிவெய்தி, அப்பேரறிவாற் றவறுபடாத பரிபக்குவமெய்தியவர்களாய்ப் புனிதமுமடைந்து சிவகதியைக் கொடுக்கத்தக்க சிவபுண்ணியங்கள் [எண்ணிறந்தனவற்றுட்] சிற்சிலவற்றை யுணர்வார்கள். எ - று. (௨௧)

பாத கர்க்கெனி னுஞ்சிவ புண்ணியம் பலித்தாற்
றீத கற்றிடு மாதலா லாங்கது செய்தாற்
போத முற்றிடும் புண்ணியம் புலப்படு மென்று
ஞாதி நாயகிக் காங்கவை யறைந்தன னவில்வாம்.

(இ - ள்.) பாதகர்களுக்காயினும் சிவபுண்ணியங்கள் கைகூடுமாயின், குற்றங்களை விலக்குமானபடியால், அச்சிவபுண்ணியங்களைச் செய்தால் ஞானோதயமாகின்ற சிவபுண்ணியங்கள் விளங்குமென்று திருவாய்மலர்ந் தருளினர். முதல்வியாகிய உமாதேவியாருக்கு அச்சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியவற்றைச் சொல்லுவோம். எ - று. (௨௨)

இந்தி யங்களை யவித்திரும் புலன்கடந் திருக்கு
மந்த ணீரரு மாதவக் கொழுந்தெனு மடிகா
ளெந்தை யெம்பெரு மான்சிவ புண்ணியத் தியலா
வந்த காதையொன் றுளததுவ வகுப்பொடு வகுப்பாம்.

(இ - ள்.) இந்திரியங்களை நிக்கிரகஞ்செய்து ஐம்புலன்களை யடக்கியிருக்கும் முனிவர்களே! அருமையான பெருந்தவக் கொழுந்தென்று சொல்லத்தக்க மேலோர்களே! எமது பிதாவாகிய சிவபெருமானுடைய சிவ புண்ணியத்தின் தன்மையுடையதாய் நிகழ்ந்த சரித்திரமொன்றுள்ளது. அதனைப் பிரிவோடு சொல்லுவோம். எ - று. (௨௩)

நீடு புண்ணியப் பெருந்தவ முயற்சியா னெடுநீர்
மாடு சூழ்கிடந் தளவறு வளந்தரு வனப்பா
னாடு விண்ணவ ரிழிந்துற வேண்டிநின் றொருங்கே
நாடி நோற்பது கௌசல மென்பதோர் நாடு.

(இ - ள்) மிக்க புண்ணியத்தாலாகிய பெருந்தவத்தின் முயற்சியாலும், நீர்ப்பெருக்கானது பக்கலிற் சூழ்ந்து எண்ணில்லாத செல்வத்தை விர்த்தி செய்விக்கும் அழகாலும், தேவர்களும் பூலோகத்திலிறங்கி உள்ளே வசிக்கவேண்டி

மென்று, ஒன்று சேர்ந்திருந்து கருதித் தவஞ்செய்வதாகிய கோசலமென்னும் ஒப்பற்ற நாடொன்றுள்ளது. எ - று. (௫௫)

அன்ன நாட்டகத் தகலிய வெண்குடை நிழற்கீழ்
மன்னு மின்னுயிர் தன்னுயி ராமென வளர்ப்பான்
பொன்னி லங்கிய கனைகழற் புனைநறுந் தொடையான்
மின்னு யிர்த்தவேற் கௌசிக னென்றொரு வேந்தன்.

(இ - ள்) அத்தகைக் கோசலநாட்டிலே, பரந்த வெண்கொற்றக் குடை நிழலின்கீழ், நிலைபெற்ற மன்னுயிர்களைத் தன்னுயிர்போல ஆதரிப்பவனும், பொன்னாற்செய்து விளங்கும் ஒலிதங்கிய வீரக்கழலணிந்தவனும், அணிந்த மணந்தங்கிய மாலையுடையவனும், மின்னலைவீசும் வேலேந்தியவனுமாகிய கௌசிகனென்றோரரசனிருந்தான். எ - று. (௫௬)

அனைய வேந்தனிற் றோன்றின ராருயி ரனையார்
புனைந றுங்குழற் பூவைமென் குதலையர் நால்வர்
வனச மாளிகை மடந்தையர் நால்வரோ விரதி
யினைய நால்வரோ வெனப்புவி யேத்துறு மெழிலார்.

(இ - ள்.) அக்கௌசிகன்பால் அவனுடைய அரிய வுயிர்போன்றவர்களாய், அலங்கரிக்கின்ற மணமுள்ள கூந்தலையும் [பூவை] நாகணவாய்ப் புள்போன்ற மெல்லிய குதலைச் சொல்லையுமுடைய நான்கு புதல்வியர், தாமரைமலர் மாளிகையையுடைய இலக்குமிகள் இந்நால்வரோ இரதியென்பவளே இந்நால்வரோ? என்று உலகினர் துதிசெய்யும்படியான அழகுடையவர்களாய்ப் பிறந்தார்கள்.

கடிகொ ளொண்மலர்க் கற்பக நாட்டகந் துறந்து
வடிவி னல்வரும் வந்திழிந் தார்கொலோ மடவார்
படிவ முற்றுற விலக்கணப் பகுதிசீர் வழாது
முடிவி னான்முகன் றிருத்திய தியாதென மொழிவாம்.

(இ - ள்.) மணந்தங்கிய புதுமலர்களைக்கொண்ட கற்பக விருட்சத்தை யுடைய தேவலோகத்தை நீங்கி, அழகின் மிகுந்த இப்பெண்கள் நால்வரும் வந்தார்களோ? அல்லது இப்பெண்களின் அவயவங்களெல்லாம் அவ்வவற்றிற் குரித்தாகிய இலக்கணமுறையின் சிறப்புகள் குன்றாது முழுவதையும் பிரமன் திருட்டித்துவைத்ததை யாதெனச் சொல்லுவோம்? எ - று. (௫௭)

மகளிர் நால்வரின் முந்துறத் தோன்றிய மகட்குப்
புகற ரும்பெய ரமையெனப் பணித்தனன் புதுப்பூ
முகைந றுங்குழன் மூவர்க்குந் தனித்தனி மொழிந்தா
னிகல ருந்தன வரும்புபூத் திளகிய திவர்க்கு.

(இ - ள்.) அப்புதல்வியர் நால்வரில், முதலிற் பிறந்த பெண்ணுக்குச் சொல்லத்தக்க பெயர் அமையென்று சொன்னான். புதியமலர்களின் அரும்பை யுடைய மணந்தங்கிய கூந்தலைப்பெற்ற ஏனைய மூன்று புத்திரிகளுக்கும் வெவ்வேறு பெயர்களிட்டான். இப்பெண்கட்கு [காமவிச்சையென்னும்] பகையற்றனவாகிய அரும்புபோன்ற கொங்கைகள் பருத்து இளகின. எ - று. (௫௮)

பொருது வென்றவேல் கறைத்துளி பொதுளிய வென்ன
விருத டங்கணுஞ் செவ்வரி யிடைபடச் சிதறிக்
கருது வாணெடுங் கட்கடை குழைபடக் கடந்து
பருவ நோக்கினன் கௌசலன் பார்த்திபர் பெருமான்.

(இ - ள்.) போர்செய்து சய முற்ற வேலாயுதத்தில் உதிரத்துளி நெருங்கி யிருப்பதுபோல, பரந்த இருவிழிகளிலும் செவ்வரி இடையே படர்ந்து பரவி, கருநிறந்தங்கிய வாளாயுதம்போல நீண்ட கடைக்கண்கள் காதுகளைத் தொடும்படியோடிய பருவத்தை இராசராசனாகிய கௌசலனென்னுந் தந்தை பார்த்தறிந்தனன். எ - று. (௯)

உருவ மங்கையர் மணவிளைப் பொலிதரு முருவங்
கருணை கூர்தரக் கண்டுகண் களிபடது கருதா
விருநி லத்துள வேந்தரை வருகவென் றெழுதிச
சுருதி மங்கல நாட்கணித் தறிந்தனன் றூயோன்.

(இ - ள்.) அழகுள்ள அகதுமாரிகள் திருமணச் செயலிற்குரிய விளக்கந் தங்கிய கோலத்தை, புனிதனாகிய அவ்வரசன் கிருபை மிகும்படி பார்த்துக் கண்கள் களிக்க வேண்டுமென்பலதை யெண்ணி, பெரிய பூமியிலுள்ள பல மன்னர்களையும் வருவீர்களாகவென்று மணவோலை யெழுதியனுப்பி, சோதிடநூலின்படி விவாக சுபதினத்தையு மாராய்ந்தறிந்தனன். எ - று. (௧௦)

மழைக்கு லப்பட நிவநதெழு மணிமதிட் புரிசை
யுழைப்ப டம்புரம் புதுக்குவா னுழையருக் குரைத்தான்
றழைப்ப சுங்கதிர் கடவுதன் கோயில மொருபா
லிழைத்தொ டர்ச்சியுட் சயமர மண்டப மெடுத்தார்.

(இ - ள்.) மேக கூட்டங்கள் வந்து தங்கும்படி உயர்ந்தோங்கிய அழகிய சுற்றுச்சுவர்களாகிய மதில்களின் உள்ளிடத்துள்ள நகரத்தை அலங்காரஞ் செய்யும்படி தூதுவர்க்குக் கட்டளை கொடுத்தான். பசிய கிரணங்கள் பரவிய பால சூரியன் பரிசிக்கும் தன்னரண்மனையின் ஒரு புறத்தில் காவலின்மூடர்ச்சிக்குள்ளே சுயம்வர மண்டபத்தை நியமித்தான். எ - று. (௧௧)

எடுத்த மண்டபத் தகவயி னரிசுமந் தெடுக்கப
படுத்த வாசனம பலபல படுத்தனர் பசும்பொ
னுடுக்கை கொய்யக மீபயட நாற்றின ருவரி
கொடுத்த முத்தணி தொடுத்தன ரிளநிலாக் கொழிப்ப.

(இ - ள்.) நியமித்த சுயம்வர மண்டபத்தின் உட்பாகத்திலே, சிங்கங்கள் சுமந்து தாங்கும்படி யமைத்த பற்பல ஆசனங்களைச் செய்தார்கள். பசும்பொற் சரிகை வஸ்திரங்களால் மே லாப்புச்சுமை தொங்கவிட்டார்கள். கடலில் பிறந்த முத்துக்களாலாகிய மாலைகளை இளஞ்சந்திரிகை வீசும்படி கட்டினார்கள். எ - று.

பாணி லாய்மணிக் கற்றையிற் படுத்தன கவரி
வேணி லாப்படக் குச்சொடுந் தூக்கினர் விரிபூங்
கான நாண்மலர் மாலிகை நிறைத்தனர் கணித்த
மோனை மங்கலத் தியற்றுவ யாவையு முடித்தார்.

(இ - ள்.) இத்தகைய புதல்வியர் நால்வரும் சுயம்வரமாலை சூட்டி அவ்வம் மன்னர்களிடமிருக்க, அவர்களை நோக்கிக் கண்களிப்புற்றவனாய் விவாகச் சடங்குகளை நிறைவேற்றி, அலங்கரிக்கத்தக்க பொன்னாபரண முதலியவற்றைக் கொடுத்துதவினான். அப்புத்திரிகள் நால்வரும் சில தினங்கள் அங்கேயே இல்லற நடத்திக்கொண்டிருந்தார்கள். எ - று. (எஉ)

மதிப்பெ ருங்குடை வேந்தர்க்கு வேண்டுவ வழங்கிப்
பதிக்க ணேகுதிர் நீரெனப் பணித்தனன் பணிபப
வதிர்க்கு மாழியந் தேரொடு நால்வரு மகன்றார்
விதிர்த்த வாட்படை கொட்புறு தானைசூழ் மிடைய.

(இ - ள்.) பெரிய சந்திரவட்டக்குடையையுடைய அவ்வரசர் நால்வர்க்கும் வேண்டிய செல்வங்களை யளித்து, உங்கள் தேசங்கட்குச்செல்லுகவென விடைதந்தனன். அங்ஙனம் கட்டளையிடவும் ஒலிக்கின்ற சக்கரத்தையுடைய தேர்களிலேறிக்கொண்டு அம்மன்னர் நால்வரும், அசைத்து நெருங்கிய வாளாயுதமேந்திய சேனைகள் புடைசூழ்ந்து வரும்படி தங்கடங்கள் தேசத்திற்குப் போனார்கள். எ - று. (எ௩)

தேர திர்ப்பினும் புரவியஞ் சிரிப்பினுந் தனிக்கை
கார்மு ழக்கினும் பல்லியத் துவைப்பினுங் கடனீர்ப்
பார்சு மக்குறு மனந்தனும் பதைப்புறப் படர்ந்தார்
தார்நெ றித்தலை யெதிர்ந்தனன் கோசிகத் தவத்தோன்.

(இ - ள்.) அவ்வரசர்கள் நால்வரும், தேரின் அதிர்ச்சியாலும், அழகிய குதிரைகளின் கனைப்பினாலும், ஒப்பற்ற துதிக்கையையுடைய மேகம்போன்ற யானைகளின் கர்ச்சனையினாலும், பல வாத்தியங்களின் முழக்கினாலும், நீர்மயமான கடல் சூழ்ந்த பூமியைத்தாங்கும் ஆதிசேடனும் பதைக்கும்படி விரைந்து சென்றார்கள். வழியிடையிலே தவத்தையுடைய விசுவாமித்திர முனிவர் எதிர்ப்பட்டனர். எ - று. (எ௪)

சென்றெ திர்ந்திடு பெருந்தவக் கோசிகச் செல்வ
னின்று வேந்தருக் கொருமொழி நிகழ்த்துவான் விளித்தான்
வென்றி வேந்தர்மற் றமலையிற் கேட்டிலா வெகுண்டான்
குன்று றுத்தவற் கிருபுரு வங்களுங் குனிந்த.

(இ - ள்.) எதிரிற் செல்பவராகிய பெருந்தவஞ்செய்த விசுவாமித்திர முனிவர் அங்கே நின்று அவ்வரசர்களுக்கு ஒரு வார்த்தை (ஆசிர்வசனமாகக்) கூற வேண்டி யழைத்தனர். வெற்றிபொருந்திய மன்னர்கள் ஒலிமிகையாற் கேட்டாரிலர். அதனால் குறைவுபடாத தவத்தையுடைய முனிவர்க்கு இருபுருவங்களும் வளைந்தன. அவர் கோபமெய்தினர். எ - று. (எ௫)

கொடிக்கொ ழும்புகை யிருவிழி கொழுந்துவிட் டெழுந்த
பொடித் தரும்பின வெயர்த்துளி பொருகதிர்ப் பருதி
வெடித்த வெங்கதி ரொடுங்கினன் மீண்டனன் விரிநீர்ப்
படித்த லம்புதைத் திருண்டது கொதித்தது பரவை.

(இ - ள்.) கொடிபோலப்படரும் பெரியகோபப்புகையானது அவருடைய இருவிழிகளிலுங் கொழுந்துவிட்டுத்தோன்றின. வியர்வுத்துளிகள் மயிர்க்கூச்சோடு தோன்றின. போர்செய்யுங் கிரணங்களையுடைய சூரியனும் தனது உஷ்ணமாகிய கொடுங்கிரணங்களை யொடுக்கிக்கொண்டு மறைந்தான். கடல்சூழ்ந்த பூமி முழுவதும் இருண்டது. சமுத்திரமுங்கொதித்து. எ - று. (௭௬)

வாம்ப ரித்தடந் தேருறை மன்னரு மனையார்
தேம்பு சிற்றிடைத் தேவியர் நால்வருந் தீரக்
கூம்பு டைக்கொடித் தேர்முதற் சேனையுங் குழுவும்
சாம்ப ராயின வருந்தவன் கடுஞ்சினத் தழலால்.

(இ - ள்.) தாவிச்செல்லுங் குதிரை பூட்டிய பரந்த தேர்களிலேறிய மன்னர்களும், அவர்கள் மெல்லிய நுண்ணிய இடையையுடைய மனைவிகள் நால்வரும் நீங்கலாக, [கூம்பு] கொடிஞ்சியையுடைய துவசங்கட்டிய தேர் முதலான சேனைத்தொகை முழுவதும், அருந்தவமுடைய விசுவாமித்திர முனிவர் கொடிய கோபாக்கினியாற் சாம்பராயின. எ - று. (௭௭)

என்கொ லீதென வெருவினர் நோக்கின ரெதிர்ந்த
பொன்செய் மாமுடி யரசரை நோக்குபு புகல்வான்
மின்செய் வேற்படை யரசர்கா ளும்மெதிர் விளித்தேம்
புன்சி ரிப்பினீர் கேட்டிலை நோக்கிலீர் போலும்.

(இ - ள்.) இஃதென்ன காரணமென்று அஞ்சியவர்களாய் நோக்கி, நேரே வந்த பொன்னாலாகிய சிறந்த கிரீடமணிந்த மன்னர்களைப்பார்த்து அம்முனிவர் சொல்லுகின்றார். மின்னலை வீசும் வேற்படைதாங்கிய மன்னவர்களே! உங்கட்கெதிரில் நாமழைத்தோம். நீங்கள் கொண்டிருந்த புன்னகையினாலே எம்மைப்பாராதிருந்தீர்கள் போலும். எ - று. (௭௮)

ஆத லானுமக் கிருசெவி கேட்கல வாக
தீது தீர்தரு கட்புலந் தெரியல வாக
மாத ரின்னல மணந்துறு தொழிகநீர் மணந்தாற்
பேதை காணுமர் முடித்தலை வெடித்தறப் பிளக்க.

(இ - ள்.) ஆதலால், அறிவிலிகளே! உங்கட்கு இருசெவிகளும் கேளாதனவாகுக. குற்றமற்று விளங்கும் இருவிழிகளும் தெரியாதனவாகுக. நீங்கள் உங்கள் மனைவியரின்பத்தை நுகராமற் போகுக. அப்படி நுகர்ந்தால், உங்கள் கிரீடமணிந்த சிரங்கள் முழுவதும் வெடித்துப்பிளந்து போகக்கடவன. எ - று.

நாடு மெப்பெரு நகரமு மகரமு நீத்துக்
காடு போகுதி ரென்றுருத் தருந்தவன் கழறு
நீடு நன்னெறி மாதவ முளவெலா நெடுங்கூத்
தாடு தன்னுடை யாச்சிர மம்புகுந் தடைந்தான்.

(இ - ள்.) உங்கள் நாடுகளையும், அவற்றுள்ள பெரிய நகரங்களையும், உங்கள் அரண்மனைகளையும் நீங்கிக்காட்டிற்குப் போகக்கடவீர்களென்று, அருந்தவ விசுவாமித்திரர் சாபங்கூறி, அதிகரித்த நன்மார்க்கத்தோடு கூடிய பெருந்தவங்களாயுள்ளனவெல்லாம் ஆநந்த நடனஞ்செய்யும் தமது ஆச்சிரமம்போயடைந்தனர். எ - று. (௮௦)

வேந்தர் நால்வரு மப்புல மொழிந்தனர் விரைப்பூங்
காந்தண் மெல்விரற் றேவிய ரருநெறி காட்டப்
போந்து பல்வரை மிடைபடு மடவியுட் புகுந்து
நீந்து ருப்பெருந் துயர்க்கடல் படிந்தனர் நெடுநாள்.

(இ - ள்.) உடனே மன்னவர் நால்வருங் கட்புலனுஞ் செவிப்புலனு மிழந்தார்கள். வாசனையும் அழகும் பொருந்திய செங்காந்தள் மலர்போலும் மெல்லிய விரல்களைக்கொண்டு தங்கள் மனைவிமார்கள் (கணவர் கரங்களைப் பற்றி) அரிய காட்டுவழியைக்காட்டச்சென்று, பல மலைகள் நெருங்கிய காட்டிற்சேர்ந்து, தாண்ட முடியாத பெரிய துயரக்கடலில் அநேக காலம் மூழ்கிக் கிடந்தார்கள். எ - று. (௮௧)

மேற்படி வேறு.

ஆடும்பு னற்றுள்ளி யருவிப்பெ ருஞ்சாரல் வெங்கானகத்
தூடுண்ட வுப்பில்ப சும்புற்கை யினிதுண்டு வக்கின்றநா
ளீடும்பொ லங்கோடு டித்தெய்வ மலையத்து நிறைமாதவ
னூடுந்த மிழ்க்கும்ப முனியக்க டுங்கான நடுவெய்தினன்.

(இ - ள்.) நீர்த்துளிகளாகிய அருவியொழுகும் பெரிய மலைச்சாரலையுடைய கடுங்காட்டில் தமக்குக்கிடைத்த உப்பில்லாத குளிர்ந்த கூழை இனிதாகப்புசித்துக்களிக்கின்ற நாளில், சிறந்த பொன்மயமான சிகரங்களையுடைய தெய்வீகந் தங்கிய பொதிய மலையில் வீற்றிருக்கும் பெருந்தவமுடித்தவரும், யாவரும் மதிக்கும் தமிழை வளர்த்தவருமாகிய அகத்தியமுனிவர் அக்கொடிய காட்டினிடையே யெழுந்தருளினர். எ - று. (௮௨)

செல்லுந்த மிழ்க்கும்ப முனிவற்ப ணிந்தொன்று செய்தேமலேம்
புல்லுங்க டுஞ்சாப முனிகோசி கன்றந்து போனானினிச்
சொல்லும்பெ ருஞ்சாப முனையன்றி யெவரோது டைப்பாரென
வல்லென்ற முலைமாத ரரசர்த்தொ ழச்சொல்லி வழிபட்டனர்.

(இ - ள்.) அப்படி யெழுந்தருளிய தமிழ் முனிவராகிய கும்பத்திற் பிறந்த அகத்திய முனிவரை, சொக்கட்டான் காய்களென்று சொல்லத்தக்க ஸ்தனங்களையுடைய அம்மங்கையர் பணிந்து, அடியேங்கள் ஒரு தீமையுஞ் செய்தவர்களல்லோம். விசுவாமித்திர முனிவர் எங்களைச்சேரும்படியான கொடுஞ்சாபந் தந்து போயினர். இனி அக்கொடுஞ்சாபத்தைத் தேவரீரையன்றி நீக்குவோர் யாவரென்று விண்ணப்பஞ்செய்து, தங்கள் கணவராகிய அரசர்களை வணங்கும்படி சொல்லிப் பூசை செய்தார்கள். எ - று. (௮௩)

அக்காலை யிகன்மன்னர் தொழுபைங்க ழற்கால டற்சோரிவாய்
க்காட னெடுவேலி னொருநால்வர் தொழுதுற்ற கவல்கண்ணுரு
மைக்காள கண்டத்த ரற்கொப்பு வராநின்ற தமிழ்மாதவ
னெக்காலு ளங்கண்கள் பனிமல்க நனிநின்று நினைகின்றனன்.

(இ - ள்.) அச்சமயத்தில், பகைமன்னர்கள் பணியும் பசிய வீரக்கழலணிந்த கால்களும், வலியுடைத்தாய் உதிரஞ் சிந்தும் வாயையுடைய வெற்றி

தங்கிய நெடியவேலாயுதமுங்கொண்ட ஒப்பற்ற நான்கு அரசர்களும்பணி தடைந்த துயரத்தைப்பார்த்து, விடந்தங்கிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானுக்குச் சமானமாக விளங்கிய அகஸ்தியமுனிவர் மனமுருகி, கண்களில் நீர் பொசிய நெடுநேரம் நின்று தம்முள் ஆலோசிக்கின்றனர். எ - று. (௮௪)

என்னேயி வர்க்கிக்க டுஞ்சாப மொழிகின்ற தெதுகொண்டென்
றுன்னவு ணர்ந்தெந்தை சிவபுண்ணி யத்தன்றி யொழியாதெனச்
சொன்னன வர்க்கன்ன தறிவாமெ னமக்கின்று சொலலாயெனப்
பன்னக சென்னிப்ப ரற்கான வழிபாடு பகர்கின்றனன்.

(இ - ள்.) இவ்வரசர்க்குற்ற கொடுஞ்சாபம் எவ்வாற்றாலொழிவது? யாது செய்து? என்று சிந்தித்துணர்ந்து, எமது பிதாவாகிய சிவபெருமானுக்குரிய புண்ணியத்தாலன்றி அம்மன்னர்களுக்குரைத்தருளினர். அச்சிவபுண்ணியத்தை அடியேங்கள் இப்போது தெரிந்துகொள்ளும்படி திருவாய்மலர்த்தருளவேண்டுமென வேண்ட, பல நாகங்களைச் சடையிலணிந்த சிவபெருமானுக்குரித்தாகிய பூஜாமார்க்கத்தைத் திருவாய்மலர்ந்தருளுகின்றனர். எ - று. (௮௫)

பொருதண்பு னற்கேச கக்கோன கர்ச்செய்ய போராழியான்
செருவென்று வக்கின்ற சாதார னென்னுந்தி றற்கோமகன்
வருதிங்க ளொருகொம்பெ டுத்தன்ன முகமங்கை மயில்போலுவா
ளிருகுங்கு மக்கொங்கை மூழ்கிக்கி டப்பான்வெ ளிக்கெய்துறான்.

(இ - ள்.) மோதுகின்ற குளிர்ந்த நீரையுடைய கேசகமெனும் பெரிய நகரத்திலே, செவ்விய போர்செய்யும் ஆச்கினைசக்கிரத்தையுடையவனும், போர்முகத்தில் வெற்றிபெற்றுக்களிக்கின்ற சாதாரனென்னும் வலிதங்கிய சிறந்த அரசனிருந்தான் அவன் உதயமாகின்ற சந்திரனை ஒரு பூங்கொம்பு சுமந்திருந்தாற்போன்ற முகத்தையுடைய மயில்போலுஞ் சாயலையுடைய மனைவியின், குங்குமச்சேறு பூசிய இருதனங்களைத்தழுவி மோக சாகரத்திலமிழ்ந்து புறத்தே வரமாட்டான். எ - று. (௮௬)

அன்னானி ருக்குந்தி ருக்கோயி னெடுவாயி லவணெய்தினான்
பன்னாளி ழைக்குந்த வந்தானு ருக்கொண்ட படிபோலுவான்
முன்னாவ சிட்டன்பு குந்தான தரசற்கு மொழிதந்திலார்
பின்னாலு கன்னற்பு றம்போக வறிவுற பின்னெய்தினான்.

(இ - ள்.) அவ்வரசன் வாழ்ந்திருக்கும் அழகிய அரண்மனையின் நெடிய வாயிற்படியில் எழுந்தருள்வதற்குத் திருவுள்ளங்கொண்டு, பல காலங்களிற் செய்த தவமே ஒரு வடிவெடுத்தாற்போன்றவராகிய வசிட்டமுனிவர் அங்கெய்தி உள்ளே போயினர். அதனை அக்காவலாளர் அரசனுக்குணர்த்திலர். நாலு நாழிகை காலங்கழிந்ததன் பின்னர், அவர்கள் உணர்த்த வுணர்ந்து வெளியே வந்தனன். எ - று. (௮௭)

வேரித்த டந்தாம நெடுவேனி லெங்கோவெ ருக்கொண்டிவ
னீரப்ப சுந்தாம ரைத்தாள்ப ணிந்தானெ ழுந்தூற்றனன்

மூரற்க டுந்தீமு கத்தான முற்றுன்மு னிந்தானரோ
வாரிப்பெ ரும்பூத லப்பூத மிருள்பட்டு மருள்பட்டதே.

(இ - ள்.) மண மிகுந்த மலர்மாலையணிந்து விசாலித்து நீண்ட வேலேந்திய இளந்தன்மையுடைய அரசன் பயமெய்தி, இவ்வசிஷ்டமுனிவருடைய குளிர்ச்சிவாய்ந்த செந்தாமரை மலர்போன்ற பாதங்களைப்பணிந்தெழுந்து நெருங்கினன். கோப நகைபொருந்திய வடவாக்கினிபோன்ற முகமுள்ள அம்முனிவர் களித்துக்கோபித்தார். உடனே கடல் சூழ்ந்த பெரிய உலகமாகிய ஐம்பெரும் பூதங்களும் இருள்பட்டு மயக்குற்றன. எ - று. (அஅ)

பேராழி வையம்பு ரக்குஞ்செ ருக்கிற்பெ ரும்பேதையா
யோராத காமக்க ளிப்பாலெ மைச்சற்று முளமெண்ணிலாய்
வாராடி ளங்கொங்கை யவளோடு மொருநீயும் வனவேடனுய்ச்
சூராடி ருங்கான கஞ்சேறி யென்றுன றத்தொல்லையோன்.

(இ - ள்.) பெரிய கடல்சூழ்ந்த உலகத்தைக்காக்கும் இறுமாப்பினாலே பெரிய மூடனாகி, உணர்வற்ற காமக்களிப்பினால் எம்மைச்சிறிதும் மனதில் மதியாதவனாக விருந்தனை. அதனால், கச்சணிந்த இளங்குசங்களையுடைய உன் மனைவியோடும் ஒப்பற்ற நீயும் காட்டில் வசிக்கும் வேடனாகி [சூர்] வனதெய்வங்கள் சஞ்சரிக்கும் காட்டிற் சேரக்கடவாயென்று தர்ம சொரூபராகிய பழமைவாய்ந்த வசிஷ்டமுனிவர் சபித்தனர். எ - று. (அகூ)

நின்னாடு காடாகி மிடைதந்த வனவேய்ந்தி ரைக்குன்றெழ
வந்நாட கத்துள்ள வனைவோரு மழல்வாய்வ யக்கோளரி
செந்நாய்பொ றிப்புண்ட ரீகஞ்சி னப்பல்ல முதலானமாக்
கொன்னாரு கிர்க்கங்க முதலாய புள்ளாகெ னக்கூறினன்.

(இ - ள்.) உன் நாடு முழுதுங்காடாகி, நெருங்கிய காட்டுமூங்கில்கள் மலைகளின் வரிசையில் ஓங்கி வளரவும், அந்நாட்டிலுள்ள எல்லோரும் தீயைச்சிந்தும் வெற்றிதங்கிய சிங்கங்கள் செந்நாய்கள் புள்ளிகளமைந்த புலிகள் கோபந்தங்கிய கரடிகள் முதலிய மிருகங்களும், வலிமிகுந்த நகங்களையுடைய பருந்து முதலிய பறவைகளுமாகக்கடவரென்று சாபமிட்டனர். எ - று.

உடுக்கும்ப சும்பீத கக்கோசி கப்பீலி யுடையானதாற்
றொடுக்கின்ற முத்தாரம் வெண்குன்றி யாகித்து வன்றுற்றவாற்
படுக்கின்ற முத்தக்க ழற்சோகி யாகிப்ப தம்புக்கதா
லெடுக்குந்த வத்திற்கு மேலென்ப துண்டோவி சைத்தோதவே.

(இ - ள்) உடுத்திருக்கும் பசும் பொன்னிறமான பட்டு வஸ்திரம் மயிற்றோகையுடையாகியது. கோத்திருக்கும் முத்துமாலை வெண்குன்றி மணிமாலையாகி நெருங்கியிருந்தன. எல்லோருக்கும் அன்பை விளைக்கும் வீரகண்டாமணி பலகலாயாகிக்கால்களிலெய்தின. ஆனபடியால், எல்லோராலும் புகழ்ந்து சொல்லத்தக்க தவத்திற்கு உயர்ந்ததாக எடுத்துக்கூறவேறொன்றுளதோ?எ-று.

ஒளிரும்ப சும்பொற்றொ டர்த்தாலி புலிவாளெ யிற்றொத்ததாற்
றளிருண்ட பொன்மேனி கருகிப்பொ லஞ்சேலை தழைபட்டதாற்

குளிருந்த ளிர்ச்செங்கை நிரைசங்கு சங்கான குழைபூடுலாய்
மிளிருங்க யற்கண்ணி பால்வேடு வத்தன்மை வெளிபட்டதே.

(இ - ள்) ஒளிவிடும் பசும்பொன்னாற்செய்து தொடர்ந்திருக்கும் மங்கல சூத்திரம் புலியின் கூரிய பல்லையொத்து, மாந்தளிர்போன்ற பொன்னிறத் தேகங்கருகி, தரித்திருந்த பொற்சேலை தழையாகிவிட்டது. குளிர்ந்த தளிர் போலுஞ் செந்நிறம்வாய்ந்த கைகளிலணிந்த வளையல்கள் சங்குகளாயின. காதணிவரையில் மீண்டு திரும்பும் சேற்கெண்டைபோலுங் கண்களையுடைய அவ்வரசன் மனைவியிடத்தில் வேடமாதின் தன்மை வெளிப்பட்டது. எ - று.

திரைவேலி நெடுமாநி லத்தெவ்வர் பரவந்த சினவேலினான்
வரைவேட னுருவெய்தி மனையாளொ டுங்கான வனமெய்தினான்
உரையாமு னம்பெற்ற கொலைவேட னிலைகண்டு றத்தாறினான்
புரைதீர்த வங்தொற்று கொள்கொம்பெ னுந்தெய்வ முனிபோயினான்

(இ - ள்.) கடல்வேலிவாய்ந்த பெரிய பூமியில் பகைமன்னர் பணியக் கோபிக்கும்வேலேந்திய அம்மன்னவன், வேட்டுருவெய்தித் தன்மனைவியோடும் பெருங்காட்டை யடைந்தான். குற்றமற்ற தவமென்னுங்கொடி படர்ந்துள்ள கொழுகொம்புபோன்ற தெய்வீகம்பொருந்திய வசிஷ்டமுனிவர், தாம் சபிப் பதற்குள்ளேயே அவ்வரசன் பெற்ற கொலைத்தொழில் புரியும் வேட்டுருவத் தைக்கண்டு கோபந்தணிந்து தமது ஆச்சிரமத்திற்கெழுந்தருளினர். எ - று. ()

மேற்படி வேறு.

கெழுமு மாளிகைக் கீசகப் புரத்துள மாக்கள்
கழுகு மாந்தையுங் கங்கமுங் கம்புளுங் கொடியு
மொழுகு சிச்சிலுஞ் சிரலையு மொண்சிறைப் புறவு
மெழுவு மற்றுள பறவையு மாகிவிண் ணெழுந்தார்.

(இ - ள்.) மிகுந்த மாளிகைகள் நிறைந்த கீசகபுரத்தில் வசித்த மனிதர் கள் யாவரும் கழுகுகளும் ஆந்தைகளும் பருந்துகளும் சம்பங்கோழிகளும் காக் கைகளும் பொன்வாய்ப்புட்களும் மீன்கொத்திப்புட்களும் அழகிய சிறகமைந்த புறாக்களும் பறந்துசெல்லும் ஏனைப்பறவைகளுமாய் ஆகாயத்திற் கிளம்பி னார்கள். (௩௪)

முடங்கு வாளெயிற் றடுசின வேங்கையு முழைவாண்
மடங்க லாளியும் வல்லுளைப் பன்றியும் பகுவாய்ப்
படங்கொள் பாந்தளும் பல்லுகிர்ப் பதத்தசெந் நாயுங்
கடங்க விழ்த்தெழு களிறுமொத் தவ்வனங் கலந்தார்.

(இ - ள்.) வளைந்த கூர்மையான பற்களையுடைய கொல்லத்தக்க கோபத் தையுடைய புலியும், துடுப்புப்போன்ற வாலையுடைய சிங்கமும், யாளியும், வலிய மயிர்களையுடைய பன்றியும், பிளவுபட்ட வாயையும் படத்தையுமுடைய பாம் பும், பல நகங்கள் பொருந்திய பாதம் வாய்ந்த செந்நாயும், மதஞ்சொரிந்து கொண்டு வரும் யானையும்போன்று அக்காட்டிற் சஞ்சரித்தார்கள். எ - று. ()

எழுதி நோக்கினு மொப்புறு விஞ்சிசூழ் நகரம்
பழுவ மூடிய வனமெனப் பல்சிறப் பொழிந்து

தழுவு மன்னவன் கோயிலுட் கழுதினஞ் சரிப்பப்
பொழுது ழுவகை யிருள்படப் புன்மரம் பொதிந்த.

(இ - ள்.) படமெழுதிப்பார்த்தாலும் ஒப்பாகாத மதில்கள் சூழ்ந்த அந்நகரமானது, நெருங்கியடர்ந்த காட்டைப்போலப்பலவகைச்சிறப்புகளும் நீங்கி, அதனைச்சேர்ந்த இராசமாளிகையிற்சென்று கழுகு கூட்டங்கள் சஞ்சரிக்க, சூரியனும் நுழையாத வண்ணம் இருள் நிறைந்திரும்படி புற்களும் மரங்களும் நிறைந்துவிட்டன. ஏ - ள். (௬௬)

நீண்ட மாமனைத் தொடர்படர் கிரிகளாய் நிவந்த
வாண்ட மைந்தெழு முளியரிற் குறுமுய லடைந்த
வேண்ட ருஞ்சிறப் பெய்திய வெண்ணிலா முன்றற்
றாண்ட ருஞ்சினப் படுபுலி பிணவுகண் டுயில்வ.

(இ - ள்.) நீண்ட சிறப்புற்ற மாளிகைகளின் தொடர்ச்சிகளெல்லாம் படர்ந்த மலைகளாயுயர்ந்தன. அங்கே வசித்தோங்குகின்ற வேடர்களைப்போலக் குறுமுயல்களெய்தின. விரும்பப்படுகின்ற அரிய சிறப்புகளடைந்த வெண்ணிலாமுற்றத்திலே, விசேடித்த கடுங்கோபந்தங்கிய கொல்லத்தக்க புலிகளும் பெண் புலிகளும் தூங்கிக்கொண்டிருந்தன. எ - று, (௬௭)

நீடு கோபுரங் கொடுமுடி நெடுவரை யாகி
யூடு பாந்தள்புக் குறங்குவ வோரிநின் றழைப்பப்
பாடு போக்கிய சாளர முழையெனப் பகுத்த
மாட மாளிகை பொற்றையாய்க் கொழுங்கொடி வளைத்த.

(இ - ள்.) உயர்ந்த கோபுரங்களெல்லாம் பெரிய மலைகளின் கொடுமுடிகளாகி, அவற்றின் மலைப்பாம்புகள் புகுந்து கண்டுயில்வன. கிழநரிகள் ஊளையிடுவன. சிற்பத்தொழிலமைந்த சாளரவாயில்களாக வகுத்திருந்த மாடமாளிகைகளெல்லாம் சிறுகுன்றுகளாய் அவற்றிற்கொழுவிய காகங்கள் சூழ்ந்திருந்தன.

மணந றுந்துணர் வனமெலாம் பகன்றையாய் மலர்ந்த
துணர விழ்ந்தலர் மாதவி காஞ்சொரி துணர்த்த
விணரவி ழ்ந்தலர் பூங்கமு கீந்தென விலிர்ந்த
பணைநெ டுஞ்சினை மாம்பொழில் காஞ்சிரை பழுத்த.

(இ - ள்.) நறுமணமுள்ள மலர்க்கொத்துக்களையுடைய நந்தனவனங்களெல்லாம் [பகன்றை] கிலுகிலுப்பை மலர்களாக விகசித்தன. பூங்கொத்துகள் விகசித்து மலர்ந்த குருக்கத்திகள் காஞ்சொரிகளாயலர்ந்தன. மகரந்தத்தை யுதிர்த்து மலர்கின்ற அழகிய கமுக மரங்களெல்லாம் ஈச்சமரங்களாய்த்தளிர்விட்டன. பணைத்த நீண்ட கிளைகளும் மாஞ்சோலைகளும் எட்டிமரங்களாய்ப் பழுத்தன. எ - று. (௬௯)

கலைநி லாப்படு வெண்பளிக் கறைமுகட் டுச்சி
கொலைம தக்களி றழித்தெழுங் கோளரிக் குறுந்தா
ளலைப சும்புனற் குருதிதோய்ந் தவணவ ணமைத்த
நிலைநெ டும்புனற் றாமரை மலர்ந்தன நிகர்த்த.

(இ - ள்.) பூரண கலைகளோடுகூடிய சந்திரிகையைப்பரப்பும் வெள்ளிய பளிங்குக்கற்களாற்சமைந்த உத்திரத்தின்மீது, கொல்லத்தக்க மதங்கொண்ட யானையைவென்று விளங்குஞ் சிங்கத்தின் சிறு கால்கள், அலைகின்ற புதிய நீராகிய உதிரத்திற்படிந்து அங்கங்கே வைத்திருப்பவை, நிலையாயுள்ள மிக்க நீரில் தாமரைமலர்கள் மலர்ந்தனபோன்றிருந்தன. எ - று. (௧00)

ஒடுக்கி தழ்ப்படு தாமரை காந்தளொத் துடைந்த
மடற்பொ திந்தெழு மல்லிவெண் காந்தளாய் மலர்ந்த
வெடுத்த தண்புனல் கானலொத் தெல்லைநீத் திறந்த
வடுத்த பானலு மழைநிறக் குறிஞ்சியொத் தலர்ந்த.

(இ - ள்.) ஒடுக்கிய இதழ்கள்படைத்த தாமரைகளெல்லாஞ் செங்காந்தளைப்போன்று விகசித்தன. இதழ்கள் நெருங்கியோங்கிய மல்லிகை மலர்களெல்லாம் வெண்காந்தள் மலர்கள்போலப் புட்பித்தன. நிரம்பிய குளிர்ச்சி தங்கிய நீர் நிலைகள் கானற்சலப்போல வரம்புகடந்தொழிந்தன. நெருங்கிய நீலோற்பலமலர்களும் மேகநிறந்தங்கிய மருதோன்றிமரங்கள்போலப்பூத்தன.

முழங்கு பைங்கழற் கோமக னுடைக முகப்பிற்
றழங்கு பல்லியங் களிறென நாடகச் சதியின்
வழங்கு மாடலை மிதிக்குநர் மயிலெனக் குயிலா
லெழுந்த பாடலி னுடகந் தனிமைகண் டிருக்கும்.

(இ - ள்.) சப்திக்கின்ற பசிய வீரகண்டாமணிதரித்த அம்மன்னனது நாடகசாலையின் வாசலில் ஒலித்துகொண்டிருந்த பல வாத்தியங்களுள் யானைகளாகவும், நாடகத்திற்கிணங்கச் சதிக்கொத்து நடிக்கும் நடனஞ்செய்பவர்கள் மயில்களாகவும், குயிலகளாலுண்டாகிய ஓசையே பாடலாகவும் இவ்வகை நடனம் பார்ப்பவர்களில்லாமல் தானே நிகழ்ந்துகொண்டிருக்கும். எ - று. ()

இன்ன தன்மையொத் திருந்தன வாசியி லிருக்கை
யன்ன வேடனைத் தகன்றவ னடவியுட் சரியா
வின்ன லங்கடற் படிந்தவ ணியங்குறு மேல்வை
பன்னு மாதவத் திரணவிந் தவ்வனம் படர்ந்தான்.

(இ - ள்.) அவ்வரசனது அரசியற்கைத் தன்மை இவ்வகையையொத்திருந்தன. அவ்வகைய வேடன்போலச் சென்ற மன்னவன் பெருங்காட்டிற் சஞ்சரித்துக்கொண்டு, துயர்க்கடலில் மூழ்கி வசித்திருக்குந் தருணத்தில், துதித்தற்குரிய பெருந்தவத்தையுடைய திருணவிந்துவென்னும் முனிவர் அக்காட்டிற்கு எழுந்தருளினர். எ - று. (௧0௩)

அடைந்த மாதவத் தலைவனை யரசனு மவளும்
படிந்து தம்முடி மண்ணுறப் பணிந்தனர் பணியா
மிடைந்த புன்சடை யருந்தவ வசிட்டனால் விளைந்த
திடைந்த சிந்தையி னெடுத்தெடுத் தியம்பின ரிரந்து.

(இ - ள்.) அங்கெழுந்தருளிய பெருந்தவத் தலைவராகிய திரணவிந்துவென்னும் முனிவரை அவ்வரசனும் அவன் மனைவியும் நிலமிசைப் படியும்படி வணங்கினார்கள். அப்படி வணங்கியவுடனே நெருங்கிய சிறு சடைகளையுடைய அருந்தவஞ்செய்த வசிட்டமுனிவரால் தமக்குற்ற சாபத்தை, வருந்திய மனதோடு பிரார்த்தித்து விளக்கி விண்ணப்பித்தார்கள். எ - று. (௧0௪)

கேட்டு நின்றருண் முனிவரற் கின்னருள் கிளைப்பத்
தோட்ட லங்கலீர் நும்முழைப் பாதகந் தொலைவான்
கோட்டு வெள்விடை யவனருட் புண்ணியங் குணியா
வீட்டு சிந்தையி னியற்றுதி ரெனவெடுத் திசைத்தான்.

(இ - ள்.) அதனைக்கேட்டருளிய திரணவிந்து முனிவருக்கு இனிய திருவருள் மிக, இதழ்களோடு கூடிய மலர்மாலையை யணிந்தவர்களே! உங்கட்குள்ள பாவங்கள் நிவாரணமாகும்படி, கொம்புகளையுடைய வெண்ணிறந்தங்கிய இடபாரூடராகிய சிவபெருமானுடைய திருவருளுக்குரிய சிவ புண்ணியங்களைக் கருதிச் செய்யவேண்டுமென்னும் மனதோடு செய்யக்கடவீர்களென்று விரித்துச் சொல்லுகின்றார். எ - று. (௧௦௫)

இவரை யன்னவன் பின்னரு நோக்கிமற் றீங்குச்
சிவன தாலய முண்டுகொ லென்றலுஞ் செறிந்த
கவன வேடனு மனைவியுந் தொழுதுளங் களிப்பார்
தவமு யற்சியீ ருளதெனச் சாற்றின ரவற்கு.

(இ - ள்) இவ்விருவரையும் அம்முனிவர் மீண்டும் பார்த்து, இங்கே ஏதேனும் சிவாலயம் உளதோ? என வினவவும், மிகுந்த கவனத்தையுடைய வேடரூபங்கொண்ட மன்னவனும் அவன் மனைவியும், அம்முனிவரை வணங்கி மனங் களிப்படைந்தவர்களாய், அவரை நோக்கித் தவமுயற்சியுடையோரே! இங்குண்டென்று சொன்னார்கள். எ - று. (௧௦௬)

இத்த லத்தினுக் கயல்பிர மேச்சுர மென்னு
மத்த னாலய முளதென வருந்தவத் தலைவன்
பத்தி யிற்சிவ னாலயம் புகுந்துநீர் பரிவான்
முத்தர் வேண்டுறு மருளுசெயற் பணிவிடை முயல்வீர்.

(இ - ள்.) இவ்விடத்திற்கருகே பிரமேச்சுரமென்னுந் திருநாமமுள்ள சிவபெருமான் திருவாலயமிருக்கின்றதென்று கூற, அதனைக்கேட்ட அருந்தவச் செல்வராகிய திரணவிந்து முனிவர் நீங்களிருவரும் பத்தியோடு அச்சிவாலயமடைந்து அங்குள்ள பெரியோர்கள் விரும்புகின்ற சிறந்த செயல்களாகிய பணிவிடைகளை அன்புடன்செய்ய முயலுவீர்களாக. எ - று. (௧௦௭)

புரிந்த மாமதிற் புறத்துள புற்சிதைத் தெடுத்துஞ்
சரிந்து வீழ்சரு ககற்றியுந் தனித்திரு முன்றிற்
பரிந்த வன்பினிற் றுகடைத் தகற்றியும் பழங்க
ணிரிந்து போதரச் சந்நிதி திருமெழுக் கிட்டும்.

(இ - ள்.) அலங்கரித்த பெரிய மதிற்புறத்திலே முளைத்துள்ள புற்களைப் பிடுங்கியெறிந்தும், மரங்களினின்றும் நழுவிவிழுகின்ற சருகுகளைப் பொறுக்கியெறிந்தும், ஒப்பற்ற திருமுற்றத்திலே மெய்யன்போடு தூசுகளைக் கழித்து நீக்கியும், துன்பங்களழிந்தோடும்படி திருச்சந்நிதானத்தில் திருமெழுக்கிட்டும்.

அலங்க லுண்மல ருதவியு மரணபி டேகக்
கலங்கொ ணர்ந்தவற் குதவியுங் கடிமதிட் கிளைத்த
குலங்கொள் வல்லிவேர் பிடுங்கியு மெம்பிரான் கோயில்
வலன்றி ரிந்துநின் றெடுத்தெடுத் தினிதக மகிழ்ந்தும்.

(இ - ள்.) சிவபெருமானுக்குத் திருமாலைக்குரிய மலர்களை யெடுத்துக் கொடுத்தும், அபிஷேகத்திற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்துவந்து அவருக்குதவியும், காவலாயுள்ள திருமதில்களில் முளைத்துள்ள கூட்டமாகிய கொடிகளையும் வேர்களையும் பறித்தும், எமது சிவபெருமான் திருவாலயத்தை வலஞ்செய்தும், சந்நிதிக்கு நேரில்நின்று மிகவுந் துதித்து இனிதாக மனங் களித்தும். எ - று. (க௦கூ)

கருத்தி னெம்பிரான் றிருவடி கரந்துறக் கருதி
யிருத்தி ராங்கவ ணிப்பெருஞ் சாபநீத் தொழியு
மருத்தி மாநகர் முன்னையிற் சிறப்புடைத் தாகுந்
திருத்து நின்னுடை யரசுசெங் கோன்முறை செல்லும்.

(இ - ள்.) உங்களிதயத்தில், எமது சிவபெருமான் திருவடிகள் மறைந் திருகரும்படி தியானஞ் செய்துகொண்டிருப்பீர்களாக. அப்போது அங்கே உங்களுக்கு நேர்ந்துள்ள இப்பெருஞ்சாபம் நீங்கும். உங்களால் விரும்பப்படும் பெரிய நகரமும் முன்போலவே சிறப்பினையடையும். திருத்தமாகிய உன் அர சாட்சிக்குரிய செங்கோலும் கிரமப்படி செல்லும். எ - று. (கக௦)

என்று ரைத்தனன் றிரணவிந் திருந்தவச் செல்வ
னன்ற வர்க்களித் தாச்சிர மத்துநீத் தகன்றான்
மன்ற லங்குழன் மனைவியுந் தானுமாய் வடபாற்
குன்ற வில்லிபொற் கோயிலிற் குறுகினன் புகுந்தான்.

(இ - ள்.) என்றிவ்வாறு திரணவிந்துவென்னும் பெரிய தவச்செல்வ முடையவர் திருவாய் மலர்ந்து, அன்று அவர்களுக்குத் திருவருள்செய்து அவ் வனத்தை யகன்று சென்று தாம் வசிக்கும் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினர். மணங்கமழும் அழகிய கூந்தலையுடைய தன் மனைவியும் தானுமாய், வட திசையிலுள்ள மேருமலையை வில்லாகக் கொண்டருளும் சிவபெருமான் வீற் றிருக்கின்ற அழகிய பிரமேசுரந்தையடைந்து உள்ளே போயினன். எ - று.

உரைத்த மாதவ னுரைப்படி யெம்பிராற் குவப்பி
னிரைத்த வன்பினோ டென்பற வுருகின ரியற்றக்
கரைத்த கட்புன லரும்புறக் கனிந்தனர் கவலார்
நிரைத்த கங்குல்பன் னொன்றுபிற படுத்தது நிமலன்.

(இ - ள்.) தமக்குபதேசித்த பெருந்தவமுடைய திரணவிந்து முனிவர் சொற்படி எமது சிவபெருமானுக்குக் களிப்போடும் ஆரவாரித்த மெய்யன் போடும் எலும்பும் நெக்குவிட்டுருக மனவுருக்கமெய்தியவராய்ச் செய்து, ஒழு கிய ஆநந்தபாஷ்பங்கள் துளிகைக்கவலையற்றவர்களாய்க் கனிவெய்தியவர்களாய் வரிசையாக வரும் இரவுகள் பதினொன்றனை கழித்தவுடன், சிவபெருமான்,

ஓது சாபநீத் தின்னுரு முன்னுரு வுதவிப்
போது மாநகர் முன்னினுஞ் சிறப்பெனப் புரிந்து
காதன் மாக்களு மன்பதை யுருக்கொடு களிப்பத்
தீது தீர்ந்துறத திருவுள நெகிழ்ந்தருள் செய்தான்.

(இ -ள்.) வசிஷ்டமுனிவர் கூறிய சாபத்தைய கற்றி, இனிய உருவமாகிய பண்டைய உருவத்தைப் பாலித்து, அளந்த பெரிய நகரமானது முன்னிருந்

தனைக் காட்டிறுஞ் சிறப்புடையதென்று கண்டோர் கழறும்படி செய்து, ஆசையையுடைய அந்நகரவாசிகளும் மனிதவுருவமெய்திக் களிப்புறவும், கெடுதிகளெல்லாம் நீங்கிப்போகவும் திருவுள்ளமிரங்கித் திருவருள் பாலித்தனர்.

தடக்கை வேந்தனுந் தேவியுந் தன்னக ரடைந்து
திடப்பெ ருந்தனித திகிரியாற் கோமுறை செலுத்தி
மடக்கொ டிங்கொடி பாகனை வரன்முறை வழுத்தி
யிடர்ப்பெ ரும்பிறப் பொழித்துபோய்க் கயிலைவீற் றிருந்தார்.

(இ - ள்.) பரந்த கைகளையுடைய அரசனும் அவன் பத்தினியும் தங்கள் நகரத்தையடைந்து, வைராக்கியத்தோடு சேர்ந்த பெருமை தங்கிய ஒப்பற்ற ஆக்கினைசக்கரத்தினாலே இராசரீக முறைமையைச் செலுத்திக்கொண்டு, அழகிய உமாபிராட்டியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமானைத் துதிசெய்து துயரத்திற்குக் காரணமாகிய பெரிய பிறவி நீங்கிச்சென்று திருக்கைலாயத்தில் வீற்றிருந்தார்கள். எ - று. (ககச)

ஏறு கைத்திடு மெம்பிராற் கினியன வியற்றுங்
கூற ருஞ்சிவ புண்ணிய நீவிருங் குணிப்பி
னூறு நீங்கியிக் கொடும்பெருஞ் சாபநீத் தொழிவீர்
வேறொ ழித்துறு தென்றன னருந்தவ வேந்தன்.

(இ - ள்.) இடபத்தை வாகனமாகச் செலுத்தும் எமது சிவபெருமானுக்கு இனிய திருத்தொண்டுகளைச் செய்வதாகிய சொல்லுதற்கரிய சிவ புண்ணியங்களைச் செய்தற்கு நீங்களும் நினைப்பீர்களாயின், இடையூறகன்று இக்கொடிய பெருஞ்சாபத்தினின்று நீங்கப்பெறுவீர்கள். இச்சிவ புண்ணியத்தைத் தவிர வேறொன்றும் இச்சாபத்தை நீக்காதென்று சிறந்த தவராசராகிய அகத்திய முனிவர் (அவ்வரசர் நால்வர்க்கும்) கூறினர். எ - று. (ககரு)

ஏழை யேஞ்சிவ புண்ணிய மியற்றுவான் முயல
வாழி மாதவ வான்முறை வழங்குதல் வேண்டும்
ஊழி நாயகற் கினியன வுணர்ந்திலே மென்று
மாழை யொண்கணார் தம்மொடும் பணிந்தனர் மன்னர்.

(இ - ள்.) சிறந்த தவமுடையவரே! அடியேங்கள் சிவ புண்ணியஞ்செய்ய விரும்பி, முயற்சிப்பதாக வரிசையான முறைமைகளைத் திருவாய்மலர்ந்தருள வேண்டும். ஊழி முதல்வராகிய சிவபெருமானுக்குரியனவாகிய சிவபுண்ணியங்கள் இவையெனத் தெரிந்திலோம் என்று, அழகிய வொளிதங்கிய விழிகளையுடைய தங்கள்மனைவியரோடு, அம்மன்னர்கள் நால்வரும் பணிந்தார்கள்.

இரந்து முத்தமிழ்த் தலைவனை யெடுத்தெடுத் தேத்திப்
புரிந்து போற்றுறு மந்நிலை மழவிடைப் புனிதன்
கரந்தை யஞ்சடைப் பரனமு தேச்சுரன் கருணை
சுரந்த ளித்துறப் பெருஞ்சிவ தேசிகன் றொன்ற.

(இ-ள்.) முத்தமிழ்க் கிறைவராகிய அகத்தியமுனிவரை இப்படிப் பிரார்த்தித்து, அவர் புகழ்களைப் பலவாறு எடுத்துத் துதிசெய்து, விருப்பத்துடன் பணிந்துகொண்டிருக்குந் தருணத்தில், இளமை தங்கிய இடபவாகனத்தையுடைய புனிதமானவரும், கரந்தையணிந்த சடையையுடைய சிவபெருமானுமாகிய அமுதேசுவரருடைய திருவருள் மிகுந்து பாலிக்கப்பெற்ற அர்ச்சகர் ஆங்கெழுந்தருளலும். எ - று. (ககசு)

தெய்வ வேதியன் றேன்றனுஞ் செழுந்தமிழ்ப் புனித
னவ ருந்தனிச் சிந்தையோ டெதிர்ந்தன னவைதீர்
பொய்யின் மாதவன் றன்னொடு மளவளாய்ப் பொறைகூ
ரைய நின்னுடைப் பெருமையா ரளவறிந் திசைப்பார்.

(இ - ள்.) அச்சிவாசாரியர் ஆங்கெழுந்தருளியவுடனே, செழித்த தமிழ் முனிவர் மிக வருந்திய சிறந்த மனதோடு அவரை யெதிர் கொண்டவராய், குற்றமகன்ற மெய்த்தவமுடைய அவ்வாசாரியரோடுங் கலந்து, சாந்தகுண முதிர்ந்த தலைவரே! தங்களுடைய பெருமையை எவர்தாம் அளவிட்டுச் சொல்ல வல்லவர்கள்? எ - று. (கக௯)

மரபி னோங்கிய கொடுமுடிப் புட்பமால் வரையிற்
குரவர் கோத்திரத் துதித்தனை மறைக்குலக் கொழுந்தே
பரவி நின்னுழை வேண்டுவ துண்டது பணிப்பாய்
புரவு பூண்டவ ரிவர்க்குவந் துற்றுயர் புகல்வான்.

(இ - ள்.) முறைப்படி யோங்கியுயர்ந்த கொடுமுடிகளையுடைய பெரிய புட்பகிரியில் சிவாசாரிய கோத்திரத்திற் சனித்த வேதியர் மரபின் கொழுந்து போல்வரே! உம்மிடத்தில் யான் பிரார்த்தித்து வேண்டிக்கொள்வதொன்றுளது. அதனைப் பாலிக்கவேண்டும், அரசாட்சியை மேற்கொண்டவர்களாகிய இவர்கள் நால்வருக்கும் வந்தடைந்த துயரத்தைக் கூறுகின்றேன். எ - று. ()

தெளித்த மாதவக் கோசிக னடுசினத் தீயாற்
களித்த யானையுஞ் சேனையுஞ் சாம்பராய்க் கழிய
வெளிப்ப டும்புல னிழந்திரு செவிப்புலன் வீயக்
குளிர்த்த கல்லரு விப்புனங் குறுகின ரிவர்கள்.

(இ - ள்.) தெளிவுற்ற பெருந்தவமுடைய விசுவாமித்திர முனிவருடைய கொடிய சினத்தீயினால், களிப்புற்ற பட்டத்து யானையும் மற்றுள்ள சேனைகளுஞ் சாம்பராயழியவும், காண்டற்குரிய கட்புலனழிந்து கேள்விக்குரிய இரு செவிப் புலன்களுமழிய, மலையினின்றொழுகும் குளிர்ந்த அருவி நீர்பாயும் இக் காட்டில் இந்நால்வரும் வந்து சேர்ந்தார்கள். எ - று. (கஉ௦)

எந்தை நீயினி யின்னரு ளிவர்க்கென வீந்து
முந்தை யோன்சிவ புண்ணிய முயற்சியின் முயலத்
தந்து மாபெருஞ் சாபநீத் தருளெனப் புகலாச்
செந்த மிழ்க்கடற் குறுமுனி கயிலைபோய்ச் சிறந்தான்.

(இ - ள்.) எந்தையாகிய நீர் இப்போது உம்முடைய இனிய அருளை இவர்கட்கு அளித்து, முதல்வராகிய நமது பெருமானுக்குரிய சிவபுண்ணிய முயற்சியிற் பயிலும்படி செய்து, இவர்களுக்குச் சம்பவித்துள்ள மகத்தாகிய பெருஞ் சாபத்தை விலக்கியருளவேண்டுமென்று கூறி, செவ்விய தமிழ்க் கடலைக் கடந்த அகத்திய முனிவர் கைலாயகிரிக் கெழுந்தருளிச் சிறந்திருந்தனர்.

அரசர் நால்வருந் தேவியர் நால்வரு மருநூற்
குரவ னைப்பணிந் தேத்தின ராங்கவன் கொடுபோய்ப்
புரவ லர்க்கமு தேச்சுரங் காட்டலும் புகுந்தார்
பரம னைத்திருச் சந்நிதி மண்ணுறப் பணிந்தார்.

(இ - ள்.) இராச குமாரர்கள் நால்வரும், அவர்கள் மனைவிமார் நால்வரும், அரிய வேதமுணர்ந்த அச்சிவாசாரியரைப் பணிந்து துதிசெய்தார்கள். அச்சிவாசாரியர் இவர்கள் எட்டுப்பேரையும் அழைத்துக்கொண்டு சென்று அம்மன்னர்களுக்கு அமுதேசுவரமென்னுந் திருக்கோயிலைக் காட்டியவுடனே உள்ளேபோய், திருச்சன்னிதானமடைந்து அமுதேசுவரரைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தார்கள். எ - று. (௧௨௨)

பரசி நின்றிரந் தழுதழு திரங்குதல் பார்த்துக்
குரவ னுங்கவர்க் கரசர்கள் கொடிநெடும் புரிசைப்
புரமெ ரித்தவ னடியவர்க் கெளியனீர் புன்கண்
டரவ ருநதுறு தெழுதிரென் றோர்கதை சாற்றும்.

(இ - ள்.) சந்நிதியில் வணங்கி நேர்நின்று புலம்பிப் புலம்பித் துயருறுவதுகண்டு, சிவாசாரியர், அரசர்களே! கொடிகளோங்கிய நெடிய மதில்களையுடைய முப்புரங்களை யெரித்தருளிய சிவபெருமான் அடியார்கட்கெளியவராயிருப்பவர். ஆதலால், நீங்கள் துன்பமெய்தும்படி வருந்தாமல் எழுந்திருங்களென்று அந்நால்வர்களுக்குங் கூறி ஒரு சரிதையைக் கூறுகின்றார். எ - று.

கருணை மெய்யுரு வெடுத்தன காசிபத் தவத்தோ
னருகு முற்கல னெனும்பெய ரந்தண னருநூற்
சுருதி கேட்டிருந் தோதினா னோதலுந் துளிபட்
டொருவு நாப்புன றெறித்தலுங் காசிப னுருந்தான்.

(இ - ள்.) காருணியமே திருமேனியாகக்கொண்ட தவத்தையுடைய காசிபமுனிவரிடத்திலே, முற்கலனென்னும் பெயருடைய ஒரு முனிவர் அரிய நூலாகிய வேதத்தைப் பாடங்கேட்டுக்கொண்டு, அவரிடத்திலிருந்தே அவ்வேதத்தையோதினர். அவ்வாறோதுகையில், அம்முனிவருடைய நாவிலுள்ள உமிழ்நீர் தவறி ஒரு துளி தெளித்தமாத்திரத்தில், காசிபமுனிவர் கோபமெய்தினர்.

பத்தி யும்பய முந்தெரிந் துணர்ந்திலை பசுநூற்
பித்த னுயினை நின்னுடை நாவகம் பிதிர்ந்த
தொத்து புன்றுளி யெம்முழைத் தெறித்தலாற் றுறவோ
யித்து ணைக்கரும் பகடெனப் போதியென் றிசைத்தான்.

(இ-ன்.) முனிவனே! ஆசிரியன் பால் வைக்கவேண்டிய பத்தியும் பயமும் அறிந்து தெரிந்துகொண்டாயில்லை. நீ பசுநூலுணர்ந்த பைத்தியக்காரனாய் விட்டாய். உன் நாவினின்றொழுகிய ஒட்டுதலையுடைய எச்சிற்றுளி யெம்மிடத்தில் தெளித்தபடியால், நீ இப்பொழுதே கருநிறமமைந்த எருமைக்கடாவாகப் போகுகவெனச் சபித்தனர். எ - று.

எடுத்த மெய்யிழந் திருமருப் பொருதனிப் பகடாய்
விடுத்த பைம்புலி னூர்ப்புற மேய்ந்தனன் றிரிவான்
றொடுத்த தொல்லைநாட் கழித்தன னொருதினந் தொடுநீர்க்
கடுத்த னிக்களைக் கண்டனோ ராலயங் காணா.

(இ - ள்.) நீ யெடுத்த மானுடதேகம் நீங்கி இருகொம்புகளையுடைய ஒப்பற்ற வொன்றியான எருமைக்கடாவாய், முளைத்துள்ள பசிய புற்களை ஊர்ப்புறங்களில் மேய்ந்து சஞ்சரிப்பவனாய், தொடர்ந்துவரும் நெடுநாட்களை யிப்படிக்கழித்து, ஒருநாள் பாற்கடலிலுதித்த ஒப்பற்ற ஆலாலத்தை யடக்கிய நீலகண்டராகிய சிவபெருமானது ஒப்பற்ற திருக்கோயிலைப் பார்த்து, எ - று.

ஆதி யெந்தைசத் தீச்சுரத் தகவயி னடைந்து
சீத வார்பசும் புற்பட மேய்ந்துசூழ் திரிந்து
வீதி யங்ஙன மும்முறை சூழ்ந்துமெல் லியற்கோர்
பாதி யீந்தவன் சந்நிதி கிடந்ததப் பசுவே.

(இ-ள்.) ஆதிதேவனும் எமது தந்தையுமாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் சத்தீசுவரமென்னுந் திருவாலயத்தை யடைந்து, குளிர்ச்சியுற்ற நீண்ட பசும்புற்களை மேய்ந்துகொண்டிருந்து ஆலயத்தைச் சூழ்ந்து திரிந்து அப்படியே மாடவீதியையும் மும்முறை சூழ்ந்துவந்து, உமாதேவியாருக்குத் தமது திருமேனியிற் பாதியை யளித்தவராகிய சத்தீசுவரர் சந்நிதானத்திற் படுத்திருந்தது. எ - று. (௧௨௭)

ஆல யம்பசும் புற்றிர ளழித்தத னாலு
மாலை மும்முறை வந்தது வலன்றிரிந் ததுவே
போலு மென்பத னாலுமப் புராரிசந் நிதிக்கே
யேல வீழ்ந்தது வணங்கலொத் ததுவென வாகும்.

(இ - ள்.) அச்சிவாலயத்தில் முளைத்திருந்த பசும்புற் கூட்டங்களை அழித்தமையினாலும், மாலைப்பொழுதில் அவ்வாலயத்தை மும்முறை சூழ்ந்து வந்தது வலம் வந்ததையொத்த தென்றபடியாலும், அச்சிவபெருமான் சந்நிதானத்திற்கு நேராகப்படுத்திருந்ததே நமஸ்கரித்தமையை யொத்தது என்றபடியாலும். எ - று. (௧௨௮)

உமைக்கு நாயகன் றிருவுள மிரங்கிய தொருங்கே
யமைத்த சாபநீத் தவ்வுரு வடைந்தன னந்நா
ளிமைப்பின் முக்கண னெம்பிரான் சந்நிதி யிகவான்
சமைத்த நான்முறை வலன்றிரிந் தேத்தினன் சரிப்பான்.

(இ - ள்.) உமாபிராட்டியாருக்குக் கணவராகிய சிவபெருமான் திருவுள்ளமிரங்கி யருள்புரிந்தனர். அன்றையதினமே தனக்குற்றிருந்த சாபம் விலகிப்பண்டை வடிவம்பெற்றனன். உடனே திரிநேத்திரங்களையுடைய எமது சிவபெருமான் சந்நிதியை இமைப்பொழுதும் நீங்காதவராய், சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய ஆகமவிதிப்படி வலஞ்செய்து துதித்துவசித்திருந்தனர்.

ஈது நோக்கினின் றதிசய முலகுளோ ரெய்த
யாது மொன்றறிந் தியற்றாது திப்பக டிழைத்த
தீது தீர்ந்ததென் றூற்சிவ புண்ணியப் பெருமை
யோத வேண்டிறின் யாவரே யளவறுத் துரைப்பார்.

(இ - ள்.) இதனைப்பார்த்து நின்று, உலகினர் யாவரும் அதிசயமடைய், ஏதொன்றாயினும் நிவாரணமறிந்து செய்யாமலே, இவ்வெருமைக்கடாசெய்த பாவமானது நிவாரணமாயிற்றென்று சொல்வோமானால், சிவபுண்ணியத்தின் சிறப்புகளை முழுவதும் எடுத்துச்சொல்லவேண்டுமானால் எவர் தாம் அளவு படுத்திச்சொல்லவல்லவராவார்கள்? எ - று. (௧௩௦)

வருதிர் நீவிரென் றுரைத்தன னொருவனுண் மலர்த்தார்
தருதி ரென்றன னொருவர்போய்த் தடம்புனல் கொணர்மி
னொருவ ரிங்குழை வாரமுற் றிழைத்திர்மற் றொருவர்
பருகு மென்கனி தருதிரீ சனுக்கெனப் பணித்தான்.

(இ - ள்.) நீங்கள் வருவீர்களாகவென்று கூறி, அவர்கள் நால்வரில் ஒருவனை அன்றலர்ந்த மலர்களாலாகிய மாலை கட்டிக்கொடு என்றும், பிறிதொருவனை நீ போய் விசேஷ தீர்த்தங்கொண்டு வருகவென்றும், வேறொருவனைப்புசிக்கத்தக்க மெல்லிய கனிவர்க்கங்களைச் சிவபெருமானுக்கு நிவேதிக்கக் கொணர்கவென்றும் உத்தரவளித்தனர். எ - று. (௧௩௧)

சொற்ற நால்வகைப் பணிவிடைக் கேற்பன தொகுத்து
மற்றை நால்வர்க்கு முதவின னுங்கவர் வாங்கிக்
கற்றை வார்சடை யெம்பிரான் பணிவிடை கருதி
முற்றி ழைத்தனர் வலன்றிரிந் தேத்தினர் முறையால்.

(இ - ள்.) மேலே சொல்லிய நான்கு வகையான திருத்தொண்டுகளுக்கு ஏற்ற கருவிகளைச்சித்தஞ்செய்து அந்நால்வர்க்குங்கொடுத்தனர். அந்நால்வரும் அவற்றைப்பெற்றுக்கொண்டு, கூட்டமாகிய நெடிய சடையையுடைய எமது சிவபெருமான் திருத்தொண்டுகள் செய்யக்கருதி, முழுதுஞ்செய்து வருபவர்களாய் நாடோறும் கிரமப்படி பிரதக்ஷிணஞ்செய்து துதித்து வந்தார்கள்.

இனைய நால்வரு மீசனுக் கிவைபுரிந் தேத்த
வனைத வச்சிவ தேசிகன் மழவிடைக் கொடியோன்
புனைம லர்ப்பத மருச்சனை வான்முறை புரிந்தான்
கனைக திர்ப்படு மூவெழு வைகலுங் கழிந்த.

(இ - ள்.) இத்தகை நால்வரும் சிவபெருமானுக்கு இத்தொண்டுகளைச் செய்து துதிபுரிய, தவச்செயல்பொருந்திய அச்சிவாசாரியர், இளமைதங்கிய இடபக்கொடியையுடைய சிவபெருமானுடைய அழகிய மலர்போன்ற திருவடிகளைச்சிவாகம முறைப்படி பூசைசெய்துவந்தனர். உலகமெங்கும் நிறைந்த சூரியன் அஸ்தமிக்கின்ற இருபத்தொரு நாட்களும் சென்றன. எ - று.

அடுத்த வைகலி னால்வருங் கட்புல னடைந்தார்
கெடுத்தி டுஞ்செவி மெல்லென வுரைப்பதுங் கேட்டார்
தொடுத்த சாபநாட் டலையுள பெருநலந் தோன்ற
வெடுத்த துன்பொழிந் தரனருட் பிறந்ததெண் மருக்கும்.

(இ - ள்.) அடுத்த இருபத்திரண்டாந்தினத்தில், அவ்வரச குமாரர் நால்வரும் கட்பார்வையை யடைந்தார்கள். செவிடாயிருந்த செவிகளில் மெல்ல வசனிப்பதையுங்கேட்கப்பெற்றார்கள், சாபம் நேர்ந்த தினத்தின் ஆரம்பத்திலிருந்த பெருங்களிப்புண்டாக, விளைந்திருந்த துயரங்கள் விலகி அவ்வெண்மருக்குஞ் சிவபெருமானுடைய திருவருட் பெருக்கமுண்டாயிற்று. எ - று. ()

சாபந் தீர்தரப் பின்னரு மெண்மருந் தழுவித்
தீபம் போற்றினர் வலன்றிரிந் தேத்தினர் முனிவன்
கோபந் தீத்திடப் பொடித்தெழு பதாதிகை கூடத்
தாபந் தீர்ந்தனர் குரவனைச் சென்றடி தாழ்ந்தார்.

(இ - ள்.) சாபங்கழிந்தவுடனே, மீண்டும் அவ்வெண்மருங்கூடி அவ்வாலயத்திற்குத்திருவிளக்கு ஏற்றினார்கள், பிரதக்ஷிணஞ்செய்து துதித்தார்கள்.' விசுவாமித்திர முனிவனுடைய கோபாக்கினி தகிக்கச்சாம்பராய்விட்ட சேனைகள் யாவும் பிழைத்து வரவும், துயரம் நீங்கியவர்களாய்ச் சிவாசாரியரிடஞ்சென்று அவர் பாதங்களில் நமஸ்கரித்தார்கள், எ . று. (௧௩௫)

எந்தை நின்னரு ளியற்கையி னினிதுபெற் றுயர்ந்தே
முய்ந்த னம்பழி பாதக மொழிந்தன மென்றுச்
சிந்தை நெக்குநெக் கிரங்கின ராங்கது தெரிந்தா
னந்த ஞானது மாங்கவர்க் கின்னண மறைவான்.

(இ - ள்.) எமது நந்தையே! தேவரீர் திருவருளின் இயல்பினாலே இனிமையான பேறுகளைப்பெற்று மேம்பாடடைந்தோம், நாங்கள் கடைத்தேறினோம். எங்களுக்குற்ற பழிபாதகங்களை நீங்கினோமென்று, மனம் மிகவும் நெக்குருகினார்கள். அச்சிவாசாரியர் அதனை யுணர்ந்தவராகி அவ்வரசர்கட்கு இப்படிச்சொல்லுகின்றார், எ - று. (கூகு)

இனிந்த டம்பதி யெய்திநும் மரசிய லிருக்கை
பணித்த வெண்குடை நீசெலக் கோமுறை பரித்துக்
கனிந்த சிந்தையி னருட்சிவ புண்ணியங் கருதித்
தனித்த வாழிகொண் டிகலறந் தராதலம் புரப்பீர்.

(இ - ள்.) நீங்கள், இனியுங்கள் விசாலமான நகரத்தையடைந்து உங்கள் அரசாட்சிக்குரிய சிங்காதனத்தில், குளிர்ச்சிதங்கிய சந்திரவட்டக்குடையான தியமேலே நிழல்செய்ய இராசாங்கத்தை யேற்றுக்கொண்டு, கனிவெய்திய மனமுடையவர்களாய்த்திருவருள் பெறத்தக்க சிவபுண்ணியங்களைச்சிந்தித்து, ஒப்பற்ற ஆஞ்ஞைச்சக்கிரத்தைச்செலுத்திகொண்டு பகைவரைவென்று உலகினைக்காப்பீர்களாக. எ - று. (கூஎ)

என்று ரைத்தசொற் கேட்டனு மெம்பிரார்க் கினிது
நன்று வேண்டிய வழுதொடு யானையு நல்கி
யன்று ரைத்தநங் குருமொழி வழிதிறம் பலராய்ச்
சென்று மாநகர நால்வரு மடைந்தனர் சிறந்தார்.

(இ - ள்.) என்று சொல்லிய வார்த்தையைக்கேட்டவுடனே, எமது சிவபெருமானுக்கு இனிதாகவும் நன்றாகவும் வேண்டியுள்ள திருவமுதோடு அனைத்தையுங்கொடுத்து, அதற்கினத்தில் கட்டளை தந்த தங்கள் ஆசிரியர் திருவார்த்தைகளின் மார்க்கத்தில் மாறுபடாதவர்களாய், அந்நால்வரும் தங்கள் மனைவியரோடு தங்கள் பெரிய நகரம் போய்ச்சேர்ந்து சிறப்படைந்தார்கள்.

மதுக்க மழ்ந்தலர் கொன்றையான் றிருவருள் வழாது
பொதுக்க டிந்துல களிந்தன ரின்னுயிர் புரந்தார
புதுப்ப சுப்பனித தாமமொற் புரவலர் மீண்டு
விதுக்கொ ழுந்தணி வேணியோற் பணிந்திடை வீழ்ந்தார்.

(இ - ள்.) தேனுடன் வாசனைவீசி மலர்ந்த கொன்றைமாலையணிந்த சிவபெருமான் திருவருள் வழுவாமற்படி பொதுத்தன்மைய நீக்கி உலகத்தைக்காத்து இனிமையான மன்னுயிர்களைப்பாதுகாத்தனர். அன்றலர்ந்த பசிய குளிர்ச்சிதங்கிய மாலையணிந்துள்ள வேலைமாந்தாங்கிய அவ்வரசர் மீண்டும் அவ்வனத்தையடைந்து, இளம்பிறைச்சந்திரனையணிந்த சடையையுடைய அழகேசுவரனை அஞ்சலிசெய்து சந்நிதியில் சாஷ்டாங்கமாக வணங்கினார்கள். எ - று

சிறக்கு மெம்பிரா னினிதெழுந் தருடிருக் கோயிற்
புறப்ப டும்படு வனமெலா முதலறப் போக்கி
யறப்ப யன்றெரி மறைவலோர்க் ககமுற் றளித்தார்
சிறக்கு மந்திர வீதியு நான்கெனத் தொகுத்தார்.

(இ - ள்.) மேம்பட்ட எமது சிவபெருமான் இனிதாக வெழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் புறம்பாயுள்ள பெருங்காடுகளையெல்லாம் வேரறக்கழித்து, புண்ணியப்பயனை நன்குணர்ந்த வேதங்களில் வல்லவர்களாகிய அந்தணர்களுக்கு வாசஞ்செய்தற்குரிய மாளிகைகள் சமைத்துக்கொடுத்தார்கள். தேவலோகம்போன்ற சிறப்புடைய நான்கு மாடவீதிகளும் ஏற்படுத்தினார்கள்.

திசைபி ளந்துவைத் தனையநீ டெருத்தெருத் தோறும்
வசையின் மாடமுஞ் சூளிகை மாளிகை பொருப்பு
மிசையு மன்றமுஞ் சதுக்கமு முறைமுறை யியற்றிக்
குசைநெ டும்பரி மன்னவர் குடிவளங் கொடுத்தார்.

(இ - ள்.) திசைகளைப்பிளந்து வைத்தாற்போன்ற நெடிய வீதிகடோறும், குற்றமில்லாத மாடங்களையும், சூளிகைகளையுடைய மாளிகைகளாகிய மலைகளையும், பொருத்தமாகிய சபைகளையும், நாற்றெருக்கூடு மிடங்களையும், வரிசைகளாகக்கட்டுவித்து, கடிவாளத்தோடு கூடிய பெரிய குதிரைகளையுடைய அவ்வரசர் நால்வரும், குடிகளுக்கு வேண்டிய பல செல்வங்களையும் கொடுத்தார்கள்.

வருண நான்குள சாதியும் வகுத்தனர் மற்றைப்
பொருவ ளந்தரு மரபினோ ரளவறப் பெருக்கிப்
பொருபெ ருங்கட லெடுப்பினும் புகலரி தெனலா
யருநெ டுங்கொடிக் கொம்மைசூ ழிஞ்சியு மமைத்தார்.

(இ - ள்.) நான்கு வருணங்களிலுள்ள சாதிகளைப்பிரித்தார்கள். மற்றுள்ள பெருஞ்சிறப்பமைந்த சாதியார்களையும் கணக்கற்றவர்களாகப்பெருகச்செய்து, அலைகள் மோதுகின்ற பெரும்புறக்கடல் பெருகவெடுத்தாலும் உள்ளே பிரவேசிப்பதற்கு அருமையென்று சொல்லத்தக்கதாய், சிறப்பமைந்த நெடிய கொடிகள் தாங்கியுள்ள சிகரங்கள் சூழ்ந்த மதில்களும் ஏற்படுத்தினார்கள். எ - று. ()

அன்ன மாநகர்க் கரும்பெருஞ் சாபநீத் தளித்த
மன்னு நான்மறைத் தேசிகன் றிருப்பெயர் வழங்கத்
துன்ன ருங்குரு தன்மிய மெனும்பெயர் தொகுத்தார்
பொன்ன கர்ப்படு காவெலா மரற்கெனப் புரிந்தார்.

(இ - ள்.) அத்தகைய நகரத்திற்கடுத்த அரும்பெருஞ்சாபத்தை நீக்கித் திருவருள் பாலித்து நிலைபெற்ற நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த அச்சிவாசாரியருடைய சிறந்த பெயரே உலகத்தில் வழங்கும்படி அடைதற்கரிய குருதன்மியமென்னும் பெயர் தரித்தார்கள். தேவலோகத்திலுள்ள கற்பகச்சோலையைப் போன்ற சோலைகளையெல்லாம் சிவபெருமானுக்கென்று விட்டு விட்டார்கள்.

இரும ருப்புரு டிமிலுடைச் சேவுயர்த் திடுவோ
னருட ரத்திருக் கோபுர முதலிய யாவு
முருகு காதலி னமைத்தன ரெம்பிராற் குதவித்
தருபொ லன்கலன் யாவையு மளவறத் தந்தார்.

(இ - ள்.) இருகொம்புகளையும் உருண்ட முரிப்பையுமுடைய இடபக்கொடிதாங்கிய சிவபெருமான் திருவருள் பாலிக்கும்படி, அழகிய கோபுரங்கள் முதலியவற்றையெல்லாம், மனவுருக்கமுடைய பேரவாவோடு ஏற்படுத்தினவர்களாய்ச் சிவபெருமானுக்களித்து, கொடுக்கத்தக்க பொன்னாபரணங்களை யெல்லாம் கணக்கிறந்தனவாகக்கொடுத்தார்கள். எ - று. (௧௪௪)

மாரி முற்றுற வறப்பினும் வறப்புறாப் பெருநீ
ரேரி கீழ்ப்படு செந்நெலங் கழனிகள் யாவும்
வாரி வெவ்விட மறைகறைக் களத்தற்கு வழங்கிப்
பேரி யோங்கிய திருவிழா நடத்தினர் பெயர்ந்தார்.

(இ - ள்.) வருஷ முழுவதும் மழை பெய்யாமல் உலகெங்கும் நீர் வற்றிய காலத்திலும் நீர் வற்றாத மிக்க நீரையுடைய ஏரியின் கீழுள்ள செந்நெல் விளையும் அழகிய வயல்களனைத்தையும், திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலாலத்தை மறைத்திருக்கும் நீலகண்டராகிய சிவபெருமானுக்குத்தானங்கொடுத்து முரசவாத்திய முழங்கும் திருவிழா நடத்திச்சென்றார்கள். எ - று. (௧௪௫)

மல்கு மாணிதிப் பெருக்கமு மகப்பெறு வளனு
நல்கு புண்ணிய நலனொடு சிறந்தனர் கடுங்க
ணல்கு சிந்தைய ராயுல களித்தன ரலர்த்தேன்
பில்கு தாமவே னால்வரும் பேரர சுவந்தார்.

(இ - ள்.) மிக மாட்சிமைப்பட்ட செல்வ விருத்தியையும் புத்திர பாக்கியத்தையுங்கொடுக்கின்ற சிவபுண்ணியத்தின் பயனோடு மேம்பாடெய்தியவர்களாய், கொடுமை தவிர்ந்த சித்தமுடையவர்களாய், உலகத்தை அரசு செய்தவர்களாகிய மலர்த்தேன்சிந்தும் மாலையணிந்த வேலைத்தாங்கிய அம்மன்னவர் நால்வரும் பெரிய அரசுரிமையைப் பண்டுபோலடைந்தார்கள். எ - று. (௧௪௬)

உவந்த காலையி னல்வரு மோர்தின மொருங்கே
பவந்தொ லைத்திடு பரிசெலா முறைமுறை பகராக்
கவர்ந்த சிந்தனை களிப்புற விருத்தலுங் கண்டா
ரிவர்ந்த நூற்றுரு வாசனுங் கெதிருற வெழுந்தார்.

(இ - ள்.) இப்படி நால்வருங்களித்திருக்கையில், ஒரு நாள் நால்வரும் ஒன்று சேர்ந்து தங்கள் பாவங்களை நீக்கிக்கொண்ட தன்மையையெல்லாம் கிரமமாகச்சொல்லி, களிப்போடு கவரப்பட்ட மனமெய்தியிருக்கும்போது, விசேடமான நூல்களையெல்லாமறிந்த துர்வாசமுனிவர் அவ்விடத்திலே எதிர்வரப்பார்த்து உடனே தமதிருக்கை விட்டெழுந்தார்கள். எ - று, (௧௪௭)

எழுந்த சிந்தையி னுவகையின் றிரைத்தலு மறைநூற்
கொழுந்தை மாதவன் குடிபுகு மொருவனைக் குலத்தா
விழுந்து கோமுடி மண்ணுற வணங்கினர் வியந்தார்
தொழுந்த கைத்தனி முனிவனு மாசிகள் சொன்னான்.

(இ - ள்) மேம்பட்ட மனதில் சந்தோஷமிருந்து அதிகரிக்கவும், வேதசாத்திரங்களின் கொழுந்தென்போன்பவரும் பெருந்தவங்களெல்லாங் குடிபுகுதற்கு இடம்போல்பவருமாகிய ஒப்பற்ற அம்முனிவரை, பாதங்களித்

பணிந்து சிறந்த கிரீடம் பூமியிற் படியும்படி வணங்கியவர்களாய் அதிசயித்தார்கள். யாவரும் பணிதற்குரிய தன்மைவாய்ந்த ஒப்பற்ற அம்முனிவரும் ஆசிர்வதித்தனர். எ - று. (கருஅ)

செய்ய வேண்டுறு கடன்முறை யாவையுஞ் செய்தா
ரையனைக் கொணர்ந்தவி ரொளிமடங்கலா சனத்து
நொய்தி னுய்த்தனர் வரன்முறை தொழுதனர் நோக்கா
நெய்கொள் வேற்படை மன்னர்வாய புதைத்தய னின்றார்.

(இ - ள்.) செய்யவேண்டிய முறைமையாகிய கடன்களையெல்லாஞ் செய்தார்கள். அம்முனிவரை யழைத்துவந்து விளக்கந்தங்கிய பிரகாசமுடைய சிங்காசனத்தின்மேல் அதிவிரைவில் எழுந்தருளச்செய்தார்கள். வரிசைப்படி மீண்டும் நமஸ்கரித்து அம்முனிவரை நோக்கிக்கொண்டு, நெய் பூசிய வேலாயுத மேந்திய அவ்வரசர்கள் வாய்பொத்திக்கொண்டு பக்கலில் நின்றார்கள். எ - று.

அறப்பெ ருந்தனித் திகிரியு மலங்கல்வெண் குடையுஞ்
சிறைப்பு டைத்தென முனிவரன் கேட்டலுஞ் செழுநான்
மறைப்பெ ரும்பொரு ளுணர்ந்தவ வாழிய வாழி
பெறற்க ருந்தவத் தலைவநின் பெருமையி னென்றார்.

(இ - ள்.) தரும வழியிற் செலுத்துகின்ற ஒப்பற்ற ஆக்ஞைசக்கரமும் மாலையணிந்த வெண்கொற்றக்குடையுஞ் சிறப்பாயுள்ளனவாவென்று, துர்வாச முனிவர் வினவியருளவும், செழுவிய நான்கு வேதங்களின் சிறந்த பொருளை யுணர்ந்தவரே! ஒருவராலும் அடைதற்கரிய தவத்தின் தலைவரே! தேவரீர் மகிமையால் வாழ்ந்திருக்கின்றன வாழ்ந்திருக்கின்றன வென்றார்கள். எ - று.

எனவு ரைத்தனர் பின்னரு முனிவனை யிறைஞ்சி
மனவு மாமுடி மன்னவர் நால்வரு மறையோய்
முனமி ழைத்திடு பவத்தொட ருண்டுகொன் முனிவன்
சினவு விற்பெருஞ் சாபம்வந் தடுத்தது தெரியேம்.

(இ - ள்.) என்று கூறி, மீண்டும் முனிவரை வணங்கி, இரத்தினங்களிழைத்த சிறந்த கிரீடமணிந்த அவ்வரசர் நால்வரும், ஓ முனிவரே! விசுவாமித்திர முனிவர் கோபமெய்தினதால் பெருஞ்சாபம் வந்து சம்பவித்தது. அப்படிச் சம்பவிப்பதற்கு நாங்கள் முற்பிறப்பிற்செய்த பாவத்தொடர்ச்சியேதேனும் உண்டோ? அறிகிலோம். எ - று. (கசுக)

மூன்று காலமுங் காலமீ றுறப்படு முடிவுந்
தோன்ற நின்றனை கோசிகன் சொற்புனை சாப
மேன்று நிற்பதும் கேதுவே தியம்புதி யென்றா
ரான்ற மாதவத் தலைவனு மளந்தறிந் துரைப்பான்.

(இ - ள்.) திரிகாலவர்த்தமானங்களும், காலங்களெல்லாம் அந்தமாகின்ற முடியும் தெரியும்படி விளங்குபவரே! விசுவாமித்திருடைய சொற்களால் நேர்ந்த சாபத்தை நாங்கள் பெற்றுக்கொண்டிருப்பதற்குக்காரணம் யாதோ? அதனைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருள்வீரென்று பிரார்த்தித்தார்கள். விசேடித்தபெருந்தவத்தையுடைய துர்வாசமுனிவரும் ஆராய்ந்து தெளிந்து திருவாய் மலர்கின்றார். எ - று. (கசுஉ)

அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம்.

தேங்குதடந் திரைபுரட்டு நதியுடுக்கப் படுயவன தேய மந்நாட்
டோங்குமா தித்தபுர மெனப்படுவ தொருநகர முளதா லந்தண், பூங்க
மலை சிறப்புடையந் நகர்வணிகர் பெருமரபிற் போந்தோ னீந்து, வாங்
குபெரு நிதிசிறப்பி னுயர்ந்தவன்விச சுவவசுவோர் வணிக னுண்டால்.

(இ - ள்.) தேங்கிக்கொண்டிருக்கும் பரந்த அலைகளைப்புரட்டுகின்ற ஆற்றினாற் சுலவப்பட்ட யவனமென்றொரு நாடுண்டு. அந்நாட்டிலே வளமிகுந்த ஆதித்தபுரமென்றொரு நகரமுண்டு. அழகுடன் குளிர்ச்சியுற்று விளங்கும் தாமரை மலரில் வசிக்கின்ற திருமகள் விலாசம்பொருந்திய அந்நகரிலுள்ள சிறந்த வைசியர்குலத்திற் பிறந்தவனும் அநேகர்க்குக்கடன் கொடுத்துவாங்கும் மகதைசுவரியப்பெருக்கிற் சிறந்தவனுமாக விச்சுவ வசுவெனும் பெயர் பெற்ற ஒரு வணிகனிருந்தான். எ - று. (௧௰௫)

அக்குலக்கோ வணிகனுழை யவதரித்துப் பிறந்தனிர்நீர் நால்வி
ரந்நாள், மிக்குயர்ந்த நிதியுமக்கு வேறளிப்பக் குலத்தொழிலால் விளங்
கா நின்றீர், தொக்கபெருந் திருநகரி னாதித்தேச் சுரற்கடிமைத் தொ
ண்டு பூண்டோன், றக்கபெரு மறைக்குலத்தி னவதரித்தோ னொருவ
னுள னும்மைச சார்ந்தான்.

(இ - ள்.) அவ்வைசிய குலத்தலைவனிடத்தில் நீங்கள் நால்வரும் கருவிற் புகுந்து (அவன் மனைவி வயிற்றிலிருந்து) பிறந்தீர்கள். அக்காலத்தில் அப்பிதா உங்கட்குத் தனித்தனி பெருந்திரவியங்கொடுக்க, அதனைக்கொண்டு உங்கள் குலத்தொழிலாகிய வர்த்தகத்திலே சிறந்திருந்தீர்கள். சிறந்த லக்ஷ்மிகடாக்ஷம் குடிகொண்டிருந்த அந்நகரத்தில் வீற்றிருக்கும் ஆதித்தேசுவரருக்குத் திருவடித் தொண்டு கடைப்பிடித்தவனும் தகுந்த பெருமையுடைய அந்தணர் குலத்திற் பிறந்தவனுமாயிருந்த ஒருவன் உங்களை யடுத்தான். எ - று. (௧௰௬)

எம்பெருமான் பணிவிடைக்கென் றுமதிடத்து வருந்திநடந் திளை
ப்ப நீருஞ், செம்பொனளிக் குதுமென்ன வாங்கவற்குத் தரங்கொடுத்
துச் செப்பா நின்றீ, ரம்பொனளித் திலிரொருநா ளுமதருகி னவனிர
ங்கி யழைப்பக் கேளீர், வெம்பிவெதும் பினனவனை முகநோக்கீ ரவ
னழுது மீண்டா னன்றே.

(இ - ள்) எமது சிவபெருமான் திருப்பணிகட்காக உங்களிடம் வருத்தமெய்தி நடந்து இளைக்கவும், நீங்களும் அத்திருப்பணிகளுக்கு உதவத்தக்க திரவியங்கொடுக்கிறோமென்று அவ்வந்தணனுக்கு உத்தரவு கொடுத்துக்கொண்டு வந்தீர்கள். அத்திரவியத்தைக்கொடுத்தீரில்லை. ஓர் நாள் அவ்வந்தணன் உங்கட்கருகே வந்து மனவுருக்கத்தோடழைக்கவும், கேளாதிருந்தீர்கள். மனம் புழுங்கி வருந்தினன். அப்போதும் அவன் முகம் பாராதிருந்தீர்கள், அதனாலே அவன் புலம்பிக்கொண்டு வருந்தினன், எ - று. (௧௰௭)

வீயாத பெருஞ்செல்வ நிதிப்பெருக்கி னம்மைவிழி விடுத்து நோக்கா
ராயாத பேராசை தருமனனே யடங்குதியென் றடங்காநின்றான்[றெட்
பாயாவெண் டிரைபுரட்டு நெடும்பரவைக் கலநடத்திப் படர்ந்தீர் பன்
போயாறு திரைக்கடலுட் கரைகாணீர் நெடுமைசகு புகுந்தீ ரன்றே.

(இ - ள்.) அழியாத மகதைசுவரியப் பெருக்கினால் நம்மைக்கண்டிறந்து பார்க்கமாட்டார்கள். ஆலோசியாத பேராசையைத்தரும் மனமே! நீ யடங்கக் கடவாயென்று தன்னாசையை யடக்கிக்கொண்டான். பாய்ந்துகொண்டிருக்கும் வெண்மையாகிய அலைகளைப்புரட்டி நிற்கும் பெரிய கடலிலே மரக்கலத்தைச் செலுத்திக்கொண்டு போனீர்கள். பல நாட்கள் அக்கடல்வழியேபோய் அலைகளையும் அக்கடலின் கரையைக்காணுதவர்களாய் நீண்ட பள்ளத்திற் புகுந்தீர்கள். எ - று. (௧௬௬)

போதற்கென் றயனடத்துந் திசைகாணீர் மழைநெடுநாட் பொழிந்த கங்குல், இனைதக்கொண் டெழுஞ்சுழல்காற் றெடுத்தெறியக் கலன் கவிழ வொருங்கு மாண்டீர், மாதைப்பாங் கமைத்தபிரான் றிருப்பணிக்கு நிதிதருது மென்ற வாக்காற், கோதைப்பொன் முடிவேந்தர் குலத்துதித்தீர் கொடாநிதியங் கடலில் வீழ்த்தீர்.

(இ - ள்.) அதற்குமேலே, மரக்கலத்தைச்செலுத்துதற்குரிய திசையைக் காணுதவர்களானீர்கள். அநேக தினவரையில் மழை பொழிந்தன. இராப்பொழுதில் குளிர்ச்சியாய்த்தோன்றிய சுழல்காற்று அதிகமாய் வீச, மரக்கலம் அப்பள்ளத்திற் கவிழ, நீங்கள் நால்வரும் ஒன்றாக இறந்தீர்கள். உமாதேவிபாகராகிய சிவபெருமான் திருப்பணிக்குவேண்டிய திரவியங்கொடுப்போமென்று சொல்லிய வாக்கினால் மாலை சூடிய பொற்கிரீடமணிந்த அரசகுலத்திற் பிறந்தீர்கள். அத்திருப்பணிக்கு உதவி செய்யாத செல்வத்தைக்கடலிற் கொட்டிவிட்டீர்கள். எ - று. (௧௬௭)

எந்தைபிரான் றிருத்தொண்டிற் குரியவனென் றெடுத்தழைப்பக் கேளீராகிச், சிந்தைமயக் குற்றதனாற் செவிடுபட்டீ ரவனைமுகந் தெரிய நோக்கர், தந்திலிரா தவினிருகட் புலனிழந்தீ ரதுமுன்னைத் தன்மையிந்நா, ளந்திவண்ணற் கியற்றுசிவ புண்ணியத்தாற் சாபமொழிந் தகற்றினீரால்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் திருத்தொண்டு செய்த அவ்வந்தணன் உரத்த குரலோடு கூப்பிடவுங் கேளாதவர்களாய் மனமயக்கமெய்தியபடியால் செவிடர்களானீர்கள். அவன் முகத்தைக்கண்ணெடுத்துப் பாராதிருந்தீர்களானபடியால் இருவிழிகளின் பார்வையுமிழந்தீர்கள். இது தான் உங்கள் ஜன்மாந்தர சரிதை. இக்காலத்தில், செவ்வானம்போன்ற திருமேனியையுடைய சிவபெருமானுக்குச்செய்கின்ற சிவபுண்ணியத்தினால் சாபத்தைப்போக்கிக்கொண்டீர்கள். எ - று. (௧௬௮)

என்றுரைத்த திருவாசக முனிமொழிகேட் டினிதுவந்து புளகமெய்தித் தீதவித்த முனிவரற்கு வேண்டுறூஉ சினபுரியச் செலலா நின்றான்[னிக் பூதலமன் னுயிர்புரந்தோர் நெடுங்காலம் பிற்படப்போய்க் கயிலை மன்னா துமழுப் படைவிடையோன் பரிபுரச்சே வடிக்கமலங் கரந்தாரன்றே.

(இ - ள்.) இப்படிக்கூறிய தூர்வாசமுனிவர் சொற்களைக்கேட்டு இனிமை யோடு மகிழ்வெய்திப்புளகித்து, குற்றங்களொழித்த அம்முனிவருக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்ய, அவர் தமது ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினர். உலகத்திலுள்ள மன்னுயிர்களைத் தன்னுயிர்போலப்பாதுகாத்த அவ்வரசர்கள் பல காலங்கழிந்து சென்று திருக்கைலாயகிரியில் வீற்றிருந்து, கொல்லத்தக்க மழுவாயுதந்தாங்கிய இடபாரூடராகிய சிவபெருமானது சிலம் பணிந்த செந்தாமரை மலர்போன்ற திருவடிகளில் கலந்து வாழ்ந்தார்கள்.

தாதுலா மலரிதழிச் சடைமுடியோன் புண்ணியத்தி னியன்ற
தன்மை, சூதமா முனிவனவர்க் கிவ்வண்ண மெடுத்துரைப்பத் துளக்க
மெய்தா, வாதிநா யகன்சரிதை யினிதுணர்ந்தே மெனத்தெளிந்தா ரன்
னோ ரம்பொற், போதினான் முகற்குவமை தனிச்சான்ற முதல்வனின
னும் புகல்வ தானான்.

(இ - ள்.) மகரந்தந்தங்கிய கொன்றை மலரணிந்த சடையையுடைய சிவபெருமானது சிவபுண்ணியத்தினியல்பான தன்மையைச் சூதமகாமுனிவர் அந்நைமிசாரணிய முனிவர்களுக்கு விளக்கிச்சொல்லவும், அம்முனிவர்கள் எல்லோரும் உடல் நடுக்குற்று, முதல்வராகிய சிவபெருமான் சரிதையை இனிமையோடறிந்தோமென்று மனந்தெளிந்தார்கள். அழகிய பொற்றாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமனுக்கு ஒப்பிடத்தக்க சிறப்புற்ற சூதமுனிவர் மேலுங்கூறலாயினர். எ - று. (கசுo)

தருநான்கு பெருவளனும் பெறப்புரக்குந் திருநாடச் சம்பு நாட்டி
னொருவாத பேரழகு தரவருமா யாபுரத்திற குவமை சொல்லிற்
கருகாத மணிசசுடிகை நாகாநாட் டினுநிலத்துங் கடவுட் டாருப்
பெருவான நெடுமுகட்டு மெடுத்துரைக்கி னதற்குநிகர் பேச லாமோ

(இ - ள்.) கற்பகதருவும் (அரிசந்தனம் சந்தானம் பாரிசாதம் மந்தார மாகிய) நான்கு தருக்களும் பெற்றிருக்கும் வளங்களெல்லாம் தன்பாலுள்ளார் பெறும்படி கொடுக்கும் சிறந்த நாடாகிய சம்பு நாட்டிலே, மாறாத மிகுந்த அழகுதர விளங்கும் மாயாபுரத்திற்கு ஒப்பு சொல்லவேண்டுமாயின், கருநிற மடையாத மாணிக்கம் பொருந்திய படத்தையுடைய நாகர் வசிக்கும் நாகலோ கத்திலும் பூலோகத்திலும் கற்பகத்தருவுள்ள பெரிய ஆகாயத்தின் மேலிருக்கும் நெடிய உச்சியாகிய தேவலோகத்திலும் எடுத்துச்சொல்லுங்கால் அந்நகரிற்கு உவமை கூறுதலாகுமோ? எ - று. (கசுக)

வழிநாட் பெருமழையி னுவட்டெடுக்கும் பிரளயத்தா னுலகத்தோடிப்,
பாழிமா நகரிற்கு மெனவன்றே சுருமபரற்றும் பகர்து மாயோ,
னூழிலும் விலமுழுது மிதன்பொருட்டா லெடுத்ததாத் தலைத்தா
னென்றாற், சூழுநீ ரகழுடுத்த நெடும்புரிசை நகர்ச்சிறப்புச் சொல்ல
லாமே.

(இ - ள்.) மகாப்பிரளய காலத்திலே பொழியத்தக்க பெரு மழையினு லுண்டாகும் வெள்ளமானது, உலகத்திற்பாய்ந்து வலிபெற்றுச் சிறந்த இந்நகர மழிந்து விடுமென்றல்லவா, வண்டுகள் பண்பாடுந் துளவமாலையணிந்த விஷ்ணு மூர்த்தி, கடல் சூழ்ந்த இந்நில வுலக முழுவதையும் இந்நகரிற்கென்றே யெடு த்துக்கொண்டு தன் வயிற்றிலடக்கினர் என்று சொல்வோமாயின், நீர் நிறைந்த அகழியாற் சூழப்பட்ட நெடிய மதில்களையுடைய அந்நகரின் சிறப்பைச் சொல்லமுடியுமோ? எ - று. (கசுஉ)

கொடியாடு நெடும்புரிசைக் கோபுரத்தி னெடுத்தமைத்த குடுமி யொற்றைச், சுடராழித் தேர்புரவிக் குராமிடறு மெனவெருவித் துள ங்கு வெய்யோ, னெடுவாயிற் புழைநுழைந்து மீச்செலப்போய் நிவந் தனமே ருவுக்கொப் பென்று, லடலாட கப்பொருப்பு நான்குளவா மெனிற்சிறிதொப் பாகு மன்றே.

(இ - ள்.) கொடிகளசையும் நெடிய மதிலையுடைய கோபுரங்களில் உயர் வாய்ச்சமைந்துள்ள சிகரங்களில், பிரகாசிக்கின்ற ஒற்றைச்சக்கரமுடைய தனது தேரிற் பூட்டிய குதிரையின் காற் குளம்பு இடறுமென்று பயந்து நடுங் கிய சூரியன், நெடிய அக்கோபுரவாயிலின் துவாரத்துட் புகுந்து அதன்பின் ஆகாயத்திற் செல்ல, மேருமலையைப்போன்றுயர்ந்திருக்கின்றனவென்று கூறு வோமாயின், அந்நான்கு கோபுரங்களுக்கும் வல்லமையுடைய நான்கு மேரு வென்னும் பொன்மலைகளிருக்குமானல் சிறிது ஒப்புதலாகும். எ - று. (கசுங)

ஈர்ந்தறுக்கப் படுபடிகச் சுவரெழுப்பி யிருமருங்கும் வீதி காட்டிச், சார்ந்தபுடை புடையெடுத்த தவளமா ளிகைவரிபபந் தடிக்கு நல்லார், சோர்ந்தவரிப் பந்துதைந்து விண்முகட்டி னணவுதொறுஞ் சுவர்க்க மாத, ரார்ந்தவரி வளைக்கரந்தொட் டடித்துறமீண் டிவர்கரத்தி னயர் க்கு மன்றே.

(இ - ள்.) பிளந்து அறுக்கப்பட்ட பளிங்குக்கற்களாற் சுவர்களெழுப்பி இருபக்கலிலும் வீதிகளமைத்து, அதைச்சேர்ந்த பக்கல்களிலெல்லாம் ஏற்படுத் திய வெண்ணிறமாளிகைகளிலிருந்து பந்து விளையாடும் மாதர்கள் கையைவிட் டகன்ற நிறந்தங்கிய அப்பந்துகள் பூமிமேல் மோதி ஆகாயத்திற் கிளம்பும் பொழுதெல்லாம், சுவர்க்கலோகத்திலுள்ள தெய்வமங்கையர், நிறைந்துள்ள வரிகளையுடைய வளையலணிந்த கைகளால் பரிசித்து அடிக்க, அங்கிருந்து திரும்பி இந்நிலவுலக நங்கையர் கைகளில் வந்து விழும். எ - று. (கசுச)

காரளகப் பணிப்படலைச் சுமையெடுத்துக் களங்குழைப்ப் புளகம் பூத்த, வாரளவு முலைசசுமையின் மருங்கலுங்கப் பருந்துபுளற் றுவளாந்த மாதர், பேரொளிமா மணிதமெத்தாமடையல் கழித்தனர்போ யினர்பிறழ் ந்த வெயிலால்வாளிட், டிருட்கங் குற்பொழுதுங் குவிநதிலனின் றல ர்ந்தனபூங் கமல மெல்லாம்.

(இ - ள்.) கரிய கூந்தலிலணிந்துள்ள குளிர்ந்த மலர் மாலையின் சுமையைத் தாங்குதலால் கழுத்தானது இளைக்கவும், புளகித்தல் மிகுந்து கச்சுபூட்டியகுசங்களின் பாரத்தினால் இடையானது வருந்தவும்போய் நீரில் மூழ்கிய மாதர்கள், மிக்க காந்தியுடைய சிறந்த இரத்தின மாலைகளைக்கழற்றி யெறிந்துபோகத இம்மணிகள் ஒளிசெய்யுங்காந்தியால், பகைவர்கள் வானாலறுக்கத்தக்க பேரிருண்மிகுந்த இரவிலும் அழகிய தாமரைமலர்களெல்லாம் இதழ்கள் குவியாது விரிந்திருந்தன. எ - று. (ககரு)

இழைத்தபசும் பொற்றகட்டி னிடைக்குயிற்று மனவுவிடுத் திமைக்குஞ் சோதி, தழைத்தெழவிண் முகடணவுஞ் சாளரமா ளிகைமுகட்டுத் தடவுங் கொண்மூக், குழைத்தநவ கிரணமெடுத் தாகாய மெழுக்கியதிற் றோன்றுங் கோல, வுழைப்புரிசை நகரொழிய யோசனைசென் றலதுதம துருவங் காட்டா.

(இ - ள்.) பசும்பொன்னாலிழைத்த தகட்டிலே பதித்த நவமணிகள் பிரகாசிக்கும் ஒளியானது தழைத்து மேலே யோங்க, ஆகாயமுகட்டினை யளாவிய சாளரங்களை யுடைய மாளிகைகளின் சிகரத்தின்மேற் படிந்த மேகங்கள், ஒன்றுய்க்கலந்த ஒன்பதுகாந்தியையும் பெற்று, ஆகாயத்தில் மெழுகியதுபோலத் தோன்றும். அழகுக்கிருப்பிடமாகிய மதில் சூழ்ந்த அந்த நகரைக்கடந்து ஒரு யோசனைதூரத்திற் கப்பாலன்றி அம்மேகங்கள் தமது இயற்கை நிறங்காட்டவியலா, எ - று. (ககசு)

கொய்யுளைய நெடும்புரவிக் குரவடிம்பு படமிதிக்குங் கரடக்கோட்டு, மையன்மதக் களிறுசெற்றி யெடுத்திறைத்தும் விண்ணளந்து மயங்குந்தூளி, செய்குடுமி நெடுமாடக் கொடிமழைகீண் டெடுத்திறைத்த திவலை சிந்தப், பையகீழ் நிலம்படிந்து பசைந்துபரிக் குரம்படத்தூள் படுவ பின்னும்.

(இ - ள்.) கத்தரிக்கின்ற புறமயிரை யுடைய பெரிய குதிரைகளின் காற்குளம்பினுடைய வோரங்கள் நிலத்திற் பதியும்படி மிதிக்கத்தக்க, மதமொழுகுஞ் சுவடும் தந்தமுமுடைய மதமயக்குடைய யானைகள் எடுத்து வீசலால் ஆகாயவரையில் ஓங்கிப்பறந்த தூசுகள், வளைந்த சிகரங்களோடு கூடிய பெரிய மாளிகைகளிற் கட்டியுள்ள கொடிகள் மேகங்களைக்கிழித்து எடுத்துவீசிய மழைத்துளிகள் சிந்துவதால், அத்தூசுகளெல்லாம் மெல்லெனப் பூமியிற்படிந்து ஈரத்தாற் குழைந்து, மீண்டும் குதிரைக்குளம்பு மிதிப்பால் முன்போலவே மறுபடியும் அக்குழைத்தல் தூசுகளாம். எ - று. (ககஎ)

புதையுமிருட் படலைகிழித் தெழுந்தகதி ருதயநெடுங் குடபாற்போதத், ததையிருளிற் கொழுகரிட மேகலைநா புரம்புலம்பத் தனிர்க்கை நல்லார், நிதயமெதிர் முன்னடப்பப் பின்னடப்பார் மகளிர்தெறுத் திட்டபைம்பூண், கதிரொளிப்பா டகச்சிறுதா ளுறுத்தாது பரப்புகளிர் கடுக்கு மன்றே.

(இ - ள்.) உலகமுழுவதும் சூழும் இருட்படலத்தைக்கிழித்துக்கொண்டு உதிக்கின்ற சூரியன் நெடிய மேற்றிசை சேரவும், விரும்பிய இருளிலேதங்கட்குள் கணவர்பால் மேகலையும் பாதச்சிலம்பும் ஒலிக்கும்படி மாந்தளிர் போலும்

கைகள் பொருந்திய மங்கையர்மனமானது முற்படச்செல்ல, அதன் பின்னே தாங்கள் செல்வார்கள். அம்மாதர்கள் வெறுத்துக்கழற்றி யெறிந்த பசிய ஆபரணங்களுடைய கிரணங்களாகிய காந்தி அம்மங்கையருடையபாடகம் பூண்ட சிறு பாதங்களில் உறுத்தாதபடி பரப்பியசிறமமைந்த தளிர்கள்போன்றிருக்கும்

பகையரச ருடற்பிளவு படுத்தடுக்கும் பணைக்கோட்டுப் பருமயானைத், தகையழிமும் மதச்சேறு நெடும்புரவி வாயுமிழ்ந்து தந்த நீரு, முகிணைகையார் வெறுத்தெறிமா லிகைசோர்ந்த நறுந்தேனு முழவுத்தோளா, ரிகலொளிமார் பணிகுழம்பு மறுகுநிறைந் தியங்குநர்கா லிழுக்கு மன்றே.

(இ - ள்.) பகைமன்னருடலைப்பிளந்து அடுக்கும்படியான பருத்த தந்தங்களையுடைய போர்வை பூண்ட யானைகளின் குணத்தையகற்றும் மும்மதச்சேறும், பெரிய குதிரைகளின்வாயினின்று உமிழ்ந்து சிந்தும் நுரைகளும், முல்லையரும்பையொத்த பற்களையுடைய மங்கையர் வெறுத்து வீசிய மலர்மாலைகளினின்றொழுகிய மணந்தங்கிய தேனும், மத்தளம்போலுந் தோள்களையுடைய ஆடவர்கள் வலிமையும் பிரகாசமுமமைந்த மார்பிலணிந்த கலவைச் சேறும் வீதிகடோறும் நிறைந்து நடப்பவர்களின் கால்களை வழுக்கும். எ - று. ()

தூங்குமதக் களுழிநெடுவரைமுழக்குந் தொகுபுரவிச் சிரிப்பு மன்ன, ரோங்கியபல் லியத்துவைப்பு மாடரங்கி னெழுமுழக்கி னொலிய நல்லோர், வீங்கியகின் னரக்கருவிப் பாடலிசை தையுமறையோர்வேத கீதத், தேங்கிசையு மொருவழிக்கொண் டெழுகடலின் முழக்கொழிய வெழுந்து விம்மும்.

(இ - ள்.) சொரிந்துகொண்டிருக்கும் மதமாகிய கலங்கல் நீரையுடைய பெரியமலைபோலும் யானைகளின் கர்ச்சனையும், தொகுதியாயுள்ள குதிரைகளின் கனைப்பும், மன்னவர்மாளிகைகளில் மிக்கொலிக்கும்பலவாத்தியங்களின் கோஷமும், நடனசாலையில் முழங்கும் மேககர்ச்சனைபோன்ற முழக்கும், அதிமேம்பாடுற்ற வீணையாகிய இசைக்கருவியாற் பாடுகின்ற பாடலொலியும், வேதகீதத்தாலுண்டான மிக்க நாதமும் ஒன்றுகூடி, சத்தசமுத்திரங்களின் கோஷமும் அடங்கும்படி முழங்கிப்பெருகும். எ - று. (௧௭௦)

ஷ வேறு.

அன்னமா நகர்க்கு வேந்த னலங்கலந் தடந்தோ ளேந்தி [ன்
மின்னுயிர்த் திமைக்கும் பைம்பூண் வெண்குடைத தனிசசெங் கோலா
மன்னுயிர்க் குயிரே யன்னு னளிர்திரை வளாக மெல்லாந்
தன்னுடைத் திகிரி செல்ல நின்றசற் புத்தி யென்பான்.

(இ - ள்.) அத்தன்மைய பெரிய நகரத்திற்குமன்னனை மலர்மாலைதரித்த அழகிய விசாலித்த தோளுடையவனும், ஒளிவீசிவிளங்கும் பசும்பொன்னாபரணங்களும் சந்திரவட்டக்குடையும் ஒப்பற்ற செங்கோலுமுடையவனும், நிலைபெற்ற உயிர்கட் குயிரானவனும், குளிர்ந்த கடல் சூழ்ந்த உலகமுழுவதையும் தனது ஆக்கினைசக்கரமானது செல்ல வாழ்ந்திருந்தவனுமாகிய சற்புத்தியென்பவன். எ - று. (௧௭௧)

மற்றடம் புயத்து வேந்த னாங்கவன் மனையின் மாட்சிப்
பொற்றொடி பயந்த மைந்த ரெண்மரப் புதுப்பூங் கோதை
பெற்றிடு புதல்வி மற்றை யொருத்தியப் பெருஞ்சீர் நோக்கிக்
கொற்றவன் மகிழ்ச்சி கூர வளர்ந்தனர் குவவுத் தோளார்.

(இ - ள்.) மற்போர் புரியும் பரந்ததோளையுடைய மன்னனாகிய அச்சற்புத்தியின் இல்லறத்திற்குரிய மனைவிபெற்ற புதல்வர்கள் எண்மர். புதியமலர் மாலை சூட்டிய அழகிய கூந்தலையுடைய அம்மனைவி அதன்பின்னர் பெற்ற புத்திரி யொருத்தி. இத்தன்மைய பெருஞ்சிறப்பினைக் கண்டு மன்னன் மனமகிழ்ப்படி திரண்டதோள்களையுடைய அப்புதல்வர் வளர்ந்துவந்தனர். எ - று

வீமனென் றவர்க்கு முன்னோற் குரைத்தனன் வெறிவண் டாடுந்
தாமவேற் குமரர்க் கின்னே தனித்தனி நாமஞ் சொற்றான்
பூமருங் குழற்கு மாரி யெனும்பெயர் புகன்றான் வெற்றி
நாமவே லரசர் கோமா னுயிர்புரந் தளிக்கு நாளில்.

(இ - ள்.) அச்சத்தைப் பகைஞர்க்குண்டுசெய்யும் வெற்றிதங்கிய வேற்படையேந்திய இராசராசனாகிய சற்புத்தி, புத்திரர்களில் யாவர்க்கும் மூத்தவனுக்கு வீமனென்று பெயரிட்டான். தேன்பருகி மயங்கிய வண்டுகளுழலும் மலர்மாலை தரித்த ஏனையபுதல்வர்களுக்கும் இப்படியே வெவ்வேறு பெயரிட்டான். அழகமைந்த கூந்தலையுடைய புதல்விக்கு மாரியென்று பெயரிட்டான். சீவர்களைப் பரிபாலித்துவருநாட்களில். எ - று. (௧௭௩)

பொருகழற் குமரர் யாரு மெதிர்பொருந் தெவ்வ ரேத்தச்
செருமுக சீய மானார் சிறுகொழுங் குதலைச் செவ்வாய
மருமலர்க் குழலி யீசன் புண்ணிய மாயி னோங்கி
யுருகுபே ரன்பி னின்றா ளவணிலை யுரைக்க லாமே.

(இ - ள்.) ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த அப்புதல்வரெண்மரும், எதிர்த்துப் போர்செய்யத்தக்க பகைஞர்கள் துதிக்கப் போர்க்களத்தில் வெற்றிதங்கிய ஆண்சிங்கம் போலாயினர். சிறிய மதலைச்சொற்களும் செம்மைநிறம் தங்கிய வாயும் மணங்கமழும் மலர்களணிந்த கூந்தலுமுடைய அப்புதல்வி, சிவபுண்ணியத்தன்மையிற் சிறந்தவளாய் மனவுருக்கம் பொருந்திய பேரன்புநிலையிலிருந்தனள். அப்புதல்வியின் தன்மையைச் சொல்ல முடியுமோ? எ - று. (௧௭௪)

ஈங்கிவ ரியலு நாளி லிகலொழித் திமைக்கும் வேலோன்
பாங்குநீ ருடுத்த வைய மொன்பதிற் பகுத்துப் பைம்பொற்
பூங்கழற் குமரர்க் கெட்டும் புரிந்தனன் பொறிவண் டூத
தேங்குழற் கொருபா கீந்து தவத்தின்மேற் செல்லா நின்றான்.

(இ - ள்.) இவர்கள் இங்ஙனமிருக்குங்காலத்தில், பகைவரையழித்து ஒளிவிடுவேலேந்திய சற்புத்தி, நீர்வளந்தங்கிய தன்னரசாட்சியிலுள்ள பூமியை ஒன்பது தேசங்களாகப்பிரித்து, பசும்பொன்னாலாகிய அழகியவீரக்கழலணிந்த புதல்வரெண்மருக்கும் எட்டுத்தேயங்களைக் கொடுத்து, புள்ளிகளமைந்தவண்டுகளொலிக்கும் மணந்தங்கிய கூந்தலையுடைய புதல்விக்கு மற்றொருதேயத்தைக் கொடுத்து, தான் தவச்செயலை மேற்கொண்டு போயினன். எ - று. (௧௭[illegible])

செயற்கருந் தவத்து முற்றி யன்னவன் கயிலை சென்றான்
கயற்கட லுலக மெல்லா மெண்மருங் காத்தா ரந்த
முயற்கறை யொழிந்த திங்கண் முகத்தினு ளாலம் பூத்த
புயற்படு களத்தற் கேய்ந்த புண்ணிய மரபி னின்றான்.

(இ - ள்.) செய்தற்கரிய தவச்செயலில் மேம்பட்டு அவ்வரசன் திருக்கைலாய கிரியையடைந்தனன். மீன்களுலாவுங்கடல் சூழ்ந்த உலகமுழுவதையும் அவன் புதல்வரெண்மரும் அரசுசெய்தார்கள். முயற்களங்க மகன்ற பூரணசந்திரன்போற் பொலிவாகிய முகத்தையுடைய அப்புதல்வி மேக நிறந்தங்கிய கண்டத்தை யுடையவராகிய சிவபெருமானுக்குரிய சிவபுண்ணிய நெறியிலொழுகினாள். எ - று. (கஎசு)

தவளவெண் ணீற்று வேடந் தாங்கின ளாகித் திங்க
ளிவர்தருஞ் சடிலி நாமத் திரங்கிய வுளத்த ளாகிச்
சிவபெரும் புண்ணி யத்துச் செய்வன செய்து நின்றா
ளுவருடை நெடு நீராடை யுலகெலாந் தொழுதற் கொத்தாள்.

(இ - ள்.) வெண்ணிறந்தங்கிய திருநீற்றுக்கோலம் பூண்டவளாகி, சந்திரனுலாவுஞ் சடைமுடியையுடைய சிவபெருமானுடைய திருநாமங்களைக் கேட்கும்போதெல்லாம் உருகுகின்ற மனமுடையவளாய், பெருமைதங்கிய சிவபுண்ணியங்களிலே தனக்குச்செய்வதற் கியன்றனவற்றைச் செய்துவந்தாள். உவர்நீர் நிரம்பிய கடலை யாடையாகவுடைய உலகமுழுவதும் வணங்குவதற்குத்தக்கவளானாள். எ - று. (கஎஎ)

மின்னென நுடங்க நின்ற மென்மருங் கியற்கை நோக்கிப்
பன்னருந் தவத்த ரேழு முனிவரும் பரிவி னெய்தி
யன்னைநின் னறத்தின் வாழ்க்கை யழகிதென் றறைந்தார் கஞ்சம்
பொன்னுயிர்த் தனையாள் பேரறும் வரன்முறை போற்றி நின்றாள்.

(இ - ள்.) மின்னல்போல அசைதலையுடைய மெல்லிய இடையமைந்த அவ்விராசகுமாரியின் தன்மையைப்பார்த்து, சொல்லுதற்கரிய தவத்தினர்களாகிய சப்தருஷிகளும் அன்போடுவந்து, தாயே! நீ செய்யுஞ் சிவபுண்ணியத்தின்வாழ்க்கையானது பேரழகுடைத்தாகிய தென்று சொன்னார்கள். தாமரையும் பொன்னும் உயிர்பெற்றாற்போன்றவளாகிய அவ்விராசகுமாரி, பெரியோரையுபசரிக்கும் முறைப்படி உபசரித்து நேரில் நின்றனள். எ - று.

"கஞ்சம் பொன்னுயிர்த்தனையாள்" என்றது அவ்வரசகுமாரியின் தேகம் பொன்னும் அவளவயவங்கள் தாமரைமலர்களும் போன்றனவென்றபடி. அல்லது சிவபக்தனாகிய அவள் பிதா சற்புத்தி வெண்கலம் போன்றவனும் அவனாற் பெறப்பட்டமாரி அவன்பக்தியினும் மேம்படலின், பொன்போன்றவளு மெனக் கூறினுமொன்றினும் அமையும். கண்டிக்கஞ்சம்-வெண்கலம். (கஎஅ)

அணங்குரு விரப்ப வேண்டு மணங்களுய் நின்ற நின்னாற்
பணங்கிள ரரவ வேணிப் பண்ணவற் கொலாய் நின்ற

குணந்தரு புண்ணி யத்தா னுலகுகை கூப்ப நின்றாய்
மணங்கிள ரலங்க லோதி நின்னொக்கு மகளிர் யாரே.

*(இ - ள்.) தெய்வப்பெண்களும் அழகினையாசிக்கவேண்டிய பேரழகுவாய்ந்தாயே! எங்கட்கு நேரே நிற்கின்ற நின்னால், படங்கள் பொருந்திய பாம்புகளமைந்த சடையையுடைய சிவபெருமானுக்காக நீ நடத்திவரும் மேம்பாடு தங்கிய சிவபுண்ணியங்களால் உலகமுழுவதுங் கைகுவிக்கும்படி வாழ்ந்தாய். மணமிகுந்தமலர்மாலை சூடிய கூந்தலையுடையாளே! உன்னைப்போலும் மங்கையர்யாவருளர்? ஒருவருமிலர். எ - று. (௯௯)

என்றலு மெதிர்ந்து நின்ற முனிவர ரெழுவர் தம்பா
லொன்றிய வுளத்தி னன்பு மீகலொள வுருகா நின்றாள்
பொன்றவழ் சடில முந்நூற் புனிதாகாள் புகலிற் பேதை
யின்றெனக் கெளிய வன்றே புண்ணியத் தியற்கை யென்னா.

(இ - ள்.) என்று சொல்லவும், நேரில் வந்திருக்கும் சப்தமுனிவர்களிடத்தில் மனத்தின்கட் பொருந்திய பேரன்பானது மென்மேலும் அதிகரிக்க, பொன்போலப் பிரகாசிக்குஞ்சடையையும் உபவீதத்தையுமுடையமுனிவர்களே! சொல்லுமிடத்து, பேதையாகிய அடியாளுக்குச் சிவபுண்ணியத்தின் தன்மைகள் இப்பொழுது அறிதற்கெளிதன்று. (அவற்றை யுணர்த்தவேண்டுமென்று) மனமுருகிநேரே நின்றனள். எ - று. (௧௦௦)

அலங்கலே டவிழ்ந்த வோதி யுமையிடத் தமைத்த வைய
னலங்கிளர் புண்ணி யத்தின் பெருமித நவையிற் றீரப்
புலம்பட வுணர்ந்தார் மேலோ ரென்றுநீர் புகல்வ தெல்லா
மிலங்குறக் கேட்ட துண்டீ தியம்புதி ரெளியற் கென்றாள்.

(இ - ள்.) இதழ்கள் விரிந்த மலர்மாலைசூடிய கூந்தலையுடைய உமாதேவியாரை வாமபாகத்திலமர்த்திய சிவபெருமாருமானுக்குரித்தாகிய நன்மைகள் மிக்க சிவபுண்ணியத்தின் பெருமைகளையெல்லாம், குற்றங்களறத்தெளிவாகத் தெரிந்தவர்கள் பெரியோர்களென்று நீங்கள் கூறுவது முற்றும் விளங்கும்படி முன்னரே அடியாள் கேள்விப்பட்டதுண்டு. ஆதலின், சிவபுண்ணியப்பெருமையாகிய இதனை அடியாளுக்குத் திருவாய்மலரவேண்டுமென்று கேட்டனள்.

கேட்டருண் முனிவர் யாருங் கிளர்முடிச் சடிலஞ் சாய்த்தார்
வாட்டடங் கண்ணி தன்பாற் கோதமன் வகுப்ப தானென்
றோட்டவி ழலங்க லோதி சொல்வன கேட்டி யென்றான்
பூட்டறு கற்பி னின்று டொழுதுவாய் புதைத்து நின்றாள்.

(இ - ள்.) அவ்வார்த்தையைக் கேட்டருளிய எல்லாமுனிவர்களும் பிரகாசிக்கின்ற தமது சடைமுடியை யசைத்தார்கள். அப்பொழுது ஒளிபொருந்திய பரந்தவிழிகளையுடைய அவ்விராசகுமாரியிடத்தில் கோதமமுனிவர் சொல்லுகின்றார். இதழ்களலர்ந்த கூந்தலையுடையாளே! யான் சொல்வனவற்றைக் கேட்பாயாகவென்றனர். கற்பின்காவலாற் பிணிக்கப்பட்ட மாரியென்பாள் வணங்கி வாய்மூடி நின்றாள். எ - று. (௧௦௧)

பழனநீர் வேலி சூழும் பாஞ்சால மென்னு நாட்டிற்
றழனிகீ ரிகுசி சுற்றுஞ் சோபன நகரத் துள்ளான்
மழலையின் மறைகற் றோதி மாதவன் மறையோன் பெற்றா
னிழைபொரு திதலைக் கொங்கைச் சுந்தரி யென்பா டன்னை.

(இ - ள்.) வயல்களமைந்த நீர்வேலி சூழ்ந்த பாஞ்சாலமென்னும் தேயத்திலே ஒலிக்கின்ற நீர் நிரம்பிய அகழியாற் சூழப்பட்ட சோபனமென்னும்பெயருடைய நகரத்திலுள்ளவனும், குதலைச்சொல்லையுடைய இளம்பருவத்திலேயே வேதங்களை யோதியுணர்ந்த பெருந்தவனுமாகிய ஒரந்தணன், ஆபரணங்களைப் போன்ற தேமல்படர்ந்துள்ள குசங்களை யுடைய சுந்தரியென்னும்பெயருடைய ஒருகுமாரத்தியைப் பெற்றான். எ - று. (௧௮௫)

புகன்மறை முழுது மோதுங் கீரமா புரத்தி னுள்ளோ
னகையுறு குணத்தின் மிக்க புட்கர னவ்வி யுணக
ணிகலிளங் கொங்கை யாளை மணந்தன னிருந்தா னந்நாட்
டகையறு காம வேட்கை மிக்கெழச் சரியா நின்றாள்.

(இ - ள்.) எல்லோராலும் புகழ்ந்தோதப்படும் வேதங்கள் முழுவதையும் சொல்லுஞ் சிறந்த கீரபுரத்திலுள்ளவனாகிய இன்பந்தங்கிய சற்குணத்தின் மேம்பட்ட புட்கரனென்பவன், மானையொத்த பார்வையமைந்த மைதீட்டிய விழிகளையும் பகைசெயயும் இளந்தனங்களையும் பெற்ற அச்சுந்தரியை விவாகஞ்செய்துகொண்டு வாழ்ந்திருந்தான். அச்சுந்தரி தகுதியற்றகாமவிருப்பம் அதிகரிக்கச்சஞ்சரித்துக்கொண்டிருந்தாள். எ - று. (௧௮௬)

அயலொரு மனையி னுள்ள வேதிய னழிந்த சிந்தை
மயலுறு மனத்தன் காம வேட்கைய னவனை வவ்விக்
கயல்பொருங் கண்ணி கூடப் புணர்ந்தனள் கணவன் கண்டான்
றுயல்வரு கயிற்றாற் கட்டி யடித்தனன் றுயரம் பாரான்.

(இ - ள்.) சேற்கெண்டைபோலும் விழிகளையுடைய அம்மங்கை, தன்னயல் வீட்டிலுள்ளதூர் எண்ணமும் மயங்கிய மனமுமுடையவனும் காமவிச்சையுடையவனுமாகிய ஓரந்தணனைக்களவுத்தன்மையுடையவளாய்ச் சேர்ந்து சுகித்தாள். அத் தீச்செயலை அவள் கணவன் பார்த்து அவளெய்துந் துயரத்தைப்பாராதவனாய் அசைகின்றகயிற்றினாற் கட்டியடித்தான். எ - று. ()

அதுமனத் தடைத்துப் பன்னாள் வைகின ளவனை யோர்நாட்
கதுமென வாலந் தீற்றிக் கோறலுங் கயிறு நீதது
விதவையாய்க் களவிற புல்லு மவனையும் விடுத்தா ளல்லள்
வதிதரு கருப்ப மெல்லாஞ் சிதைத்தனள் மருந்து மாந்தி.

(இ - ள்.) அவள் அதைமனதில் வைத்துக்கொண்டு பலகாலம் வசித்திருந்தாள். இரவில் தன்கணவனை விஷமூட்டிக் கொன்றுவிடவும், உடனே மாங்கல்ய சூத்திரமிழந்து விதவையாகியும், களவுப்புணர்ச்சி செய்யும் அச்சோரபுருஷனை விட்டவளல்லள். அதனால் உண்டாகிய கர்ப்பங்களையெல்லாம் மருந்துண்டு அழித்துவந்தாள். எ - று. (௧௮௮)

அளவறு கருப்ப மங்ங னழித்தன ளழியா தூற்று
விளைதரு கருப்ப மொன்றான் வீங்கிய வுதர நோக்கி
வளைதரு சுற்றத் துள்ளோர் கழிப்பமா நகர நீத்துத்
தளிரிய னடந்து வேறோர் நாட்டகஞ் சார லுற்றாள்.

(இ - ள்.) கணக்கில்லாத கர்ப்பங்களை அப்படி யழித்தனள். அவள்புசித்த ஔஷதத்தினால் அழியாதிருந்து வளர்ச்சியெய்தும் ஒருகர்ப்பத்தினாற் பெருத்திருக்கும் வயிற்றைக்கண்டு, சூழ்ந்துள்ள உறவின்முறையினராயுள்ளவர்கள் அவளை நீக்கிவிடவும் பெரியநகரத்தைநீக்கி, மாந்தளிர்போலும் சாயலையுடைய அச்சுந்தரியென்பவள் வேறொருநாட்டிற்குப்போய்ச் சேர்ந்தனள். எ - று.

அந்நக ரிருந்து பெற்ற மதலையை யால மூட்டி
மன்னுயி ரழித்து வேறோர் மறையவற் புணர்ந்து வைகி
யின்னலங் கொடுக்கு நாளி லிருநிதிப் பெருக்க நோக்கிப்
புன்னிலை நஞ்சிட் டன்னா னிதிகவர்ந் தாவி போக்கி.

(இ - ள்.) அப்படிவந்து சேர்ந்தநகரத்திலிருந்து பத்துமாதமுங் கழித்துப் பெற்ற குழந்தையை விஷமூட்டி யுயிர்தொலைத்து, அங்குள்ளவேறொரு வேதியனைக் கூடிவாழ்ந்து அவனுக்குச்சுகமளித்து வருகையில் அவன்பாலுள்ள பெருந்திரவியப் பெருக்கைப்பார்த்து, கொடுமைத் தன்மைபொருந்திய விஷப்பிரயோகஞ்செய்து அவனுயிரையும் அகற்றி அவன் திரவியங்களையும் அபகரித்துக்கொண்டு. எ - று. (௧௮௮)

மற்றொரு மறையோன் றன்னை மாநிதி யீட்ட நோக்கிப்
பற்றின ளவனை யந்தப் பரிசினாற் கோற லுற்றா
ளிற்றில தவன தாவி யோர்பக லிவனைக் கொண்டு
பொற்றையங் கானம் புக்காள் புணர்ந்தனண் மயங்கிப் புல்லி.

(இ - ள்.) வேறோர் வேதியனை அவன்பால் பெருந்திரவியஞ் சேர்ந்திருப்பது கண்டு சிநேகங்கொண்டாள். அவ்வந்தணனையும் அப்படியே விஷங்கொடுத்துக்கொல்லத்தொடங்கினாள். அவள் கொடுத்த விஷத்தால் அவ்வந்தணனுயிர் அகலாதிருந்தது. ஒருநாள் இவ்வந்தணனை யழைத்துச்சென்று மலைகளையுடைய அழகிய காட்டிற்புகுந்து, காமத்தால் மயக்க மதிகரித்தவள்போல வஞ்சகமாகத் தழுவிக்கலந்தாள். எ - று. (௧௮௯)

அரிநிழற் படப்பை வார்ந்த புன்மண லகவை துஞ்ச
வெரிதரு நெஞ்சி னோங்கி யோர்சிலை யேந்திச் சென்னி
நெரிதர வீழ்த்துக் கொன்று நீணிதி கவர்ந்து கொண்டாள்
விரிதரு கனிகை வேந்த னுணர்ந்தெரி விழித்து நோக்கி.

(இ - ள்.) அடர்ந்த நிழலுள்ள பசுக்கொட்டிலிலே பரவியிருந்த சிறுமணலின்மீது அவன் நித்திரைசெய்கையில், அச்சுந்தரியானவள் கோபங்கொண்டமனத்தோடு ஓர் கல்லை யுயர்வாகத்தூக்கி, அவ்வந்தணன் தலையானது உடை

படும்படிபோட்டு அவனுயிரையொழித்து, அவனுடைய பெரும்பொருளை யப கரித்துக்கொண்டான். நிழலைப்பரப்பும் வெண்கொற்றக் குடையையுடைய அரசன் இச்செயலை யுணர்ந்து, கண்களில் தீப்பொறி சிந்தநோக்கி. எ - று.

அனையவ டன்னைப் பற்றிக் கொணர்கெனக் கொணர்ந்தா ரந்தப்
புனையிழை முலையு மூக்கும் போக்குதி ரென்னப் போக்க
வினையிருந் துடற்றக் கைகா லற்றவ னோடு மேவி
கள்ளமது நுகர்ந்து தின்னும் புலவெலா நயந்து தின்றாள்.

(இ - ள்.) அச்சுந்தரியென்பாளைப்பிடித்து வாருங்களென்று கட்டளையிட ஏவலாளர் அங்ஙனமே கொண்டுவந்தார்கள். அலங்காரமுடைய ஆபரண மணிந்த அவள் தனங்களையும் நாசியையும் குறைப்பீர்களெனக் கட்டளையிட, தண்டலாளர் அங்ஙனமே அறுத்தமாத்திரத்தில், தீவினையிருந்து வருத்திய படியால் இருகைகளும் இரு கால்களுமிழந்த ஒருவனோடு கூடி, குளிர்ச்சிதங்கிய கள்ளைக்குடித்து அதுகாறுந்தின்னாத புலால்வகைகளையெல்லாம் ஆசையோடு புசித்தாள். எ - று. (௧௯௧)

ஒருகர மொருகா லுசியி ழந்தவ னொருவன் றன்னை
மருவின ளவளாற் செய்யாப் பாதக மில்லை மண்ணி
லிருவரு நடக்கு நாளிற் றம்மிலே ரிகலுண் டாகக்
குருதிநீத் தறுத்த கையாற் குத்தின னவளு மாண்டாள்.

(இ - ள்.) அதன் பின்னர், ஒரு கையும் ஒரு காலும் மூக்குமிழந்திருக்கும் ஒருவனைக்கூடியிருந்தாள். இப்பூமியில் அவளாற் செய்யப்படாத பாவங்களே யில்லை. இப்படி இவர்களிருவரும் கூடியிருக்கையில், இவ்விருவர்க்கும் ஒரு பகைமையுண்டாகவும், அவன் தன்னுதிரம் நீங்கி யறுக்கப்பட்ட கையினால் அவளைக்குத்தினான். அச்சுந்தரியும் அதனால் உடனே உயிர் துறந்தாள். எ - று.

பாதகி யிறந்த பின்னர் மறலிதன் பணியாற் றென்பாற்
றூதர்விட் டெறியும் பாசந் தொகுத்துறக் கழுத்திட் டீர்த்துத்
தீதுறு நிரயத் திட்டார் சிவகணத் தலைவர் சீறி
மாதரன் னவளைக் கொண்டு மானமுய்த் தகன்றார் மன்னோ.

(இ - ள்.) அந்தப்பாதகி மரித்தபின்னர், தென்றிசையிலுள்ள இயமனு டைய கட்டளையால் தூதுவர்கள் எடுத்தெறிகின்ற பாசக்கயிற்றைக் கூட்ட மாய்ச் சேரும்படி அவள் கழுத்தில் மாட்டி இழுத்துச்சென்று கொடுமைநிறை ந்த நரகத்திற் போட்டார்கள். உடனே சிவகணத்தலைவர்கள் அத்தூதுவர்களை வெருண்டு, அழகுள்ள அவளை விமானத்தின்மீ தேற்றிக்கொண்டு செலுத்திச் சென்றார்கள். எ - று. (௧௯௩)

தொடர்ந்தனா மறலி தென்பாற் றூதா னவரை யெல்லாங்
கடந்தன ரிவளைக்கொண்டு கயிலையங் கிரியிற் புக்கார்
படர்ந்தெழு சுடில மோலிப் பரன்றிரு முன்ன ரக்க
மடந்தையார் வதிக்குந் தோழி யாமென வதிந்தா ளன்றே.

(இ - ள்.) தென்றிசையிலுள்ள இயமதூதர்கள் அச்சிவகணத்தலைவரை விடாது பின்றொடர்ந்தார்கள், அச்சிவகணத்தலைவர்கள் அத்தூதுவர்களையெல்லாங்கடந்து இவளை யழைத்துச்சென்று திருக்கைலாயகிரியையடைந்தார்கள். பரவியோங்கிய சடைமுடியையுடைய சிவபெருமான் திருச்சந்நிதானத்தில் விடவும், அச்சுந்தரியானவள் பார்வதிதேவியாருக்குத்தோழியென்று சொல்லும்படி வசித்திருந்தாள். எ - று. (ககஎ)

தென்புலத் தலைவன் றூதர் சென்றனர் சிவக ணத்தோ
ரன்பறக் கடிந்த வாறு புகன்றன ரதுகா லத்து
முன்புறச் சித்திர குத்தற் கொணர்கென மொழிய வந்தா
னின்கணக் களவாற் செய்த புண்ணிய நிகழ்த்தி யென்றான்.

(இ - ள்.) தென்றிசைத்தலைவனாகிய இயமனது தூதுவர்கள்போய், சிவகணத்தலைவர்கள் அன்பற்றவர்களாய்த் தங்களைக்கோபித்த வகையைத்தெரிவித்தார்கள். அத்தருணத்தில் சித்திரகுத்தனை முன்னே வரும்படி அழைத்துக்கொண்டு வாருங்களென்று கட்டளையிடவும், அவனும் உடனே வந்தான். இயமன் அச்சித்திரகுத்தனைப்பார்த்து உன் கணக்கின்படி இச்சுந்தரி செய்த புண்ணியத்தைப் புகல்கவென்றனன். எ - று. (ககஅ)

வெய்துறு பாவ மெல்லா மொருவழிக் கொண்ட மேனி
யெய்துறு மிவளாற் செய்த தருமமொன் றில்லை யென்றான்
பெய்கழற் றரும னோரா விருந்தன னிருந்த பின்னர்
மொய்தரு சடில மோலி நாரத முனிவன் சென்றான்.

(இ - ள்.) கொடுமையாகிய பாவங்களெல்லாம் ஒரே வடிவாகவந்த தேகமுடையவளாகிய இவளாற் செய்யப்பட்ட புண்ணியம் ஒன்றுமே இல்லையாதென்றனன். வீரகண்டாமணிதரித்த இயமன் ஆலோசித்துக்கொண்டிருந்தான். அங்ஙனமிருந்த பின்னர், நெருங்கியுள்ள சடைமுடியையுடைய நாரதமுனிவர் அவ்விடத்திற்கு எழுந்தருளினார். எ - று. (கககூ)

சென்றவற் கெதிர்ந்து மற்றைத் தென்புலக் கிழவ னெய்தி
யன்றவற் கென்ன வேண்டு மருச்சனை புரிந்தா னைய
வின்றிவ ணடைந்த தென்னை யென்றலு மிரட்டை மேருக்
குன்றினு முயர்தோ ளாயோ ரதிசயங் கொண்டு புக்கேன்.

(இ - ள்.) ஆங்கடைந்த நாரதமுனிவரை இயமன் எதிர்கொண்டழைத்து வந்து, அன்று அம்முனிவருக்குச்செய்யவேண்டிய உபசாரங்களைச்செய்தவனாய் ஐயனே! தேவரீர் இன்று இவ்விடத்திற்கெழுந்தருளிய காரணம் யாதென்று வினவவும், இரண்டு மேருமலைகளைக்காட்டிலும் உயர்வாகி விளங்குந்தோள்களையுடையவனே! ஓரதிசயங்கேட்டுக்கொண்டு வந்தேன். எ - று. (கஉ0)

அதிசய மென்கொ லைய வருகியென் றறைந்தா னந்த
முதியமா தவனுந் தென்பான் முதல்வனுக் குரைக்கு முன்னைச்
சதுர்மறைக் குலத்தி னுள்ளா னொருத்தியைத் தருண வேணி
மதிமுடி யவன்பா லுய்த்து வந்துறை கணத்தர் சொல்வார்.

(இ - ள்.) அவ்வதிசயம் யாது? ஐயனே! அதனைத்திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். சிறந்த பெருந்தவமுடைய அக்நாரதமுனி வரும் தென்றிசைக்கிறைவனாகிய இயமனுக்குக்கூறுகிறார். பழமையாகிய நான்கு வேதங்கட்குரிய அந்தணர் குலத்திற்பிறந்தவளாகிய வொருத்தியை, பிறைச்சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானிடத்தில் விட்டு அங்கு வந்திருக்கும் சிவகணங்கள் சொல்லுவார்கள். எ - று. (௧௯௮)

நெடுநிலத் திவளா லுள்ள பாதக நிகழ்த்திற் றெண்ணீர்
படுகடன் மணலை யெண்ணி னெண்ணுறு மென்றார் பன்னாட்
டொடுசன னத்தி னுற்ற நல்வினைத் தொடர்ச்சி தன்னால்
விடுசுடர்க் கயிலை பெற்றா ளென்றனர் விடுத்துச் சொல்வார்.

(இ - ள்.) நெடிய நிலவுலகத்தில் இவளாற் செய்யப்பட்டிருக்கும் பாவங்களைச்சொன்னால், தெளிந்த நீரையுடைய கடலிலுள்ள மணல்களையாவது எண்ணப்புகுந்தால் எண்ணி முடிக்கலாமென்றார்கள். அநேக காலங்களாகத்தொடர்ந்து வரும் இப்பிறப்பிற்செய்த ஒரு நல்வினைச்சம்பந்தத்தால் ஒளி வீசும் இக்கைலாயகிரியையடையப்பெற்றாளென்று விரித்துச்சொல்வார்கள், எ - று. ()

வேதகோத் திரத்தி னுள்ள வேதிய னொருவன் றன்னைத்
தீதுறு வனத்திற் கொண்டு சென்றவற் புணர்ந்த பின்னர்க்
காதுறு சினத்திற் கல்லிற் கொன்றனள் போலு மக்க
லாதிரை யவன்றன் கோயிற் றிருப்பணிக் கடைந்த தென்றார்.

(இ - ள்.) வேதமோதற்குரிய அந்தணர் குலத்திற்பிறந்திருக்கும் வேதிய னொருவனைக் கொடிதாகிய காட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் அவனோடு கிரீடைசெய்த பின்னர், கடுங்கோபத்தோடு அவனைக்கல்லாற் கொன்றனள். அப்படி அவனைக்கொன்ற கல்லானது திருவாதிரை நட்சத்திரத்திற்குரியவராகிய சிவபெருமானது திருக்கோயிற்றிருப்பணி செய்தற்குச்சேர்ந்தது என்றனர். எ - று. (௨௦௦)

அன்னவள் கையிற் றீண்டி யெடுத்தகல் லரன்பொற் கோயிற்
சன்னிதிக் காவ தாக வாதலாற் றறுக ணாட்டி
முன்னிழைத் திட்ட பாவ முடிந்ததென் றுரைத்தா ரன்னோர்
சொன்னது கேட்டு நின்பாற் சொல்லுவான் றொடர்ந்தே மென்றான்.

(இ - ள்.) அவள் கையினாற்றொட்டெடுத்த கல்லானது சிவபெருமானது அழகிய திருக்கோயிலின் சந்நிதானத்திற்குரிய திருப்பணி வேலைக்கு உபயோகப்பட்டதனால், கொடுந்தொழிலுடைய இவள் முன் செய்த மகா பாதகங்கள் யாவும் அழிந்தனவென்று சொன்னார்கள். அச்சிவகணங்கள் சொல்லியவற்றைக்கேட்டு அவ்விஷயத்தை உன்பாற் சொல்லுவதற்காகவே இங்கே வந்தோமெனக் கூறினர். எ - று, (௨௦௧)

நாரத னுரைப்பக் கேட்டுத் தென்றிசை நடுவ னோர்ந்து
பாரியா யிருந்து கொன்ற பாதகி பெற்ற பேற்றால்
வேரியஞ் சடில மோலி புண்ணியம் விருப்பிற் செய்த
பேர்பெறும் பெருமை யெம்மாற் பேசுதற் கெளிய வன்றே.

(இ - ள்.) தென்றிசைக்கிறைவனாகிய இயமன், இவ்வாறுரைத்த நாரதமுனிவர் வார்த்தையைக் கேட்டறிந்து, மனைவியாயிருந்து கணவனைக் கொன்ற மகாபாதகியெய்திய பேற்றினாலே; மணமும் அழகுமுள்ள சடைமுடியையுடைய சிவபெருமானுக்குரித்தாகிய சிவபுண்ணியங்களை விருப்பத்தோடு செய்தோர் அடையத்தக்க மேன்மை எங்களாற் சொல்லுதற்கு எளிமையுடையன வல்ல. எ - று. (௨௦௨)

எனவெடுத் தியம்பிச் சென்ற நாரதற் கியன்ற செய்தா
னனையவன் போகத் தன்னி னதிசய மடைந்தா னிலப்
புனையிழை மடந்தை பாகன் புண்ணியம் புரிந்து நின்றார்
வினைபடு பஞ்சிற் றீயின் விளிவது திண்ண மென்றான்.

(இ - ள்.) என்று கூறி, ஆங்கெய்திய நாரதமுனிவருக்குத்தக்க உபசாரங்களைச் செய்தான். அம்முனிவர் சுயேச்சையாக வெழுந்தருளவும், இயமன், தன்னுள்ளே ஆச்சரிய மெய்தியவனாய், பசுமை நிறந்தங்கிய உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமானுக்குரிய பதிபுண்ணியஞ்செய்துள்ளவர்களுடைய தீவினையானது தீப்பொறிப்பட்ட பஞ்சுப்பொதிபோல அழிவது உண்மையென்று தெளிந்தான். எ - று. (௨௦௩)

கொழுங்கொடிப் பவள வேணிக் கோதம னுரைத்த பின்னர்த்
தொழுந்தகைக் குமாரி தன்பாற் காசிபன் றொகுப்ப தானு
னழுங்குறு பவந்தீர் வேதா ரணியமென் றுரைக்கப் பட்ட
செழுங்கொடி நகர்ப்போ காங்க னெனுமொரு சினவேல் வேந்தன்.

(இ - ள்.) கொழுவிய கொடிப்பவளம்போன்ற சடைமுடியையுடைய கௌதமமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய பின்னர், யாவரும் பணிதற்குரிய தன்மை பொருந்திய அவ்விராசகுமாரியிடத்தில் காசிபமுனிவர் கழறலாயினார். வருந்துகின்ற பிறவிப்பிணியை விலக்கும் வேதாரணியமென்று சொல்லத்தக்க செழிய காவலுடைய நகரத்தில், போகாங்கனென்னும் பெயருடைய கோபந்தங்கிய வேலைத்தாங்கிய மன்னவன் ஒருவனிருந்தான். எ - று. (௨௦௪)

அறனிது பாவ மீதென் றறிந்துல களித்தல் செய்யா
னிறைகடந் தாரப்பிக் கொள்ளு மன்னுயிர்க் கிடுக்க ணேக்கான்
மறனொடு பழகி வாழும் வள்ளுகிர்ப புலியே றன்னான்
பொறைசிறி துணரான் றெய்வம் போற்றலன் கருணை நீத்தான்.

(இ - ள்.) இது புண்ணிய கருமம் இது பாவ கருமமென்று தெரிந்து உலகத்தைக்காவாதவன். வரிகளை மிகுதியாக விதித்துக்கொடுமையோடு பழகி வாழும் கூரிய நகங்களையுடைய ஆண்புலியையொத்தவன். பொறுமை யென்பதை ஒரு சிறிது மறியாதவன். தெய்வ வழிபாடு செய்யாதவன். கிருபையென்பது அறவே தன்பாற் பொருந்தாது விலக்கினவன். எ - று. (௨௦௫)

கருமமீ றொழியத் துஞ்சுங் காலையிற் றென்பாற் செல்வன்
பொருகழற் றூதர் புக்கார் புயத்துணை பொருந்த வீக்கி
மருமமுற் றிடித்துக் கொண்டு சென்றனர் யமனி தானுந்
தெருமரு நிரயத் திட்டான் கிடந்தனன் வருந்திச் சின்னாள்.

(இ - ள்.) தன் தேக சம்பந்த வினைகழிந்து அவனிறக்குஞ் சமயத்தில், தென்றிசைக்கிறைவனான இயமனுடைய ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த தூதுவர்கள் வந்து, அவனது இரு தோள்களையும் ஒரு சேர்க்கட்டி, மார்பிற் குத்தி இழுத்துக்கொண்டு சென்றார்கள் இயமனும் அலனைச்சுழலத்தக்க நரகத்திற் போட்டனன், சில காலமெல்லையும் வருத்தமெய்தி யிருந்தான். எ - று. (௨௦௭)

கண்ணுதற் கடவு ளேவக் கயிலையங் கிரியிற் றூதர்
துண்ணெனு முழக்கத் தோடு தென்றிசை தொடர்ந்து சென்று
ரெண்ணரு நிரயத் தாழ்ந்த விவற்பிடித் தெடுத்துச் செம்பொ
னண்ணலந் தனிமா னத்தி னமைத்தன ரகன்று போனார்.

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் கட்டளையால் திருக்கைலாயகிரியிலுள்ள சிவகணங்கள் அச்சக்குறிப்புடைய முழக்கத்தோடு தென்றிசை நோக்கி இயமபுரம் போய்ச்சேர்ந்து, எண்ணுதற்கும் அரிய நரகத்தில் வீழ்ந்துகிடக்கும் இப்போகாங்க னென்பவனைக்கண்டு பிடித்தெடுத்து, பசும்பொன்னாலாகிய சிறந்த விமானத்திலேற்றி இயமபுரத்தைவிட்டுச்சென்றார்கள்.

போதரு நெறியிற் பற்றிப் புகுந்தனர் தென்பாற் றூதர்
தீதறு சிவக ணத்துச் செல்வரைப் பின்சென் றேத்தி
யாதிவன் றருமஞ் செய்த துணர்த்திரென் றிரந்து கேட்ப
மாதொரு பாகன் றூத ரவனிலை வகுப்ப தானார்.

(இ - ள்.) போகும்வழியில் இயமதூதர் அவர்களைப் பின்பற்றிச்சென்றார்கள். அப்படிக் குற்றமற்ற சிவகணப்புண்ணியர்களைப் பின்றொடர்ந்து துதிசெய்து, இப்போகாங்கன் செய்தது யாது புண்ணியமோ? அதனை யுணர்த்துக வெனக்குறை கூறி வினவவும், உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமான் தூதர்கள் அவன் நிலைமையைச்சொல்வாராயினர். எ - று. (௨௦௮)

இத்திறத் திவன்செய் பாவ மெண்ணிறந் துளவென் றாலும்
பத்தியி னிவன்பாற் றோன்றுங் கனகனென் றுளனோர் பால
னத்தனை மணலிற் கோட்டி யருச்சனை விளையாட் டுற்றான்
முத்தனோர்ந் திவன்பால் வெள்ளிக் கயிலையின் முதன்மை யீந்தான்

(இ - ள்.) இப்படி இவன் செய்த பாவங்கள் எண்ணிறந்துள்ளனவானாலும் இவன்பாற் பிறந்த கனகனென்னும் பெயருடைய புத்திரன் பக்தியோடு சிவபெருமானை மணலாலமைத்து வேடிக்கையாகப்பூசை செய்தான். அதனைச் சிவபெருமான் தெரிந்து இப்போகாங்கனுக்கு வெள்ளி மலையாகிய கைலாயத்தின் தலைமையைத்தந்தருளினர். எ - று. (௨௦௯)

பெற்றன னதனால் வெள்ளிப் பொருப்பெனப் பேச மீண்டார்
குற்றடு தகையர் தென்பாற் றருமனைக் குறுகி யன்னார் [டான்
சொற்றன வனைத்துஞ் சொல்லத் துண்ணெனத் துனுக்கங் கொண்
கற்றைவார் சடையோன் றன்மை நினைந்துளங் கனிவ தானான்.

(இ - ள்.) அதனாற் கைலாயபதவியை யெய்தினனென்று சிவகணங்கள் சொல்லக்கேட்டு மீண்டு குத்திக்கொல்லுந் தன்மையுடைய அவர்கள் தென்றிசையிலுள்ள இயமனை நெருங்கி அக்கணங்கள் கூறியவற்றையெல்லாந் தெரி

விக்கவுர், இயமன் விண்[illegible]ல் நடுக்கமெய்தி, தொகுதியாக நீண்ட சடையை யுடைய சிவபெருமானு[illegible]ய திருவருளின்றன்மையைக்கருதி மீனக்கனி வெய்தியவனானன். எ - (௨௧௦)

கலிவிருத்தம்.

என்று காசிபன சொல்லியி றுத்தனன்
றன்று ணைச்சம தக்கினி சாற்றுவான்
மன்ற லோதி வர னுடைப் புண்ணிய
மொன்று கேட்டியென் றன்னவட் கோதுவான்.

(இ - ள்.) என்றிப்படிக் காசிபமுனிவர் சொல்லி முடித்தனர். தனக்குத் தானே யொத்தவராகிய சமதக்கினிமுனிவர் சாற்றலாயினர். மணங்கமழுங் கூந்தலையுடைய மங்கையே! சிவபெருமானுக்குரிய சிவபுண்ணியத்தின் பெருமை யாதொன்று சொல்லுவேன். கேட்பாயாகவென்று அவளுக்குச்சொல்லுகின்றார்.

தழைநெ டுங்கொடிச் சந்திர மாநகர்
மழைப டுங்கை மதிமா னெனுமிரு
குழைமு கத்தனி வேந்தனக் கோமகன்
விழைவ மைச்சன் விசுத்தனென் பானுளன்.

(இ - ள்.) தழைத்து நீண்ட கொடிகளையுடைய சந்திரமா நகரத்தை யாண்ட மேகம்போலக்கொடுக்குங் கையையுடைய மதிமானென்னும் பெயர் பெற்ற, இரு குண்டலங்கள் விளங்கும் முகத்தோடு கூடிய ஒரு ஒப்பில்லாத மன்னவனிருந்தான். அவனுக்கு அன்புள்ள மந்திரியாகிய விசுத்தனென்னும் பெயரினனொருவனிருநதான். எ - று. (௨௧௨)

உரைக்கு மன்னவன் றன்னுழைத் தோன்றிய
வரைக்கு லப்புய மைந்த ரிருவரி
னிரைத்தெ ழுந்துர்க் குணனெனு மோர்மகன்
றரைத்த லத்துரா சாரனென் றோர்மகன்.

(இ - ள்.) மேற்கூறிய அரசன்பாலுதித்த, சிறந்த மலைகள்போலுந் தோள் களையுடைய புத்திரர் இருவரில், ஒரு புத்திரன், சப்தித்தோங்குகின்ற துர்குண னென்னும் பெயருடையவன், பிறிதொரு புத்திரன் துராசாரனென்னும் பெயர் வகித்தவன். எ - று. (௨௧௩)

எடுத்து ரைக்கு மிவர்களி யற்கையைப்
படுத்து ணர்ந்தனன் றந்தையிப் பாதகர்
விடுக்கு நீர்மைய ரென்னவி டுத்தவே
றடுத்தி ருந்தன னன்னவ ரோர்ந்தனர்.

(இ - ள்.) எடுத்துச்சொல்லுகின்ற இவர்களது இயற்கைக்குணத்தை அவர் கள் தந்தை பலவகையிலும் பரிசோதித்தறிந்தான். இப்பாவிகள் நாம் விலகிப் பிரிதற்கு உரியவர்களெனத் துணிந்து அவர்களை விடுத்துத் தான் வேற்றிடத் தெய்தியிருந்தனன். அதனையப்புதல்வருணர்ந்தனர். எ - று. (௨௧௪)

தந்தை நம்மு ழைத் தண்ணளி யற்றன
னுய்ந்து நாம்வயி றோம்புதற் கொன்றிலே
மந்தி வல்லிரு ளாறலைத் தாருயி
ரிந்தி வவனித் திரிதுமென் றேகினர்.

(இ - ள்.) நம்முடைய தந்தை நம்மிடத்தில் [illegible]கயற்றிருக்கின்றான். நாம் பிழைத்து வயிறு வளர்ப்பதற்கு ஒரு வழியுமில்லை. ஆதலால், மாலைக்காலத்தில் வருகின்ற கொடிய இருளிலே வழிபறித்து உயிர்போக்கிப் பொருளை யபகரித்துச் சஞ்சரிப்போமென்று தீர்மானித்து[illegible]. எ - று. (௨௧௫)

செல்ல ருங்கடுங் கானகத் தீநெறி
புல்லி யோர்ந்து பதுக்கைபு குந்திருந்
தெல்லை நோக்கி யிடைபுகுந் தாருழை
யொல்லை சென்றுயிர் போக்கிக் கவர்குவார்.

(இ - ள்.) போதற்கரிய கடுங்காட்டின் கொடிய வழியிலே சேர்ந்து, மறைதற்குரிய விடமறிந்து, சிறு புதரில் மறைந்து நின்று சமயம் நோக்கி, வழியே வருகின்றவர்களிடத்தில், மிக விரைவாயோடி அவர்களைக்கொன்று அவர்கள் பாலுள்ள பொருள்களை யபகரிப்பார்கள், எ - று. (௨௧௬)

அற்ற நோக்கிக் கவர்ந்துயி ராசறச்
செற்ற தெந்தனை யென்னென்று செப்புகே
னுற்ற நாளி லொருகிழட் டந்தணன்
சுற்றி றுக்குஞ் சுமையொடு தோன்றினன்.

(இ - ள்.) சமயம்பார்த்துப் பொருளைப்பறித்துக்கொண்டு அவர்களுயிர் விரைவில் அகலும்படி கொலைசெய்தது எத்தனை? அக்கொடுமையை என்னென்று சொல்லுவேன்? இப்படி நடத்திவருங்காலத்திலே ஒரு நாள் ஒரு வயோதிக வேதியன் பக்கங்களிலெல்லாம் அழுத்தும்படியான பெருஞ் சுமையோடு வந்தனன், எ - று. (௨௧௭)

இரும ருங்கு மிவர்களி ருந்தன
ரருநெ றிப்பட வந்தண னெய்தலுந்
திருகு சீற்றந் தலைக்கொளச் சென்றனர்
பருவ ரற்புரிந் தாங்கவற் பற்றினார்.

(இ - ள்.) இருவரும் இரு புறங்களிலுமிருந்தார்கள். அக்காட்டுமார்க்கமாய் அவ்வேதியன் வந்தவுடனே கொடுங்கோப மேற்கொண்டவர்களாய்ச் சென்று அவனைப்பலவகைப்பட்ட துன்பங்கள் செய்து அவ்வேதியனைப் பிடித்தார்கள். எ - று. (௨௧௮)

பற்றி யெற்றிப் பறித்துப் பாட்டடி
முற்று றப்புடைத் தார்கொண்டு முன்னினார்
துற்று றுங்கடுங் கானிடைத் தோளிணை
யிற்று றக்கொடி கட்டியி றுக்கினார்.

(இ - ள்.) அப்படிப்பிடித்துக்குத்தி அவன் பொருள்களைப் பறித்துக்கொண்டு, காலின் கணுக்கள் முழுதும் முறியும்படி யடித்து அழைத்துச்சென்று அச்சுமையைச்சோதிக்க விரும்பியவர்களாய், நெருங்கிய கடுங்காட்டிலே, அங்குள்ள கொடிகளால் அவன் தோள்களை இற்றுப்போம்படி இறுக்கிக்கட்டினார்கள். எ - று. (௨௧௯)

[illegible]டு றுத்தன [illegible]கட் டறுத்தன
ரிட்ட பண்டமெ டுத்துக் கவர்ந்தனர்
கூட்ட மைத்தகற் சுண்ணமி ருந்தெடா
விட்டெ றிந்தனர் வெங்கடுங் காட்டரோ.

(இ - ள்.) அவ்வேதியன் கயிற்றிஞற் பிணித்திருந்த அம்மூட்டையின் கட்டையறுத்து விட்டார்கள், அதனுள் வைக்கப்பட்டிருந்த பொருள்களை யபகரித்தெடுத்துக்கொண்டார்கள். அப்பொதியினுள்ளே தாளித்து வைத்திருந்த கற்சுண்ணமிருந்ததனுல் அதனை யெடுத்து வெவ்விய அக்கடுங்காட்டில் விட்டெறிந்தார்கள். எ - று. (உ௨0)

இன்ன வாறிவர் செய்யுமி டும்பையை
மன்னர் மன்னன் யதிமா னுணர்ந்தன
னன்ன வர்ப்பிடித் தான்மழு வாளினுற்
பின்ன மாக்கியு ரம்பிளந் தானரோ.

(இ - ள்.) இந்த வகையாக இவர்கள் இரண்டுபேரும் செய்கின்ற கொடுமைகளை மன்னர் மன்னவனுகிய யதிமானென்பவன் தெரிந்துகொண்டு, அவர்களிரண்டுபேரையும் பிடித்து, பரசு வாள் முதலிய ஆயுதங்களால் அவர்களுடலைப் பின்னஞ்செய்து அவர்கள் மார்பைப்பிளந்தான். எ - று. (உ௨௧)

கால தண்டஞ் சுழற்றிக் கடுந்திறற்
சூல மேந்திய தென்றிசைத் தூதுவ
ரால கால மெனவுருத் தார்பவப்
பால மன்னவ ரைக்கொடு பாறினுர்.

(இ - ள்.) உடனே காலதண்டத்தைச்சுழற்றிக்கொண்டு மிக வுக்கிரவல்லபமுடைய சூலாயுதமேந்திய இயமபுரத் தூதர்கள், ஆலால விஷத்தைப்போலக் கர்ச்சனைசெய்து. பாவங்களுற்பவிக்கும் பூமிபோன்ற அவ்விரண்டு பேரையும் இழுத்துக்கொண்டு ஓடிப்போனுர்கள். எ - று. (உ௨௨)

அந்த கன்றிரு முன்னர்க் கருகுற
முந்தி நிற்பவி டுத்தனர் முன்னவன்
சிந்தை கூர்ந்தறி சித்திர குத்தனை
யிந்த வீங்கிவர் செய்தன யாவென்றுன்.

(இ - ள்.) இயம தருமனுடைய சந்நிதியின் முன்பாகச்சமீபத்தில் முற்பட்டு நிற்கும்படி நிறுத்தினுர்கள். முதல்வனுகிய அவ்வியமன் புத்தி கூர்மையோடு அறிந்திருக்கும் சித்திரகுத்தனை யழைத்து, இங்கே யிதோ நிற்கின்ற இவர்களியற்றிய பாவ புண்ணியங்கள் எவை? என வினவினுன். எ - று. (உ௨௩)

புண்ணி யப்பொரு ளொன்றும் புரிந்திலர்
கண்ண கன்றெழு கானிற் பறித்தெறி
சுண்ண மற்றொர் சுருதிவல் லானெடுத்
தண்ணன் முக்கண னுலயத் தெய்தினு.

(இ - ள்.) எவ்வகைத்தாகிய ஒரு புண்ணியமும் இவர்கள் செய்திலர். இடமகன்றுயர்ந்த காட்டினிடத்தில் (இரண்டனை) வழிபறித்துப்பிடுங்கி யெறிந்த கற்சுண்ணத்தை மற்றொரு வேதமறிந்த பிராமணனெடுத்து அழகிய திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருவாலயத்தையடைந்து. எ - று. ()

அன்றெ டுத்தகற் சுண்ண மழித்திலை
தின்று மிக்கது சேவுயர்த் தோன்மதிற்
குன்றிடுக்கி னிழுகிய கொள்கையா
லின்றி வர்க்கிட ரில்லையென் றனரோ.

(இ - ள்.) அன்று கண்டெடுத்த கற்சுண்ணத்தைத் தடவித் தாம்பூலந் தின்று மிகுதியாக நின்ற சுண்ணத்தை இடபக்கொடியையுடைய சிவபெருமான் திருவாலயத்தின் மதிலிலுள்ள கற்களினிடையே தடவிய தன்மையால், இப்போது இவர்கட்குப் பாவமுண்டாகவில்லையென்று சித்திரகுத்தன் சொன்னான்.

என்னு மாத்திரை யெந்தைபி ரானரு
ளுன்னு தூதர்தொ டர்ந்துப டர்ந்தனர்
பொன்னி லங்குறு மானம் பொருத்தினு
வின்ன றீர்த்தவர்க் கொண்டகன் றேகினார்.

(இ - ள்.) என்று சொல்லுகையில், எந்தையாகிய சிவபெருமான் திருவருளடைந்த சிவகணங்கள் தொடர்ந்துவந்து, பொன்னொளி வீசும் தெய்வவிமானத்திலேற்றி, துன்பத்தையகற்றி, அவ்விருவரையும் உடன்கொண்டு அங்கிருந்தகன்று கைலாயத்திற்குச்சென்றார்கள். எ - று. (உஉச)

பின்னெ ழுந்துவ ணங்கிப் பெருந்திசைத்
தென்ன கர்க்கிறை சென்றனன் கைதொழா
வென்னு டைப்பெருந் தூதரி யற்றிய
புன்னி லைப்பெருந் தீமைபொ றுத்திரால்.

(இ - ள்.) அதன் பின்னர், பெரிய தென்றிசைக்கிறைவனாகிய இயமன் எழுந்து பணிந்து சென்று கைகுவித்து என்னுடைய பெரிய கணங்கள்செய்த இழிதகைமையையுடைய கொடிதாகிய குற்றங்களைப்பொறுத்தருள்வீராக.

என்னப் பொங்கியி றைஞ்சியெ ழுந்தனன்
கன்னற் சாபன் கனற்பட மாட்டியோன்
முன்னர்க் கொண்டுவி டுத்தனர் முக்கணன்
றன்னொப் பாயொரு சார்பிருந் தாரரோ.

(இ - ள்.) என்று கூறித் துதிசெய்து வணங்கித் திரும்பினான். கரும்புவில்லேந்திய மன்மதனை நெருப்பாலழியத் திருவுளங்கொண்ட சிவபெருமான் சந்நிதியில் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிருவரும் திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானைப்போல (சாரூபமெய்தி) ஒரு பக்கலிலிருந்தார்கள். எ - று. (உஉ௫)

ஆத லிற்சிவ புண்ணியம் யாவையு
மோதி முற்றமொ ழிக்கப் படுவதோ
வீதி வெண்பிறை சென்னியி லேச்சியோன்
மூது ணர்ந்தவ ரன்றி மொழிவரோ.

(இ - ள்.) ஆனபடியால், சிவபுண்ணியங்களை யெல்லாம் முழுவதுஞ் சொல்லி முடிக்க முடிவுறுமோ? அவற்றை [வீதி] ஒழுங்கமைந்த தாவள்யமான பிறைச்சந்திரனை யணிந்த முடியையுடைய சிவபெருமானும் முற்றுந்தேர்ந்த ஞானிகளுமல்லாமல் வேறொருவர் சொல்லுவாரோ? எ - று. (உஉ௬)

என்ன வைத்திடு மீற்றிடைக் கோசிகன்
கன்னி தன்முக நோக்கிக் கழறுவான்
பன்னு மாதவத் தொல்லையர் பண்புடைப்
பொன்ன கர்க்குப் புரந்தர னாதியோர்.

(இ - ள்.) எனக்கூறிய விறுதியில், விசுவாமித்திரமுனிவர் அவ்வரச குமாரியின் முகத்தைப்பார்த்துச் சொல்லுகின்றனர். எவராலுந் துதி செய்யத் தக்க பெருந்தவமுடைய பெரியோர்களும் தேவலோகத்திற்குத் தலைமை வகித்த இந்திரன் முதலாகவுள்ள தேவர்களும். எ - று. (௨௯௦)

சித்தர் கிம்புரு டச்சிறப் போர்பெரு
வித்தி யாதரர் வீணையர் மேவரப்
பைத்த பாம்பணைப் பள்ளிய னுந்தியி
னுய்த்தெ ழுந்த முளரியு றையுளோன்.

(இ - ள்.) சித்தர்களும் கிம்புருடராகிய சிறப்பினையுடையவர்களும் பெருமை தங்கிய வித்தியாதரர்களும் கின்னரர்களும் புடை சூழும்படி படமுடிகளை யுடைய ஆதிசேஷனாகிய சயனத்தில் யோகநித்திரை செய்யுந்திருமாலும், அவர் உந்திக்கமலத்துதித்துள்ள கமலாசனனாகிய பிரமதேவனும். எ - று. ()

ஏம கூடத் தினிதிருந் தாரவண்
யாமு மெய்திப் பரசியி ருந்தனங்
காம ரொண்பிறைக் கண்ணிக ணத்துளா
னேம வேற்சத விந்தய னண்ணினான்.

(இ - ள்.) ஏமகூடமென்னும் பர்வதத்தில் இனிதாகவிருந்தார்கள். அங்கே நாமும்போய் அவர்களைப்புகழ்ந்தோம். அழகிய பிறைச்சந்திரனாகிய மாலையை யணிந்த சிவபெருமானுக்குரிய சிவகணத்திலுள்ளவனாகிய அச்சந்தரும் வேலேந்திய சதவிந்து வென்பவன் அம்மலைக்கருகே வந்தனன். எ - று. (௨௯௨)

உரைத்த மால்வரை யோர்மருங் காகமுற்
றிரைத்தெ ழுந்தக ணத்தொடு மெய்தலும்
விரைப்ப சும்பனித் தாமரை மேலுளா
னிரைக்க ணத்தொடெ ழுந்தெ னின்றனன்.

(இ - ள்.) சொல்லிய பெரிய அவ்வேமகூடபர்வதத்தின் ஒரு புறமாக, பேரிரைச்சலோடு தோன்றிய சிவகணங்களோடெய்திய வுடனே, மணமுடைத்தாகி அன்றலர்ந்த குளிர்ந்த செந்தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமன் வரிசையாயுள்ள கூட்டத்தோடெழுந்து நின்றான், எ - று. (௨௯௩)

நின்ற நான்முகத் தேவ னிரைபடுந்
தன்ற ளிர்க்கரங் கூப்பிய தன்மையை
யொன்று நோக்கல னாகி யொருதனிக்
குன்ற வில்லி கயிலை குறுகினான்.

(இ - ள்.) அப்படி நின்ற நான்கு முகங்களையுடைய பிரமதேவன் வரிசை யாயுள்ள தனது தளிர்போன்ற கைகளைச்சிரமேற்குவித்ததன்மையைச் சிறிதும் பாராதவனாய், ஒப்பற்ற தனிமையாகிய மலை வில்லைத்தாங்கிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருக்கைலாயகிரியிற் சேர்ந்தான். எ - று. (௨௯௪)

பிஞ்ஞி ருந்தன ளுன்முகன் பேரற
மன்னு மாதவர் சுற்றுற வைகினு
ரன்ன காலையி னந்தணனைத்தொழா
வென்னை யீதென்றி யானும்வி னயினேன்

(இ - ள்.) நின்றுகொண்டிருந்த பிரமதேவன், அதன் பின்னே, நிலைபெற்ற பெருந்தவமுடைய பெரியோர் புடை சூழும்படி உட்கார்ந்திருந்தான். அச்சமயத்தில் பிரமதேவனை வணங்கி இஃதென்னவென்று நானுங் கேட்டோம். எ-று.

நீயெ ழுந்தனை நிற்கவு நோக்கலன்
போயொ ழிந்தனன் யாதிவன் புண்ணிய
மாய வேண்டுது மென்னலு மம்புயத்
தூய நாத னவனிலை சொல்லுவான்.

(இ - ள்.) நீர் எழுந்து நின்றுகொண்டிருக்கவும், கவனித்துப்பாராமற் சென்றுவிட்டான். இவனியற்றிய புண்ணியம் ஏதோ? அதனை யாய்ந்துணர வேண்டுமெனவிண்ணப்பிக்கவும், புனிதமாகிய செந்தாமரைமலர்ப்பீடத்தையுடைய பிரமதேவன் அச்சிவகணன் பெருமையைச்சொல்லுகின்றான். எ - று.

மேற்படி வேறு.

வண்டமிழ்ப் பரவுசா மந்தமா நகருளான்
விண்டநூல் புனைசதா விந்துவென் பானிவ
னெண்டரற் கரியதோர் வறுமைபெற் றெய்தினான்
றண்டலைக் கழனிபுக் குழுதொழிற் சார்பினான்.

(இ - ள்.) வளந்தங்கிய தமிழ்மொழி வழங்கும் சிறந்த சாமந்த நகரத்திலுள்ளவனும், முப்புரிநூல்தரித்த சதவிந்துவென்னும் பெயர் பெற்றவனுமாகிய இவன், எண்ணுதற்கும் அரிதாகிய ஒப்பற்ற தரித்திரமெய்தியவனாய், குளிர்ச்சி வாய்ந்த வயல்களிற்போய் உழுது பயிரிடுந்தொழிலைச்சார்ந்தவனாயினான். எ-று.

பழமறைக் குலமுதித் தனனிவன் பரிவினு
லுழுதொழிற் பரிசுபெற றொழிகலான் வறுமைநோ
யெழுமருப் பொருகரும் பகடுளா னிதனையப்
பொழுதுவிற் குதுமெனப் பசியொடும் போயினான்.

(இ - ள்.) பழமையாகிய வேதியர்குலத்திற்றோன்றிய இவன், வறுமைத்துயரால் உழவுத்தொழில் செய்தற்கியைந்தும் தன் வறுமைத்துயர் தணியாது வருந்தினான். அப்போது கொம்புகள் நீண்ட கருநிறந்தங்கிய எருமைக்கடாவொன்றுடையவனாயிருந்தான். இக்கடாவை அன்றைய தினத்தில் மிகப்பசியினால் விற்றுவிடுவோமென்று தெருவழியே போயினான். எ - று. (உ௬அ)

கொள்கிலா ரதனைநல் குரவொடும் பசியொடு
மூள்புகா வொருதறிப் பகடணைத் துறுதலும்
வள்படுங் கொடியவால் வரிவிரிச் சிகமடுந்
தெள்விடம் புகமடுத் தனுமவன் றெருமரா.

(இ - ள்.) அதனை யாரும் வாங்காமையால், தரித்திரத்தாலும் பசியாலும் வீட்டைச்சேர்ந்து ஒரு கட்டுத்தறியில் அவ்வெருமையையணைத்துக்கட்டின

வுடனே, கூரிய வளைந்த வாலையும் வரிகளையுமுடைய ஒரு தேளானது, கொல்லத்தக்க தெளிவாகிய விஷம் உடலிற் பாயும்படி கொட்டவும் அவன் மயக்கமடைந்து. எ - று. (உகக)

கைத்தலங் குலைதரச் சுழல்வருங் கண்முகிழ்த்
தாய்த்துறங் கிலனுயிர்ப் பொறைதுரந் தானரோ
வத்தலைப் பகடுகட் டறுதரப் புறமுலாய்
மத்தமா மதமுழந் தயலெலா மழிதர.

(இ - ள்.) கைகள் நடுங்கவும் சுழலுங் கண்கள் குவிந்து நல்ல நித்திரை செய்யாதவனாயும் உயிர் விட்டான். அச்சமயத்தில் அவன் கட்டிவைத்த எருமைக்கடா கட்டினை அறுத்துக்கொண்டு புறத்தே திரிந்து உன்மத்தமாகிய சிறந்த மதமெய்தி, பக்கங்களிலெல்லாம் அழித்துக்கொண்டிருக்க. எ - று. ()

சேவுயர்த் தவர்திருப் பணிவிடைக் குளபகட்
டாவிநீத் தனுமரன் பணிவிடைக் கண்மினார்
மேவரக் கொடுசகட் டுறவிசித் தனர்தனித்
தேவனுக் கொருபகற் சிலையிழுத் திட்டதால்.

(இ - ள்.) இடபக்கொடியையுடைய சிவபெருமானுக்குரிய திருப்பணிவிடைக்கேற்ற எருமைக்கடாவொன்று உயிர் நீங்கிய வளவில், சிவபணிவிடைக்கு வந்தவர்கள், இவ்வெருமைக்கடாவை யிழுத்துச்சென்று வண்டியிற் பொருந்தக்கட்டினார்கள். ஆதலால் ஒப்பற்ற சிவபெருமானுக்கு ஒருநாள் முழுவதும் கல்லிழுத்தது. எ - று. (உசக)

அப்பெரும் பகடரன் பணிவிடைக் குதவலா
னிப்பெரும் பதவிபெற் றிறைகணத் தலைவனாய்ச்
செப்பருந துளமுடிச் செங்கணான் முதலினார்
துயபுறும் பரிவினாற் றொழுவிருந் தானரோ.

(இ - ள்.) அப்பெரிய எருமைக்கடா சிவபணிவிடைக்கு உதவியாயிருந்தபடியால், இவன் இவ்வளவு மேலான பதவியையடைந்து, சிவகணங்களுக்குத் தலைவனாகி, சொல்லுதற்கரிய துளவமாலையணிந்த திருமுடியையுடைய திருமால் முதலானோர் மேன்மைதங்கிய அன்புடன் பணியும்படி யிருந்தனன்.

இன்னணஞ் சதுமுகத் தவனிசைத் தானெனப்
பொன்னையன் னவளொடுங் கோசிகன் புகறலு
மன்னமன் னவளுவந் ததிசயத தெய்தினாள்
பின்னர்கின் றுளபரத் துவனினிப் பேசுவான்.

(இ - ள்) நான்கு முகங்களையுடைய பிரமதேவன் இப்படிக்கூறினானென்று, திருமகளையொத்த அவ்விராசகுமாரி மாரியினிடம் விசுவாமித்திரமுனிவன் திருவாய்மலர்ந்தருளவும், அன்னம்போலும் நடையையுடைய அவ்விராசபுத்திரி மனங்களித்து ஆச்சரிய மெய்தினள். அவர்களிற் பிற்பட்டிருந்த பரத்துவாசமுனிவர் மேலே சொல்லுகின்றார். எ - று. (உசங)

தாதெருப் படுகுடித் தொறுறுவதிற் றலைவனிற்
போதுமோர் சிறுவனு மெறுதெருப் பறலயிற்
காதலிற் கண்ணுதற் புனிதனைக் கருதியென்
னுதனீ யென்னவோர் சிலையமுன் னட்டனன்.

(இ - ள்.) தூசும் சாணமும் நிரம்பிய குடிசையில் வாழும் இடையர்களுக்குத் தலைவனாகிய ஒருவன் வீட்டிற் பிறந்த ஒரு சிறுவன், மிக்க அன்போடு நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் தியானஞ்செய்து தான் விளையாடும் வீதியிலிருக்கும் சிறு கற்களினிடத்தில், ஒரு கல்லையெடுத்து நீதான் என் கடவுளென்று தன் முன்னே நட்டான். எ - று. (௨௪௪)

மற்றுமச் சிறுகலான் மதிளெடுத் தையனைச்
சுற்றுமுற் றுறவகுத் திழிபுனற் றெள்ளியே
முற்றுமென் சந்தெனப் புனைசெய்வான் முளியரிற்
றுற்றுபன் மலரெடுத் தணிமுடிச் சொரிகுவான்.

(இ - ள்.) மற்றைச்சிறு கற்களால் மதிலமைத்து, தான் ஸ்தாபித்த சிவபெருமானை முற்றுஞ்சுற்றி யிருக்கச்செய்து, இழிவாகிய நீராலாகிய குழைசேறே மிகமெல்லிய சந்தனமென்று தரிப்பான். முள்ளிச்செடியில் நிறைந்திருக்கும் பல பூக்களையெடுத்து அழகிய திருமுடியிலிடுவான். எ - று. (௨௪௫)

மணலெடுத் தலரெருக் கடைவகுத் திதுவுனக்
குணவெனத் தொழுதிழைத் தாடினா ளுமையிடக்
கணபடிச் சடிலிபே ரருளொடுங் கருதுரு
விணைமருப் பேறுகைத் தினிதெழுந் தருளினான்.

(இ - ள்.) மணல்களையெடுத்து அங்கிருந்த எருக்கிலையில் வைத்து இது தான் உனக்கு நிவேதனமென்று வணங்கி, இவ்வாறுசெய்து விளையாடுந் தினங்களில், உமாதேவியை வாமபாகத்திலுடையவரும் சர்ப்பமணிந்த சடையையுடையவருமாகிய சிவபெருமான், சிறந்த திருவருளோடு திருவுள்ளங்கொண்டருளி இரு கொம்புகளையுடைய இடபவாகனமூர்ந்து இனிதாக வெழுந்தருளினார். எ - று. (௨௪௬)

மைந்தனைக் கருணையான் மருவுறத் தழுவிநீ
தந்தவற் புதமெமக் கெனவுரைத் தனனவன்
சிந்தையிற் களியின்வைத் திடுசிலைச் செழுமணிச்
சுந்தரச் சோதிபெற் றிடவளித் துதவினான்.

(இ - ள்.) அச்சிறுவனைக் கருணையோடு ஆலிங்கனஞ்செய்து நீ தந்தவை யாவும் எமக்கு அற்புதமாயினவென்று திருவாய்மலர்ந்தருளினர். அச்சிறுவன் களிப்போடு ஸ்தாபித்த அச்சிறு கல்லானது, உயர்ந்த மாணிக்கத்தின் பிரகாசத்தை யெய்தும்படி வரம்பாலித்தனர். எ - று. (௨௪௭)

அவனடுக் கியசிலைக் கோபுரத் தயன்மதிட்
கவரொளிக் கதிர்மணிக் குலமெனக் கருதமுக்
குவைநிதிக் கிழவனிற் பொதிநிதிக் குவையெலா
மிவனுறப் பெறவளித் துதவினா னிறைவனே.

(இ - ள்.) அவன் அடுக்கிய சிறுகற் கோபுரத்தயலில் மதிலொன்று, பிறபிரகாசங்களை மழுங்கச்செய்யத்தக்க ஒளிதங்கிய இரத்தினக்கூட்டங்களென்று சொல்லும்படியாகவும், யாவரும் நினைக்கின்ற மூவகைநிதிக்குவைகளையுடைய குபேரனைப்போலப்பொருந்திய நிதிக்குவைகள் முழுவதையும் இச்சிறுவனெய்தவும் சிவபெருமான் திருவருள் புரிந்தனர். எ - று. (௨௪௮)

என்னையா ளீசனப் புதல்வனு லெய்துமத்
துன்னருங் கோயினுட் சோதிமா மயமெனு
மன்னினு னுலகுளோர் மாலைவெண் கவிகையோர்
பன்னுமா தவமுனித் தலைவரும் பரசினர்.

(இ - ள்) என்னை யடிமையாகவுடைய சிவபெருமான், அச்சிறுவனாலாகிய அச்சிறு கோயிலில், சிறந்த சோதிமயமாக வெழுந்தருளினர். அவ்விலிங்க மூர்த்தியை நிலவுலகத்தாரும், வெற்றிமாலையும் வெண்கொற்றக்குடையு முடைய அரசர்களும், யாவருந்துதிக்கும் சிறந்த தவத்தையுடைய முனிசிரேஷ்டர்களும் துதி செய்தார்கள். எ - று. (௨௪௯)

நின்னுடைக் குலமுதற் கிளையுளாய் நெடுநிலம்
பன்னுசீர் நந்தகோ பாலன்வந் தவதரித்
தன்னவன் பானறுந் துளவினு னவதரித்
தின்னறிர் பெருவளம் பெறுதியென் றேததினர்.

(இ - ள்.) உன் குலமுதல்வர்களாகிய உறவினருள்ளே, நெடிய வுலகந் துதி செய்யத்தக்க, சிறப்புற்ற நந்தகோபாலன் வந்தவதரித்து, அவன்பால் மணங்கமழுந் துளவமாலையணிந்த கண்ணபிரான் அவதரித்து அதனால் துன்பமற்ற பேரின்பமெய்துவாயென்று வாழ்த்தினர்கள். எ - று. (௨௫௦)

இற்றைநாண் முதலுனக் கிடுகுறிப் பெயர்கெடச்
சொற்றனஞ் சீகரன் பெயரெனச் சொல்லினர்
மற்றவைமந் தனையடிக் கடிதொழா வாழ்த்தினர்.
பொற்றடம் புவியுளோர் முனிவரும் போயினர்.

(இ - ள்.) இன்று முதலாக உனக்குவழங்கிவரும் இடுகுறிப்பெயர் விலகும்படி, சீகரனென்று காரணப்பெயர் வழங்கும்படி சொன்னேமென்று கூறினார்கள். மேலும் அடிக்கடி அவர்கள் அச்சிறுவனை வணங்கித் துதிசெய்தார்கள். அதன் பின்னர், அழகும் விசாலமுமுடைய அவ்வூராரும் முனிவர்களும் தத்தமிடம் போனார்கள். எ - று. (௨௫௧)

சீகரப் பெயருடைச் சிறுவனுந் திரைபொருஞ்
சாகரப் பெருநிலப் பலவளந் தழுவினு
ஞகரத் தின்பமுற் றனுபவித் தணிபிறைச்
சேகரச் சடிலிதென் கயிலைசென் றண்மினன்.

(இ - ள்.) சீகரனெனும் பெயருடைய அச்சிறுவனும் அலைகளெறியுங் கடலாற் சூழப்பட்ட பெரிய நிலவுலகிலுள்ள பல்வகைச்செல்வமுமெய்தி, இன்பத்திற்கெல்லாம் வாசஸ்தானமாகவிருந்து அவற்றை நுகர்ந்து, அழகிய சந்திரசேகரஜடாதரனாகிய சிவபெருமானெழுந்தருளியுள்ள தென் கைலாயத்திற்போய்ச்சேர்ந்தனன். எ - று. (௨௫௨)

கலிநிலைத்துறை.

செறிந்த புன்சடை நிலவணி சென்னியோன் பெருமை
யறிந்து மெய்குநர் பெறுவமற் றுங்கவ னல்லாற்
பிறிந்து றப்பிரித் துரைக்குநர் யாவரே யறப்பசத்
செறிந்த சிந்தையு ரென்றன னருந்தவச் செல்வன்.

(இ - ள்.) நெறிப்புற்ற சிறு சடையில் இளஞ்சந்திரனையணிந்த திருமுடியையுடைய சிவபெருமான் மகிமையையறிந்து செய்வோரெய்தும் பேறுகளை, அச்சிவபெருமானேயன்றிப் பாகுபாடு பெறும்படி வகுத்துச்சொல்லுவோர் யாவர்? ஒருவருமிலர்! தரும நெறியிற்படிந்த மனமுடையவர்களே! என்று சிறந்த தபோநிதியாகிய பரத்துவாசமுனிவர் கூறினர். எ - று. (உ௩௩)

முனிவ ரேழ்வரும் வரன்முறை யிவ்வழி மொழிந்தார்
கனியு மன்பினள் கட்புன லரும்புறக் கனிந்தா
ளினிய சொல்லிமற் றுங்கவர்ப் பணிந்துற விரங்கிப்
புனித மாதவ ருளநெகிழ்ந் தாசிகள் புகன்றார்.

(இ - ள்.) முனிவர்களெழுவரும் கிரமமாக இப்படித்திருவாய்மலர்ந்தருளினார். கனிவுற்ற உண்மையன்புடைய அவ்விராச குமாரி கண்களில் ஆநந்த பாஷ்பஞ் சிந்தும்படி மனமுருகினவளாய், உபசார வார்த்தைகள் சொல்லி அம்முனிவர்களை வணங்கவும், புனிதமுடையவராகிய அம்முனிவர்கள் திருவுளமிரங்கி மனங்கனிந்து ஆசிர்வதித்தார்கள். எ - று. (உ௩௪)

ஏறு மால்விடை யெம்பிரான் றிருவரு ளெய்தி
யூறு நீங்கிய செல்வியாய்ப் பெருவள னுவந்து
சீற ருஞ்சிவ புண்ணியத் தொழுகுதி யென்று
ராற றிந்தநூ லந்தணத் தருந்தவ ரகன்றார்.

(இ - ள்.) வைதிகமார்க்கமுணர்ந்த அந்தணர்களாகிய அருந்தவமுடைய சப்தமுனிவர்களும், பெரிய இடபவாகனமூர்ந்தருளும் எமது சிவபெருமான் திருவருளைப் பூரணமாக வடைந்து, இடையூறு நீங்கிய செல்வமுடையவர்களாய் விசேட போகங்களை நுகர்ந்து, சிறந்த அருமையாகிய சிவபுண்ணிய நெறியில் நடக்கக்கடவாயென்று கூறி, அவ்விடம் விட்டுச்சென்றார்கள். எ-று.

திருந்து மாதவ ருரைத்தன வுளத்தொடுஞ் செறித்தாண்
முருந்த வாணகைக் குமாரிமுன் னையிற்குழைந் துருகிப்
பெருநத டநதிரை நெடுநிலப் பேரறம் வளர்த்தா
டருந்த வக்கொழுந் தனையளால் வளர்ந்தது தருமம்.

(இ - ள்.) திருத்தமாகிய சப்தமுனிவர்களும் கூறியவற்றை மனதில் வைத்துக்கொண்டு, மயிலிறகினடிக்குருத்துப்போன்ற ஒளிதங்கிய பற்களையுடைய அவ்விராச குமாரி முன்னினும் அதிகமாக மனநெகிழ்ந்துருகி, பருத்து விசாலித்த அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகில் சிறந்த தருமங்களை வளர்த்தாள். தவத்தின் கொழுந்துபோன்ற அவ்விராச குமாரியால் உலகில் தருமநெறி வளர்ந்தது. எ - று. (உ௩௫)

ஆல யம்பல வமைத்தன டிருக்குள மமைத்தாண்
மாலை நந்தன வனமெலா மொருங்குற வகுத்தா
ளோலி டும்புனற் கூவலு மெம்பிரார் குவபபக்
காலை யங்கதிர் புரைமணிக் கலன்களு மளித்தாள்.

(இ - ள்.) பல சிவாலயங்களைப்புதுக்கினள். அநேக திருக்குளங்களையும் புதுக்கினள். வரிசையாக நந்தன வனங்களையும் ஒலிக்கின்ற நீர் நிறைந்த திருமஞ்சனக்கூவல்களையும் ஒன்றாகப்புதுக்கினள். எமது சிவபெருமானுக்குத் திருவுளமகிழும்படி காலையிலுதிக்கும் பால சூரியன்போன்ற சிறந்தங்கிய இரத்தினங்களிழைத்த ஆபரணங்களையும் கொடுத்தாள். எ - று. (உகஎ)

செஞ்ச டைப்பரற் கினிதுறத் திருவிழாப் பலவு
நெஞ்சு றக்கணிந் தொருகுறை யில்லென நிரப்பி
மஞ்சு றுங்குழல் வேடமெய்ப் பொருளிலர் வருங்கா
லஞ்சி நெஞ்சழிந் தலமருந் தன்மைய ளானள்.

(இ - ள்.) சிவந்த சடையையுடைய சிவபெருமானுக்கு இனிதாகப் பல திருவிழாக்களையும், மனமுழுதுங்கனிவெய்த யாதொரு குறையில்லையென்று சொல்லும்படி முடித்து, மேகநிறந்தங்கிய கூந்தலையுடைய அவ்விராசகுமாரி, சிவபெருமான் திருவேடமுடையவர்களாய், உண்மைத் தன்மையற்றவர்கள் வந்தபோது, அச்சத்தோடு மனமுடைந்து வருந்துந் தன்மையுள்ளவளானள்.

இனிச்செ யப்படு தருமமொன் றில்லென யாவுங்
கனித்த சிந்தையி னிரப்பினள் கருமவேர் களைவான்
பனிப்ப சும்பிறைக் கண்ணியோன் றனையுளப் படுத்தித்
தனித்த யோகமு ஞானமுந் தழைத்தன டையல்.

(இ - ள்.) இனிச்செய்யத்தக்க தருமமொன்றில்லையென்று சொல்லும்படி தன் வினையின் வேரறுபடத்தருமங்களெல்லாவற்றையும் கனிந்த மனத்தோடு செய்து முடித்தாள். குளிர்ச்சிதங்கிய இளம்பிறையாகிய மாலையையணிந்த சிவபெருமானை மனதில் தியானஞ்செய்து ஒப்பற்ற யோகத்தினும் ஞானத்தினும் அவ்விராசகுமாரி மேன்மை பெற்றனள். எ - று. (உககூ)

அளவ றும்பெரும் பயனுகர்ந் தாடிருந் திரைநீர்
வளைநி லத்தினாழ் பிற்பட வைகனீத் தொழித்துக்
கிளைம ணித்தனி மானமீச் சிறந்தனள் கெழுமித்
தளைய விழ்ந்ததண் பூமழை பொழிதரச் சார்வாள்.

(இ - ள்.) அளவற்ற பெருஞ்செல்வத்தை யனுபவித்து, அசைந்துகொண்டிருக்கும் பெரிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள வினைப்பயன் அகலத்தக்க நாள்களைக்கழித்து நீக்கி, தொகுதியாகிய நவமணிகளிழைத்த விமானத்திலிவர்ந்து சிறப்புற்றவளாய் மேன்மையெய்தி, இதழ்கள் விரிந்த குளிர்ந்த மலர்மழை சொரியும்படி செல்கின்றனள். எ - று. (உஉo)

கண்க ளாயிரம் பொறுத்தவன். கற்பக நாட்டுப்
பண்கொண் மென்சிறு குதலைய ரயினியார்த் தெடுப்ப
வெண்கொண் மாதவர் முனிவர ரிமையவ ரியாரும்
விண்கொண் மாமணி மானமூழ் றயலுற மேவ.

(இ - ள்.) ஆயிரங் கண்களையுடைய இந்திரனது கற்பக நாட்டிலுள்ள இசைதங்கிய மெல்லிய சிறிய மழலைச்சொற்களையுடைய அரம்பா ஸ்திரீகள் சாமரமெடுத்து வீசவும், யாவரும் மதிக்கத்தக்க பெருந்தவசிகளும் முனிவர்களும் தேவர்களுமாகிய யாவரும் மேம்பட்டுச் சிறந்த இரத்தினங்கள் பதித்த விமானத்தைக்கிட்டி யயலில் வரவும். எ - று. (௨௧௧)

பல்லி யக்குவை மாதிர மலைப்புறப் பாக
மெல்லி யற்குள தோழிய ரெதிர்வர விரைக்கும்
புல்லி தழ்க்கம லாலய னரியொடும் போற்றத்
தொல்லை வானவன் கயிலைபுக் கிருந்தன டோகை.

(இ - ள்.) பல வாத்தியத்தொகுதிகளுந் திசைகளெல்லாம் அதிரும்படி யொலிக்கவும், அவ்விராசகுமாரிக்குள்ள தோழிகள் எதிரே வரவும், மணங் கமழும் புறவிதழ்களையுடைய தாமரை மலரைக்கோயிலாகவுடைய பிரமன் திருமாலோடு துதி செய்யவும், மயில்போலுஞ் சாயலுடைய அவ்விராசகுமாரி புராதனராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருக்கைலாயமெய்தினள்.

ஊழி யாயிர மாயிரம் பிற்பட வொருங்கே
வாழி வானவன் கயிலைவீற் றிருந்தனண் மகர
யாழெ ழுஞ்சிறு குதலையா ளிருவர்க்கு மெட்டாச்
சூழு நூபுரப் பங்கயச் சேவடி துயின்றாள்.

(இ - ள்.) (பதினேழு நரம்புகளையுடைய) மகரயாழ்போலும் இசையையுடைய மெல்லிய மழலைச்சொல்கூறும் அவ்வரசகுமாரி, கணக்கில்லாத ஊழி காலங்கள் கழியுமட்டும் சிவபெருமானெழுந்தருளியிருக்குந் திருக்கைலாய பதவியில் வீற்றிருந்து, திருமால் பிரமன் இருவருக்குங் காண்டற்கரிய கிண்கிணியணிந்த தாமரைபோலுஞ் சிவந்த அப்பெருமான் திருவடியின் கீழ் ஆனந்த நித்திரை கொண்டனள். எ - று. (௨௧௩)

தொகுத்த வார்சடை யருந்தவச் சூதனோர் மடந்தை
வகுத்த பாகத்தன் புண்ணியம் வரன்முறை வழங்கப்
பகுத்து ணர்ந்தனர் முனிவரர் புளகமெய் பனித்தா
ருகுத்த கட்புன லரும்புற வன்புமிக் குவந்தார்.

(இ - ள்.) கூட்டமான நெடிய சடையையுடைய அருந்தவம் புரிந்த சூத முனிவர், ஒப்பற்ற உமாபிராட்டியை வாமபாகத்திலுடைய சிவபெருமானுக்குரிய சிவபுண்ணியங்களை முறைப்படி கூறியருள, அதைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் பாகு பாட்டுடன் தெளிந்து சரீரம் புளகித்துக்குளிர்ந்து ஆனந்தக்கண்ணீர் விழிகளில் துளிக்கும்படி அன்புமிகுந்து களித்தார்கள். எ-று.

இந்தி யங்கடக் தொருவழிப் புலனிறுத் தியது
மந்தை மாதவச் சூதமா முனிவரன் முதன்மை.
தந்த மாதவத் தலைவர்க ணிலவணி சடிலத்
தெந்தை புண்ணிய மின்னமுங் கேண்மினென் றிசைப்பான்.

(இ - ள்.) இந்திரியங்களை நிக்கிரகித்து ஐம்புலன்களை யொருவழிப்படுத்தி அதனாற்பொருந்திய புராதனமாகிய பெருந்தவமுடைய சூதமுனிவர் முதன்மையாகிய பெருந்தவத்தலைவர்காள்! பிறைச்சந்திரனை யணிந்த சடையையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானுக்குரிய சிவபுண்ணியப்பயனை இன்னும் கேட்பீர்களாக வென்று மேலுஞ் சொல்லுகின்றார். எ - று. ()

வேலி நீணதி யுடுத்தன விராட நாட்டகத்து
மாலை யிஞ்சிசூழ் கிடந்தசீ மந்தமா நகரத்
தாலு நான்மறைக் குலத்துளன் குரவனன் னவன்பாற்
பால னன்னவர் துதித்தனன் மிருகனென் படிறன்.

(இ - ள்.) வேலிபோலப் பெரிய நதியானது சூழ்ந்துள்ளவிராடநாட்டிலே மலையைப்போலும் மதில் சூழ்ந்திருக்கும் சிறந்த சீமந்தநகரத்தில், ஒலிக்கின்ற நான்கு வேதங்கட்குரிய பிரமகுலத்திலுதித்தவனும் ஆசிரியனுமாகிய ஒரந்தணனிடத்தில் மிருகத்தன்மையுடைய ஒருதுஷ்டன் புதல்வனாய் வந்து பிறந்தான். எ - று. (உகசு)

முலைவி லைப்பொது மங்கையர் முலைமுக முயங்கிக்
கலைவ ரம்பிகந் தாரிருட் களவழி நடப்பா
னலகி னெட்டிலை யரம்பைசூழ் புட்கரத் தகன்றான்
குலைநெ டும்பழங் கவர்ந்துவே சையர்க்கெனக் கொடுப்பான்.

(இ - ள்.) முலைவிலைவாங்கும் வேசையர் தனங்களில் தழுவி நூல்களின் வரையறை நீங்கியவனாய் நிறைந்த விருளில் திருட்டுவழியாகத்திரிவான். அவன் ஒருநாள் அளவற்ற நீண்ட இலைகளையுடைய வாழை மரங்கள் புடைசூழ்ந்த புட்கரதேசத்திற்குச் சென்றான். அங்கே நீண்ட கனிகள் நிறைந்த வாழைக் குலைகளைத் திருடிச்சென்று பரத்தையர்க்குக் கொடுத்துவந்தான். எ - று. ()

இருளி னெற்றுவைத் திருந்தன ரிவன்செல நோக்கித்
திருகு வெஞ்சினத் தெழுந்தனர் சென்றறப் பிடித்தார்
பொருபு யங்களிற் றுறப்பிணித் துடன்கொடு போனார்
வெருவ ருத்தினர் வெண்குடை வேந்தன்முன் விடுத்தார்.

(இ - ள்.) அவன் திருடுகின்ற இருளிலே உளவாட்கள் வைத்திருந்தவர்களாய், இவன் செல்வதைப்பார்த்து முறுகிய கடுங்கோபத்தோடு ஓடிச்சென்று அவனைச்சேர்த்துப்பிடித்துக்கொண்டார்கள். போர்செய்தற்குரிய அவன்றோள்களறும்படி கட்டி இழுத்துப்போனார்கள். அச்சப்படுத்தினார்கள். வெண்கொற்றக்குடையையுடைய மன்னவன் முன்னிறுத்தினார்கள். எ - று. (உகஅ)

அன்ன வன்பணி விரற்றுணித் தகற்றின ரவனைப்
பின்னு மக்கள வொழிந்திலன் பெருங்குடை வேந்தன
கன்னி மாமதி லெறியக் கோயிலுட் கதலிப்
பொன்னி றக்குலை தடிந்தன னெடுத்தயல் போவான்.

(இ - ள்.) அம்மன்னவன் கட்டளைப்படி விரல்களையறுத்துத் துரத்திவிட்டார்கள். அதன் பின்னும், அவன் அக்களவாடுதலை நீங்காதவனாய், பெரிய வெண்கொற்றக்குடையையுடைய அம்மன்னவனுடைய காவல் பொருந்திய சிறந்த மதிலின்மேலேறி அவ்வாலயத்தினுள்ளிருந்த வாழைமரத்தின் பொன்னிறத்தையுடைய குலையை வெட்டி யெடுத்துக்கொண்டு புறத்தே போகின்றான்.

மன்னு கார்ப்புறக் காவல ரவனைவல் விருளிற்
பேரனை போக்கடி தருவினர் போதலுங் கண்டே
யேனை மாக்குலை யிவர்க்கென வாடகேச் சுரர்மு
னுண சந்நிதி யெறிந்தசே றலும்பிடித் தசைத்தார்.

(இ - ள்.) அப்பெரிய நகரத்தின் புறக்காவலர்கள், பேரிருளில் அத் திருடனைப்பிடிக்க அவன் போன காலடியைத் தேடிக்கொண்டு சென்றபோது, அக்காவலரை அவன் கண்டு, அப்பெருங்குலையை இவர்க்கே யர்ப்பணமென்று, தனக்கெதிரேயுள்ள ஆடகேசுவரர் சந்நிதியில் வீசிவிட்டவும், அவர்கள் பிடித்துக்கொண்டு கட்டினார்கள். எ - று. (உ௭௦)

கட்டு றப்பிணித் தொருதனிக் கவிகையோன் றிருமுன்
விட்டு றக்கழல் வேந்தன்வெஞ் சினத்தொடு விளம்ப
முட்ட றுத்தனர் கரத்தொடு காலதன் முடிவிற்
பட்டொ ழிந்தனன் றென்றிசைப் புலத்துளோர் படர்ந்தார்.

(இ - ள்.) கட்டொழுங்கு விலக்கி ஒப்பற்ற ஏகசக்கிராதிபதியாகிய அம் மன்னவன் முன்னே விட்டவுடன், வீரகண்டாமணிதரித்த அம்மன்னவன் கடுங்கோபத்தோடு கட்டளையிடவும், அப்படியே அக்கள்வனுடைய கைகளோடு கால்களையும் அறுத்துவிட்டார்கள். அவ்வெட்டுக் காயத்தோடு துன்பப்பட்டுக் கொண்டிருந்து இறந்தான். இயமபுரத்திலுள்ள தூதுவர்கள் வந்தார்கள்.

மணிக்க யிற்றினாற் றளைத்தனர் தோளினில் வாங்கிப்
பிணித்தி றுக்கின ரிடித்தனர் பெரும்பிட ரிடியக்
குணிறப டுத்தெடுத் தடித்தனர் தென்புலக் கோவேந்
தணிப்ப டக்கொடு விடுத்தனர் நோக்கின னவனும்.

(இ - ள்.) தோள்களைப்பாசக்கயிற்றினால் வளைத்துக்கட்டினார்கள். இறுகப் பற்றிக்கொண்டார்கள். பெரிய பிடருடையும்படி குத்தினார்கள். குயுந்தடி களைச்சேர்த்தெடுத்துக்கொண்டு அடித்தார்கள். தென்றிசைக்கிறைவனாகிய இயமதருமனிடத்திற்கொண்டுபோய் விட்டார்கள். அவ்வியமனும் இவனைப் பார்த்தான். எ - று. (உ௭௨)

நோக்கு மந்தகன் சித்திர குத்தனை நோக்கி
யாக்கு புண்ணிய மிவற்குள தோவென வருள
வாக்கி னலவ னுரைத்தனன் மனத்தொடு மறலி
வீக்கி விட்டதன் றூதரை நோக்குபு விளம்பும்.

(இ - ள்.) அவனைக்கண்ட இயமன் சித்திரகுத்தனைப்பார்த்து நற்பயனை புண்டுசெய்யும் சிவபுண்ணியம் இவனுக்கு உள்ளதோவெனக்கேட்க, அச்சித்திர குத்தன் வாயினாற் கூறியவற்றை இயமன் மனத்திற்கொண்டு, அவனைக்கட்டிக் கொண்டு வந்து விறுத்திய தன்னுடைய தூதர்களை நோக்கிச்சொல்லுகின்றான்.

காவி னுற்பழுங் கொடுசெலக் காவலர் கதிக்
கிரச னுக்கண்டு வெள்ளிடை யவற்கெனப் பேரட்டச்
ரானு வப்புறத் திருமுடி பொதிந்தன ரதனை
[illegible]

(இ - ள்.) திருடப்பட்ட தனத்தால் [illegible] செய்தான் அதிகண்ட காவலாளிகள் விரைவாய் ஓடிவந்து நெருங்கக்கண்டு, இந்த வெள்ளிய இடபத்தையுடைய சிவபெருமானுக்கு ஆம்பணமென்று [illegible] அதை அர்ச்சகர்களெடுத்துச் சிவபெருமான் கவிப்பெய்தும்படி அப்பெருமான் திருமுடியில் அபிஷேகித்தார்கள். ஆகையால் இவன் [illegible]வானை விட்டு விடுகவென்று கட்டளையிட்டான். எ - று (௨௭௪)

இறுக்கு பாசம்விட் டவிழ்த்தன ரென்னையா ளுடைய
முறுக்கு புன்சடை முக்கணான் கணத்தவர் மொய்த்தார்
குறுத்து மாமணி மானமுய்த் தனர்தன ருடன்போய்ச்
செறுத்த பேரொளிக் கயிலைபுக் கிருந்தது சென்றான்.

(இ - ள்.) உடம்பின கட்டியிருந்த கயிற்றைப்பிரித்து அவிழ்த்துவிட்டார்கள். என்னை யாளாகவுடைய முறுக்கிய சடையையுடைய திரிநேத்திரனை யுடைய சிவபெருமானுக்குரிய சிவகணங்கள் நெருங்கி, சிறந்த நவமணிகள் பதித்த விமானத்தி லேற்றிக்கொண்டு செல்ல, அவர்களோடு போய் ஒளிகளை யெல்லாம் அழிக்கத்தக்க பேரொளியுடைய திருக்கைலையையடைந்து அப்பதவியில் பொருந்தினான். எ - று. (௨௭௫)

ஆதி காலமுற் றருந்தவர் யாவரு மடைந்து
போத விழ்ந்தலர் கந்தமா தனமெனும் பொருப்பி
னோதின் மாதவ மிழைத்தன ரிருந்தனு மெழுந்து
தீதின் மாதவக் கண்ணுவ முனியவண் சென்றான்.

(இ - ள்) முற்காலத்தில் முடிந்த அருந்தவம்புரிந்த பலரும் ஒன்று சேர்ந்து, மலர்கள் இதழ்விரிந்து மலர்கின்ற கந்தமாதனமென்னும் பர்வதத்தில், பெருந்தவஞ் செய்தவர்களாயிருந்தபோது, கெடுதி நீங்கிய பெருந்தவமுடைய கண்ணுவமுனிவர் புறப்பட்டு அவ்விடத்திற்கு எழுந்தருளினர். எ - று. (௨௭௬)

சென்னு மாதவற் கருந்தவ ரெதிர்புகச் சென்று
தொல்லை நான்மொழி வான்முறை யாவையுந் தொகுத்தா
சொல்லை யிற்கொணர்ந் தாசன மிருத்தின ருவந்தா
மொல்லை யெந்தலந் திருந்தீர் வருதியென் றிசைத்தார்.

(இ - ள்.) அப்படி யெழுந்தருளிய பெருந்தவசியாகிய கண்ணுவமுனிவருக்கு அத்தவசிகளெல்லாரும் எதிர்கொண்டு சென்று, பண்டைய சாத்திரப்படி விதிமுறையே செய்யவேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்தவர்களாய், அதிசீக்கிரத்தில் அழைத்துவந்து ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து மனங்களித்து, தேவரீர் எங்கிருந்தெழுந்தருளினீரென்று கேட்டார்கள். [illegible]

மருவு தாமரை நான்முக னுலகத்து வைகி
வருது மென்றன னருந்தவ மாமுனித் தலைவ
னிருவி லத்துமற் றதிசய முண்டுகொ லென்றா
ரருளை யொருருப் பெற்றனன் கண்ணுவன் விளம்பு.

(இ - ள்.) தாமரை மலரிலெழுந்தருளிய சதுர்முகப்பிரமனுடைய சத்தியலோகத்தில் வாழ்ந்திருந்து வருகின்றேனென்றவுடனே, அருமையாகச் [illegible] [illegible] [illegible] உளவோ. எ - று.

சிறந்த மாளவ தேயமென் றப்பெருந் திருநாட்
டறந்தி ருந்துகல் யாணியென் றொருநக ரதன்பால்
மறந்த ருந்தொழில் வயிணவ னென்றுமவ் விருளிற்
சுழன்றெ னச்சுழல் கார்க்கவ னென்றுமோ ரிருவர்.

(இ - ள்.) சிறந்த மாளவமென்றொரு தேசமுண்டு. அவ்வளர்ந்தோங்கிய பெரிய நாட்டிலே, தருமநெறிதழைத்தோங்கும் ஒப்பற்ற கலியாணி யென்றொரு நகரமுள்ளது. அந்நகரத்திலே பாவச்செயல்களையுடைய வைணவனென்றும், நடுராத்திரியில் காற்றாடிபோலச் சுழன்றுகொண்டிருக்குங் கார்க்கவனென்றுஞ் சொல்லத்தக்க இருவருண்டு. எ - று. (உஎகூ)

மரபி னோங்கிய வணிகர்கோத் திரத்தவ ருதித்தார்
விரவு கூலமுற் றிருந்துதந் தொழில்வினை விளைப்பார்
பரவு செம்பொனிற் படுத்திய சிந்தையா நிதியோர்
வரவு நோக்கியன் னவர்க்கொடு தம்மனை வருவார்.

(இ - ள்.) அவ்விருவரும் மரபின் மேம்பட்ட வைசிய மரபிற் பிறந்தவர்கள். கலந்துள்ள கடைத்தெருவிற் சென்றிருந்து, தங்கள் மரபிற்குரிய வர்த்தகத்திலே பாவத்தை விளைப்பவர்கள், மிக்க திரவியத்திற்செலுத்திய மனமுடையவர்கள். செல்வவான்களின் வருதலைக்கண்டிருந்து, அவர்களை யழைத்துச் சென்று தங்கள் வீட்டிற்கு வருவார்கள். எ - று. (உஅ௦)

விருந்தெ னக்களித் தன்னவர்க் களவளாய் விளம்பிப்
பொருந்து போசன முதலிய வளமெலாம் புரிந்து
கருங்கொ ழுந்தெழப் படர்தரு கங்குலங் காலை
யருந்து யிற்சியி னங்கவ ருயிர்செகுத் தழிப்பார்.

(இ - ள்.) அச்செல்வர்களுக்கு விருந்து செய்வதாக மனக்களிப்போடு கூடிச்சொல்லி, பொருத்தமாகிய போசன விசேடங்களெல்லாவற்றையுஞ் செய்து, இருட்கொழுந்தானது எங்கும் பரவியோங்கும் இராக்காலத்தில் அவ்வர்த்தகச்செல்வவான்களுடைய பெருந்தூக்கத்தில் உயிரை யொழித்துக் கொல்லுவார்கள். எ - று. (உஅக)

கொன்று தம்மனைக் குழிபடப் புதைத்தவர் கொணர்ந்த
ஆன்று மாநிதி கவர்ந்தபின் றுயிலெழுந் தவர்போற்
சென்று வாணிப செய்தொழில விளைத்தவ ணிருப்பா
ரின்று காறுமற் றவர்செயற் குண்டுகொ லெல்லை.

(இ - ள்.) இப்படிக்கொன்று, தங்கள் வீட்டிலுள்ள குழியில் அழுந்தும்படி புதைத்துவிட்டு அவர்கள் கொண்டுவந்துள்ள பெரும் பொருளை யபகரித்து, அதன் பின்னர் அதிகாலையில் தூங்கி யெழுந்தவர்கள்போன்று, கடைக்குச் சென்று தாங்கள் செய்யும் வர்த்தகத்தொழிலைச்செய்துகொண்டு, அக்கடை வீதியிலிருப்பார்கள். இன்று வரையில் அவர்கள் செய்த தீச்செயலுக்கோர் எல்லையுண்டோ? எ - று. (உஅஉ)

இனைய தீப்பவி யெற்றுமக் காலெடுஞ் சேணின்
றனைய கோத்திரத் தவர்நிதிக் குவையொடு மடைந்தார்
புனைய மாநக ராயர்தங் குலக்குடி புகுந்தம்
மனையின் மாநிதி யிறக்கினர் புகுந்தனர் வணிகர்.

(இ - ள்.) இவர்கள் இப்படிச்செய்துவரும் அக்காட்களில், அதிதூரத்தி லிருந்து தங்கண் மச்சினரே பெருந்திரவியத்தோடு வந்தார்கள். அவர்கள் அலங்காரமுடைய அந்தப்பெருநகரிலுள்ள இடைகருலத்தார் வீட்டிற்சென்று அவ்வீட்டில் தாங்கள் கொணர்ந்த மிகக திரவிய மூட்டையை இறக்கினார்கள். அப்பொழுது இவ்விருவணிகரும் அவ்வீட்டிற்குப்போனார்கள். எ - று. ( )

உடன்புகுந்தன ராங்கவர்க் கினியன வுதவிப்
படர்ந்த பாயலி னுடனிருந் தெரிகதிர் படப்போய்
மிடைந்த கங்குலிற் புகுந்தவர் விழி மகிழ்ந் துறங்கிக்
கிடந்த பாயலிற் சொமலெயிங் தவருடன் கிடந்தார்.

(இ - ள்) அவர்களோடு உட்புகுந்து, அவர்கட்கு இனிய பொருள்களைக் கொடுத்து, விசாலமான அவர்கள் படுக்கையிற்றானே ஒன்றாயச்சயனித்திருந்து ஒளி வீசுஞ் சூரியன் மறைந்து இருள்மிகுந்த நடுராத்திரியிலெழுந்து அவர்கள் கண்களை மூடிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த படுக்கையில், சொக்குத்தூளைத் தூவிவிட்டு, அவர்களோடு மீண்டும் படுத்துக்கொண்டார்கள். எ - று. (௨௮௪)

அணிப சும்பொனிற் கிடந்தன யாவையு மகற்றிக
கணித ரற்கரும் பொருளெலா முட்புகக் கவர்ந்து
பிணிப டுத்துறி நெய்யெடுத் தகன்றனர் பெயர்ந்தார்
மணிக ளத்தரு லயம்படு வனமபுக மறைந்தார்.

(இ - ள்.) அழகிய பசிய பொன்னிற் சேர்ந்தவற்றையெல்லாம் அப்புறப் படுத்தி, கணக்கிடற்கு முடியாத திரவியங்களையெல்லாம் தங்கள்வீட்டிற் சேரும் படி யபகரித்துப் பொதியாகக்கட்டிக்கொண்டு, அவ்விடையன் வீட்டிலிருந்த உறியில் வைத்த நெய்யையும் அபகரித்துக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு, நீலகண்டத்தையுடைய சிவபெருமான் திருக்கோயிலையுடைய ஒரு காட்டிற்குப் போக மறைந்தார்கள். எ - று. (௨௮௫)

அன்ன கானகத் தயலெரி நெய்யினா லனைத்துச்
சன்னி திப்படக் கொளுத்தினர் தாங்கவர்ந் திட்ட
பொன்ன னைத்தையும் பகுத்தனர் மீண்டனா போத
மன்ன னாணையிற் காவலர் வழித்தலை மறித்தார்.

(இ - ள்.) அந்தக்காட்டின் அருகிலிருந்த நெருப்பைத் தாங்கள் கொணர்ந்த நெய்யினாலே எரித்து, அங்கிருந்த திருக்கோயிலில் விளக்கேற்றி, தாங்கள் களவாடிய பொருள்களையெல்லாம் பங்கிட்டுக்கொண்டு திரும்பிச்செல்லுகை கையில், அரசன் கட்டளையாற் காவற்றொழின்மேற் கொண்டவர்கள் அவர்களை நடுவழியிலே கண்டு தடுத்தார்கள். எ - று. (௨௮௬)

விழுந்து மேற்றிசைக் கடற்படு தெறுகதிர் வெய்யோ
னெழுந்த காலையி னடவியின் றிவர்வர நோக்கித்
தொழுந்து விட்டெரி கோபவெந் தீயினர் குறுகி
யழுந்து றப்பிணித் தனைத்தன ரரசவை கொணர்ந்தார்.

(இ - ள்.) மேற்றிசைக் கடலில் விழுந்து அமிழ்ந்த கொடிய கிரணங்களை யுடைய சூரியன் மீண்டும் உதயமாகிய காலைப்பொழுதில், அக்காட்டினின்று இவ்விருவருஞ் வர அதைப்பார்த்து, ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் கோபமென்னுங் கடுந்தீபொருந்திய அக்காவலாளர் இவர்களை நெருங்கி ஒருசேரக்கட்டி யிழுத் துச்சென்று இராச சபையிற் கொண்டுவந்தார்கள். எ - று. (௨௮௭)

ஆயரிற்புகுந் தரும்பொருள் கவர்ந்தன ரடவி
மேயவொளித்தனர் கவர்ந்திடும் பொருளொடும் புகுத
வேய செய்ம்மனறிந் தடம்புகுந் திடைமறிந் திருந்தே
மாய மாப்பொடிக் கள்வர்மற் றிவரென வலித்தார்.

(இ - ள்.) இவ்விருவரும் இடையர் வீட்டினுழைந்து பெருந் திரவியங்களை யபகரித்துவந்து காட்டில் மறைந்துகொண்டிருந்து திருடிய செல்வத்தோடு வரும்போது நீவாகள் எடுத்துக்கொண்டுவந்த வழியிற்போய், நடுவே தடைப்படுத்தி வைத்திருந்தோம். இவர்கள் சொக்குப்பொடித்திருடர்கள் என்றிழுத்து விடுத்தார்கள். எ - று. (உஅஅ)

மண்ட மாப்படு புலியெனத் தெறுசின மன்னன்
கொண்டு போதிரென் றுரைத்தலுங் காவலர் கொடுபோய்க்
கண்ட கப்பழிப் படுநரை யங்கணந் தலைலை
துண்ட மாக்கினர் சென்னியைக் குருதிநீர் சொரிய.

(இ - ள்) பெருங் கோபஞ்செய்யும் ஆண் புலிபோன்று கொல்லத்தக்க கோபமெய்திய அரசனானவன், இவர்களை யழைத்துக்கொண்டுசென்று வெட்டிப்போடுங்களென்று உத்தரவு செய்தவுடன், காவலாகள் அழைத்துச்சென்று பழியஞ்சாத பாதகர்களாகிய இவர்களை அக்கணமே உதிரவெள்ள மொழுகும்படி தலையை வெட்டினார்கள். எ - று. (உஅகூ)

தென்றிசைப் படமெய்த் தூதுமுன் சிவகணத் தலைவர்
பொன்றயங்கிய மானமுய்த் துடன்கொடு புகுதக்
கொன்றை வார்சடை யெம்பிரான் கயிலையிற் குறுகித்
தன்றனிப்பெரும் பதவியிற் றிருந்தனர் சரிப்பார்.

(இ - ள்.) தென்றிசையிலுள்ள இயம தூதர்கள் அங்கு வருவதன் முன்னமே சிவகணத்தலைவர்கள், பொற்சாந்துபூசிய விமானத்திலேற்றிக்கொண்டு தங்களோடழைத்துப்போக, கொன்றை மாலைசூடிய நெடிய சடைமுடியுடைய எமது சிவபெருமான் திருக்கைலாயத்தையடைந்து அவ்விறைவனுடைய ஒப்பற்ற பெரிய பதவியில் வீற்றிருக்கின்றார்கள். எ - று. (உகூ0)

எனவுரைத் தனன் கண்ணுவ னிருந்தவத் தலைவர்
மனமெ கிழ்ந்தனர் களவினு லெடுத்தநெய் வார்த்துப்
புனைவி ளக்கமொன் றமைத்தலாற் கயிலையிற் புகுந்தா
ரனைமு கத்தவற் கரியவன் பெருமையா ரளப்பார்.

(இ - ள்.) என்று கண்ணுவமுனிவர் கூறினர். பெரிய தவசிரேஷ்டர்களாகிய முனிவர்கள் மனமுருகினர். திருட்டிற்றேடிய நெய்யைச்சொரிந்து அலங்கரிக்கின்ற ஒரு தீபத்தைச் சிவாலயத்தில் வைத்தபடியால் அவர்கள் கைலாயகிரியிற் சேர்ந்தார்கள். அன்னவாகனமுடைய பிரமனுக்கும் எட்டாத சிவபெருமானுடைய மகிமை விசேடங்களை யார் அளவிட்டுரைப்பவர்? எ - று.

என்று மாதவ ருவந்தன ரீற்றிடை யெடுத்துப்
பின்று ருஞ்சடை வாமதே வப்பெருந் தபோத
னன்று றப்பெறு மாதவத் தலைவிர்கா ணயப்பா
னொன்று கேட்குதி ரென்றவர்க் குளப்படுத் துரைப்பான்.

(இ - ள்.) என்று கூறிப் பெருந்தவசிகள் சந்தோஷித்தார்கள். இறுகிய பின்னிய சடையையுடைய வாமதேவரென்னும் பெரிய பெயரையுடையவர், நன்றாகத்தேடிய சிறந்த தவத்தலைவர்களே! விருப்போடு ஒன்று கேட்பீர்களாக என்று அவர்கள் மனதிற் பதியும்படி எடுத்துச்சொல்லுவாராயினர். எ - று.

கொழித்த முத்தமிழ்க் குண்டல தேயமந் நாட்டி
னழிச்சி றப்புடைக் கபித்தமொன் றுளநக ரதன்பாற்
செழித்தெ ழுங்குல வளமையன் கடைகன் றீயோ
னொழிப்ப தாரற மல்லதொன் றொழித்துற விரும்பான்.

(இ - ள்.) தெளிந்த முத்தமிழ்களையுடைய குண்டலதேசமொன்றுண்டு. அந்நாட்டிலே சிறப்புடைய கபித்தமென்றொரு நகரமுண்டு. அந்நகரத்தில், செழித்தோங்கிய குலவளமையுடையவனொருவன் கடையோனும், கெடுப்பதாகத் தருமமல்லது பிறிதொன்றையொழிக்க விரும்பாதவனுமாயிருந்தான்.

பொதியுங் கங்குலின் வளநகர்ப் பொருள்கவர்ந் தெடுக்குஞ்
சதியி னுறலைத் தொழுகு மம் பவத்தொடு சரிக்கு
மதிகொண் மாளிகை மற்றொரு மாநகர் புகுந்து
நிதிக வர்ந்தனன் போதலு மாயிரு ணீங்க.

(இ - ள்.) இருண்மூடிய இராத்திரியில் அந்நகரவாசிகளுடைய திரவியங்களைத்திருடி யபகரிப்பான். வஞ்சனையால் வழிநீக்குப்பறிக்கும் பாவத்தொழிலோடுழல்வான். இவன் மற்றொரு பெருநகரத்திற்குச் சென்று சந்திரன் தவழும்படி உயர்ந்த மாளிகையிலுள்ள திரவியங்களைத் திருடிக்கொண்டு செல்லும்போது இருளகன்று பொழுது புலரவும். எ - று. (௨௰௮)

மத்தி கேசசுரர் சந்நிதித் திருக்குளம் வறந்து
பொத்து சேற்றிடைக் குழிதந் நிதிப் புதைத்தயல் போனான்
மொய்த்த காரிருட் கங்குலி னெய்து முயன்றான்
வைத்த வெல்லையை மறந்தன மயங்கினன் மயங்கா.

(இ - ள்.) அந்நகரிலிருக்கும் மத்திகேசுவராலயத் திருக்குளம் நீர்வறண்டு மறைந்துள்ள சேற்றிலே பள்ளந்தோண்டி தான் திருடிய திரவியங்களை அதில் புதைத்துவிட்டுப் புறம்பே போய்விட்டான். கரிய இருள்செறிந்த அன்றிரவு மீண்டும் அத்திரவியத்தை யெடுக்க முயற்சிசெய்தான். புதைத்துவைத்த இடத்தை மறந்துவிட்டு மயங்கிவிட்டான். அப்படி மயங்கி. எ - று. (௨௰௯)

திருக்கு ளம்படு சேதக மனைத்தையுஞ் சிவன்பா
லுருக்குஞ் சிந்தையி னெடுப்பவர் போலெடுத் தொழித்தான்
பெருத்த மாநிதி கண்டெடுத் தன்னகர் பெயர்ந்தா
னருந்தி மாநலத் தளவொழி செலவமுற் றனனால்.

(இ - ள்.) அத்திருக்குளத்திலிருந்த சேற்றினையெல்லாம், சிவபெருமானிடத்தில் உருக்கமுள்ள மனமுடையவர்கள் எடுப்பதுபோல எடுத்துவிட்டான்; அப்போது தான் புதைத்துவைத்த பெரும் பொருளைக்கண்டெடுத்து அந்நகரத்தைவிட்டுத் தன்னகரத்திற்குச்சேர்ந்து அதிகப்புயர்ந்த சிறந்த நலங்களோடு அளவில்லாத செல்வமுற்றிருந்தான். எ - று. (௩௰)

ஈற்றி லந்தகன் றூதர்வந் தெய்தி னரவரை
மாற்றி யெம்மையாண் மணிக்களத் தவன்கணத் தலைவர்
போற்றி மானமுய்த் துடன்கொடு கயிலையிற் புகலும்
வேற்று வானவ ரிவன்செயல் யாதென வினவ.

(இ - ள்.) அவனுடைய காலவிறுதியில் இயம தூதர்கள் வந்து சேர்ந்தார்கள். எம்மையாண்ட நீலகண்டத்தையுடைய சிவபெருமானது கணத்தலைவர்கள் உடனே இத்தூதர்களை யகற்றி, அவனைத் துதிசெய்து தெய்வவிமானத்திலேற்றித் தம்மோடழைத்துக்கொண்டு திருக்கைலாயமெய்திய வளவில், வேறாகிய தேவர்கள் இவன் புரிந்த சிவபுண்ணியம் எத்தகைத்தென்று வினவ.

பணித்த வார்சடைப் பண்ணவன் றிருக்குளத் தொள்ளி
கனிந்த சிந்தையிற் கழிதர வெடுத்தன னதனாற்
றனிப்பெ ருந்திருக் கயிலைபெற் றனனெனச் சாற்றக்
குனித்த பொற்சிலை யரனைவா னவர்கரங் குவித்தார்.

(இ - ள்.) குயிர்ந்து நீண்ட சடையையுடைய சிவபெருமான் திருக்கோயிற் குளத்திலுள்ள சேற்றை, கனிவுள்ள மனத்தோடு குளத்திலிருந்து நீங்கும்படி வெளிப்படுத்தினதனால், ஒப்பற்ற பெருமைதங்கிய இத்திருக்கைலாய பதவியைப்பெற்றானென்று சொல்ல, அதுகேட்ட தேவர்கள், மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானைத்தியானஞ்செய்து தங்கள் கரங்களைச் சிரமிசைக்கூப்பினார்கள். எ - று. (௨௯௮)

என்ன வாங்கவ னிசைப்பதற் கிறுகண் டிருந்த
மன்று மாதவச் சதானந்த னோர்கதை வகுப்பா
னுன்ன ருமுயர் காபால மென்றொரு நாட்டி-
னன்னலம் பயில் வளந்தரு குருந்தமோர் நகரம்.

(இ - ள்.) என்றிவ்வகையாக அவ்வானவர் தேவமுனிவர் சொல்லி முடிப்பதைக் கண்டிருந்த சிறந்துள்ள மூர்த்தி பொருந்திய காபாலமென்று சொல்லப்படும் ஒருநாட்டிலே, நன்மைகள் விளைதற்குரிய வளப்பங்கள் பொருந்திய குருந்தமென்று சொல்லப்படும் ஒரு நகரமுண்டு. எ - று. (௨௯௯)

உரைத்த மாநகர்ச் சோபன னெனுமொரு மறையோன்
கரைப்ப ரியமை யுணல்குர வுடன்படக் கவல்வா
னிரைத்த மாநகர் மனைதொறு மிரக்குமொரு நாட்
புரைத்த மாளிகை யப்புறத் தொருநகர் புகுவான்

(இ - ள்.) சொல்லிய அந்தச்சிறந்த நகரத்தில் சோபனனென்னும் பெயர்கொண்ட வேதியனொருவனிருந்தான். அவன் வறுமைநோய் தன்னையடைய அதனால் மனமுருகி வருந்தியவனாகி, ஓசை மிக்கிருக்கும் அந்தப்பெரிய நகரத்தில் வீடுகளிலெல்லாம் இரந்துண்டு திரியும் ஒருநாளில் அந்நகரத்தைப் போன்ற வேறொரு நகரத்தின் ஒரு மாளிகையைச்சேரும்படி. எ - று. (௩௦௦)

எய்து மாநகர்க் கிடைபடு நெடுநெறி யெதிர்ந்தான்
சைவ தேசிகன் றனிப்பெருந் தவத்திலோர் தலைவன்
றுய்ய நான்மறைச் சோளபுட் பத்துறை குரவோர்
தெய்வ கோத்திரத் துள்ளவன் சேவடி தெரிந்தான்.

(இ - ள்.) அவனடைந்த பெரிய நகரத்தினிடையிலுள்ள நெடிய வழியில் சிவாசாரியராகவும், ஒப்பற்ற பெருந்தவத்தலைவராகவும், புனிதமாகிய நான்கு வேதங்களை யோதும் சோளபுட்பமெனும் நகரத்தில் வாழ்கின்ற சிவாசாரியர்களின் சிவகோத்திரத்தவதரித்தவராகவும் ஒருவர் எதிர்ப்பட்டனர். அவர் பாதங்களைச் சோபனன் தரிசித்தான். எ - று. (௯௦௧)

இவனை யாங்கவ னெதிர்ந்திடு மெல்லையி னிடையே
கவர்கொ ழுந்துளி நெடுமழை கவிழ்த்தலுங் காணுத்
தவமு டைத்தனித் தேசிகன் றன்னொடு மறையோ
னவனு மாங்கணோர் மன்றமுற் றேறின னடைந்தான்.

(இ - ள்.) இச்சோபனனை அச்சிவாசாரியர் எதிர்கண்டவிடையிலே விசேடித்த நீர்த்துளிகளால் மூடிய பெருமழை சொரியவும், அம்மழையைப் பார்த்துத் தவம்பொருந்திய ஒப்பற்ற அச்சைவாசாரியருடன் சோபனனெனும் அந்தணனும் ஒரு வீட்டின் வாசலிலேறிப்போயினன். எ - று. (௯௦௨)

அடைந்த காலையி லந்தணன் குரவனை யைய
மிடைந்த நல்குர வுழந்தன னிரங்குதல் வேண்டு
மிடைநது ருவகை யிம்மையு மறுமையு மெய்த்த
தடைந்த வன்பொடு மொருவழி சாற்றுதி யென்று.

(இ - ள்.) சேர்ந்தபோது சோபனனெனும் அந்தணன் சிவாசாரியரை நோக்கி, ஐயனே! நெருங்கிய தரித்திரத்தினால் வருந்தியுள்ளேன். கருணை புரிய வேண்டும். இடையில் அகலாதவண்ணம் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் பெறும்படி மிகுந்த அன்புடன் அடியேனுக்கு ஒரு வழி சொல்லவேண்டுமென்று. எ - று. (௯௦௩)

இரந்து வீழ்ந்தடி யிறைஞ்சினன் றேசிக னிரங்கி
யரங்கு நல்குர வொழிநதவ னிருங்கதி யடைவான்
புரங்க டந்தவ னாற்பெறு நல்வழி புகன்றான்
பரம்ப குந்தறி தேசிகன் பகர்நதது பகர்வாம்.

(இ - ள்.) யாசித்து, நிலமிசைப்பணிந்து அவர் பாதங்களை வணங்கினான். சிவாசாரியர் மனங்கசிந்து, வருத்துகின்ற தரித்திரமகன்று அவன் பெரிய பதவியை யெய்தும்படி திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமானால் கொள்ளத் தக்க ஒரு நல்ல வழியைப்போதித்தனர். பரத்தின்றன்மையை விரித்துணர்ந்த சிவாசாரியர் கூறியதைச்சொல்லுவோம். எ - று. (௯௦௪)

யாம ருச்சனை புரிந்திடு மீசனுக் கென்று
நாம நந்தன வனப்பணி நாடொறு மியற்றித்
தேம ரும்புதுப் பணிமல ரளித்தியேற் றீமை
போமகன்றர னருளினு லிருங்கதி புகுவாய்.

(இ - ள்.) நாம் பூசிக்கும் சிவபெருமானுக்கென்று பெயர்பெற்ற திருநந்தனவனத் திருப்பணியை நாடோறுஞ்செய்து, தேன்துளிக்கும் குளிர்ச்சி தங்கிய அன்றலர்ந்த மலர்களைக்கொடுத்து வருவாயானால், உனக்குற்ற துன்பங்களும் அகலப்பெற்று சிவானுக்கிரகத்தால் பெரிய சிவகதியிற் சேர்வாய். எ - று. (௯௦௫)

ஈதுண் மையென றுரைத்தனன் றேசிக னிவனுஞ்
சீத வார்புனல் குடைந்தபின் காலையிற் சென்று
நாத னுக்குரித் தாகிய நாண்மலர் தொகுப்பான்
விதி நந்தன வனப்பணி விடைக்குரித் தானான்.

(இ - ள்.) இதுவே சத்தியமென்று ஆசாரியர் கூறினர். இச்சோபன னும் அதிகாலையில் குளிர்ச்சிவாய்ந்த நெடிய நீரில் மூழ்கிய பிறகு சென்று, சிவபெருமானுக்குரித்தாகிய அன்றலர்ந்த மலர்களைத் தொகுக்கும்படி ஒழுங்கா யுள்ள திருநந்தனவனப் பணிவிடைக்கு உரித்தானவனாயினான். எ - று. (௩௦௬)

நார நாண்மலர் மல்லிகை சண்பக நறும்பூ
வேரி நாறுசெவ் வந்திமட் டவிழ்கர வீரம்
பாரி சாதமென் கொழுந்தொடு வலம்புரி பலவு
மூரி வாய்நெகிழ்ந் தலர்தருங் காலமுற் றியதால்.

(இ - ள்.) புதிய நாரத்லத மலர்கள், மல்லிகை மலர்கள், மணங்கமழுஞ் சண்பகமலர்கள், தேன்மணஞ்சொரியுஞ் செவ்வந்தி மலர்கள், வாசனை வீசும் அலரி மலர்கள், பாரிசாத மலர்கள், மெல்லிய மருக்கொழுந்தோடு நந்தியா வர்த்த மலர்களாகிய பல மலர்களும் வலியுள்ள இதழ்கள் விரிந்து மலரும் பருவம் நேர்ந்தது. எ - று. (௩௦௭)

எண்ணி யோர்ந்தன னினியெடுத் தளிக்குது மென்னாப்
புண்ணி யப்புனல் குடைந்துநீ றணிந்தனன் புகுந்தான்
கண்ணி வாய்விடுங் காலையி னெடுத்தனன் கருதிப்
பண்ண வர்க்கெனப் பழுதறத் துதவினன் பன்னாள்.

(இ - ள்.) யோசித்துணர்ந்தவனாய் இது முதல் மலர்களை யெடுத்துக் கொடுப்போமென்று, புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருநீறணிந்து நந்தனவனத்துட் புகுந்தனன். அரும்புகள் விகசிக்கும் சமயத்திலெடுத்து, சிவபெருமானுக்கு அர்ப்பிதமென்று கருதிக் குற்றமொழிந்து வெகுகாலங் கொடுத்து வந்தான். எ - று. (௩௦௮)

ஈச னுக்கிவ னின்னண மலரெடுத் துதவ
வாச வன்புகுந் திறைஞ்சியம் மறையவற் போற்றி
யேசி லாரமு தளித்தன னிருநிதி யீட்ட
மாசை யெவ்வள வவ்வள வவற்கென வளித்தான்.

(இ - ள்.) இவன் இப்படிச் சிவபெருமானுக்கு நந்தனவனத்திலுள்ள மலர் களை யெடுத்துக்கொடுத்துவர, இந்திரன் அவ்வேதியனிடமெய்தி வணங்கித் துதித்து, குற்றமில்லாத தேவாமிர்தத்தையளித்து, பெருந்திரவியக்குவியலையும் அவ்வேதியனுக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவும் அவனுக்குக்கொடுத்தான்.

அளித்த மாநிதிப் பெருக்கொடு மலைகட னிலத்துக்
களித்த சிந்தையி னாள்பல கழித்தனை யாகி
யொளிப்ப சும்பொனாட் டேகுதி யெனவுரைத் தகன்றான்
றளித்த நாண்மலர்க் கற்பக நாடுடைத் தொல்லோன்

(இ - ள்.) இப்படி யளித்து-தேன்சிக்கும் அன்றலர்ந்த [illegible]யுடைய கற்பககாட்டிற்குத் தலைவனாகிய இந்திரனளித்த சிறந்த [illegible]யுடன்

அநேகரையுடைய கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் சிறப்பெய்திய மனத்தினனாய்ப் பல நாட்கள் வாழ்ந்து, ஒளி வீசும் பொன்மயமான தேவலோகமடையக் கடவையென்று கூறிச்சென்றனன். எ - று. (௬௦)

வருத்து நல்குர வொழிந்தன னொருதிரு மறைபோ
னருத்தி கூர்தரு மரனுடைப் பணியிடை யயரான்
குருத்த னித்துணைச் சேவடி தொழுதுளங் குழைவான்
மருத்த நாண்மல ரிடையறுப் பற்பகல் வழங்கும்.

(இ - ள்.) ஒப்பற்ற சிறந்த அவ்வந்தணன், அதுவரையில் தன்னைத் துன்பப்படுத்திய வறுமையினின்று விலகி, அன்பு மிகுந்த சிவபணியினிடைசளிற் சோர்வில்லாதவனாய்த் தனக்குபதேசித்த சிவாசாரியரின் ஒப்பற்ற உபய பாதங்களையும் வணங்கி, மனக்களிவோடு மணமுள்ள புதிய மலர்களை இடைவிடாது பலநாள் கொடுத்து வந்தனன். எ - று (௬௧)

என்னை யாளுடை யெம்பிரான் றிருவரு ளிரங்கி
யன்னை பங்குற மழவிடை மேலெழுந் தருளி
மன்னு நான்மறை யந்தணன் மனங்குழைந் துருக
முன்ன ரெய்தினு னங்கவன் முறைமுறை பணிந்தான்.

(இ - ள்.) என்னை யாளாகவுடைய எமது சிவபெருமான் திருவருள்மிகுந்து, உமாதேவியார் இடப்பாகத்திலிருக்கும்படி இளமைவாய்ந்த இடபவாகன மூர்ந்தருளி, நிலைபேறான நான்கு வேதங்களையுணர்ந்த வேதியன் மனம் நெக்கு விட்டுருகும்படி பிரசன்னமாயினர். அது கண்ட அந்தணன் முறை முறையாகப் பணிந்தனன். எ - று. (௬௨)

அழுத னன்சிரித் தாடினன் பாடின னகித்
தொழுத னன்களி துளங்கினன் மயிர்ப்புறந் துள்ள
வெழுத ருங்குனித் தோடுறு மீளுறு மிடையே
விழுத ருங்கரங் கொட்டுறு மின்னணம் வியந்தான்.

(இ - ள்.) சந்தோஷமிகையால் அழுதனன். நகைத்துக் கூத்தாடினன், துதி செய்துகொண்டு வணங்கினன். களிப்பெய்தியவனாய் மயிர்க்கூச்செறிய எழுந்திருப்பான். உடலை வளைத்துக்கொண்டோடுவான். மீண்டும் திரும்புவான் இடையே கீழே விழுவான், கைகளைத்தட்டுவான். இப்படி யதிசயித்தான்.

அளகை யாளியை யெம்பிரான் வரவழைத் தருளி
யுளநெ கிழ்ந்திரு நிதிக்குவை யுதவென வருளி.
வளநு கர்ந்துநாள் பற்பல கழிந்தபின் வாராப்
புளக மெய்தியக் கற்பக நாட்டகம் புரப்பாய்.

(இ - ள்.) எமது சிவபெருமான், அளகேசனாகிய குபேரனை வரவழைத்துக் கருணை கூர்ந்து திருவுளமிரங்கி, பெருந்திரவியக் குவியலைக்கொடுக்கவெனக் கட்டளையிட்டு, போகங்களை யனுபவித்து அநேக நாட்கள் கழிந்த பின்னர், மயிர்க்கூச்செறிய வந்து அத்தேவலோகத்தை யாள கடத்திவாய். எ - று. ()

மைத்த லத்துநின் கறுப்புற் றொருதனிக் கருதிப்
பத்தி யெய்தப் புரிந்தெவர் பணியினைப் பயில்வார்
சித்த நெக்குன மகிழ்ந்தனம் புரமெனச் செப்பா
வத்த னுயிரம் பெயரினு னெதிர்தொழ அகன்றான்

(இ - ள்.) உன்னிரு கைகளுந் தழும்பெய்தும்படி, ஒப்பற்ற ஒருவராகிய நம்மைத் தியானஞ்செய்து, இத்தகைப் பக்தியோடு பணிவிடை செய்தோர் யாவர்? அதனால் நாம் திருவுளங்கனிந்து மனமகிழ்ந்தோமென்று திருவாய் மலர்ந்தருளி, ஆயிரந் திருநாமங்களையுடைய சிவபெருமான், அவ்வந்தணன் பணிந்துகொண்டிருக்கையில் அந்தர்த்தானமாயினர். எ - று. (௫௧௫)

மறைவ லாளனுந் தேசிகற் றொழுதுற வணங்கி
யிறைவ நின்னரு ளியற்கையி னெம்பிரா னிரங்கி
வறிது நீத்தனன் பவித்திர மடைந்தனன் வானோர்
முறைவ ணங்குறப் பெற்றனன் யானென மொழிந்தான்.

(இ - ள்.) அந்தணனும் ஆதிசைவரைச்சிரமிசைக் கைகுவித்து, அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, தலைவரே! தேவரீருடைய திருவருட் பெருக்கத்தால் எமது சிவபெருமான் திருவுளங்கனிந்து என் வறுமையை யகற்றினர். அதனாற் புனிதமெய்தினேன். தேவர்கள் கிரமமாக என்னை வணங்கும்படி பெற்றுக்கொண்டேனென்று தெரிவித்தான். எ - று. (௫௧௬)

முற்ப ணிந்தரு டேசிகன் மொழிதிறம் பலனாய்ப்
பற்ப கற்படப் பணிமலர்ப் பணிவிடை பயிலாச்
சிற்ப ரந்தெளிந் துணர்ந்தனன் கடைமுறை சென்றான்
கற்ப கத்தரு நிழலர சிருந்துளங் களித்தான்.

(இ - ள்.) முதலில் தனக்குக் கட்டளைதந்த சிவாசாரியன் மொழிகளைத் தவறாதவனாய், அநேக நாள் கழிய, குளிர்ச்சி தங்கிய புலாப்பணிவிடைசெய்து, ஞானமயமான சிவபெருமான் நிலைமையைத் தெளிவாயுணர்ந்தவனாய்த் தேக முடிவிற்சென்று, கற்பகமர நிழலில் வீற்றிருந்தரசுசெய்யும் இந்திர பதவியெய்தி மனமகிழ்ந்தான். எ - று. (௫௧௭)

வான மங்கையர் சாமரை யிருபுறம் வருட
நான நாண்மல ரோதியர் நாடக நடிப்ப
வேனை வீணைய ரின்னிசை செவிதொறு மிறைப்பக்
கான வார்குழற் சுந்தரி கட்கடை நடத்த.

(இ - ள்.) தெய்வ நங்கையர் இருபுறமும் சாமரை யிரட்டவும், கஸ்தூரியணிந்த அன்றலர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடையவர் நடிக்கவும், வேறுயுள்ள கின்னரர்கள் இனிய கீதங்களை இரு செவிகளிலும் நிறைக்கவும், பரிமளந் தங்கிய நீண்ட கூந்தலையுடைய இந்திராணியானவள் கடைக்கட்பார்வை செலுத்தவும். எ - று. (௫௧௮)

தெய்வப் பேரர சின்னணஞ் செலுத்திய பின்னர்ச்
சய்வத் தேசிகன் றிருவரு டரப்பெறு மறையோன்
மய்வைக் குங்களத் தரனுடைக் கயிலைபோய் மறைந்தான்
பய்வைக் கும்பொறிப் பாம்பணி நூபுரப் பதத்தின்.

(இ - ள்.) தெய்வலோகத்திய பெரிய அரசாட்சியை இவ்வண்ணம் நடத்திய பின்னர், சிவாசாரியர் திருவருள் புரியப்பெற்ற அவ்வேதியன், விடம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானுக்குரிய திருக்கைலாயகிரியிற் சென்று, படமமைந்த புள்ளிகளையுடைய அரவாபரணமுடைய சிலம்பணிந்த பாதங்களிற் கூடி மறைந்தனன். எ - று. (௫௧௯)

மேற்படி வேறு.

ஈது ரைத்தருள் சதானந்தன் வைத்த விடையே
யாதி காலமுனி யத்திரிய றைந்த னனரோ
பாத கக்களை பறித்தெறிவ தக்கதை யையம்
மூது ணர்ந்தவ னுணர்த்திய துமக்கு மொழிவாம்.

(இ - ள்.) இவ்வண்ணங் கூறியருளிய சதானந்தமுனிவர் முடித்தவுடனே, பாவங்களாகிய களைகளைப் பிடுங்கி யெறியத்தக்க ஒரு சரித்திரத்தை முற்காலத் தவராகிய அத்திரிமுனிவர் மொழிந்தனர். அச்சரித்திரத்தை முற்றுணர்வின ராகிய அம்முனிவர் மொழிந்தவகையே உங்கட்குச் சொல்கின்றோம். எ - று.

சோதி டப்பெயரி னுள்ளதொரு தொல்லை நெடுநாட்
டோதி டுஞ்சருவ சித்துல களிக்கு முறவோன்
சீத வெண்குடை யவற்குவரு செல்வர் புகலிற்
பாத கக்கொடிய ரைம்பதி னிரட்டி படுவார்.

(இ - ள்.) சோதிடமென்னும் பெயர்கொண்ட பழமையாகிய ஒரு பெரிய நாடுண்டு. அந்நாட்டினையரசு செய்யும் சம்பந்தமுடையவன் யாவரும்புகழத் தக்க சர்வசித்தென்னும் பெயருடையவன். குளிர்ச்சி தங்கிய சந்திரவட்டக் குடையையுடைய அம்மன்னனுக்குப்பிறந்த புதல்வரைச் சொல்லவேண்டுமாயின், பாவஞ்செய்யுங் கொடியோர்களாய் நூறுபெயர்களாகும். எ - று. ()

அன்ன பாதகரை யன்றியர னொடு பழகும்
பின்னொ ருத்தனர சற்கினிது பெற்ற மதலை
முன்னு ரைத்தவர் முடித்தபழி பாத கமெலாந்
தொன்னி லத்தளவை சொல்லினவை சொற்று முடியா.

(இ - ள்.) அத்திறத்த பாவிகளையல்லாமல் சிவபெருமான் பால் அன்புடையவனாகவும், அவ்வரசனுக்கு இனிய புத்திரனாகவும், அந்த நூறு புதல்வர்கட்கும் இளையவனாகவும் ஒருவனிருந்தான். முன்னேசொன்ன நூறுபுதல்வர்களும் பழமையாகிய இந்நிலவுலகத்தில் செய்து முடித்த பழிபாவங்களையெல்லாம் அளவிட்டுரைக்க வேண்டுமானால் அவை சொல்லிமுடியா. எ - று. (௩௨௨)

சிந்து ரக்களி மதாசல விறற்றி கிரியான்
மைந்த ரிப்படி பவப்படர் வளர்ப்ப துணரா
நொந்த சிந்தையி னுடங்கின னுடங்கி மருளா
வெந்து செய்துமென வெண்ணிமன மீட ழிகுவான்.

(இ - ள்.) யானையாகிய களிப்புற்று மத சலஞ் சொரியும் மலையையும் வெற்றிதங்கிய ஆக்கினைசக்கிரத்தையுமுடைய சர்வசித்தென்னும் அம்மன்னவன், தன் நூறுபுதல்வர்களும் இப்படிப் பாவமாகிய துன்பத்தை வளர்த்துவருதை துணர்ந்து வருந்திய மனத்தோடு துவளுதலடைந்தான், அப்படித்துவண்டு மயங்கி, இதற்கேது செய்வோமென்று கருதி மனவலிகுன்றினவனானான். எ - று.

அந்நி லைத்தனை தரக்கனை யழைத்தி வரைநீ
தின்மை னாசின வரக்கனவர் தீமை யுணராப்
பின்ன வர்ப்படவி டுக்கின னகன்று பெயர்வான்
மன்னு முத்தர நெடுந்திசையின் வந்த னனரோ.

(இ - ள்.) அத்தருணத்தில் தனக்கு வேண்டிய ஆகாரமே வரவழைத்து, இப்புதல்வர்களை நீ தின்றுவிடுகவெனக் கட்டளையிடவும், கோபமுள்ள அவ் வசுரன் அப்புதல்வர்களுடைய கொடுமையையறிந்து, அதன்பின் அவர்களைத் தன்னிருகைகளில் அகப்படும்படி யிடுக்கிக்கொண்டு அங்கிருந்து நீங்கிச்சென்று விலைபேருன வடதிசையில் வந்தான். எ - று. (௯௨௪)

ஈர மற்றிடு சினத்தொடு மிலங்கு மிமகே
தார முத்தா மடைந்திடு தனிக்கு மரர்கால்
வாரி யெற்றின னடித்தன னம் மைந்த ருடலைச்
சோரி கக்குற வெறிந்துதொடை கொட்டி யெழுவான்.

(இ - ள்.) அன்பென்பதற்ற கோபத்தோடு, பிரகாசிக்கின்ற இமயமலைக் கருகிலுள்ள கேதாரமென்னும் க்ஷேத்திரத்திற்கு வடதிசையிலடைந்து, ஒப் பற்ற அவ்விராசகுமாரர்களுடைய காலைப்பிடித்திழுத்து அறுத்து அடித்து, அவர்களுடலை உதிரமொழுகும்படி வீசித் தொடைத்தட்டி யார்ப்பரித்தான்.

காசி கச்சிமரு தாருணைகா ளத்திமற்
றேசி றில்லைகே தாரங்கு டந்தை யெம்மோர்
மாச கற்றிய விருத்தகிரி சீரு லவரை
பேசு மிப்பதி விழுந்தனர் பெருங்கு மரரே.

(இ - ள்.) (அப்படி வீசிய காலத்தில்) காசி காஞ்சி திருவிடைமருதூர் திருவருணை திருக்காளத்தி குற்றமற்ற திருத்தில்லை திருக்கேதாரம் திருக்குடந்தை யெம்மவரது குற்றங்களை யொழித்த விருத்தாசலம் மல்லிகார்ச்சுனமெ ன்று சொல்லும் இத்தலங்களில் விழுந்தார்கள். எ - று. (௯௨௬)

இத்த லத்திடை விழுந்துயி ரிறந்த குமரர்க்
கத்த லப்பெருமை யிற்சிவனி ரங்கி யருள
மொய்த்த செம்மணி விமானமெதிர் முந்து றுதலாற்
சித்தி ரக்கயிலை யிற்கதி சிறந்த னரரோ.

(இ - ள்.) இந்தத்தலங்களில் வீழ்ந்துயிரிறந்த அப்புதல்வர்கட்கு அவ்வத் தல மகிமையாற் சிவபெருமான் திருவுள்ளமிரங்கி யருளவும், மாணிக்கங்கள் நெருங்கிய தெய்வவிமானம் நேரேகாணப்பட்டமையால், அற்புதத்தகைய திருக்கைலாயபதவியை யெய்திச் சிறப்படைந்தார்கள். எ - று. (௯௨௭)

என்ன மாதவ ரியாவரு மிருந்து கயிலை
முன்னை வானவ னியற்கையை மொழிந்து களிகூர்
மன்னு சிந்தனை நெகிழ்ந்தனர் மகிழ்ந்த னர்மதிப்
பின்னல் வேணிய னருட்டகைமை பேச வெளிதோ.

(இ - ள்.) என்று பெருந்தவசிக ளெல்லாரும் ஒன்று கூடியிருந்து திருக் கைலாயகிரியில் எழுந்தருளி யிருக்கும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தன்மையை யெடுத்துச்சொல்லி விலைபேருன ஆநந்தமிகுந்து மனங் களித்து மகிழ்ந்தார்கள். சந்திரனையணிந்து பின்னியசடையையுடைய சிவபெருமானு டைய சிறப்பு சொல்ல வெளியதோ? எ - று. (௯௨௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஈதவ ரெடுத்துக் காட்டி யிசைத்தன விசைத்தே யின்னுங்
காதையொன் றுளது சொல்லக் கேட்குதி ரென்னக் காட்டி
வேதநான் முகற்கொப் பாய மாதவர் வினவிக் கேட்பச்
சூதமா முனிவன் சொற்ற தின்னமு மெடுத்துச் சொல்வோம்.

(இ - ள்.) அத்தவசிகள் இப்படி யெடுத்துச்சொல்லியதை முற்றுஞ் சொன்னோம். இன்னும் ஒரு சரிதமுள்ளது. அதனையுஞ்சொல்லக் கேட்பீர்களாக வென்றுரைத்து, வேதங்களை யுணர்ந்த பிரமதேவனுக்குச் சமானமாகிய நைமிசாரணிய முனிவர்கள் வினவிக்கேட்க, சூதமகாமுனிவர் சொல்லியதை இன்னும் விளக்கிச்சொல்லுவோம். எ - று. ([illegible])

எடுத்துயர் கொடிக்கோட் டிஞ்சி விராட்டர மென்னு நாட்டுட்
படுத்திய கனக மென்னு மாநகர்ப் பதியுட் டோன்றி
மடுத்தெழு கங்குற் களவன் வள்ளுகிர்ப் புலியே யன்னான்
றிடுக்குற வுரப்பிச சொல்லுஞ் சித்திர பானு வென்போன்.

(இ - ள்.) உயர்ந்து துவசங் கட்டியிருக்கும் சிகரத்தையுடைய மதில் சூழ்ந்த விராட்டிரமெனு நாட்டில் விளங்கிய கனகமென்னும் பெரிய நகரத்திற் பிறந்துதித்த இராத்திருடனும், கூரிய நகங்கள்வாய்ந்த ஆண்புலியைப்போன்றவனுமாகிய பலரும் அஞ்சத்தக்க அதட்டிப்பேசுஞ் சித்திரபானுவென்பவன்.

வரிகழ லரசற் கோர்ந்து வரன்முறை மரபிற் சொல்லும்
புரகித னகத்துப் புக்குக் கரந்தனன் போத னேக்கி
யிரவிருண் மறையோன் கண்டு பிடித்தனன் விளித்த லோடு
மரமெறி தடக்கை வாளா லெறிந்தன னவனை யன்னான்.

(இ - ள்.) வரிந்து கட்டிய வீரகண்டாமணி தரித்த அரசனுக்கு நன்குணர்ந்து முறைப்படி பஞ்சாங்கமோதிவரும் புரோகிதன் வீட்டில் (அத்திருடன்) ஒருநாள் புகுந்து மறைந்து செல்வதை அப்புரோகிதன் பார்த்து, இருள்கூடிய அவ்விரவில், கண்டு பிடித்தழைத்தவுடன், அக்கள்வன் புரோகிதனைத் தன் கையிற்றாங்கிய விசாலமான வாளாயுதத்தால் வீசினான். எ - று. ([illegible])

பெருநக ரரவங் கேளாப் பெருங்கொடை யரசர் கோமான்
வருதலு முணர்ந்தான் மற்றைக் காவலர் வம்மி னென்று
வருநெறி மறித்துப் போன கள்வனைக் கொணர்மி னன்றேற்
பொருசினத் தும்மை யாவி போக்குவ னென்னப் போனார்.

(இ - ள்.) பெரிய அங்ககரத்தின் அரவத்தைக்கேட்டு, பெருங் கொடையாளனாகிய இராசராசன் அங்கு வந்த வுடனே, திருடன் ஓடியதறிந்து, தன் காவலாட்களை வாருமென்றழைத்து, காட்டு வழியிலோடிய அத்திருடனைப் பிடித்துவருக. அப்படிப்பிடித்து வாராவிடின் பெருங்கோபத்தோடு உங்களைக் கொல்வேனென்று ஆக்ஞாபிக்க, அவர்கள் சென்றார்கள். எ - று. ([illegible])

சென்றவர் திகந்த மெட்டுங் கட்டினர் செறிவெங் கானுங்
குன்றமுந் திருவிச் சென்றார் காவலர் குவவுத் தோளா
ரன்றவற் பிடித்துப் பின்றே ளசைத்தனர் [illegible]
மின்றவழ்க் கிலங்கு வேலோன் முன்னரின் [illegible]

(இ - ள்.) அப்படிச்சென்ற காவலாட்கள் நகரத்தின் எட்டுத்திக்குகளின் முடிவு வரையில் காவல் வைத்தார்கள், மரங்கள் நெருங்கிய கொடிய காடுகளி லும் மலைகளிலும் தேடிப்போய், திரண்ட தோள்களையுடைய அக்காவலர்கள் அற்றைத்தினத்திலேயே அத்திருடனைக்கண்டு பிடித்து, அவனிரு தோளையும் பிற்புறமாகச் சேர்த்துப் பிணித்துக்கொண்டு வந்து ஒளிவீசி விளங்கும் வெற்றி தங்கிய வேலேந்திய மன்னவன் முன்னே விடுத்தார்கள். எ - று. (௫௫௩)

வேந்தனும் வெகுண்டு செங்க ணெரியெழ விழித்து நோக்கிக்
காந்துறு மனத்த னாகிக் கள்வனைப் பிணித்து வீழ்த்து
மேந்துநீர் முதலை முன்ன ரிடுதிரென் றிசைத்தா னன்னோர்
போந்தன ரவனைக் கொண்டு கடிமதிற் புரிசைக் கப்பால்.

(இ - ள்.) மன்னவனுங் கோபித்து, சிவ்விய விழிகளில் தீப்பொறி பரக் கப்பார்த்து, மனவெப்பமெய்தி, இக்கள்வனைக் கட்டிப்போடுங்கள். நீரில் மிதந்துகொண்டிருக்கும் முதலையின் முன்னே விட்டுவிடுங்களெனத் தீர்மானித் தனன். அதனைக்கேட்ட அக்காவலாட்கள் காவல் பூண்ட அந்நகரத்தின் மதி லுக்கு வெளியே இவனைப்பிடித்துக்கொண்டு சென்றார்கள். எ - று. (௫௫௪)

முடங்குவெண் டிரைநீர்க் குட்டத் திட்டன ரவனை முள்வா
லிடங்கர்மோந் தெடுத்தாங் கென்னி யேந்தியக் கரையி னுய்ப்பக்
கடங்கலுழ் நெடுநல் யானை மன்னனிற் கடிது சென்றா
தொடர்ந்தடு முதலை கொல்லா திட்டது தொழுது சொன்னார்.

(இ - ள்.) வளைந்து பாயும் வெள்ளிய அலைகளையுடைய நீர் நிரம்பிய குளத்தில் அக்கள்வனைப்போட்டார்கள். முட்பொருந்திய வாலையுடைய முதலை அவனைத்தலைமேற் சுமந்து தூக்கிச்சென்று மற்றைக்கரையில் விடவும், மதஞ் சொரியும் பெரிய பட்டத்து யானையையுடைய மன்னன்பால் விரைந்துசென்று கொல்லத்தக்க முதலை கொல்லாது விடுத்ததை வணங்கிச்சொன்னார்கள்.

என்னைகொ லிதுமற் றென்னா விருந்தன னரசன் மீண்டு
மன்னவற கொணர்தி ரென்னக் கொணர்ந்தன ரவனை நோக்கி
மின்னுயிர்த் தனைய கூர்வா ளெறிந்துயிர் வீழ்த்து மென்றான்
சொன்னது புரிந்தா ரிற்றுத் தெறித்ததத் துளங்கு கூர்வாள்.

(இ - ள்.) அரசன் இஃதென்ன காரணமென்று ஆலோசித்துக்கொண் டிருந்தான். மீண்டும் அக்கள்வனைப்பிடித்துவருகவெனக் கட்டளையிட அப்படி யழைத்து வந்தார்கள். அவனைப்பார்த்து மின்னல் கக்குவதுபோன்ற கூரிய வாட்படையால் வீசிக்கொல்லுகவெனக் கட்டளையிட்டான். ஏவலாட்கள் மன்னன் சொல்லிய வகையே செய்தார்கள், பிரகாச மிகுந்த கூரிய அவ்வாளா யுதம் இரு துண்டாய்த்தெறித்தது. எ - று. (௫௫௬)

அதிசய மெய்தி யோராவையுறு மனத்த னாகி
மதிமுறை மாயி னுக்கு மமைச்சரை வருதி ரென்ன
விதிமுறை தெரிந்தா ரொன்றும் விளங்கல ராகி மீண்டார்
கதிர்மணி கழற்கால் வேந்தன் கடிமதிற் கோயில் புக்கான்.

(இ - ள்.) ஆச்சரியமெய்தி, நிராசசந்தேகமூற்ற மனமுடையவனும், விவேக முறையின் தன்மையால் சிறந்த மந்திரிகளை வரக்கடவீர்களென, ஆண்மையார்க்கமுணர்ந்த அவ்வமைச்சர்கள் ஒன்று முணராது சென்றார்கள். ஒளி தங்கிய நவமணிகள் பதித்த வீரகண்டாமணி யணிந்த அம்மன்னவன் காவல் தங்கிய மதில் சூழ்ந்த தனது அரண்மனைக்குச் சென்றான். எ - று. ()

காரகத் திவனை யாக்கிச் சென்றவன் கதிர்முத் தேந்தும்
வாரக முகிண்மென் கொங்கை மயிலியற் குயின்மென் சொல்லாள்
ஞாரதை வினவச் சொற்று ளுங்கவ லெயரே லென்னுப்
பாரகம் புரக்கு மன்னற் கின்னணம் பகர்வ தானாள்.

(இ - ள்.) அரசன், இத்திருடனைக் [காரகம்] இருட்டறையிலிட்டுப்போய், ஒளி தங்கிய முத்துகளமைந்த கச்சினுள்ளேயிருக்கும் கோங்கரும்புபோன்ற மெல்லிய தனங்களையும் மயில்போலுஞ் சாயலையும் குயில்போலும் மழலைச் சொல்லையுமுடைய தன் மனைவியாகிய தெய்வப்பெண்போல்வாள், இதனைக் கேட்கும்படி தெரிவித்தான். அவள், வருந்தற்கவென்று உலகினை யாளும் அவ்வரசனுக்கு இப்படிச் சொல்லுகின்றாள். எ - று. (௩௩௮)

காலமூன் றுணரத் தக்க கிள்ளைநங் கரத்த தாகப்
பாலமை யுண்டிய ராகிப் படருறப் படுவ தென்னே
யாலுறு கவிகை வேந்தே யதுகொணர்ந் தளிப்ப னென்னாக்
கோல்வளை கொணர்ந்தாள் வேந்த னினையன கூற லுற்றான்.

(இ - ள்.) முக்காலச்செய்திகளையும் அறிந்து சொல்லத்தக்க கிளிப்பிள்ளை நம்மிடத்திருக்கவும், அறியாமைத்தன்மை யுடையவராய் வருந்துவதேதுக்கு? அசைகின்ற வெண்கொற்றக் குடையை யுடைய அரசனே! அதை யெடுத்துக் கொணர்ந்து தருகின்றேனென்று அழகிய வளையணிந்த அவன்மனைவி அக்கிளியைக் கொண்டுவந்தாள். மன்னவன் இப்படிச் சொல்லுகின்றான். எ - று. ()

கிள்ளையே சுகமே முன்னங் கேழ்கிளர் தவத்தா லெய்தும்
பிள்ளையே மகவான் றேவி யெம்முழைப் பெருங்கற் பாய
வள்ளைவார் குழைக்கு நல்க வந்தனை மரபி னோர்ந்திக்
கள்வன தியற்கை சொல்லா யென்றனன் கழற்கால் வேந்தன்.

(இ - ள்.) கிளிப்பிள்ளையே! அஞ்சுகமே! பூர்வத்தில் பெரியவைராக்கியத்தாலாகிய மிக்க தவத்தினாற் கிடைத்த புதல்வனே! இந்திரன்மனைவியாகிய இந்திராணி, எம்மிடத்தின்ன மேம்பட்ட கற்புநிலைமையையுடைய வள்ளைக் கொடிபோலும் நெடிய காதுகள் வாய்ந்த என்மனைவிக்குக் கொடுக்கவந்தனை. இத்திருடன் நிலைமையை முறைப்படி யுணர்ந்து சொல்லவேண்டுமென்று, வீரக்கழலணிந்த பாதங்களையுடைய அவ்வரசன் கேட்டான். எ - று. (௩௪௦)

ஆயது பகர்வே னைய கேட்டியென் றரசற் போற்றிப்
பூவெழு கொடிகோட் டிஞ்சிக் குசபுர நகரத் தின்ன
நயந வணிக னென்னும் விட்டம்ப னயந்து பெற்ற
சேயிவ னெடுந்த நாமஞ் சித்திர பானு வென்பான்.

(இ - ள்) ஐயனே! கேட்பாயாக. இவன் தன்மையைச் சொல்லுகின்றே னென்று அரசனைப்புகழ்ந்து அக்கினி சொல்லுகின்றது. ஓங்கிவளர்ந்த கொடிகளையுடைய சிகரங்கள் தங்கிய மதில் சூழ்ந்த குயபுரமெனும் நகரத்திலிருக்கும் வைசியரிற் றலைமைபெற்ற விட்கம்பனென்பவன் அரிதாகப்பெற்ற, புத்திரனாகிய இவன் பெற்றபெயர் சித்திரபானுவென்பார்கள். எ - று. (௩௪௧)

கள்வன வன்றி யொன்றுங் கருதல னகர மெல்லா
மொள்ளெரி மடுக்கு மன்னே ருள்புகுந் தொதுக்கப் பட்ட
வெள்ளிடை நின்று கொண்டு வேசையர்க் குதவும் வெய்யோன்
றள்ளரும் பாவ மெல்லாந் தகைபடு சாலை யன்னான்.

(இ - ள்.) திருடுவனவேயல்லாது மற்றொன்றும் எண்ணமாட்டான். அந்நகர்முழுவதும் ஒளிமிகுந்த தீ மூட்டுவான். அந்நகரிலுள்ளார் வீடுகளிற்புகுந்து தீயானது எரிக்காமல் ஒதுக்கப்பட்ட வெளியிடத்தில் அகப்படுகின்ற பொருள்களை யெடுத்துக்கொண்டு வேசையருக்குக் கொடுக்குங் கொடியோன். பலராலுந் தள்ளிவிடப்பட்ட பாவங்களையெல்லாம் அடைக்கப்பட்டிருக்கும் ஒருசாலை போன்றவனானான். எ - று. (௩௪௨)

நாட்டக மகர மற்றை நகர்மென் றிவற்றைச் சூழ்ந்து
மூட்டெரி மடுத்த லோடு முடிவுற முடிந்த கற்று
பாட்டளி யலங்க லோதிப் பார்ப்பனி மறையோர் பாலர்
வீட்டெரி வளைத்துக் கொல்ல விளிந்தவர்க் கிலக்க முண்டோ.

(இ . ள்.) நாடுகள், [அகரம்] அந்தணருறைவிடம், நகரங்களென்னும் இவற்றைச் சூழ மூட்டிய நெருப்பினாற் கொளுத்திய வுடனே உயிர் நீங்கியிறந்த கன்றையுடைய பசுக்களும், பாட்டுப் பாடும் வண்டுகணிறைந்த மலர்மாலை சூடிய கூந்தலையுடைய வேதியமாதரும், வேதியர்களும், சிறுர்களுமாக, வீடுகளில் தீப்பற்றிக்கொண்டு கொன்றதனால் இறந்தோர்களுக்கு எல்லையுண்டோ.

புன்னிலைப் பவத்துக் கெல்லாந் தானொரு பொறைய னாகி
யிந்நிலை நடக்குங் காலைப் புயங்கமென் றெடுத்த மாட
நன்னகர்க் கடுந்தீ மாட்ட நகர்ப்புறந் துறந்து போக்கும்
பன்னிரை கவர்ந்து போனா னருநெறிப் பட்ட கானம்.

(இ - ள்.) இழிதகையினவாகிய எல்லாப் பாவங்களுக்கும் தானேஒருசுமையாளாய், இப்படி நடக்கையில், உயர்ந்த மாளிகைகளையுடைய புயங்கமென்னும் நகரத்தைக் கொடிய தீக்கொளுத்த நகர்ப்புறத்திலே வெளிப்படுத்தியோட்டிய பல பசுமந்தைகளை யபகரித்துக்கொண்டு கொடிய வழியையுடைய காட்டினுள்ளே சென்றான். எ - று. (௩௪௩)

மேக்குயர்ந் தெடுத்த சாரன் மிடைவனத் தடவிக் கானத்
தாக்குலந் துரந்து சென்றா னசல சேன் மெம்பொற்
றேக்குயர் கோயில் வாயிற் சேறலுஞ் சினையாக் குற்றி
தாக்கலுங் கிடப்ப வீது சங்கரற் கென்று போனான்.

(இ . ள்.) மேற்றிசையாக மிகவுயர்ந்தோங்கிய மலைச்சாரலினுள்ள நெருங்கிய கடுங்காட்டில் அப்பசுமந்தைகளை யோட்டிக்கொண்டு சென்றான். ஆங்கெழுந்தருளியிருக்கும் அசலேசுவரனென்னுஞ் சிவபெருமானுடைய பாக்குமரங்

ளுயர்ந்த அழகிய பொன்மயமான திருக்கோயிற் கோபுரவாயிலிற் சேர்ந்தவுடனே, ஒருசினைப்பசு அங்குள்ள ஒருகட்டை தடுத்தவுடன் கீழேவிழுந்துவிட, இப்பசு சிவபெருமானுக்கென்று சொல்லிட்டுப்போனான். எ - று. (௫௪௫)

பாலநேத் திரத்தா னெந்தை பணிவிடைக் குளரா யுள்ளோர்
காலைவந் தெடுத்தா ராவின் காலபறித் துவனு யத்தா
லேலவே பொதிந்து காநோ யொழித்தன ரிதற்குப் பின்னர்ச்
சூலமு மெழுதி விட்டா ரீன்றதச் சுரபிக் காரா.

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய எமது பிதாவாகிய சிவபெருமானுடைய பணிவிடைகட்குரிய அடியவர்களா யுள்ளவர்கள், காலைப்பொழுதில் வந்து அப்பசுவைத் தூக்கினார்கள். அப்பசுவின்காலைப்பற்றித்துவைத்துக்கட்டு மருந்தாற்பொருந்தும்படிகட்டி, அதன்காலிலுள்ள நோயையகற்றினார்கள். அதன்பின்னர், பசுவுக்குச் சூலக்குறியுமிட்டார்கள். அப்பசு சின்னளில் காராம்பசுவைப்பெற்றது. எ - று. (௫௪௬)

அன்றள வுமையோர் பாகத் தாற்கபி டேக மாக
வின்று காறமுத மீந்த காதலா லிவன்செய் பாவக்
குன்றெரி பட்ட பஞ்சிற் றுலைந்தது குவவுந் தோளாய்
மன்றலஞ் சடையோன் றன்மை யாவரே வகுக்க வல்லார்.

(இ - ள்.) அன்று முதலாக இன்றுமட்டும், உமாதேவியை ஒரு பாகத்திலுடைய அசலேசுவரப்பெருமானுக்குத் திருமஞ்சனத்திற்குரிய பால் கொடுத்து வந்தபடியால், இச்சித்திரபானு செய்த பாவமாகிய மலைகளெல்லாம், தீப்பொறி பட்ட பஞ்சுமூட்டைபோலழிந்தது. குவிந்த தோளையுடைய அரசனே! மணம் வீசும் அழகிய சடையையுடைய சிவபெரு.பாலுடைய தன்மையை எவர்தாம் வகுத்துச்சொல்ல வல்லோர்? எ - று. (௫௪௭)

வாளெடுத் தெறிந்திட் டாலு மழுவினாற் பிளந்திட் டாலுங்
கோளரா வெயிற்றுச சிங்கி தீற்றின கொளுத்திட் டாலு
மூளெரி கிடத்தி னாலு முரிதிரைக் கயத்திட் டாலுந்
தாளர வணிந்தோன் றந்த வரத்தினாற் சாத றீர்ந்தான்.

(இ - ள்.) திருவடியிற் சர்ப்பகங்கணமணிந்த சிவபெருமானளித்த வரத்தினால், இவன் வாட்படையால் வெட்டினாலும், கொல்லத்தக்க பாம்புகளின் விஷத்தையூட்டி மூட்டினாலும், பெரு நெருப்பிலிட்டாலும், முரிந்துபோகும், அலைகளையுடைய நீரில் வீழ்த்தினாலும் இறத்தலினின்றும் நீங்கினவன். (இவற்றாலெல்லாம் இவனுக்கு மரணமில்லை) எ - று. (௫௪௮)

உடைதிரை நெடுநீர் வையத் தின்னல நுகர்ந்து பின்னர்க்
கடைமுறை கயிலை வாழ்ந்து கதிபெறற் குரிய னானன்
படர்சடைப் பரமற் கீந்த பாற்பசு வுரோம மொன்றிற்
கிடைபடு பிரம கற்ப மாயிர மிகந்து வாழ்வார்.

(இ - ள்.) மறிகின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் இனிய போகங்களை நுகர்ந்தபின்னர், தேகாந்தத்திற்போய்க் கைலாயபதவியில் வாழ்ந்திருந்து முத்தியின்பத்தை அடைதற்கு உரியவனானான். ஆனபடியால், படர்ந்த சடையையுடைய சிவபெருமானுக்குத் தானம்புரிந்த பாற்பசுவின் உ.ட்.கிலுள்ள உரோமமொவ்வொன்றுக்கும் மத்தியாயுள்ள பிரமகற்பங்கள் ஆயிரஞ்செல் அம்படி வாழ்வார்கள். எ - று. [illegible]

ஆகையா லிவனை யின்றுற் கொல்லுவ தரிது மூக்க
ணைகனு யகனுக் குள்ள மிரங்குறுந் தகைய னானு
னீகவ லொழிதி யன்னோன் வேண்டுறு நிதிய மீகது
போகென விடுத்தி யென்று புகன்றதப் புனப்பூங் கிள்ளை.

(இ - ள்.) ஆனபடியால், இத்திருடனை உன்றுற் கொலைசெய்தல் அரிய தாம். இவனோ திரிநேத்திரங்களையுடைய ஏகநாயகனாகிய சிவபெருமானுக்கு மனமுருகும் அன்புடையவனாயினான். இனி நீ யிதற்காகத் துயரொழிந்துவிடு. அத்திருடன் இச்சிக்கின்ற திரவியத்தை அப்படியே கொடுத்து, நீ விருப்பின்படி செல்லுகவென விடைதந்தனுப்பிவிடு என்று, பசு நிறமும் அழகுந்தங்கிய அக்கிளிப்பிள்ளை சொல்லியது. எ - று. (௯௰)

அடுசின மொழிந்து நெஞ்சத் ததிசய மடைந்தான் மன்னன்
விடுதிரென் றவனைக் கொண்டு விளங்கொளி மடங்க லேந்தும்
படுமணி யாச னத்தி னிருத்தினன் பணிந்தான் பல்கா
னெடுமுடி மகுட வேந்த னிதிக்குவை பலவு நேர்ந்தான்.

(இ - ள்.) அக்கிளியின் வார்த்தையால், அக்கள்வனைக் கொல்லும்படி கொண்டிருந்த கோபநீங்கி, அரசன் தன் மனதில் ஆச்சரியமெய்தி அவனை விடக்கடவீரென்று காவலாட்களுக்குணர்த்தி, அவனை யழைத்துப்போய், சிரமிசை நெடிய கிரீடமணிந்த அம்மன்னவன், பிரகாசிக்கும் ஒளியையுடைய சிங்கங்கள் சுமக்கும் இரத்தினபீடத்தில் இருக்கச்செய்து பலமுறை பணிந்து பலவிதமான திரவியங்களையுங் கொடுத்தான். எ - று. (௯௧)

ஏந்துறு குடுமி மாடத் திருக்கையு மினிது நல்கி
மாந்தளி ரனைய மேனி மகளிரால் வதுவை முற்ற
வேய்ந்தன யாவு மீந்தா னித்தலை நெடுநாள் வைகிப்
போந்தனன் கயிலை வாழ்ந்து சேவடி புகுந்தா னன்றே.

(இ - ள்.) மிக வுயர்வாகிய சிகரத்தையுடைய தன் அரண்மனையில் அக்கள்வனிருப்பதற்கு இனிதாக இருப்பிடமுங்கொடுத்து, மாந்தளிர்போன்ற மேனிவாய்ந்த மங்கையரால் விவாகமும் முடிவுறும்படி அவ்விவாகோபகரணங் களெல்லாவற்றையுங் கொடுத்தான். இப்படி வெகு காலம் வாழ்ந்திருந்து திருக் கைலாயகிரியையடைந்து பலகாலம் வசித்து, சிவபெருமானுடைய சிறந்த திருவடி நீழலிற் கலந்தனன். எ - று. (௯௨)

தேக்குயர் வனத்தின் வீழ்ந்த பசுவிது சிவனுக் கென்று
போக்கினு னிதுபெற் றானேற் புரிசடைப் புனிதற் கென்னு
வாக்கினன் மனத்தாற் செய்யுஞ் செய்கையால் வணங்கப் பெற்றோர்
கோக்கொணர்ந் தளிப்போர் தன்மை யெம்மனோர் கூறற் பாற்றோ.

(இ - ள்.) தேக்குமரங்கள் உயர்ந்தோங்கிய காட்டிலே, குற்றியால் தடை செய்யப்பட்டு விழுந்துவிட்ட இப்பசு, சிவபெருமானுக்கென்று விட்டுவிட்டு வந்தவன், இத்தகைய சிறந்த பதவியைப் பெறுவானாயின், முறுக்கிய சடையையுடைய சிவபெருமானுக்கென்று வாக்காலும் மனத்தாலும் செய்யத்தக்க தொழில்களாலும் பணியப்பெற்றவர்களாய், ஒரு பசுவை விலைக்கு வாங்கிவந்து தானஞ் செய்வோரடையும் பதவி என்னையொத்தோர் கூறத்தகுமோ தோ?

மழலையங் குதலைக் கிள்ளை மதிமதி மாவெனன் றேதுங்
கழலுடை யரசற் கோதுங் காதையொன் றின்னு முண்டாற்
குழலியம் புலிமென் கண்ணி யாறுளங் குளிர்ப்ப தக்கு
மிழைசடை முனிவர் கேண்மி னென்றெடுத் திசைப்ப தானான்.

(இ - ள்.) நிரம்பாத அழகிய மதலைச்சொல்லையுடைய அக்கிளிப்பிள்ளை மதிமாவெனனும் பெயருள்ள வீரகண்டாமணி தரித்த அம்மன்னனுக்குச்சொல்லுகின்ற சரித்திரம் மற்றொன்றுள்ளது. இளஞ் சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமான் திருவுள்ளங்களித்தற்கேதுவாகிய கலைத்தலமைந்த சடையையுடைய முனிவர்களே! கேளுங்களென்று சூதமுனிவர் விளக்கிச் சொல்லுகின்றனர். எ - று. (௧௫௪)

தொல்லைநாண் முளரி பூத்த முகிலெனுந் துளவு மாயோ
னல்லக னெடுமார் பத்தி னாயிழை யலங்க லோதி
யெல்வலை முளரி யேர்ந்த விருந்தன ளிருந்த ஞான்று
வல்லெழு முகிண்மென் கொங்கைப் புலோமசை யாங்கு வந்தாள்.

(இ - ள்.) அன்றலர்ந்த தாமரைமலர்கள்பூத்த மேகமென்று சொல்லுகின்ற துளவமாலை தரித்த திருமாலின் ஒளி தங்கிய அகன்ற மார்பில் வசிக்கும் திருந்திய ஆபரணங்களையும் மலர்மாலையையணிந்த கூந்தலையுமுடைய திருமகள், ஆதிகாலத்தில் ஒளியமைந்த தாமரை மலர்ப்பீடத்தில் வீற்றிருந்த காலத்தில், சூதாடு கருவியொன்றும் விளங்கும் மெல்லிய தனங்களையுடைய இந்திராணி அங்கே வந்தனள். எ - று. (௧௫௫)

வந்தனள் குலிச வேந்த னாயிழை வணக்கம் பொங்கித்
தந்தன ளவளை நோக்கித் தாமரைத் தவிசின் மேலாள்
சிந்தனை யெதுமற் றென்னால் வேண்டுவ செப்பு கென்றாள்
சுந்தரி நின்கைக் கிள்ளை தருகெனத் தொழுது சொன்னாள்.

(இ - ள்.) வச்சிராயுதமேந்திய இந்திரன் மனைவி திருமகளுக்கு நமஸ்கரித்தனள். தாமரைமலர்ப்பீடத்திலுள்ள திருமகள் இந்திராணியை நோக்கி உன் கருத்து யாது? உனக்கு வேண்டியவற்றைச் சொல்லுகவென வினவினள். அதனைக்கேட்ட இந்திராணி உன் கையிலுள்ள கிளிப்பிள்ளையைத் தருகவென வணங்கிச்சொல்லினள். எ - று. (௧௫௬)

ஆயவ ளுரைத்த லோடு மம்புயத் தணங்கு நோக்கி
நீயிது கோடி யென்னாக் கொடுத்தன ணெடுவேற் றானைச்
சேயரித் தடங்க ணல்லாள் வாங்கினள் சிறப்பு மிக்காண்
மாயவன் றேவி தன்மை மகிழ்ந்தொரு மருங்கு நின்றாள்.

(இ - ள்.) அவ்விந்திராணி யிப்படிச்சொன்னவுடனே, திருமகள் அவளைப் பார்த்து, நீ யிதனைப்பெறுகவென்று கொடுத்தனள். நெடிய வேலாயுதம் போலச் செவ்வரிபடர்ந்து பரந்த விழிகளையுடைய இந்திராணி அக்கிளிப் பிள்ளையைப் பெற்றுக்கொண்டு, அழகின் மேம்பட்டவளாகிய இலக்குமியின் இயற்கையை யெண்ணி யிதயங்களித்து ஒரு புறத்தில் நின்றிருந்தனள். எ-று.

நிற்புழி யழல்வாய்க் கக்கு நேமியோ னமது நாடு
பொற்புறப் புனிதி பொன்னைக் கணத்தினிற் புகல நோக்கி
கற்புரை யலங்க லோதித் தாமரை யகத்து வாழுங்
கற்பினள் விளக்கிக் கேட்பக் கரியவன் புகல்வ தானான்.

(இ - ள்.) அப்படி நிற்கையில், தீப்பொறிகளைச்சிந்தும் வாயையுடைய சக்கராயுதந்தாங்கிய திருமால், நமது வைகுந்த நாட்டை அழகுறும்படி அலங்காரஞ்செய்கவெனத் தமது கணத்தோர்க்குக் கட்டளையிட, அதனைக்கண்டு, இருள்போலுங் கூந்தலைப்பெற்றுச் செந்தாமரைமலரில் வாழ்ந்துள்ள கற்பினையுடைய திருமகள், யாது காரணத்திற்கென வினவ, கருநிறமெய்திய திருமால் கூறுகின்றார். எ - று. (௫௯)

கிளிபுரை குதலைச் செவ்வாய்க் கோல்வளை கேட்டி யென்றுத்
துளவணி யிறைவன் சொல்லுஞ் சுபாரிச மென்னு நாட்டிற்
றளமல ரகழி சூழ்ந்த சருவரி யென்னு மவ்வூ
ருளனொரு மறைவ லாளன் கபிலனென் றுரைக்கப் பெற்றான்.

(இ - ள்.) கிளிபோலும் மழலைச்சொல்லையுடைய சிவந்த வாயையும், அழகிய வளையையும் பொருந்தியவளே! கேளென்று துளவமாலை தரித்த திருமால் கூறுகின்றனர். சுபாரிசமெனும் ஒரு நாட்டிலே இதழ்களையுடைய மலர்கள் விரிந்துள்ள அகழியாற் சூழப்பெற்ற சருவரியெனுஞ் சிறப்புற்ற நகரத்தில், கபிலனென்னும் பெயரெய்திய அந்தணனொருவனுளன். எ - று.

அல்லினும் பகலுங் கள்வான் பாழ்வயி றோம்பு மன்னான்
வல்லைவல் லிருளிற் சென்றோர் மறையவன் சுரபி வவ்வி
யில்லகம் பிணித்துக் கொண்டா னிறந்தன சிலநாட் பின்ன [ன்.
ரொல்லையொற் றுணர்ந்து வந்தா ரொளித்தனன் கபில னென்போ

(இ - ள்.) இரவிலும் பகலிலும் திருடுபவனாய்ப் பாழ்வயிற்றை வளர்த்து வரும் அவன், அதிசீக்கிரத்தில் நடுராத்திரியிற்சென்று ஓரந்தணன் பசுவை யபகரித்துக்கொண்டுவந்து தன் வீட்டிலே கட்டிக்கொண்டனன். இப்படிச் சில தினங்கள் சென்றன. அதன் பின்னர், உளவு தெரிந்து அதிசீக்கிரத்தில் தேடிக் கொண்டுவந்தார்கள். அதனைத்தெரிந்த கபிலனென்னுங் கள்வன் அந்தப்பசுவை மறைத்துவிட்டான். எ - று. (௬௦)

கன்றொடு சுரபி நீக்கிக் கண்ணுதற் பெருமா னன்பி
னின்றவோர் மறையோன் றன்பா னிறுத்தின னிறுத்த லோடு
மன்றுடைத் தீம்பா லென்பா லாக்குதி யென்ன வன்று
னன்றெனப புரிந்தான் பிற்றை நாட்படு நடுநாட் கங்குல்.

(இ - ள்.) கன்றையும் பசுவையும் அப்புறப்படுத்தி, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்குரிய மெய்யன்பு நிலையிலிருந்த மற்றோர் அந்தணனிடத்திற் சேர்த்தான். அப்படிச்சேர்த்தபோதே, நாடோறுங் கறக்கின்ற இனிமையான பாலை என்பாலனுப்பிவிடுகவெனக்கூற, அவ்வந்தணன் நன்றென்று அப்படியே செய்துவந்தான். சில நாட்களுக்குப்பின், ஒரு நாள் நடுராத்திரியில். எ - று. (௬௧)

பொழிதரு தீம்பா லாவும் புனிற்றிளங் கன்று மாயோர்
வழிபட விருளிற் செல்வான் பின்னரின் மறித்து வவ்வி
முழுவடு திரடோள் பற்றி விசித்தனர் முழங்கு பைம்பொற்
கழலுடை யரசன் றன்முன் விடுக்கனர் கபிலன் றன்னை.

(இ - ள்.) சொரிகின்ற இனிய பாலையுடைய பசுவும், மிக்க இளங்கன்று மாக ஓட்டிக்கொண்டு ஓர் வழியில் இருட்காலத்திலே செல்லும் கபிலனை, நகர்க் காவலர்கள் தடுத்து அப்பசுவையுங் கன்றையும் பற்றிக்கொண்டு, திரட்சியினால் மத்தளத்தையும் வெல்லத்தக்க அவனிரு தோள்களையுஞ் சேர்த்துப்பிணித்து, பசும்பொன்னாற் சமைக்கப்பட்டு ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த மன்னவன் முன்னே விடுத்தார்கள். எ - று. (௯௰௨)

வேதகோத் திரத்தி னுள்ளோர் கள்வரேல் விளித்த லாகா
தீதெனு வுணர்ந்து கண்க ளிரண்டையுந திரிவாங்கிப்
போதர விடுத்தா னந்த மறையவன் பொறுத்த லாற்றான்
மாதுய ருழந்து தன்ன தாருயிர் மாய்த்துக் கொண்டான்.

(இ - ள்.) அந்தணர்குலத்துதித்தவர்கள் திருடுவார்களாகில், அவர்களைக் கொல்லலாகாது. அது தீதென்றறிந்து, மன்னவன் அக்கபிலன் விழிகளிரண்டினையும் அடியோடு பறித்தும்போகும்படி விடுத்தான். அக்கபிலன் அவ்வேதனை சகிக்க வியலாதவனாய்ப் பெருந்துயரெய்தித் தன்னுயிரைப் போக்கிக்கொண்டான். எ - று. (௯௰௩)

மறையவ னவனுக் கென்ன மாகணத் தலைவர் முக்க
ணிறையவ னருளிற் செம்பொ னெரிமணி மானங் கொண்டு
முறையறிந் தெதிரச் சென்று ராங்கவன் முளரி நல்லாய்
பொறைபடும் புரிசை நம்மூ நகரொடும் போவ னென்றான்.

(இ - ள்.) வேதியனாகிய அக்கபிலனைக் கொண்டுபோதற்காக, சிறந்த சிவகணத்தலைவர்கள், திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருவருளால், செம்பொன்னாற் செய்து ஒளிவிடும் இரத்தினங்கள் பதித்த விமானத்தைக் கொணர்ந்து, அவனது புண்ணிய முறைமையைத்தெரிந்து எதிர் கொள்ளப் போனார்கள். கமலாசனையே! அக்கபிலன் விமானமூர்ந்து சிறு மலைபோன்ற உயர்வோடு கூடிய மதில்சூழ்ந்த நமது ஒப்பில்லாத வைகுந்த நகரத்தின் வழியே செல்வானென்று சொல்லினர். எ - று. (௯௰௪)

ஆதலா னுலக மெல்லாம் புதுக்குவா னமைந்தே மம்பொற்
பேதைநீ யிவனாற் செய்த புண்ணியப் பெருமை கேட்டி
னோதுதுங் கயிலைப் பெம்மா னடியருக் கொருநா ளீந்தான்
சீதநுண் டிவலைத் தீம்பா லாதலாற் கயிலை செல்வான்.

(இ - ள்.) ஆதலினாலே, நமது நகர முழுவதும் அழகு செய்யத்தொடங்கினோம். அழகிய பொன்னென்னும் பெயருடையாளே! இவனாற் செய்யப்பட்ட சிவபுண்ணியத்தின் சிறப்பைக்கேட்பதானாற் சொல்கின்றோம். கைலாயநாதராகிய சிவபெருமான் அடியரொருவருக்கு ஒரு நாள் அப்பசுவின் இனிய பாலில் குளிர்ச்சிதங்கிய மிக நுண்ணிய ஒரு துளி கொடுத்தான். ஆதலால் கைலாயத்திற்குச்செல்கின்றான். எ - று. (௯௰௫)

என்றெடுத் தியம்பி விட்டா னிருந்துழா யலங்கன் மாயோன்
ஒன்றெடுத் தனைய கொள்கை யதிசயங் கொண்டா ளென்ன
மென்றுணைச் சிறைய கிள்ளை வேந்தனுக் குரைப்ப வேந்தன்
நன்னனிவைக் கா ங்கோள் விம்மா வானநட் டனெரி னின்னன்.

(இ - ள்.) என்றிவ்வகையாகப் பெரிய தவமுடையோரைவணங்கித் திருமால் எடுத்துச்சொல்லினர். உயர்ந்து வளர்ந்த மலைபோன்ற குசங்களையுடைய திருமகள் வியப்பெய்தினளென்று, மிருதுவாகிய இரு சிறகுகளுடைய அச்சிளைப்பின்னை மன்னவனுக்குக்கூற, அது கேட்ட மன்னவன் தன் பாதக இரு தோள்களும் பூரித்து, சிவபெருமான் திருவருளென்னும் வரம்பிலிருந்தனன். எ - று. (௫௬௬)

ஈதல தெடுத்துக் காட்டும் புண்ணிய மினமொன் றுண்டாற்
றீதறு மச்ச மென்னுந் தெண்புனற் றிருநா டங்காட்
டோதுமெண் கவிகை வேந்தன் சுமதியென் றுளனவ் வேந்தன்
பாதக மொழியப் பெற்ற வதிரத னென்னும் பாலன்.

(இ - ள்.) ஈதன்றியும், எடுத்துச்சொல்லவேண்டிய சிவபுண்ணிய சரிதம் மற்றொன்றுள்ளது. குற்றமற்ற தெளிந்த நீர்வளந்தங்கிய மச்சமென்னுஞ் சிறந்த நாடொன்றுண்டு, அந்நாட்டிலே சந்திரவட்டக்குடையையுடைய சுமதியென்று சொல்லப்பட்ட பெயர் பெற்ற ஒரு மன்னவனுண்டு. அம்மன்னவனுடைய பாதகமகலப்பெற்ற அதிரதனென்னும் புத்திரன். எ - று. (௫௬௭)

கேகயத் தரச னீன்ற கிளிபுரை குதலைச் செவ்வாய்த்
தோகையை வதுவை முற்றி யின்னலந் துய்க்கு நாளி
னேகிமுற் போன சென்மத் திடைப்படு மியற்கை யெல்லாஞ்
சேகறத் தெரியப் பெற்றான் சிவனடி சிந்தை செய்தான்.

(இ - ள்.) கேகயதேயத்து மன்னவனீன்ற கிளிபோலும் மழலைச்சொல்லைக் கூறும் செவ்விய வாயையுடைய பெண்ணை விவாகஞ்செய்து, இன்பமனுபவித்து வாழ்ந்துகொண்டிருக்குங்காலத்தில், கழிந்துபோன பண்டையசன்னத்தில் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் தவறுதல் நீங்கத்தெரியப்பெற்றவனாய், சிவபெருமானுடைய திருவடியைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். எ - று. ()

வெள்விடை யவனைத் தாழ வேண்டுறு மனத்த னாகிக்
கள்விடு தொடையன் மார்பன் றந்தையைக் கனிந்து கேட்க
வுள்ளிடை நெகிழ்ந்த சிந்தை யாங்கவ னுவப்பக் கூர்வாய்ப்
புள்விடு புலரி செய்யுங் குறைமுடித் தெழுந்து போனான்.

(இ - ள்.) தாவள்யமான இடபவாகனமுடைய சிவபெருமானை வணங்கித் தவஞ்செய்யுங் கருத்தெய்தியவனாகி, தேன் சிந்தும் மலர்மாலை தரித்த மார்பினனாகிய தன் பிதாவை யனங்கனித்து உத்தரவு கேட்க, அதனைக்கேட்ட சுமதியென்னும் அவன் பிதா மனமுருகிய நிலைமையுடையவனாய் மகிழ்ந்து விடைதர, கூரிய வாயையுடைய பறவைகளாலிக்கும் காலைப்பொழுதில், செய்யவேண்டிய நித்தியானுஷ்டானங்களை முடித்துப் புறப்பட்டுச் சென்றான். எ - று. (௫௬௯)

அவனுடை நகர நாப்ப ணரிச்சுர மடைந்து புக்குச்
சிவனடி தொழுது போற்றிச் சிந்தைநெக் கன்பு மிக்குக்
கவலொழி மனத்த னாகி வீற்றுறுங் கடவுட் கென்று
மவகையி னடைக்காய் நல்கும் வேதத னிமையக்கண் ணுற்றான்.

(இ - ள்.) அம்மன்னவனுடைய நகரத்தின் இடையிலுள்ள அரிச்சுவர மென்னும் திருக்கோயிலையடைந்து உள்ளே புகுந்து, ஆங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருவடிகளை வணங்கித்துதிசெய்து மனமுருகி அன்பின் மிகுந்து துன்பகன்ற சித்தமெய்தியவனாகித் திருமுன்னே நின்ற மாத்திரமே, அப்பெருமானுக்கென்று மணக்களிப்போடு தாம்பூலமளித்துவரும் வேததன்மி யென்னும் வேதியனைப்பார்த்தான். எ - று. (௯௭௦)

உற்றவன் றன்மை நோக்கி வருகவென் றுரைத்தா னந்தக்
கற்றறி மறைவ லாளன் கைவிரித் தெதிர நோக்கி
யிற்றைநீ யென்னை முற்று மறிவையோ வென்னக் கேட்ப
மற்றவ னரசர் கோமான் மைந்தனை யறியார் யாரே.

(இ - ள்.) ஆங்கெய்திய வேததன்மியின் தன்மையைப்பார்த்து, வருகவென் றழைத்தான். அது கேட்ட வேதங்களைக்கற்றுணர்ந்த அவ்வந்தணன், கையை விரித்துக்கொண்டு எதிர் வருவது பார்த்து, இப்போது நீ யென்னை முழுவதும் உணர்வாயோ எனக்கேட்க, அவ்வேததன்மியென்பான் மன்னவர் மன்னவனுடைய மைந்தனை யுணராதவர் யாவர்? ஒருவருமிலர். எ - று. (௯௭௧)

என்றலுங் குமர னக்கா னிசசன னத்தி யாரு
நன்றுந வறிவ ரென்னை நவையொடும பழகிச செய்யும்
புன்றொழிற் போன சென்மத் தறிதியோ புகறி யென்று
னன்றது சிவனுக் கலலா லறிவரி தைய வென்றான்.

(இ - ள்.) என்று கூறியவுடனே அரசகுமாரன் சிரித்து, இப்பிறப்பில் உலகத்திலுள்ளா ரெல்லாரும் என்னை நன்றுயுணர்வார்கள். தீத்தொழில்களி லேபழகி அற்ப ச்செயல்களைச் செய்திருந்த பூர்வ சனனத்தில் அறிவாயோ சொல்வாயென வினவினன். ஐயனே! அச்சனனத்தின் செயல்கள் சிவபெருமானுக்கேயன்றி மற்றையோர் உணர்தற்கு அரியதாகுமென்றனன். எ - று.

என்னுடைப் போன சென்மத் தியற்கைமுன் னெடுத்துக் காட்டி
யுன்னுளத் துணரச சொல்கே னென்றவ னுரைப்ப தானுன்
பன்னுநான் மறைவ லாளர் குலத்தினுற் பவித்துப் பாவப்
புன்னிலைப் புலைய ரில்லிற் புகுந்தரும புலவு தின்றேன்.

(இ - ள்.) என்னுடைய முற்பிறப்பின் தன்மையை முதலில் எடுத்துணர்த்தி, உன்மனதிற் றெளியும்படி சொல்லுகின்றேனென்று அதிரதன் விளம்பலாயினன். எல்லோராலு மேன்மையாகச் சொல்லப்படும் நால்வேதங்களை யுணர்ந்தவர்களாகிய அந்தணர் குலத்திற்றோன்றிப் பாவமாகிய இழிந்த நிலைமையையுடைய புலையர்வீட்டிற் புகுந்து தின்னுதற்கரிய புலாலுந்தின்றேன். எ - று. ()

புலைச்சிவெம் முலைக்கண் ணுள்ளம் புதைத்தரு மதுமோந் துண்டு
வலைக்கொடு நீர்வாழ் சாதி பற்பல வாரிப் போந்து
விலைக்குற விற்றுத் தீங்கட் புலவொடு சுமந்து விற்பேன்
றலைப்படு பவத்துக வெல்லை யாவரே சாற்ற வல்லார்;

(இ - ள்.) பஞ்சமர் குலப்பெண்ணின் விருப்பந்தருந் தனத்திலே மனம் வைத்து, குடித்தற்கரிய கள்ளை வாசனை பார்த்துக் குடித்து, வலையினாலே நீர்வாழ் சாதியாகிய பலவகை மச்சங்களைப் பிடித்துக் கொணர்ந்து, விலைக்குக் கேட்டோர்க்கு விற்றும், கொடிதாகிய கள்ளைப்புலால் வகையுடன் சிரமிசைச்சுமந்து சென்றும் விற்பேன். யான்செய்தபெரும் பாவங்கட்கு அளவு சொல்ல வல்லவர்கள் யாவர் ? ஒருவருமிலர். எ - று. (௬௭௪)

அவ்வழி நடக்குமெல்லை யரனுக்கென் றடைக்காய் கொள்வான்
வெவ்வழிக் கூலம் புக்காய் விரிசெவிச் சிறுகண் யானை
கவ்வுறப் பிணித்த வல்லி களைநதெதிர் கடுகுங் காலை
யெவ்வழித் தென்ன நோக்கா யோடினை யிடைவந் துற்றாய்.

(இ - ள்.) அப்படி நடந்து வருங்காலத்தில், நீ சிவபெருமானுக்காகத் தாம்பூலம் வாங்கவேண்டி நெருங்கியவழியாகிய கடைவீதியிற் சென்றாய். பரந்த செவிகளையும் சிறியவிழிகளையுமுடைய ஓர்யானை, கவ்வும்படிகட்டியிருந்த சங்கிலியையறுத்துக்கொண்டு எதிர்ப்பட்டு வருங்காலத்தில், எந்தவழியால் ஓடுவதென்பதைப்பாராதவனாய் ஓடி நடுவில்வந்து சேர்ந்தாய். எ - று. (௬௭௫)

எந்தையெம் பெருமாற் கென்ன விலையாடாய்ந்து கொள்வான்
வந்தனை கொணர்ந்த காசு மண்ணிடை வெருவி வீழ்த்துச்
சிந்தினை புழுதி முற்றுங் கிளைத்தனை தெரியக் காணாய்
நொந்தனை துடங்கி நின்றா யங்கிலே நின்னை நோக்கி.

(இ - ள்.) எமது பிதாவும் எமது பெருமானுமாகிய சிவபெருமானுக்காகத் தாம்பூலம் வாங்கும்படி கடைக்குவந்த நீ கொணர்ந்த காசைசிலமிசைப் போட்டுச் சிதறினாய். அந்தக் காசைமீண்டும் எடுக்கும்படி தெருவிலுள்ள மண் முழுவதையுந் துழாவினாய்- அது கண்ணுக்குத் தோற்றவில்லை. மனநொந்துவாட்டமெய்தி யிருந்தமையால் அத்தருணத்தில் உன்னை நோக்கி. எ - று. (௬௭௬)

யாதுநீ புழுதி கிண்டி வருந்துவ தென்னை யென்ன
மாதொரு பாகற் கிந்த வரன்முறை வழாது மற்றைத்
தீதக லடைக்காய் நல்குஞ் செய்வினை மாபி னின்றேன்
போதினு முடங்கப் பெற்றே னென்செயல் புரிவ னென்றாய்.

(இ - ள்.) நீ தெருப்புழுதியைக்கிண்டிக்கொண்டு வருந்துதற்கென்ன காரணம் ? என வினவ, உமாபிராட்டியாரை ஒருபாகத்திலுடைய சிவபெருமானுக்குக் கொடுத்துவந்த நியதிதவறாத வகையாகக் குற்றமற்ற தாம்பூலமளித்து வருகின்ற திருத்தொண்டினியற்கையிலிருந்தேன். இன்றையதினத்தில் அது தடையுறப்பெற்றேன். இனியிதற்கு யாது செயல் புரிவேனென்றாய். எ-று. (௬௭௭)

என்னனும் போக்கா நின்ற காசுதந் திடுவ னென்னைத்
தொன்னிலம் புரக்கு மன்னர் மரபிடைத் தோன்றச் செய்துன்
முன்னவ னருளுங் கொல்லோ வென்றவென் முகத்தை நோக்கி
யன்னது புரிவ தெந்தைக் கரிதல வென்ன லோடும்.

(இ - ள்.) என்று சொன்ன மாத்திரமே, நீ வீழ்த்திவிட்ட காசைத்தருகின்றேன். உனது கடவுள் என்னைப்பழமையாகிய உலகத்தைக்காக்கும் மன்னவர் மரபிற் பிறக்கச்செய்து அநுக்கிரகிப்பாரோ? எனக் கேட்ட என்னுடைய முகத்தைப்பார்த்து, அப்படிச் செய்வது எமது தந்தையாகிய சிவபெருமானுக்கு அரிதானகாரியமல்ல என்று நீ சொல்லியவுடனே. எ - று. (௬௭௮)

யானுடைப் புலைச்சி நின்று னிருங்களி யாடி யின்றேன்
கோனுடைக் குலத்துட் டோன்ற யானுமக் குலத்து வின்றேன்
றானுடைப் பாரி யாகச் சங்கரன் றருங்கொ லென்றுத்
தேனுடை யலங்கன் மார்ப தருவது திண்ண மென்றாய்.

(இ - ள்.) நான் விரும்பிய புலைச்சியும் மிகவும் கட்குடித்து மயக்குற்றிருந்தாள். அவள் அச்சமயத்தில் இவர் மன்னவர் மரபிற் பிறக்கையில் நானும் மன்னவர்குலத்தி மகளாகி இவர்க்கு மனைவியாகும் வண்ணம் சங்கரன் வரந்தருவாரோவெனச் சாற்ற, தேன் சொரியும் மலர்மாலை தரித்த மார்பினையுடையவனே! அப்படியே யனுக்கிரகிப்பது சத்தியமென்றாய். எ - று. (௯௭௯)

சிரித்தனங் களியாட் டெய்தித் தீம்புல வெடுத்து விற்றுத்
தரித்தகா சுன்பாற் றந்து போந்தனஞ் சேரி சார்ந்து
விரித்தெழு கங்குற போது போதலும் வெகுண்டு வெம்பேய்
நரிக்குலங் கடிபப வாவி துறந்தன ளுத வென்றான்.

(இ - ள்.) நாங்களிருவருமே நகைத்து, கள்ளைப்பருகி வெறி யெய்திக் கொடிய புலால்வகைகளைச் சிரமிசைத்தாங்கிவிற்று, அதனாற் றேடியகாசை உனக்குக்கொடுத்து விட்டு, புலைச்சேரிபோய்ச் சேர்ந்து, அதிகரித்துத் தோன்றும் இராக்கால மெய்தவும், கொடூரமாகிய பேய்நரித்தொகுதிகள் கடிக்கப்பயந்து நாங்களிருவரும் அப்பொழுதே யிறந்தோமென்றான். எ - று. (௯௮௦)

ஏறுகைத் திடுப்பி ரானுக் கிலையமு தடைக்காய் கொள்வா
னூறிய களியி னீந்த காசுகொண் டுலக மெல்லா
மாறொழிந் தரசு செய்யுங் குலத்துவந் துதித்தே மிந்தப்
பேறுபெற் றிருவர் நீங்காத் தன்மையும் பெறப்பெற் றேமால்.

(இ - ள்.) இடபத்தை வாகனமாகச் செலுத்தும் சிவபெருமானுக்குத் தாம்பூலம் கொள்ளும்பொருட்டு, கள்குடித்த வெறி மிகுதியாற் கொடுத்தகாசுகாரணத்தால், உலகமுழுவதையும் பகைமை நீக்கி அரசுசெய்யத்தக்க மன்னவர் மரபில் வந்து தோன்றினோம். இவ்வகைய செல்வப்பெருக்கையு மெய்தி இப்பிறவியிலும் நாங்களிருவரும் பிரியாதுள்ள தன்மையையும் பெற்றோம். எ - று

மழுப்படை பொறுத்த செங்கை வானவற் கினிநீ யைய
வழுத்துபே ரன்பி னோடும் பூசனைக் குரிய யாவு
முழுத்துறத் தருதும் வாங்கி முற்றுற முயறி யென்னப்
பழுத்தநான் மறைவல் லோனை யடிக்கடி பணிந்து நின்றான்.

(இ - ள்.) மழுவாயுதமேந்திய சிவந்த கையையுடைய சிவபெருமானுக்கு இனி நீ பேரன்போடு செய்யும் பூசைக்குரிய உபகரணங்களெல்லாவற்றையும் குறைவின்றிக்கொடுப்போம். அவற்றைப்பெற்றுக்கொண்டு அச்சிவபூசைமுற்றும்படி செய்வாயாகவென்று, முதிர்ந்த நான்கு வேதங்களில் வல்லவனாகிய வேதநன்மியெனும் அந்தணனைப் பலமுறை வணங்கி நின்றான். எ - று. ()

ஏழையங் கூடைய பெம்மான் பூசனைக் குரிய வெல்லா
மூழ்முறை புரிய வேண்டி யுள்ளுடை ந் தருகு நம்பின்
மாழைமுற் றுதவி மீண்டுத் தந்தைபால வகுத்துச் சொற்றான்
சூழ்மணி மகுட வேந்த னுவகையிற் றுளக்கங் கொண்டான்.

(இ - ள்.) உமாபிராட்டியாரை ஒரு பாகத்திலுடைய சிவபெருமான் பூசைக்குவேண்டிய எல்லாச்செயல்களையும் பண்டைய விதிமுறையே செய்ய வேண்டியதற்காக, மனங்கனிந்துருகும் அன்போடு பொன்னை மிகுதியாகக்கொடுத்துத் திரும்பிப் பிதா சுமதியினிடமெய்தி விளக்கிச்சொல்லினன். நவமணிகள் சூழ்ந்த கிரீடமணிந்த சுமதி சந்தோஷத்தோடு அச்சமெய்தினன். எ - று.

வீழ்திரை நெடுநீர் வைப்பின் வெண்ணிலாக் குழவி யூருந்
தாழ்சடை யானுக் காய வருச்சனைத் தருமங் காத்து
வாழிய ரென்ன வின்று மதிபொரு கவிகை வேந்த
ரூழ்முறை பரவ வேண்டும் வளனொடு முவக்கு நாளில்.

(இ - ள்.) அலைகள்மோதும் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில், வெள்ளிய பிறைச்சந்திரன் தவழ்கின்ற தொங்குகின்ற சடையையுடைய சிவபெருமானுக்குரிய சிவபூசைப் புண்ணியங்களைப் பாதுகாத்து, பெரியோர் யாவரும் ஆசிர்வதிக்கும்படி விளங்கி, சந்திரனைப்போன்ற வெண்கொற்றக்குடையையுடைய மன்னர்கள் தங்கள் புண்ணியத்தின்படி அதிகரிக்கும் செல்வத்துடன் களித்து வாழுங்காலத்தில். எ - று. (௩௮௪)

விழிகளா யிரமா னந்த வெள்ளநீர் குதிப்பக் கங்கை
சுழிகொள்வார் சடையி னுற்குத் தொண்டுறு மிவனை நோக்கி
வழிபடு மகவான் சிந்தா மணிபெறக் கொடுத்தான் வாழு
ளொழியுநா ளளவுங் கேட்ட வழங்குமென் றுரைத்துப் போனான்.

(இ - ள்.) சுழிகள் பொருந்திய கங்கையையணிந்த நெடிய சடையையுடைய சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்த அதிரதனெனும் இவ்விராசகுமாரனை, சிவனடிமைபூண்ட இந்திரன் தன்னுயிரம் விழிகளாலும் ஆனந்த பாஷ்பம் வெள்ளம்போற் பெருகத்தரிசித்து, தன்பாலிருந்த சிந்தாமணியை அவன் பெறக்கொடுத்து உன்னுயுள் கழியுமெல்லையும் நீ கேட்டவற்றை இம்மணிகொடுக்குமென்று சொல்லிப்போயினான். எ - று. (௩௮௫)

தெய்வமா மணிசிந் தித்த வளம்பெற சிறப்பு நல்கப்
பைவரு மகுட கோடி நெடுநிலம் பரியா நின்று
மைவருங் களத்த னேவு மானமீச் சிறந்து போனான்
மொய்ம்பொழிற் கயிலை வெற்பி னடைந்தனன் முழவுத் தோளான்.

(இ - ள்.) மத்தளம்போலத் திரண்ட தோளையுடைய அதிரதனென்னும் இராசகுமாரன், தெய்வீகந்தங்கிய சிறந்த அச்சிந்தாமணியானது அவனெண்ணிய வளங்களையடையத்தக்க சிறப்பைக்கொடுக்க, படத்தோடு கூடிய ஆயிரம் மகுடங்களையுடைய ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட பெரிய வுலகத்தையாண்டிருந்துவிடந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமான் விடுத்ததெய்வவிமானத்திலூர்ந்து சிறந்தவனாய்ச் சென்று நெருங்கிய சோலைசூழ்ந்த திருக்கைலாயகிரியிலடைந்தனன். எ - று. (௩௮௬)

கலிவிருத்தம்.

இன்னு மோர்கதை யீசன் றிருவருண்
மன்னு தொண்டர் கதிபுகு மாண்பது
பன்னு நான்மறை யீர்பகர் வேமெனத்
துன்ன ருந்தவச் சூத னியம்புவான்.

(இ - ள்.) சிவபெருமான் திருவருள் நிலைக்கப்பெற்ற அடியவர்கள் நற்கதி யெய்தும் சிறப்புடைத்தான மற்றொரு சரித்திரத்தை, நான்கு வேதங்களை யோதுகின்ற நைமிசாரணிய முனிவர்களே! கூறுவோமென்று, பிறர்க்கு அடைதற்கரிய தவம்பொருந்திய சூதமுனிவர் சொல்லுவாராயினர். எ - று. (௯௮௭)

இடப யோகியெ னுஞ்சிவ யோகிதண்
புடைய டார்ந்தெழு கற்பகப் பொன்னகர்
மடல்கோ ணுண்மலர்க் கற்பக மாலிகை
யடல்கொள் வேந்தனைக் காண்பதற கண்மினான்.

(இ - ள்.) இடபயோகியென்னும் ஒருசிவயோகியானவர், பக்கங்களிலெல்லாம் குளிர்ச்சிபெற்றுயர்ந்த கற்பகத்தரு தங்கிய தேவலோகத்தில், அதிக இதழ்கள் பொருந்திய கற்பகமலர் மாலையையும் வெற்றியையுமுடைய இந்திரனைக் காண நெருங்கினர். எ - று. (௯௮௮)

இவனெ திர்நதிடு மெல்லையி னுஞ்சினைக்
கவர்த டம்பணைக் கற்பக மன்னவ
னவணி ருந்தில னுங்கவ னீன்றருள்
குவவுத் திண்டோட் குமரனெ திர்நதனன்.

(இ - ள்.) இச்சிவயோகி சென்றதருணத்தில், பெரிய கிளைகளாற் கவரப்பட்டு விசாலித்திருக்குங் கற்பக விருட்ச நிழலிலுள்ள இந்திரன் அங்கேயில்லை. இந்திரன் ஈன்ற உருட்சியும் வலிமையுமுடைய தோள்களைப்படைத்த அவன் புத்திரன் சிவயோகியை எதிர்கொண்டான். எ - று. (௯௮௯)

சென்ற யோகி செழுமலர்ச் சேவடி
யொன்றி வாழ்த்தி யுளநெக் குருகினு
னன்று செய்வன யாவையுஞ் செய்துபொற்
குன்றெ னும்புயன் கோயில்கொண் டெய்தினான்.

(இ - ள்.) ஆங்கெழுந்தருளிய சிவயோகியின் செழித்தமலர்போன்ற செவந்த திருவடிகளைவணங்கித் துதிசெய்து, மனங்கசிந்துருகி அப்போது செய்ய வேண்டிய உபசாரங்களை யெல்லாஞ் செய்து பொன்மலைபோலப் பூரித்த புயங்களையுடைய அவ்விந்திரன் மகன், அரண்மனையினுள்ளே யழைத்துக்கொண்டு போயினன். எ - று. (௯௯௦)

சீய மேந்துஞ் செழுமணி யாசன
மீயு யர்த்திவெ ருக்கொடு மென்மலர்
வாய்பு தைத்தும ருங்குநின் றுனரோ
வாய வன்றனை யறபுற நோக்கினான்.

(இ - ள்.) சிங்கங்கள் தாங்குஞ் செழுமைதங்கிய இரத்தினபீடத்தின்மேல் வீற்றிருக்கச் செய்து, மிகவும் அச்சமெய்தியவனாய், சிறுநாவாகிய மலர்போலும் வாயினைப்பொத்திக்கொண்டு ஒருபுறத்தில் நின்றான். அவ்விந்திரகுமாரனைச் சிவயோகி அன்புடன் பார்த்தனர். எ - று. (௯௯௧)

உந்து மாதவத் தன்னையு வந்தரு
டந்தை யாங்க ணொருமுனி சாறறலும்
விந்தை கேள்வன் விசுற்பன் கயிலைவா
ழெந்தை பாற்புகல் காண்பென் றேகினான்.

(இ - ள்.) செலுத்துகின்ற பெருந்தவத்திஞற் களித்து, உன்னையீன்ற தந்தை எங்கிருக்கின்றாரெனச் சிவயோகி வினவியவுடனே, வீரலட்சுமியின் தலைவனாகிய விகற்பனென்பவன் திருக்கைலையில் வாழ்கின்ற எமது பிதாவாகிய சிவபெருமானிடத்தில் அவர் திருமேனியைத் தரிசிக்கும்படி போயினன். எ-று.)

என்னு மாத்திரை யிந்திர னெய்திஞன்
மன்னு மாதவ யோகி மலரடி
பொன்னி லங்கு முடிதொடப் போற்றிநின்
றன்ன காலைய ருச்சனை யாற்றிஞன்.

(இ - ள்.) என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அங்கே இந்திரன் வந்துவிட்டனன். அங்கெழுந்தருளியிருந்த பெருந்தவமுடைய சிவயோகியின் தாமரைமலர்போன்ற திருவடிகள், பொன்மயமாக விளங்கும் கிரீடத்திற்படும்படி வணங்கி நேரில் நின்று அப்பொழுதே அவரைப்பூசித்தான். எ - று. ()

ஈது நோக்கியி ரங்கிய மாதவன்
யாது காரண மேகிய தாங்கனென்
ருேது காலை வெருவரு முள்ளத்தான்
ருேது லாமுடி யிந்திரன் சாற்றுவான்.

(இ - ள்.) இவ்வழிப்பாட்டினைக் கண்டு திருவுள்ளங்கனிந்த சிவயோகியானவர், அக்கைலாயகிரிக்கு என்ன காரணமாகச் சென்றிருந்ததென வினவியபொழுது, பொன்மயமாகிய கிரீடமணிந்த இந்திரன் அச்சமுற்ற சித்தமுடையவனுய், சிவயோகிக்குச் சொல்லுகின்றான். எ - று. (௩௯௨)

வெள்ளி வெண்குடை வேந்தன்வி கற்பனென்
றுள்ள வன்றென் கயிலைசென் றுற்றனை
னள்ளொ திர்நதிடை நோக்குற நண்ணினேன்
வள்ளி யோய்நின் வரவும னக்கொளேன்.

(இ - ள்.) வெள்ளிபோலும் வெண்கொற்றக் குடையையுடைய விகற்பனென்னும் பெயரெய்திய அரசன், அழகிய கைலாயபதவியெய்திஞன். இடையில் அவனை யெதிர்கொண்டு அவனைக்காணும்படி கைலையங்கிரிக்குப் போயினேன். வள்ளற்றன்மை மிக்கவரே. தேவரீருடைய வருகையையும் அடியேன் கருதவில்லை. எ - று. (௩௯௩)

எனவு ரைப்பவி ருந்தவ யோகியு
மனைய வேநதன் கயிலைய டைந்துறப்
புனைசெய் மாதவம் யாதெனப் பொன்னகர்க்
கனைபொ லன்கழல் வேநதன் கழறுவான்.

(இ - ள்.) என்றிப்படி இந்திரன் சொல்ல, அதனைக்கேட்ட பெருந்தவமுடைய அச்சிவயோகி, அம்மன்னவன் கைலாயபதவியெய்தும்படி அழகோடு செய்த பெருந்தவம் யாதென வினவ, தேவலோகத்தை யாளும் சத்திகின்ற பொன்ஞலாகிய வீரகண்டாமணி தரித்த அரசஞகிய இந்திரன் இயம்பலாயினன். எ - று. (௩௯௪)

கண்ண குச்சர மென்றொரு கண்ணகன்
வண்ண நாட்டினி ராட வளநக
ரண்ணல் யானை யரசிளங் கோமக
னென்னு மந்திரி மைந்தனொ டேகியே.

(இ - ள்.) கண்ணகுச்சரமென்னும் பெயர் பெற்ற விசாலமான அழகிய ஒரு நாட்டிலே, வளப்ப மிகுந்த விராடமென்னும் நகரத்தை யரசு செய்யும் பட்டத்தியானையையுடைய அரசிளங்குமரனானவன், எல்லோராலும் மதிக்கத் தக்க மந்திரியினுடைய புத்திரனுடன் கூடிச்சென்று. எ - று.　(௱௯௭)

சூத லாது தொழிலொன் றியற்றுரர்
தீத லாதொரு செய்வினை செய்தாரர்
தாதை கண்டுச லித்துறத் தாழ்கலார்
போதிர் மற்றொரு நாட்டெனப் போக்கினார்.

(இ - ள்.) சூதாடு தொழிலேயன்றி வேறொரு தொழிலுஞ் செய்யார்கள். ஒரு தீமையேனுமில்லாமல் செய்யுங் காரியங்களொன்றுஞ் செய்யமாட்டார்கள். தந்தையார் இவர்கள் செயலைநோக்கி மனவெறுப்பெய்தியும் தங்கள் தொழிலிற் குறைந்தவர்களல்லர். ஆதலின் அவர்களிருவரையும் வேறொரு நாட்டிற்குப்போகுகவெனத் துரத்திவிட்டார்கள். எ - று.　(௱௯௮)

அன்ன நாடகன் றப்புறச் சேணெறி
மன்னு நாடு புகுந்தனர் வல்லிரு
ளுன்னு காலைப் பிறர்மனைத் தொல்பொரு
ளுன்னி வவ்விப் புலைவயி றோம்புவார்.

(இ - ள்.) அத்தகைய நாட்டை விலகி, அதற்கப்புறத்திலே, வெகு தூரத்திலுள்ள ஒரு நாட்டையடைந்தார்கள். கொடிய இருள் நிரம்பிய ஓரிரவில், அயலார் வீட்டிலிருந்த பண்டைய திரவியங்களைக் களவாடக்கருதித்திருடி, இழிவானவயிற்றை நிரப்பிப் புசித்துவந்தார்கள். எ - று.　(௱௯௯)

கள்வ ரோடுக ரந்தனர் காம்புரத்
துள்பு குந்துக ரந்தன ரொண்பொருள்
வெள்ளி டைப்புறம் போதலும் வேற்றவர்
கொள்ளை யம்பொற் குடங்கொடு போயினார்.

(இ - ள்.) திருடர்களோடு கூடித்திருடுபவர்களாய், காம்பீரமுள்ள ஒரு வீட்டிற்குள்ளே புகுந்து, ஒளி பொருந்திய திரவியங்களைக் களவாடினார்கள். அதன்பின், அந்நகரத்தின் புறத்திலுள்ள வெளியிடத்திற்கு வந்த வுடனே. இவர்களோடு சேர்ந்த ஏனைய திருடர்கள் பெருந் தொகையுள்ள அழகிய பொற்குடங்களைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். எ - று,　(௨௦௦)

ஈங்கி வர்க்கெனத் தண்டுல மேற்றிடும்
வீங்கு கொள்கலம் வெய்துற வேட்கையி
னோங்கு மாநிதி யென்றெடுத் துற்றனர்
பாங்கர் நீணெறிப் பாரமென் றுய்த்தனர்.

(இ - ள்.) அத்திருடர்கள் தங்களோடு வந்த இவ்விருவருக்கும் உதவியாகும் படி [தண்டுலம்] நெல் நிரப்பியிருக்கும் பெரிய தானிய பாத்திரங்களை விட்டு விட்டுச்செல்ல, அவற்றை மிகவிரைவோடு ஆசையாலே, பெருந்திரவியமென்று எடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படி வருகையில் மிகச் சுமையென்று வழியில் விறக்கினார்கள். எ - று.　(௨௦௧)

உய்த்த பார முடனவிழ்த் தாள்ளவர்
வைத்த யாவென நோக்க வரியமா கூஞ்
சுத்த தண்டுலங் கண்டுள ளங்கிமீண்
டெய்த்தி ரங்கியெ டுக்குமி டுக்கிலார்.

(இ - ள்.) இறக்கிய சுமையைச் சீக்கிரமாக அவிழ்த்து நோக்கி அவ்வீட்டிலுள்ளவர்கள் அதில் வைத்த பொருள்கள் எவை யென்றுபார்க்க, வரிகள் பொருந்திய சுத்தமாகிய நெல்லைக்கண்டு, மனங்கலங்கிச் சோர்வெய்தித்துக்கித்து, மீண்டும் எடுத்துச்செல்லும் வலிமையற்றவர்களாய். எ - று. (௪௦௨)

அட்ட மைக்கும ரிக்குள லேகமொன்
றிட்டி ருந்ததெ டுத்தய லிட்டனர்
பட்ட யாரமெ டுக்கப படுகலார்
விட்டொ ழிந்தனர் வேட்கைவெ தும்புவார்.

(இ - ள்.) இப்பாத்திரத்திலுள்ளே சேர்க்கப்பட்டிருந்த நெல்லினுள்ளே [ஆலேகம்] வெள்ளையொன்று வைக்கப்பட்டிருந்தது. அதனை யெடுத்துப் புறத்தே யெறிந்தார்கள். பேராசையோடு வருந்துகின்ற அவ்விருவரும் சுமந்துவந்த சுமையைச் சுமக்கமாட்டாதவர்களாய் அங்கேயே விட்டுவிட்டார்கள்.

ஆய காலையொ ரந்தண னுங்கவன்
பாய வெள்விடைப் பண்ணவற் காட்படுந்
தூய சிந்தையன் றோன்றினன் றோன்றலு
மேய வற்கொணர்ந் தேற்றுதி யென்றனர்.

(இ - ள்.) அப்பொழுது, அங்கே பாய்ந்து செல்லும் வெண்ணிறந்தங்கிய இடபவாகனமுடைய சிவபெருமானுக்குத் தொண்டுபூண்ட புனிதமான மனந்தங்கிய ஓரந்தணன் வந்தனன். அப்படி வந்தவுடனே, அவனை யழைத்துவந்து, இச்சுமையைத் தலையின்மே லெடுத்துக்கொள்க வென்றார்கள். எ - று. (௪௦௪)

அந்தவேதிய னுங்கவர்ப் பார்த்துளம்
வெந்த முற்றும் பசியின் வெதும்பினேன்
சிந்தை சேவுயர்த் தோற்கெனச் சேர்த்துநின்
றய்ந்த வேடத்தி னெனென்று ரைத்தலும்.

(இ - ள்.) அப்பொழுது அந்தப் பிராமணன் அவர்களிருவரையும் பார்த்து மனதை இடபக்கொடியையுடைய சிவபெருமானிடஞ்செலுத்தி அந்நிலைமையிலிருந்து தினங்கள் கழித்துவந்த தன்மையுடைய நான், வருத்துகின்ற பசியினாலே மனம்வருந்தி வாட்டமெய்தினேன் எனச்சொல்லியவுடனே. எ - று,

பார மீதிறக் கப்படுங் காலையிற்
சோர வீழ்ந்தவ ரிசைத்து டைத்துநீ
வாரி மற்றைய லேகம்வ முங்கினே
மூர கங்கொடு போதியென் றோதினார்.

(இ - ள்.) இந்தச் சுமையை நீ யிறக்குகின்ற காலத்தில் இவற்றினின்றும் சிந்துகின்ற நெற்களையெல்லாம் வாரியெடுத்துக்கொள்ளுவதோடு அதினுள்ளேயிருக்கும் வெள்ளேட்டையுங் கொடுக்கின்றோம். அவற்றை உன்னூருக்குக் கொண்டுபோகக்கடவை யென்று சொன்னார்கள். எ - று. (௪௦௬)

எடுத்த பார மிவர்கொண் டியங்கிஞ
ரடுத்த வூரி னகவை யடங்கிஞ
ரொடுர்க்கும் பூந்துண ரோதியொ ருத்திபான்
மடுத்த சிந்தைய ராகிம றங்கொள்வரர்.

(இ - ள்.) தாமெடுத்துவர்த சுமையை இவ்வேதியனைச் சுமக்கச்செய்து அழைத்துச்சென்று, அயலூரில் இறக்கினார்கள். அங்கே பூங்கொத்துகளை யணிந்த கூந்தலையுடைய வொருத்தியின்மேல் மிக்க விருப்புடையவர்களாகி, அதனால் ஒருவரோ டொருவர் விரோதப்பட்டார்கள். எ - று. (௪௦௭)

காதற் காமங் கடுஞ்சின மூட்டலால்
வாதித் தாரவர் தங்கர வாட்படை
சேதிப் பத்தம தாவிசி தைந்தனர்
பேதித் தாகம்பி ளந்திற வீழ்ந்தனர்.

(இ - ள்.) காமவிருப்பு தீராக்கோபத்தை யுண்டுசெய்து விட்டமையின், போர்புரிந்த அவர்களிருவருந் தங்கடங்கள் கையிலேந்திய வாட்படையே துணிபடுத்த மாறுபட்டுத் தேகம் பிளவுபட்டு இருவருங் கீழே விழுந்திறந்தார்கள்.

அண்ணல் வெள்விடை யோற்கமு தாகவக்
கண்ணுற் றுக்கடி மைத்திறங் காட்டியோ
னுண்ணு தற்கென வொள்ளரி சிந்திட
மண்ணில் வீழ்ந்தவ ழுங்கும ரபினால.

(இ - ள்.) சிறப்புத்தங்கிய வெண்ணிறமுடைய இடபவாகனராகிய சிவபெருமானுக்குத் திருவமுதாகும்படி, நெற்றிக்கண்ணையுடைய அப்பெருமானுக்குத் தொண்டு பூண்டுள்ள வேதியன் புசிப்பதற்காக, மண்மிசைவீழ்ந்து சிந்திய தெள்ளிய தானியத்தைக் கொடுத்த தன்மையால். எ - று. (௪௦௯)

அன்ற ளித்தவ லேகத்தி னுடகங்
குன்ற வில்லி ரிதைகு றிதத்து
நன்றி யோர்திரு நாமந விற்றலா
லின்றிம் மானமி வர்க்கெளி தாயதே.

(இ - ள்.) தானியத்துடனே அன்று கொடுத்த வெள்ளேட்டில், மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் சரிதம் வரையப்பட்டிருந்தது, அதை அவ்வேதியன் வாசிக்கையில், சர்வான்மாக்களுக்கும் நன்மைபுரிபவராகிய சிவபெருமான் திருநாமத்தை யோதியபடியால், இன்று இத்தெய்வவிமானம் இவ்விருவர்க்கும் எளிதாயிற்று. எ - று. (௪௧௦)

யானு மென்னுடை யிவ்வுல கத்துள
வான நாடரு மங்கையர் யாவருங்
கான மார்ந்தது ழாய்முடிக் கண்ணியோன்
ருனு முந்தியந் தாமரைச் செல்வனும்.

(இ - ள்.) அடியேனும் அடியேனுடைய இத்தேவலோகத்திலுள்ள தேவர்களும் தேவமாதர்களுமாகிய வெல்லோரும், நறுமணந்தங்கிய துளவமாலையணிந்த முடியையுடைய திருமாலும், அவர்நாபிக் கமலத்திலுதித்த புதல்வராகிய பிரமதேவரும். எ - று. (௪௧௧)

மற்றை யோரும்வ ரன்முறை யேத்தியே
அற்ற நாண்மலர் மாரிசொ ரிந்திடப்
பெற்ற துந்துமி பேரிய மார்ப்புறச்
சொற்ற தேவக ணத்தவர் சூழ்வர.

(இ - ள்.) பிறரும் கிரமமாகத் துதித்து, நெருங்கிய புதியபுட்பங்களை மழையாகச் சொரியவும், இவ்வுலகத்தி லிருப்பதாகிய தேவதுந்துமியும் சிறந்தவாத்தியங்களும் முழங்கவும், யாவருந் துதிக்கின்ற தேவகணங்கள் அவ்விருவர்களையும் புடைசூழ்ந்துவரவும். எ - று. (௪௧௨)

போயி னார்நங் கயிலைபு குந்தனர்
நாய கன்திரு முன்னரி னண்ணினு
ரேய யானுமு டன்புகுந் தெய்தினேன்
றூய சேவடி சென்னியிற் சூடினேன்.

(இ - ள்.) போனவர்களாய்த் திருக்கைலாயமடைந்து நமது தலைவராகிய சிவபெருமான் திருமுன்னடைந்தார்கள். அவர்களோடு பொருந்தும்படி அடியேனும் போய்ச் சேர்ந்து, அவர்களுடைய புனிதமான பாதங்களைச் சிரமேற் சூடிக்கொண்டேன். எ - று. (௪௧௩)

கற்றை வார்சடைத் திங்களங் கண்ணிவெம்
பெற்ற மேறும்பி ரானுருப் பெற்றன
ருற்றொர் பாகத் துடனிருந் தார்மழு
வெற்றி யாளனை யார்வியந் தேத்துரூர்.

(இ - ள்.) தொகுதியாய் நீண்ட சடையில், சந்திரனாகிய அழகியமாலையணிந்து, விருப்பந்தரும் இடபவாகனமூரும் சிவபெருமானது திருவுருவமெய்தினர் ஆதலால், ஒருபாகத்தில் உமாதேவியையுடையவராய் வீற்றிருப்பவராகிய வெற்றிதங்கிய மழுப்படைதாங்கிய சிவபெருமானை யார் தாம் களித்துத் தோத்திரம் புரியாதர்கள்? எ - று. (௪௧௪)

போந்த னனப் புராதன வேற்றுடை
யேந்த லைத்தொழும் பேறுவந் தெய்தினேன்
பூந்த டஞ்சினைக் கற்பகப் பொன்னகர்
சார்ந்த நின்னடித் தாமரை தீண்டலால்.

(இ - ள்.) அழகிய விசாலமான கிளைகளையுடைய கற்பகவிருட்சத்தையுடைய இத்தேவலோகம் இங்கெழுந்தருளிய தேவரீர் பாததாமரைகளைப் பரிசித்ததன்மையால், அடியேன் திருக்கைலாயமெய்தி, இடபவாகனமுடையமுன்னோராகிய சிவபெருமானை வணங்கும் பேற்றினை மனக்களிப்புடன் பெற்றேன்

என்றெ டுத்திசைத் தானிமை யோரிறை
புன்ற லைத்தொடைப் புங்கவன் புண்ணிய
நன்று நன்றென நாவினை விற்றினு
னின்ற யோகியி லையரி கழ்த்துவான்.

(இ - ள்.) என்றிவ்வாறு இந்திரன் விரித்துக்கூறினன். அதுகேட்ட சிவயோகி, அற்பமாகிய சிரமாலையணிந்த புனிதராகிய சிவபெருமானுக்குரிய சிவபுண்ணியத்தின் மகிமை சிறந்ததென்று தன் நாவினுலுரைத்து, இப்படி மேலுஞ் சொல்லுகின்றார், எ - று. (௪௧௫)

ஈது கண்டுநீ றதிசய மெய்தினை
யாதி காலத்தநாலுல கெய்தியாம்
போது மெல்லை யுலகிற் புதுமையொன்
றோது காட்டியி யம்பிய துங்கேளோடு

(இ - ள்.) இதனைக்கண்டு நீ யதிசயமடைந்தனை. முன்னொருகாலத்தில் நாம் சிவலோகமடைந்து திரும்புங்காலத்தில், நிலவுலகத்திற் கண்ட புதுமையைக் காரணத்தோடு சொல்லுகின்றோம். கேட்பாயாக (என்று, சிவயோகி சொல்லத் தொடங்கினார்.) எ - று. (௪௧௭)

நன்ன லக்குட கத்திரு நாட்டகம்
பன்ன ருஞ்சவு பாக்கிய மென்றுள
தந்ந கர்க்கு ளதிகண்ட னென்றுளான்
மன்னு நான்மறை யோர்வழி வந்தவன்.

(இ - ள்.) நற்சிறப்புடைய குடகமென்னும் பெரிய நாட்டிலே, சொல்லு தற்கரிய சவுபாக்கியமென்னும் ஒரு நகர முள்ளது. அந்நகரத்திலே நிலைபெறுன சதுர்வேதங்களுக்குரிய அந்தணர் குலத்திற் பிறந்தவனாய் அதிகண்டனென்பா னொருவனிருந்தான். எ - று. (௪௧௮)

வால னாகி மறுகயர்ந் தாடுநாட்
கால காலனங் கண்ணெனு மாமணி
யேல வேகண் டெடுத்தனு மச்சிறு
பால கன்றற பயந்தவற் கீந்தனன்.

(இ - ள்.) பாலியபருவ முடையவனாய், தெருவில்வந்து விளையாடுகின்ற காலத்தில், காலகாலனாகிய சிவபெருமானுடைய கண்ணென்று சொல்லப்படும் உருத்திராக்கமணிமாலையைக் கண்டெடுத்தவுடனே, அச்சிறுபாலன் அதனைத் தன்னைப்பெற்ற தந்தையிடங் கொடுத்தான். எ - று. (௪௧௯)

வாங்கி னானம் மணிக்குல முன்னரே
தாங்கி னைத் தனிமணி தன்னையன்
றாங்க வன்களத் திற்புனை தானரோ
வீங்கு சிந்தையு வகையி னைத்தெழ.

(இ - ள்.) அவன்பிதா, உருத்திராக்க மாலையை வாங்கி முதலிலேயேதான் சிரமிசைத் தரித்துக்கொண்டு, தன்மனத்தே மிகுத்துதித்த பெருங் களிப்பு வெளிப்பட, அப்பொழுதே ஒப்பற்ற அவ்வுருத்திராக்க மணிமாலையை அவ்வதி கண்டன் கழுத்திலணிந்தனன். எ - று. (௪௨௰)

பின்னை யந்த மணியின் பெருமையை
யுள்ளு றாதவன் றொண்டுக் குரியனோர்
வெள்ளை நீறணி மேனியன் பிள்ளைபால்
வள்ளி யோரின் வழங்கின னமரோ.

(இ - ள்.) புதல்வனாகிய அதிகண்டனென்பவன், அவ்வுருத்திராக்க மணி மாலையின் பிரபாவத்தைக் கருதாதவனாய், சிவபெருமான் பணிவிடை செய்தற் குரியவனும் திருவெண்ணீறணிந்த திருமேனியுடையவனுமாகிய ஒரு சிவபக்த னுடைய புதல்வனிடத்தில் வள்ளலென்ன கொடுப்பதுபோலக் கொடுத்துவிட் டான், எ - று. (௪௨௧)

அக்க மாமணி யீந்தநி கண்டனோர்
மிக்க மாமணி மானம்வி ளங்குறத்
தொக்க வெள்ளிப் பருப்பதந் துன்னினான்
முக்க ணான்செயல் யாவர் மொழிகுவார்.

(இ - ள்.) பெருமைதங்கிய உருத்திராக்கமணி மாலையைக் கொடுத்து, அதனால் ஒப்பற்றதாகி மேம்பட்ட அநேக இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தெய்வவிமானம் நேரேவரவும், அதிலூர்ந்துகொண்டு, வெள்ளிமலையாகிய திருக் கைலாயத்தை யெய்தினன். ஆதலால் மூன்று கண்களையுடைய சிவபெருமான் கிர்த்தியங்களை எவர்தாம் சொல்லுவார்கள்? எ - று. (௪௨௨)

என்று முன்ன ரிடபனை டுத்தெடுத்
தன்று வானுல காள்பவற் கோதிய
தின்று மக்கென் றெடுத்துரைத் தேமெனத்
துன்ற ருந்தவச் சூதன் முடித்தனன்.

(இ - ள்.) என்று இப்படி இடபயோகி யென்பவர் அக்காலத்தில் தேவ லோகத்தை யாண்ட இந்திரனுக்கு முன்னர் எடுத்து விளக்கிச்சொன்னதை, இக்காலத்தில் உங்களுக்காக விரித்துச்சொன்னோமென்று, அரியதபோபலம் வாய்ந்த சூதமுனிவர் சொல்லிமுடித்தனர். எ - று. (௪௨௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செய்ய மாதவம் யாவையு மொருவழித் திரண்டுரு வெடுத்தாங்கு
மெய்யெ டுத்தனை யெம்மனோர் வேண்டுழி யருமறை விரித்தோதும்
பொய்யில்கேள்வியோய் நின்னுழையுணர்ந்தவிப் புண்ணியப்பொருளெல்லாங்
கைய ரிக்கொள நின்றனம் புரிதவப் பயனிது கண்டேமால்.

(இ - ள்.) நாங்கள் செய்யும் பெருந்தவங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வடி வெடுத்தாற் போன்ற திருமேனியுடையவரே! எம்மவர்கள் விரும்பியகாலத்தில் அரிய வேதார்த்தங்களை விரித்துச் சொல்லும் உண்மையான நூலாராய்ச்சி யுடையவரே! தேவரீர் பால் உணர்ந்துகொண்ட இச்சிவபுண்ணிய மகிமைகள் யாவும் தேடிக்கொள்ள விரும்புகின்றோம், நாங்கள் இதுகாறுஞ் செய்துவந்த தவப்பலனாக இதனையடைந்தோம். எ - று. (௪௨௪)

வெண்ணி லாக்கொழுந் தொழுகிய பகீரதித் திரைபொர விரிவேணிக்
கண்ணு தற்பர னருளிய வரன்முறை கேட்பவர்க் கடுத்துன்பா
னண்ணி யித்தனை கேட்டன மாதவி னவையுமு குணநோன்பின்
புண்ணி யப்பெரு மாதவ வுயர்ந்தன மென்றுநர் புலம்வென்றார்.

(இ - ள்.) ஐம்புலன்களை வென்ற நைமிசாரணிய முனிவர்கள், வெள்ளிய சந்திரன் தவழும் கங்கையின் அலைகள் மோதவிரிந்தசடையையும் நெற்றிக்கண் ணையுமுடைய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய வேதாகமங்களைக் கிரம மாகக் கேட்பவர்போல, தேவரீர் பாலெய்தி இவ்வளவுங் கேட்டுணர்ந்தோம். ஆதலால், குற்றமற்ற நற்குணத்தோடு செய்ததவத்தால் புண்ணிய மிக்கபெருந் தபோநிதியே! நாங்களும் மேன்மையுற்றோமென்று சொன்னார்கள். எ - று. ()

விரித ரப்படுத் துணர்த்திய யாவையு முணர்த்தனம் விடைப்பாகன்
சரிதை நான்முறை கேட்பவ ருரைப்பவர் தனித்தனி யிவர்க்கெம்மான்
புரிதல் காதல் கொண்டுணர்த்துதி யென்றனர் புலன்கடந் தொருவாது
புரியு மாதவத் தந்தண ருங்கவர்க் கவ்வழி புகல்கின்றான்.

(இ - ள்.) விரிவாகத் தெளிவுறப் போதித்தவற்றையெல்லாம் தெளிந்தோம். இடபாரூடராகிய சிவபெருமான் சரிதைகளைப் புராணமுறையாய்க் கேட்பவர்களும் சொல்லுபவர்களும் ஆகிய இவர்கட்கு வெவ்வேறாக எமது சிவபெருமான் அநுக்கிரகிப்பதை விருப்போடு உபதேசித்தருள்வீரென்று வேண்டினார்கள். ஐம்புலன்களை நிக்கிரகித்து இடைவிடாது செய்கின்ற பெருந்தவமுடைய சூதமகாமுனிவர், அந்நைமிசாரணிய முனிவர்களுக்கு அப்படியே திருவாய் மலர்ந்தருள்வாராயினர், எ - று. (௪௨௧)

சிவபுண்ணிய மான்மிய சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௧௦-க்குத் திருவிருத்தம் ௧௯௩௩.

பதினொன்றாவது

சிவபுராணமான்மிய சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஊட்ட ரக்கெழுங் கொழுந்துவிட் டனையதோர் புன்சடை யொருநீவிர்
கேட்ட கேட்டவ ருரைப்பவ ரிவருறை யன்புமீக் கிளைத்தோட
வேட்டி ரங்கியோர் பெற்றன யான்சொலுஞ் சுருக்கமோ விடையூர்தி
தாட்டு ணைக்கரந் தொளிமய மாகுவர் சத்தியந் தவறுதால்.

(இ - ள்.) உருக்கிய அரக்குக்கொழுந்து விட்டெழுந்ததுபோன்ற ஒப்பற்ற சிறு சடையையுடைய நீங்கள் கேட்ட சிவபுராணத்தைச் சிரவணஞ் செய்தவர்களும் உபதேசித்தவர்களுமாகிய இவ்விருவரிடத்திலும், உண்மையன்பு அதிகரிக்கும்படி விருப்பங்கொண்டு மனமுருகினவர்களும் அடைந்த பதவியை நான் சொல்லச் சுருக்கமானதோ? இவர்கள் யாவரும் இடபாரூடராகிய சிவபெருமான் திருவடிகளிற் சேர்ந்து சோதிமயமாவார்கள். அஃதுண்மை எப்பொழுதும் பிசகாது. எ - று. (௧)

நடத்து மூவறு சரிதையுண் முக்கணன் சரிதைநா யகமென்றே
யெடுத்து ரைப்பது சுருதிமற் றுநம மிப்படி யெடுத்தோதுங்
கடுக்க ளத்தனுக கன்புடைத் தாகிய புராணகா தையை யன்றோன்
றொடுத்த சோதிமா மயமெனப் பகர்வர்நற் றொண்டரிற் றலைநின்றோர்.

(இ - ள்.) வழங்குகின்ற பதினெண் புராணங்களுக்குள்ளே திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் சரித்திரங்களாகிய சிவபுராணங்கள் (பத்தும்) சிறந்தனவென்று வேதங்கள் விளக்கிச்சொல்லுகின்றன. விஷந்தங்கிய கண்டமுடைய சிவபெருமானுக்கு உண்மையன்பு பொருந்தியுள்ள அச்சிவபெருமானுக்குரிய சிறந்த சோதிஸ்வரூபமென்று, மேன்மை தங்கிய நல்ல அடியவர்களில் மேம்பட்டவர்கள் சொல்லுவார்கள், எ - று.

மழலை யின்றமென் குதலையா யிமயமீன் றளித்தருண் மலர்க்கொம்பே
யிழைபொ ருந்துணை வனமுலை கேட்டியென் றிறைவியா லெமையாளுங்
குழக னெம்பிரா னெடுத்தெடுத் தருளினா னங்கது குறைதீர
விழைவு மாதவத் தலைவிர்காள் கேட்டிரென் றாழ்முறை விரிக்கின்றான்.

(இ - ள்.) மழலையென்னும் நிரம்பாத மெல்லிய குதலைச்சொல்லையுடையவளே! இமயாசல மன்னன் பெற்றெடுத்த பூங்கொடிபோல்பவளே! இழைபோலும் நுண்ணிய இடையுடனே போராடுகின்ற அழகிய இருகுசங்களையுடையவளே! கேட்பாயாகவென்று, உமாதேவியாரிடத்தில் எம்மையாட்கொண்ட எமது சிவபெருமான் விளக்கி விளக்கித் திருவாய்மலர்ந்தருளினர். அச்சரிதையை மனக்குறைவகலவிரும்பும் பெருந்தவத்தலைவர்களே! கேட்பீர்களாகவென்று சூதமுனிவர் முறைப்படி சொல்லுகின்றனர். எ - று. (௯)

எழுதி யோர்ந்துணை ரெம்முழைச் சரிதைகேட் டிருப்பவ ரிரக்கங்கூர்ந்
தழுதல் விம்முத னாத்தடு மாறுத லணிமயிர்ப் புளகெய்தித்
தொழுத லெய்தினோர் பெறுகுவ தியாமலாற் சொலற்கரி தெவர்க்கேனு
பழுதி னான்மறை நூலுக்கு மின்னணம் பகர்வது பல்லூழி. [ம்

(இ - ள்.) எழுதிப்படித்தறியத்தக்க எமது சரித்திரத்தைச் சிரவணஞ்செய்துகொண்டிருப்பவர்கள், மனககனிவு மிகுந்து அழுதலும் கண்டம் விம்முதலும் நாத்தழுதழுத்தலும் அழகிய மயிர்க்கூச்செறிந்து பணிதலுமாகிய இக்குறிகளடைந்தோரென்றும் இவர்களடைகின்ற பதவியை நாமேயன்றி வேறெவர்களாயினும் எடுத்துச்சொல்வது அசாத்தியமாகும். பழுதற்ற நான்கு வேதங்களின் கருத்தும் இப்படியே பல ஊழிகாலங்களாக முறையிடுகின்றன.

கேட்க வேண்டுழி யெம்முழைச் சரிதையே கேட்டுற மனனோங்கு
வேட்கை மிக்குற நினைப்புழி யெம்மையே நினைப்புற விருப்பற்ற
வாழ்க்கை யாமெனைத் தாமென மதிப்புற வருத்துவ தெங்காதை
தாழ்த்த சிந்தையிற் கேட்பன மற்றொரு புண்ணியஞ் சரியென்றே.

(இ - ள்.) சரிதம் ஏதாவது கேட்கவிருப்பமுண்டானால் எமது சரிதமே கேட்கவேண்டும். மனத்திற்றோன்றிய ஆசை அதிகரிக்க எண்ணும்போது எம்மைத் தியானிக்கவேண்டும். இகலோக வாழ்க்கையின் விருப்பம் நீங்கிய படியால் எம்மையே தாமாக மதிக்கத்தக்க தன்மையை வருவிப்பதாகிய எமது சரித்திரத்தை மனவுருக்கத்தோடு கேட்பதற்கு வேறொரு புண்ணியமும் ஒப்பாகமாட்டாது. எ - று. (௰)

எனவு ரைத்தன னம்பிகைக் கெம்பிரா னிருந்தவத் துறையீரு
மனனு ணர்ந்தறி யாகம புராணமு மளவொழி மறைநூறு
மினமு மப்படி யெடுத்தெடுத் துரைப்பன விதுமதிச் செருக்கன்றே
யனன டந்தரு புராந்தகன் புராணமுற் றளப்பதே யழகம்மா.

(இ - ள்.) என்றிப்படி எமது சிவபெருமான் உமைபிராட்டியாருக்குப் போதித்தருளினர். ஆதலால் பெரிய தபோதநியிலுள்ளவர்களும் மனதில் ஆராய்ந்துணரத்தக்க சிவாகமங்களும் சிவபுராணங்களும் எண்ணிறந்த வேத சாஸ்திரங்களும் மற்றுள்ளவைகளும் அப்படியே விரித்து விரித்துச் சொல்லுகின்றன. இது என் மனோகர்வத்தாற் சொல்லியதல்ல. ஆதலால், அக்கினியில் தாண்டவம் புரியும் திரிபுராந்தகராகிய சிவபெருமானுக்குரித்தாகிய புராணங்கள் முழுவதையும் ஓதுவதே சிறப்பாகும். எ - று. (௧௧)

ஈது ணர்ந்தருள் வியாதனெம் பாலெடுத் திசைத்ததோர் பெருங்கதை
யோது சாலுவ மென்றுள நாட்டகத் தொருபெரு நகரவ்வூர்
காது காமகண் டப்பெய ருடையதக் கடிநகர் நெடுங்கோட்டுச்
சீத நாண்மலர்க் கற்பக நாட்டினுஞ் சிறப்புடைத் தெனலாமால்.

(இ - ள்.) இவற்றை யுணர்ந்து, திருவருள்கொண்டு வேதவியாசமுனிவர் எம்மிடத்தில் விரித்துச்சொல்லிய பெரிய சரிதம் ஒன்றுள்ளது. அஃதென்ன வெனில், யாவரும் புகழத்தக்க சாலுவமெனும் பெயர் பெற்ற ஒரு நாட்டில் ஒரு பெரிய நகரமுள்ளது. அந்த நகரமானது விரிவுபடுத்துங் காமகண்ட மெனும் பெயரையுடையது. காவல் பொருந்திய அந்நகரமானது நெடிய கிளை களில் குளிர்ச்சிபொருந்தி யன்றலர்ந்த மலர்கள் பொருந்திய கற்பகத்தருவை யுடைய தேவலோகத்திலும் மேம்பட்டதென்று சொல்லலாம். எ - று. (எ)

மரபி னோங்கிய நால்வகை வருணமு மில்லறப் பெருவாழ்க்கை
யொருவி நீங்கிய மாதவத் தலைவரு முத்தமி ழொருங்கோர்ந்த
குரவர் யாவருங் கொள்பவா குறிப்பதன் மேற்படக் கொடுப்போரும்
விரவி வைகலும் பேரறம் வளர்ந்தருள் வளந்தரும் வியன்மூதூர்.

(இ - ள்.) முறையோடு மேம்பட்ட நால்வகைவருணத்தார்களும், இல்லற மாகிய பெரிய வாழ்வைவிட்டுத் துறந்த பெருந்தவஞ்செய்த துறவிகளும் (இய லிசை நாடகமென்றும்) மூவகைத்தமிழினையும் முழுவதுங்கற்ற கல்வி போதகர்களும், இரப்போர் எண்ணிவந்த அளவிற்கு மிகுதியாகக் கொடுக்கும் ஈகையாளர்களும், ஆகிய இத்தகையினர் யாவருங்கூடி, நாடோறும் மிகுந்த புண்ணிய கருமங்கள் அதிகரித்துவருகின்ற வளங்களைக் கொடுப்பது, சிறப் புற்றுப் பழமைவாய்ந்த அந்நகரம். எ - று. (அ)

அன்ன மாநக ரத்தினி லொருவரு மருந்தவ மொருங்கோர்ந்து
சென்னெ றித்தலை நின்றறந் தருபிர திலோமருஞ் செறிந்தீண்டி
மன்னு மாநக ரில்லறத் தவர்களை மன்னுயிர்த் தொகையெல்லாந்
தன்னை யீன்றரு டாயென விரங்குறுந் தன்மைய தம்மூதூர்.

(இ - ள்.) அத்தகைய சிறந்த நகரத்தில் இடைவிடாது விளங்கும் அருந் தவங்கள் முழுவதுமுணர்ந்து, செவ்விய நன்மார்க்கத்திற் சிறந்திருந்து, (இழிந்த ஆணிற்கும் உயர்ந்த பெண்ணிற்கும் பிறந்தவர்களாகிய) பிரதிலோமரும் நெரு ங்கிச்சேர்ந்து நிலைத்திருப்பார்கள். அந்தப்பெரிய நகரத்தின் குடிகளாகிய இல்லறத்தார்களைச் சராசர வுயிர்களெல்லாம், தம்மைப்பெற்றுப் பாலிக்கும் தாய்மார்களென்று நினைத்து மனமுருகுந் தன்மையுடையதாகும். எ - று. (கூ)

ஆங்க திற்றெறு காமநீத் தொழிதரு முனிவர னரும்பாவ
நீங்க லின்றவன் சிதேந்திரிய னெனுமொரு நிறைகுணத் தவன்சைவத்
தோங்கு தெய்வநூன் முற்றுணர்ந் தளந்தவ னுயிர்க்கெலா மொருதாயி
னாங்கு மன்பின னாசை முதலிய தெரிந்தொரு தலைநின்றான். [ற்

(இ - ள்.) அத்தகை நகரத்தில், ஆசையை யகற்றோடகற்றியருளிய முனிவ னும், அரிய பாவச்செயல்கள் நீங்க நடப்பவனுமாகிய சிதேந்திரியனென்னும் பெயரேற்றவன் ஒருவனிருந்தான். அவன் [illegible] நற்குணங்களும் நிறைந்த வன். சைவசமயத்திற்குரித்தாக விளங்கும் தெய்வீகத்தன்மை [illegible]

கற்றறிந்தவன், ஆன்மவர்க்கங்களெல்லாவற்றிற்கும் ஒரு தாய்போல ஆதரிக்கும் அன்புள்ளவன். சிவாகம முதலியவற்றைத்தெரிந்து உண்மை நிலையில் நின்றவன். எ - று. (௧௰)

இன்ப துன்பமென் றிவைதனக் கிழைத்தவர் யாரையும் பகுத்தோரா
துன்பி னோக்குறுந் தாயினு முரியன்மற் றந்நகர்ப் படவாழு
மன்ப னைக்குலம் யாவையுந் தான்புகன் மொழிவழிப் படநின்றான்
றன்பெ ருங்குணப் பொறையினு லிரைதிரை நிலமகட் சரிபோவான்.

(இ - ள்.) இன்பமுந் துன்பமுமென்று சொல்லப்படும் இவ்விரண்டினையுந் தனக்குச்செய்பவர்கள் யாவரையும் பாகுபடுத்தி யறியாது, அன்போடு தாட்சணியமுடைய தாயைக்காட்டிலும் உண்மையுடையவன். அந்நகரத்தில் வாழும் மாந்தரெல்லோரும் தான் சொல்லுஞ் சொல்லின்படி நடக்குமாறிருந்தவன். தன் சிறந்த சற்குணமாகிய பொறுமையினாலே சத்திக்கின்ற சமுத்திரத்தாற் சூழப்பெற்ற பூமிதேவிக்குச் சமானமானவன். எ - று. (௧௧)

அருமறைத்துறை மூழ்கிமுற் றளந்தவ னந்நகர்த் தலைவாழும்
பெருமறைக்குலந் தோன்றுசீ முகனெனும் பெயரின னுளனீன்ற
தருமைந்தரோ ரெண்மர்மு னவன்பெயர் சாந்தன்மற் றநுசாந்தன்
மருவி ராமன விராமனோர் சித்தன்மற் றிளையவன் பிரசித்தன்.

(இ - ள்.) அரிய வேதங்களின் துறைகளெல்லாவற்றையுமறிந்தவனும், பெருமை தங்கிய அந்தணர் குலத்தில் உதித்தவனுமாகிய ஸ்ரீமுகனென்னும் பெயர் பெற்றவனொருவனிருந்தான். அவன் பெற்ற புண்ணிய சொரூபிகளாகிய புதல்வர்கள் எட்டுப்பெயர்கள். அவர்களில் ஜேஷ்டன் சாந்தன். இரண்டாம் புதல்வன் அநுசாந்தன். மூன்றாம் புதல்வன் இராமன். நான்காம் புதல்வன் அவிராமன். ஐந்தாம் புதல்வன் சித்தன். ஆறாம் புதல்வன் பிரசித்தன். எ - று.

ஓது காரண னகாரண னெனும்பெயர் வரன்முறை யுரைத்தானம்
மாதர் மைந்தரோ டொருதனி வறுமையு மனைபட வாழ்வுற்று
னேது காலநல் வினைநமக் கெய்துமென் றெண்ணின னிவரோடுந்
தீதின் மாநகர்க் கடைத்தலைச் சென்றுசென் றிரக்குறும் பசித்தீயால்.

(இ - ள்.) சொல்லுகின்ற ஏழாம் புதல்வன் காரணன். எட்டாம் புதல்வன் அகாரணன் என்றிப்படி வரிசைப்படப்பெயர் தந்தான். அவ்வழகிய மைந்தர் எட்டுப்பேரோடும் ஒப்பற்ற தரித்திரத்துடன் இல்லறவொழுக்கத்தில் வாழ்ந்திருந்தவனாய், எக்காலத்தில் புண்ணியப்பயன் நமக்குக் கைகூடுமென்று வருந்தி எண்ணிக்கொண்டிருந்த அவ்வந்தணன், எட்டுக் குமாரர்களோடும் குற்றமற்ற அந்நகரத்தின் தெருக்களிலெல்லாஞ்சென்று, பசியென்னுந் தீப்பிணியால் யாசித்து வருவான். எ - று. (௧௨)

சிறுவ ரெண்மரு மிவ்வழி பற்பகல் கழித்தநாட் பலசெல்ல
மறுவ றுங்குணச் சிதேந்திரி யப்பெயர் மாதவன் றிருநேசக்கம்
பெறுது மேற்றுய ரொழிதுமென் றெண்ணியப் பெருந்தவப் பெருமா
நறும லர்ச்சர ணிறைஞ்சின ரெழுந்தன ரிரந்தனர் நனைவீர. [இவ

(இ - ள்.) அந்தப்புதல்வர்கள் எட்டுப்பெயரும் இப்படிப் பன்னாள் துன்பங்கள் அநுபவித்துக் கழித்த நாட்கள் எண்ணிறந்தனவாய்க்கடக்க, குற்றமற்ற நற்குணமமைந்த சுதேந்திரியனென்னும் பெயர் பெற்ற பெருந்தவ சிரேட்டனுடைய கிருபாநோக்கம் அடைவோமாகில் நமது துன்பங்களை நீங்குவோமென்று நினைத்து, பெருந்தவமுடைய அப்பெரியோனைத் தரிசித்து, வாசனைவீசுந் தாமரைமலர்போலும் பாதங்களை வணங்கி, தங்கள் குற்றமகலும்படி பிரார்த்தித்தார்கள். எ - று. (அ)

இரந்திரந்தவின் றேத்துறு மிவரைமற் றிருந்தவ னெதிர்நோக்கி
வரந்தரத்தகு முதியர்பாற் சேர்ந்தினீர் மறைத்தொகை தெரிந்தீர்
அரந்தை யுற்றுழந் தயர்ந்தனி ரென்கொலென் றறைந்தன னதுகாலைச்
சுரந்த கட்புன லரும்புற நின்றனர் தொழுதிவை சொல்கின்றார்.

(இ - ள்.) மிகவும் பிரார்த்தித்துக் குறைகூறி நேர் நின்று துதிசெய்யும் இவர்களைப் பெருந்தவ சிரேஷ்டனாகிய சுதேந்திரியன் நேரே கண்டு, விரும்பினவர்கட்கு விரும்பிய வரங்களைப்பாலிக்கத்தக்க தகுதியுடைய பெரியோரிடத்திற் சிறந்தீர்கள். வேதங்கள் முற்றுங் கற்றறிந்துள்ளீர்கள். இத்தகைய நீங்கள் துன்பமெய்தி வருந்திச்சோர்வெய்தியுள்ளீர்கள். இதற்கு நிமித்தம் யாதெனக் கேட்டனர். அச்சமயத்தில் கண்களிற்றுளிக்குந் துக்கநீர் சொரியும்படி அவருக்கு நேர் நின்று வணங்கி இவற்றைச்சொல்லுகின்றார்கள். எ - று, (கூ)

உழந்த நல்குர வுடற்றுற மெலிந்தன மெண்மரு மொழியாத
பழங்க ணெய்தின நின்னுடைச் சேவடி பணிந்தன மினியந்நோ
விழந்த னம்பிறப் பொழிந்தனந் திருவரு ளெய்தினந் துயரெல்லாங்
கழன்ற தெம்முழை யென்றன ரிரங்கிய திருவருட் கடைநோக்கான்.

(இ - ள்.) பல நாட்களாகப் பழகிய வறுமைநோய் துன்புசெய்ய நாங்கள் எட்டுப்பெயரும் வருத்தமுற்றேம். அதனாலே நீங்காத துயரமடைந்தோம். இப்போது தேவரீர் கிருபா நோக்கத்தால் அவ்வறுமைப்பிணி அகலப்பெற்றேம். பிறவி நோயும் ஒழிந்தோம். திருவருளுமெய்தினேம் ஆதலால் துயரங்களெல்லாம் எம்மைவிட்டு விலகினவென்று விளம்பினார்கள். எ - று. (௰)

என்னு மாத்திரை நெகிழ்ந்தெழு முளத்தினன் வேண்டிய தெதுவென்ன
மன்னு மாதவ ரெண்மருந் தனித்தனி வேட்டன வரநோக்கி
இன்னே வந்தடைந் தோமென வன்னவை நிகழ்த்துதி ரெனநின்றோ
பன்னு மாகமத் தலைவனைத் தொழுதனர் முறைமுறை பகர்கின்றார்.

(இ - ள்.) என்றிப்படிச்சொல்லும் சமயத்தில், உருக்கமெய்தி அன்போடு [illegible] அப்பெரியோர், உங்கட்கு வேண்டியது என்னவென வினவ, அதுகேட்ட நிலைத்த பெருந்தவமுடைய அவ்வெட்டுப்பெயரும் [illegible] தனித்தனி [illegible] வரங்களைப்பெற்றுக்கொள்வதற்காக [illegible] [illegible] [illegible] சுதேந்திரியர் [illegible] [illegible] எ - று. [illegible]

உரிய்வான்கிளைப் பெருக்கமென் றுரைத்தன னொருவன்மைந் தனைமற், புரியு மைந்தரென் றுரைத்தனன் மற்றவன் பெரும்பொனீய் பொலக்கேட்டா, னரிய விஞ்சையென் றனனொருவன்பெரு சித்திகளுப் பமைந்தாரோர், குறிசின் மற்றவன் யோகமென் றனவ னுடற்கதி கொளவெலன்றான்.

(இ - ள்.) மூத்தவன் எனக்குரிய சிறந்த பந்துவர்க்கங்கள் விர்த்தியாக வேண்டுமென்றனன். ஒருவன் அன்போடு விரும்பத்தக்க புத்திரசந்தானம் வேண்டுமென்றனன். வேறொருவன் தனக்குற்ற பெருவியாதியொழிய வேண்டு மென்றனன். பின்னொருவன் அரிய ஞானம் வேண்டுமென்றனன். அவனுக்கு இளையவன் பெருஞ்செல்வத்தில் ஆசையுடையேனென்றனன். அவனுக்குப் பின்னே தோன்றியவன் யோகமார்க்க சித்திவேண்டுமென்றனன். அவன் துணைவன் தேகத்தோடு முத்தி பெறவேண்டுமென்றனன். எ - று. (கஅ)

கடைப்பி றந்தவ னூழிபல் லாயிரங் கடைப்பட வருகாறும்
படப்பெ ரும்புவி யிருப்பதென் றனவ னெண்மரிப் பரிசோத
வுடைத்த பேருவ கைக்கட லுவட்டெழக் கேட்டன னுமையோர்ந்தான்
கிடைத்த னித்துவ சத்தினு னலதிவர் வேட்கையார் முடிப்பாரே.

(இ - ள்.) இறுதியிற் பிறந்த எட்டாவது குமாரன், கணக்கிறந்த கற்ப காலங்கள் அழியுமெல்லையும் இப்பெரிய பூலோகத்தில் வாழ்ந்திருக்கவேண்டு மென்றனன். ஆக இப்படி எட்டுப் புதல்வர்களுங் கூறினதற்கு, எல்லையில்லாத பேரானந்தக்கடல் மேன்மேலும் பெருகும்படி கேட்டவராய், இவ்வெட்டுக் குமாரர்களுடைய விருப்பங்களையெல்லாம், ஒப்பற்ற இடபக்கொடியையுடைய வராகிய சிவபெருமானை நீங்கலாக வேறெவர்தாம் முடிக்கவல்லவர்களென்று தமது மனதிற் கருதியுணர்ந்தார். எ - று. (க௯)

என்று ரைத்தவங் தறிந்தன னுங்கவர்க் கினியன பலபேசி
நன்று நுங்கருத் தவ்வழி விடைக்கொடி நாயகன் றரவேண்டு
மின்று மக்குமற் றெய்துவான் விதிமுறை யியம்புவ மதுகேளா
லொன்று சிந்தையி னன்புநெக் குருகுறப் புரிதிரென் றுரைசெய்வான்

(இ - ள்.) என்று தமது கருத்தில் தீர்மானஞ்செய்துகொண்டவராய், அவ்வெட்டுப் பிள்ளைகட்கும் இனிய பல வார்த்தைகள் கூறி, நல்லது உங்கள் எண்ணத்தின்படி நீங்கள் விரும்பிய வரங்களை இடபக்கொடியையுடைய எமது சிவபெருமான் அநுக்கிரகித்தருளவேண்டும். அத்தகைய வரங்கள் உங்களுக்குக் கைகூடத்தக்க நன்மார்க்கத்தைச்சொல்லுகின்றோம். அதனைக்கேட்டுணர்ந்து நுங்களைப்பாலுடைய மனமெய்தி எலும்பும் நெக்குவிட்டுருகும்படி அன்பு தோன்றச் செய்யக்கடவீர்களென்று சொல்லத்தொடங்கினார். எ - று. (உ௦)

கலிநிலைத்துறை.

நாறு நாண்மலர்ப் பணிவிடைக் குரியராய் நவைதீ
ரூற தேமலப் பொழிற்குழைத் தரணைடக் குளித்தா
பேறு தண்மலர் கொணர்ந்தளித் திடுதிரேல் விரும்பு
பேறு பெற்றுநீ ரொழிக்குநி ரிறப்பொடு பிறப்பும்.

(இ - ள்.) மனத்தமழும் அன்புவைத்து மகாபுராணமும் பணிவிடைக்கு உரியவர்களாய், குற்றந்தீர்ந்த தேனொழுகும் பூந்தோட்டங்களை வைத்துச் சிவபெருமானுக்குரியதாய், குளிர்ச்சியிருந்த மலர்களைக்கொண்டுவந்து [illegible] வைத்திருக்கொடுப்பீர்களாயின், நீங்கள் இச்சித்தபேறுகளை யெய்திப்பிறப்பையும் நீக்குவீர்கள். எ - று. (உ[illegible])

முற்ற முற்றிய புற்பறித் தெடுத்திட முயலேம்
மற்று ரும்பொரு ளாற்செய மாணிதி யில்லேம்
மிற்றை நாள்வரை யிரப்பதும் பசியெழுந் தல்லா
லுற்று ணர்ந்துசென் றிரப்பதற் கொருப்படா துள்ளம்.

(இ - ள்.) முழுவதும் முதிர்ந்துள்ள புற்களைப்பிடுங்கி யெறிய முயற்சி செய்யமாட்டோம். வேறு வகையாகப்பொருள்கொடுத்தலால் நடத்துவிக்கப் பெருஞ்செல்வமுடையோமல்லோம். இன்று தினம்வரையில் நாங்கள் யாசிப்பதும் பசியுண்டானதாலல்லாமல், ஆலோசித்தறிந்து போய் யாசிப்பதற்கு எங்கள் மனம் சம்மதியாது. எ - று. (உ[illegible])

கற்ற கல்வியும் வறுமையிற் கழிந்தன முதியோய்
பெற்ற மேறிய பிரானடிப் பணிவிடைக் கொருநீ
சொற்ற வாறெமக் கரிதெனச் சொற்றனர் சுருதி
முற்று ணர்ந்தவ னுளம்படப் பூத்தனன் முறுவல்.

(இ - ள்.) நாங்கள் படித்தபடிப்பும் தரித்திரத்தினாலே மறந்தோம். பெரியோரே! இடபவாகனத்தேறிய சிவபெருமானுடைய திருவடித்தொண்டிற்கு, ஒப்பற்ற தேவரீர் கூறியவகையே புரிவது எங்கட்கு அரிதாகுமென்று சொன்னார்கள். வேத முழுவதுமுணர்ந்த சிதேந்திரியன் மனங்கொண்டு புன்னகை செய்து. எ - று. (உ[illegible])

புரிவ தற்கெளி தாயதிற் பெறப்பெறும் பொருடான்
பெரிதெ னப்பட லாகியிப் பிறப்பொழிப் பதுவா
யுரிய வோர்ந்தன னரன்றிரு வுளத்துவப் பினுய்ப்
பரியு நல்வினை யாங்கது தெருளுறப் பகர்வான்.

(இ - ள்.) செய்தற்கெளியதாய், அதனாலே யடையப்படும் பொருளை பெரிதென்று சொல்லத்தக்கதாய், இந்தச்சனனத்தை விலக்குவதாய் உள்ள விதத்தை யாலோசித்து, சிவபெருமான் தமது திருவுள்ளத்திற் களிப்புடையவராய்ச் சந்தோஷிக்கச்செய்யும் நற்கருமமாகிய அதனை விளங்கும்படி சொல்லினன். எ - று. (உ[illegible])

ஒருவி நான்மறைத் தலைவிர்கா ளுமக்கெளி தெனலாய்க்
கருதி னுங்கதற் கொன்றுமொப் பில்லெனக் கடவ
தருந டந்தரு மெம்பிரான் புராணமுற் றறிந்து
பெருகு மன்பினர் படித்திடக் கேட்டுறப் பெறுவீர்.

(இ - ள்.) நான்கு வேதங்களுக்குந் தலைவர்களே! அதனை நீங்கள், உங்கட்கு இலேசெனச்சொல்லத்தக்கதாய், ஆலோசிக்கையில் அதற்கு ஒன்றும் சமானமில்லையென்று சொல்லத்தக்கது, அரிய திருநடனஞ்செய்கின்ற எமது சிவபெருமானுடைய [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. எ - று. (உ[illegible])

புரமெரித்தவன் புராணமுற் றுணர்ந்தவர் புகலை
விரவு சிந்தையி னன்புற வினவுறு மவரை
யரவு சென்னிகொண் டசைத்திடு மவரெனத் தொழுவார்
பரவு நல்லொழுக் குணர்ந்தரு மாதவம் பயில்வார்.

(இ - ள்.) திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமான் பிரபாவங்களை யுணர்த்தும் புராணங்களை முற்றக்கற்ற முதியோர்கூற, மனத்தில் அன்பு பொருந்தக்கேட்கின்ற [சிரவணஞ் செய்கின்ற] அவர்களை, துதிக்கத்தக்க நல்லொழுக்கங்களையுணர்ந்த பெருந்தவஞ்செய்தவர்கள், சர்ப்பங்களைச்சிரமிசை யணிந்த சிவபெருமானென்று மதித்து வணங்குவார்கள். எ - று. (௨௬)

இதுவெ டுத்தவ னிசைத்தது மெண்மருங் கேளா
வதும னத்தடைத் தாகமத் துறையுளா யனியே.
முதுக லிக்கடற் கிடந்தன மெமக்கென முன்னோன்
புதுமொ ழிப்படு முதுமறைப் புராணமார் புகலவார்.

(இ - ள்.) இவ்வார்த்தைகளைச் சிதேந்திரியன் எடுத்துச்சொல்லவும், எட்டுக் குமாரர்களுங்கேட்டு அதனை மனதிற்கொண்டு, சிவாகமநெறியிலுள்ளவரே! அடியேங்கள் முதிர்ந்த தரித்திரமாகிய கடலில் அமிழ்ந்துள்ளோம். அடியேங் கட்காக, பரமேசுவரனது அரிய திருவாக்காகிய பழைய வேதத்தின் சாரமான சிவபுராணங்களை எவர்கள் சொல்லுவார்கள்? எ - று. (௨௭)

எடுத்து ரைத்திடு புராணமுற் றீற்றிடை யிவர்க்குக்
கொடுப்ப தின்றியாங் கொடாவிடிற் பெறுபய னுளதோ
கடுத்த கட்கன லுமிழ்கின் றுடற்றிய காலன்
படுத்து வீழ்த்திய நிரையமல் லாற்பிறப் பவியா.

(இ - ள்.) எடுத்துச்சொல்லும் சிவபுராணங்களைக்கேட்டு, அவை முடிவுறுங் காலத்தில், இப்புராணிகர்க்குக்கொடுப்பதாகிய திரவியமில்லாமல் நாங்கள் ஒன்றுங்கொடாவிட்டால், யாங்கள் அடையும் பலன் ஏதேனும் உண்டோ? கோபித்த கண்களினின்று நெருப்புப்பொறி சிந்த எதிர்த்து வருத்துகின்ற இயமன் அகப்படுத்து வீழ்த்தும் நரகம் கிடைக்குமன்றிப் பிறவியகலாது.

என்று ரைத்தன ரெண்மரு மருந்தவத் தலைவ
னன்று சொற்றனிர் நாமது வுணர்ந்திலே மினிநீ
ரொன்று ரைப்பது கேட்குதி ரின்றுபோ யொருங்கு
சென்று வேண்டுவ துளதென வவர்க்கெதிர் செப்பும்.

(இ - ள்.) என்று எட்டுப்பெயருஞ் சொன்னார்கள். அரிய தவத்தலைவ னாகிய சிதேந்திரியன் நன்றாகச்சொன்னீர்கள். நாம் அதனை யறியோம். இனி நீங்கள் நாம் சொல்லும் ஒன்றனைக்கேட்கக்கடவீர்கள். நீங்கள் யாவரும் ஒன்று கப்போய் இப்பொழுதே விரும்பத்தக்கது ஒன்றுண்டென்று அவர்கட்கு நேராகச் சிதேந்திரியன் சொல்லுகின்றான். எ - று. (௨௮)

இந்த மாநகர்க் கப்புற மிருப்பதோர் நகர
மந்த மாநகர் முனிபுர மப்புரத் திருந்துஞ்
சிந்தை தூயுநற் றாயனென் றுளன்கதி சித்து
பந்த வெவ்வினைத் தளைபறித் தெழியக டனையான்.

(இ - ள்.) இந்தப்பெரிய நகரத்திற்கு அயலில் ஒரு நகரமிருக்கின்றது. அந்தச்சிறந்த நகரம் முனிபுரமெனப்படும். அந்நகரத்தில் வசிக்கும் மனப்பரி சுத்தமுடையவர்களில் மனப்பரிசுத்தமுடையவன் க்லிசித்துவென்னும் பெயரை யுடையவனுளன். பந்தமாகிய கொடிய வினையாகிய சங்கிலியை அடியோடு பறித் தெறியத்தக்க யானை போன்றவன். எ - று. (௫௦)

தரும மெய்யுரு வெடுத்தென வந்தவ தரித்தோன்
பெருகு நான்மறைக் குலத்துளோன் பெற்றமே றுயர்த்தோர்க்
குருகு காதலி னருச்சனை கனவினு மொழியான்
கருணை வாரிதி பழமறைக் கடற்கரை கண்டோன்.

(இ - ள்.) புண்ணியமே உண்மைவடிவேற்றாற்போலத்தோன்றி அவதரித் தவன். நான்கு வேதங்களின் சிறப்புமிகுந்த அந்தணர் குலத்திலுதித்தவன். இடபக்கொடியை யுயர்த்திய சிவபெருமானுக்கு மனமுருகுகின்ற ஆசையோடு அர்ச்சனைசெய்தலைக் கனவிலும் நீங்காதவன். கிருபா சமுத்திரம்போன்றவன். வேதமாகிய கடலைக் கரைகடந்தவன். எ - று. (௫௧)

உரைக்கு மாகம புராணமு முற்றளந்தறிந் தொருங்கே
கரைத்த சிந்தையிற் கேட்குந ருளம்படக் கரைப்பா
னிரைத்த காதலிற் கொடுப்பன யாவையு மேலா
னரைத்த மூப்பின னருமறை நடந்தரு நாவான்.

(இ - ள்.) சொல்லுகின்ற சிவாகம புராணங்களையெல்லாம் முழுவதும் கற்றுணர்ந்து உருகிய சிந்தையோடு கேட்போர் மனமுருகும்படி அதிகரித்த ஆசையோடு சொல்லுகின்றவன். எவர் எப்பொருளைக்கொடுப்பினும் ஏற்றுக் கொள்ளமாட்டான். மயிர் நரைத்த விருத்த பருவமுடையவன். வேதங்கள் நடிக்கும் நாவையுடையவன். எ - று. (௫௨)

புரத்து வாழ்தரு மாந்தரு மாங்கவன் பொருட்டா
லிரக்க மெய்திமற் றவன்றனக் குவமைசான் றிருப்பார்
பரப்பி னெய்தியோர் பசிகெடப் பகுர்தல துண்ணான்
சுரக்கு நல்லறத் தீட்டிய பெருநிதித் தொகையான்.

(இ - ள்.) அந்நகரத்தில் வசிக்கின்ற மனிதர்களும் அக்கலிசித்து காரண மாகக் கருணைபொருந்தி அக்கலிசித்துவைப்போல மேம்பட்டிருப்பார்கள். விரைந்து வந்தோருடைய பசிப்பிணியை நீக்கப்பகிர்ந்தளித்தல்லாமல் புசிக்க மாட்டான். ஊற்றெடுக்கின்ற நல்ல தருமவழியிற் சம்பாதித்த பெருஞ் செல்வ மாகிய பொருளையுடையவன். எ - று. (௫௩)

அனையன் மாடுபுக் காங்கவ னருநடம் பயிலும்
புனைசடைப்பிரான் புராணமுற் றறிகுதிர் போதி
ரெனவு ரைத்தன னங்கவ ரிசைந்தன ரெழுந்தார்
முனைவ னைத்தொழாப் போயினர் முனிபுரம் புகுந்தார்

(இ - ள்.) அக்கலிசித்துவினிடஞ்சேர்ந்து. அவன் சொல்லுகின்ற அரு நடம்புரியுஞ் சடையையுடைய சிவபெருமான் புராணங்களை முழுவதும் அறியக்கடவீர்கள். போவீர்களென சௌநக முனிவர் முதலியோர் சம்மதித்தெழுந்து இந்திரிய முனிவரை வணங்கிச்சென்று முனிபுரத்தை யடைந் தார்கள். எ - று. (௫௪)

புகுந்து சேவடி புனிதனைப் போற்றின ரவனு
மகிழ்ந்த சிந்தையி னிருத்தினெ னிருத்தின னிலவு
பகுந்த வெண்பிறைச் சடையினன் பரிவுறுஞ் சரிதை
தொகுந்தி றத்தொடுங் கேட்குந ரவையகந் தொக்கார்.

(இ - ள்.) முனிபுரம் புகுந்து பரிசுத்தனாகிய கலிசித்துவைப்பாதங்களில் வணங்கித் துதித்தார்கள். அக்கலிசித்துவும் உருகிய மனதோடு இருங்களென்று தன்னிடத்தில் இருத்தினன். சந்திரிகையை வீசும் வெள்ளிய சந்திரதுண்டத்தைச் சடையிலுடைய சிவபெருமானுக்கு அன்பு பொருந்திய சரிதையைக் கூட்டமாகச் சிரவணஞ்செய்வோர் சபையினிடத்திற் சேர்ந்தார்கள். எ - று.

தொக்க பேரவை யிருந்தன ரன்பொடுந் துவன்றி
நெக்க சிந்தையி னுருகின ரிருசெவி நிறைத்துப்
புக்க காதையின் மயிர்ப்புறம் பொடித்தனர் புலவர்
நக்க னைத்தம துளம்பட விருத்தினர் நயப்பால்.

(இ - ள்.) அடியார்கள் கூடிய பெருஞ் சபையிலிருந்தார்கள். அன்புடன் தொடங்கி, நெக்குவிட்டுருகிய சிந்தையையுடையவராகி, இரு காதுகளையும் நிறைத்துப்புகுந்த சிவசரிதையால் மயிர்க்கூச்செறிந்தார்கள். தேவர்களில் [நக்கன்=நிர்வாணி] நக்கனாகிய சிவபெருமானைத் தமது மனதில் ஆசையோடிருத்தினார்கள். எ - று. (௯௬)

எள்ளி னைப்பொழு தாயினு மெந்தையெம் பரனை
யுள்ள மைப்பது தணந்தில ரொருவழிச் சென்றார்
நள்ளு நாட்சில கழிந்தன புராணநன் குணர்த்தும்
வள்ள லைத்துணை மலரடி யருச்சனை வகுத்தார்.

(இ - ள்) எள்ளளவு காலமானாலும் எமது தந்தையாகிய எமது சிவபெருமானை மனத்தின்கண் பொருத்துவதை நீங்காதவர்களாய் ஒருவழிப்பட்டார்கள். இப்படி விரும்பத்தக்க சில தினங்கள் சென்றன. புராணத்தை நன்றாகப் போதிக்கின்ற வள்ளலாகிய கலிசித்துவின் தாமரைமலர்போன்ற இரு பாதங்களைப் பூசித்தார்கள். எ - று. (௯௭)

தொன்று தொட்டெழு பவமெலாந் தொலைந்தன விவர்க்கு
மன்று தொட்டெழு தீவினை யருங்கலை கழியப
பின்று மாமதி நிகாத்தன புண்ணியப் பெருமை
யொன்று வெண்பிறைக் கலையென நிரம்பிய தொருங்கே.

(இ - ள்.) சிவபுராண சிரவணஞ்செய்த இவ்வெண்மருக்கும் அநாதியாக மேலோங்கிய பவமுழுவதும் நீங்கின. அன்றுமுதலாக(முன்னிருந்த) அதிகரித்த தீவினைகள் (கிருஷ்ணபக்ஷத்தில்) அரிய கலைகள் குறையத்தனித்து நின்ற சந்திரனைப் போன்றன. சிவபுண்ணியப்பெருமையானது (பூர்வபக்ஷத்தில்) பொருந்துகின்ற வெள்ளிய சந்திர கலைகள்போல ஒரு சேர நிரம்பின. எ-று.

நினைந்த யாவையு முடித்தன ரெண்மரு நெடுநீர்
புனைந்த சென்னியன் றிருவருள் பொருந்தினர் பொன்னால்
வனைந்த மெய்யின னுயினன் பிணிபடு மறையோ
னனைந்த கண்மலர்க் கொன்றையோன் சரிதையே நயப்பார்.

(இ - ள்.) அவர்களெட்டுப்பெயரும் எண்ணிய கருமங்களையெல்லா முடித்தனர். பெரிய கங்கை நீரையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் திருவருளடைந்தார்கள். அவர்களிற் குட்ட நோயுற்ற வேதியன் பொன்னுலாங்கியதுபோன்ற உடலைப்பெற்றான். தேனுல் நனைந்த கொன்றைமலர்சூடிய சிவபெருமான் சரிதையையே விரும்புவார்கள். எ - று. (௩௯)

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவகதி விரும்புற வேண்டும்.

(இ - ள்.) விரும்புவீர்களாயின், சிவபதவியையே விரும்புங்கள். ஆசைகொண்டு சிரவணஞ்செய்தால், சிவபுராணங்களையே சிரவணஞ்செய்யுங்கள். இருவினைகளால் ஆட்டப்படுகின்ற மாந்தர்களை முடிவுகண்டு இயமதூதர்கள் அழித்துயிர்போக்குதற்கு முன்னரே சிவகதியையடைய இச்சிக்கவேண்டும் (உலகினரே! என்று இந்நூலாசிரியர் கவிக்கூற்றாகக்கூறினர்.) எ - று. (௪௦)

கள்ளு யிர்த்தபூங் கொன்றையா னருட்சிவ காதை
யெள்ளில் சிந்தையான் விதிமுறை யினிதுகேட் டுவந்து
வெள்ள வார்சடை யெம்பிரான் றிருவருள் விளைவித்
தெள்ள ருங்கதி புகுந்தவர்க் கிலக்கமா ரிசைப்பார்.

(இ - ள்.) தேன் சிந்துகின்ற கொன்றைப்பூமாலையணிந்த சிவபெருமானுடைய திருவருட்சரிதையை இகழ்ச்சியில்லாத மனத்தோடு விதிப்படி இனிதாகச் சிரவணஞ்செய்து சந்தோஷித்து, கங்காநீரையணிந்த நெடிய சடையையுடைய எமது சிவபெருமான் திருவருளை விளையச்செய்து இழிவற்ற முத்தி யெய்திவர்க்கு எவர்தாம் கணக்கிடவல்லவர்? எ - று. (௪௧)

சிவபு ராணமென் றெடுத்தெவர் செப்பினு மாண்டு
பவரு மென்சிறைப் பறவையும் பல்விலங் கினமு
மிவர்த டஞ்சினை மரனுமற் றெழுபசும் புல்லுங்
கவர்த லைசசிறு பதுக்கையு மிருங்கதி கரக்கும்.

(இ - ள்.) சிவபுராணம் என்று யாவர் எடுத்துச்சொன்னாலும், அங்கேயிருக்கின்ற மெல்லிய சிறகினையுடைய பறவைகளும், பலவகை மிருகசாதிகளும், உயர்கின்ற பரந்த கிளைகளையுடைய மரங்களும், முளைத்துள்ள பசிய புற்களும், பிளவுபட்ட தலையையுடைய சிறு பாறைகளும் பெரிய மோக்ஷத்தையெய்தும். எ - று. (௪௨)

எழுதி யன்பருக் கீந்தவர் திருமுறை யெழுதித்
தொழுது தம்மனை தொகுப்பவர் பெருநலந் துய்த்தின்
டொழுகு காலம்வீற் றுவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
கழிவி லாப்பெருங் கைலையுற் றருங்கதி யடைவார்.

(இ - ள்.) சிவபுராணத்திருமுறைகளை யெட்டிலவரைந்து அடியவர்களுக்குக்கொடுத்தவர்களும், அவற்றையெழுதித் தமது வீட்டிற் சேமித்துவைப்பவர்களும் இவ்வுலகத்தில் பெரிய இஷ்ட சுகங்களை யநுபவித்து, இறுதியில் அழிவில்லாத பெருமைதங்கிய திருக்கைலாயமெய்தி, ஓரெழுத்திற்கு ஒரு கற்பகாலம் அரிய பதவியெய்தி வாழ்வார்கள். எ - று. (௪௩)

ஓது நாவினுங் கேட்பவர் செவிப்புலத் தன்னுந்
தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிராவி
மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துறைமீ
ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்.

(இ - ள்.) சிவபுராணங்களைச்சொல்லுகின்ற நாவினிடத்திலும், கேட்பவர்களுடைய காதினிடத்திலும், குற்றமில்லாத சிவசிந்தனையுடையவர்கள் சிரத்தினிடத்திலும், உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் திருவருள்சுரந்து எழுந்தருளியிருப்பார் ஆனபடியால், சிவசரிதங்களைச் சிரவணஞ்செய்த எல்லாப்பிராணிகளும் மோக்ஷகதியெய்தின. எ - று. (௪௪)

புரங்க டந்தவன் புராணமுற் றோதிய புனிதர்க்
கிரங்கு சிந்தையிற் கேட்பவர்க் காரமு தீந்தால்
வரந்த ரத்தகு நும்மனோர்க் கிருஞ்சினை வகுத்துப்
பரந்த கற்பக நாட்டவர்க் கினிதெனப் படுமால.

(இ - ள்.) திரிபுரங்களையெரித்த பெருமானுடைய சிவபுராணங்களை முழுவதுஞ்சொல்லிய பரிசுத்தர்களுக்கும், உருகிய மனத்துடன் அவற்றைக் கேட்பவர்களுக்கும், பொருந்திய உணவாதிகளை யுதவினால், அடுத்தவர்கள் வேண்டிய வரங்களைக்கொடுக்கத்தக்க உங்களையொத்த முனிவர்களுக்கும் பெரிய கிளைகளைப்பரப்பி விசாலித்த கற்பக விருக்ஷத்தையுடைய தேவலோகத்தாருக்கும் இனிதாகுமென்று சொல்லப்படும். எ - று. (௪௫)

தெரிந்த மாக்கதைச் சிவபுரா ணம்பகர் செல்வர்
புரிந்து வேண்டுறப் புனைகலன் பொற்கிழி பாலா
வரிந்து றப்படு விளைவயல் கன்னிகை யாடை
விரிந்த வன்பினு லீந்திட வேண்டுவர் மேலோர்.

(இ - ள்.) சிறந்த சிவபுராணசரிதைகளைச்சொல்லுகின்ற சிவஞானச்செல்வர்களுக்கு அன்போடு விரும்பிய ஆபரணங்களையும், பொற்கிழிகளையும், கறவைப்பசுவையும், கதிர்களையரிந்து பயன் கொள்ளத்தக்க விளைகழனிகளையும், கன்னிகைகளையும், ஆடைகளையும் அதிகரித்த ஆசையுடன் கொடுக்க மேலோர் விரும்புவார்கள். எ - று. (௪௬)

இனைய நல்கியோர் பெறுங்கதி யாஞ்சொலற் கெளிதோ
கனைதி ரைப்புனற் கங்கைவார் சடையின னிவரை
நினைதொ றுந்திரு வுளநெகிழ்ந் தானந்த நிருத்தம்
புனைப தச்சிலம் பிடையறு தொலியெழப் புரியும்.

(இ - ள்.) இவற்றைச்சிவனடியார்கட்குக்கொடுத்தோர் அடையும் பேற்றினை, ஒலிக்கின்ற அலைகளையுடைய கங்காசலம் பொருந்திய நீண்ட சடையையுடைய சிவபெருமான் இவர்களை யெண்ணுந்தோறும் திருவுள்ளமகிழ்ந்து, திருவடியிலணிந்த சிலம்புகள் இடைவிடாதொலிக்கும்படி ஆநந்தத்திருநடனஞ் செய்வாரென்றால், நாம் சொல்லுதற்கெளிதாகுமோ? (௪௭)

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தவத்தினுற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினே டாங்கவைக் கருச்சனை செய்தா
லந்து மேற்றினன் பிரதிட்டை கோமளெனப் படுமால்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் றிருக்கோயிலில் திருமுறை மண்டபம் செய்வித்துத் தந்தபீடத்தின்மேல் திருமுறைகளை யெழுந்தருளச் செய்து, மனக்களிப்புடன் அப்புராணத் திருமுறைகட்கு அர்ச்சனை முதலியன செய்வித்தால், செலுத்துகின்ற இடபத்தையுடைய சிவபெருமான்பிரதிஷ்டைகள் கோடிசெய்தவந் நிகராகும். எ - று. (௬௮)

இந்நி லத்தவ ரிந்திரற் கரியன நுகர்ந்து
பொன்ன லந்தரு நெடுமணி மானமீப் பொலிந்து
மன்னு விஞ்சையா மாநகர் வளநுகர்ந் தொழிந்து
துன்ன ருஞ்சினைக் கற்பகக் காவளந் துய்த்து.

(இ - ள்.) அங்ஙனம் புரிவோர் இவ்வுலகத்திலேயே இந்திரனுக்கும் அரிதாகிய இஷ்டபோகங்களை யநுபவித்து, பொன்னாலலங்கரிக்கப்பட்ட நெடிய இரத்தினவிமானத்தின் மேலே விளங்கி, நிலைபெற்ற வித்தியாதரருடைய சிறந்தநகரிலுள்ள வளங்களை யநுபவித்து நீங்கி, இந்திரலோகத்தில் அடைதற்கரிய கிளைகளையுடைய கற்பகச்சோலையின் வளப்பங்களை யநுபவித்து. எ - று. ( )

விரிக்கு மெல்லித ழாயிரக் கமலவீட் டிருந்து
பரிக்கு நான்முக னுலகினும் பலவளம் பயின்று
தரிக்க பைந்துழா யவனுடைத் தனிப்பதஞ் சார்ந்து
தெரிதத நன்னிலப் பகுதியிற் பெருவளஞ் செருக்கி.

(இ - ள்.) மலர்கின்ற மெல்லிய ஆயிரம் இதழ்களையுடைய செந்தாமரை மலர் வீட்டிலிருந்து, சத்தியலோகத்திலும் பலவகை இன்பங்களையும் நுகர்ந்து, பசிய துளவமாலையணிந்த திருமாலின் ஒப்பற்றபதவியாகிய வைகுந்தலோகமெய்தி அந்நல்லபூமியிலுள்ள பெருமைதங்கிய வளங்களை மிகுமாநதுபெற்று.

இருக்கு நல்லறப் பகுதியு மிருவழி நிறுவி
முருக்கு சூர்முத றடிந்தவ னிருங்கதி முன்னிப்
பெருக்கு நன்னலம் பெரிதுவர் தாங்கவற் பெற்று
டிருப தம்புகு நங்கதி வளம்பல தேக்கி.

(இ - ள்.) எஞ்சி நிற்கும் நல்ல சிவபுண்ணியத்தின் பாகமும் நீங்காதவிடத்தில் அங்கேயிருந்து, (தேவர்மானுடரைக) கொலையுரியும் சூரபன்மனைத்தடிந்தவராகிய குமாரக்கடவுளின் பெரியபதவியையடைந்து, அதிகரிக்கின்ற பெரிய சுகங்களை மிகுதியும் அநுபவித்து, அதன்பின் அக்குமாரசுவாமியை யீன்றருளிய உமாதேவியார் சிறந்தபதவியை யடைந்து அப்பதவியின் பலவளங்களை நுகர்ந்து.

சுரபி வான்கதி புகுந்ததிற் பெருவளந் துய்த்து
விரவு மிப்பதத் தளவொழி பற்பகல விடப்போய்ப்
புரமெ ரித்தரு ளெம்பிரான் பொறிவரிச் சுடிகை
யரவ கங்கணந் தவனொடு மினிதிருந் தருள்வார்.

(இ - ள்.) மேலாகிய கோப்பதவியிலெய்தி அதில் அடையவேண்டியபெருவளங்களை யடைந் தநுபவித்து, நெருங்கிய இப்பதவியில் அளவில்லாத பலகாலம் நீக்கிச்சென்று, திரிபுரங்களை யெரித்தருளிய எமது பெருமானுகிய, படப்

பொறிகளையும் உச்சிக்கொண்டையை யுடைய சர்ப்ப கங்கணத்தை யுடைய சிவபெருமானோடு கலந்து இனிதாக வீற்றிருந்தருள்வார்கள். எ - று. (௯௨)

அறந்த ருஞ்சிவ புராணமோ தூறுமவை யகத்துப்
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வா
ருறங்கு கின்றவர் நீட்டுறு காலின ருவற்றைத்
திறம்பு பொய்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்பார்.

(இ - ள்.) புண்ணியங்களைக் கொடுக்கத்தக்க சிவபுராணத்தைச் சொல்லு கின்ற சபையினிடத்தில், விளங்குகின்ற தாம்பூலம் தரிப்பவர்களும், வேறு விதமாக வார்த்தையாடுபவர்களும், நித்திரை செய்பவர்களும், நீட்டுகின்ற காலை யுடையவர்களும், அச்சரிதைகளைப் பொய்ம்மைகலந்தன வெனச் சொல்லுப வர்களும், சந்தோஷமுண்டாகச் சிரிப்பவர்களும். எ - று. (௯௩)

இழுதை மாக்கண்மற் றிங்கிவ ரிறுதியிற் றென்பாற்
செழுமை நீடிய நெடுங்குழிச செலற்கரு நிரயத்
திழிவ ராங்கவை விழுங்கிமீண் டெதிரெடுத் துமிழ
வழுவி மற்றது விழுங்குற வருந்துவர் நெடுநாள்.

(இ - ள்.) அறிவில்லாதவர்கள் அல்லது பொய்பேசுபவர்கள் முதலாகிய இவர்கள் தேகாந்தத்தில் தென்றிசையிலே துன்பங்கள் செழித்தோங்கியநெடிய குழிகளாகிய அரிய நரகங்களில் அமிழ்வார்கள். அந்நரகங்கள் விழுங்கிமீண்டும் வெளிவிட்டு உமிழ, அங்குநின்றுந் தவறி மற்றொருநரகத்தில் விழுங்கப்பட்டு இப்படிப்பலகாலம் வருத்தப்படுவார்கள். எ - று. (௯௪)

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பி
னண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலை மருவிக்
கண்ணு தற்பர னைத்தொழு தோதுறக் கடவர்.

(இ - ள்,) புண்ணியகரமாகிய சிவபுராணங்களை வாசித்துப் பொருள்விளக் கிச் சொல்லுவதாயின், சிவபெருமான் திருக்கோயில் நதிதீரம் தடாகக்கரை அல்லாவிடின் அழகிய திருமடம் என்று சொல்லப்பட்ட இவ்விடங்களிலோரி டத்தில், பொருந்திய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைப் பணிந்து சொல்லக்கடவர்கள். எ - று. (௯௫)

இப்பெ ருஞ்சிவ புராணமுற் றுரைப்பவ ரிதனைத்
தப்பில் சிந்தையிற் கேட்பவர் சிவதலந் தோறு
மொப்பி னுதனைத் தொழூபயன் வேள்விமுற் றுவந்தோர்
செப்ப ருங்கதி நதிபல குடையபயன் சிறப்பார்.

(இ - ள்.) இந்தப் பெருமையவாய்ந்த சிவபுராணத்தை (அன்பு) பொருந் திச் சொல்பவர்களும், இதனைத் தவறுபாடில்லாத நல்லெண்ணத்தோடு கேட்ப வர்களும், சிவக்ஷேத்திரங்களி லெல்லாஞ் சென்று சமானரகிதனுன சிவபெரு மானை வணங்கிய பலனிலும் எல்லாயாகங்களையுஞ் செய்தோர் பெறுஞ்சொல்லு தற்கரியபலனிலும் பல தீர்த்தஸ்நானஞ் செய்தவர்கள் பெறும் பலனிலும் மேம்பட்டபலனை யடைவார்கள். எ - று. (௯௬)

சிறக்கு மூவரு மற்றுள தேவரு மிவரை
யுறக்க னிந்தபே ரன்பொடுங் களிசிறந் துவப்பார்
மறைக்கு மெட்டரு முக்கணன் சரிதைநூன் மயங்கும்
பிறப்பொ ழிப்பது சத்திய மெனமறை பேசும்.

(இ - ள்.) சிறப்புற்ற திரிமூர்த்திகளும், அவர்க்குப் பிறிதாகவுள்ள ஏனைத் தேவர்களும், இவர்களை நன்கு கனிந்த பேரன்போடும் இன்பமிகுந்துகளிப்பார்கள். வேதங்களுக்கும் எட்டுதற்கரிய திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் பிரபாவங்களாகிய சிவபுராணமானது, மயக்கமுற்ற பிறவித்துன்பத்தை நீக்குவது சத்தியமாகுமென்று வேதம் கோஷிக்கின்றது. எ - று. (௬௭)

சிவபுராண மான்மியச்சருக்க முற்றிற்று,

ஆகச்சருக்கம் ௧௧-க்குத் திருவிருத்தம் ௧௬௰.

பன்னிரண்டாவது.

சிவத்துரோகிகளெய்தும் நரகவேதனைச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

ஈது முற்றுறக் கேட்டருண் முனிவ ரினிநீ
யாதி நாயகற் கன்பறப் புரியவ ரடைந்த
தீத தற்குநேர் பாதகஞ் செப்பெனச செப்பச்
சூத மாதவன் றுளக்கிய மோலியன் சொல்வான்.

(இ - ள்.) இதனை முழுவதுஞ் சிரவணஞ்செய்த முனிவர்கள், இனித்தேவரீர் ஆதிதேவனாகிய சிவபெருமானுக்கு அன்பற்றவர்களாய்ச் செய்தவரெய்தும் கெடுதிகளையும், அதற்கீடாகவுண்டாகிய பாவங்களையுஞ் சொல்லி யருளவேண்டுமெனக் கேட்ப, சிறந்ததவமுடைய சூதமுனிவர் சிரசை யசைத்தவராய்ச் சொல்லத்தொடங்கினர். எ - று. (௧)

எந்தைக் காயினு முமையவட் காயினு மைங்கைத்
தந்திக் காயினு மறுமுகற் காயினுந் தவறுச
சிந்தைக் கோர்நெறி காட்டிய தேசிகற் கெனினும்
வந்திக் குந்திருத் தொண்டுசெய் மரபினோர்க் கெனினும்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானுக்காயினும் உமாபிராட்டியாருக்காயினும் ஐந்துகரங்களையுடைய யானைமுக விநாயகப்பெருமானுக்காயினும் ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுளுக்காயினும், மனதிற் றவறுபடாத ஒப்பற்ற நல்வழியையுணர்த்திய ஆசிரியனுக்காயினும், பூசிக்குந் திருத்தொண்டைச் செய்கின்ற முறைமையுடையோர்க் காயினும். எ - று. (௨)

பரிக்கு நன்னெறி யொழுக்கினர் போலது பயின்று
தெரிதத சிந்தையிற் சிவத்திர வியங்கவர்ந தொழியா
தெரித்த பாழ்வயி றோம்புவா ரிவனொடும் பயிலா
வரித்த பாவகா ரியரிவர்க் கரண்கிலு யாகா.

(இ - ள்.) மேற்கொள்ளும் நல்லொழுக்கமுடையவர் போல நடித்து, தெளிந்தமனதோடு சிவசொத்துக்களை யபகரித்து, நீங்காமல் ஒவ்வொருநாளும் பசித்தீயினுலெரிக்கப்படும் பாழ்வயிற்றை வளர்ப்பவர்கள் இவர்களோடு பழகித் தேர்ந்தபாவிகள் ஆகிய இத்தகையினரைக்கண்டாலும் கொடியதே. எ - று.

தேவ லுலயந் திருக்குளஞ் செய்தொழி லிவந்தம்
பூவ ரும்பொழி னறுமலர் பொதுளிய தோட்டஞ்
சேவு யர்த்தவற் கியைவன கழனிக டிரைநீர்க்
கூவ லிங்கிவைக் கழிவன செய்வினைக் கொடுமை.

(இ - ள்.) சிவாலயம் திருக்குளம் சிவாலயத் திருத்தொண்டுகள் அழகுடைத்தாய் அரிதாயிருக்கும் சோலைகள் மணம் பொருந்திய மலர் நிறைந்த நந்தனவனங்கள், இடபக்கொடியை யுடைய சிவபெருமானுக்குரியவயல்கள், அலைகளையுடைய நீர்நிரம்பிய கிணறுகளென்னும் இவற்றிற்கு அழிவையுண்டு செய்த பாவங்களும். எ - று. (௩)

எடுத்து ரைத்தனஞ் சிவத்துரோ கங்கண்மற் றிவற்றை
யடுத்த பாதக மாரண மாகம புராணந்
தொடுத்த ணிந்திடு முருத்திர வக்கம்வெண் டீமை
படுத்த பூதியை யிகழ்வதென் றுரைத்திடப் படுமால்.

(இ - ள்.) ஆகிய சிவத்துரோகங்களை யெடுத்துச் சொன்னோம். அதன் பின், இவற்றிற் சேர்ந்துள்ள பாதகங்களாவன:—வேதங்கள் சிவாகமங்கள் புராணங்கள் கோத்தணியத்தக்க உருத்திராக்கம் வெண்மையும் புனிதமுமாகிய திருநீறு என்னும் இவற்றை இகழ்ந்து சொல்வதென்று சொல்லப்படும். எ - று.

திருக்கு ளந்திருக் கோயில்செந் தேத்துளி சிதறி
மருக்கு நாண்மலர் வனமென மதிக்கில ராகிச்
செருக்கி னுமிழ்ந் திடுவது செயற்கருந் தீமை
கருத்தி னோர்ந்துற திவ்விடைப் புரிகடுங் கண்மை.

(இ - ள்.) திருக்குள மென்றும் திருக்கோயிலென்றும் செந்நிறந்தங்கிய தேன் துளிகள் சிந்தி மணங்கமழும் அன்றலர்ந்த புதியமலர்கள் நிறைந்த நந்தனவனமென்றும் மதியாதவர்களாய், கருவத்தால் எச்சிலுமிழ்தல், செய்யத்தகாத கொடுஞ்செயல்களை மனதிற் கருதாது இத்தகைய இடங்களிற் செய்தலாகிய கொடுமைகள். எ - று. (௪)

சொன்ன வீங்கிவை யாவையுஞ் சிவதுரோ கங்க
ளன்ன செய்தவர்க் கண்ணுற றீண்டுத லருகே
மன்ன லோது றல் போர்சொலல் வார்த்தைகேட் டுறுத
லின்ன வாகிய வாறுமத் துரோகமென் றிசைப்பார்.

(இ - ள்.) ஆகச்சொல்லிய இவையாவுமே சிவத்துரோகங்களாம். அப்படித் துரோகஞ்செய்தவர்களைக் காணுதல் தொடுதல் அவர்கட்கருகேயிருத்தல் அவற்றைச்சொல்லுதல் அவர்கள் பெயரைச்சொல்லுதல் அவர்கள் பேச்சைக் கேட்டல் இத்தகையினவாகிய இவ்வாறையும் அச்சிவத்துரோகமென்றே சொல்லுவார்கள். எ - று. (௫)

இதனை யோர்ந்தரு ளிப்பவ மியற்றியோ ரின்னுங்
கதமெழ ரிப்படி நிரயமுற் றவர்கணக் கிலர்
லதுபு ரிந்திடு பாதகர் சரிதையி லறிந்த
அதுவ மாதவத் தலைவிர்காள் கேட்குதி ருரைப்பராம்.

(இ - ள்.) இதனை யறியாமல் இத்துரோகங்களைச் செய்தவர்களாய், கொ டுமையிருந்த நிமயமான நகரத்தில் இன்றுகாறும் அமிழ்ந்திருப்பவர்கள் எண் ணிறந்தவர்களாம். அப்படித் துரோகஞ்செய்த பாதகர்கள் சரித்திரங்களில், யாமுணர்ந்ததை, உங்கட்குபயோகப்படும்படி சொல்லுகின்றோம். பெருந்தவ சிரேஷ்டர்களே! கேட்பீர்களாக. எ - று. (அ)

பாந்த ளேந்திய வங்கநாட் டகவையுட் பணைக்கும்
பூந்த டம்புடை கிடந்தது கிரியெனும் புரததுச
சார்ந்த வார்குணச் சீலக னொருதனித் திகிரி
வேந்தர் வெண்குடை யொடுக்குற விரித்தவெண் குடையான்.

(இ - ள்.) ஆதிசேடன் சுமக்கும் அங்கநாட்டிலே பரந்து அழகிய தடாகங் கள் புடைசூழ்ந்துள்ள கிரியென்னும் நகரத்தில், சாந்தமென்னும் பெருங்குண மமைந்த சீலகனென்பவன் ஒப்பற்றுச் சிறந்த ஆக்கிஞைசக்கரமுடைய வேனையரசர்க ளுடைய சந்திரவட்டக் குடைகளையெல்லாம் ஒடுக்கிக்கொள்ளும்படி விரித்த பெரிய வெண்கொற்றக் குடையும் உடையவன். எ - று. (கூ)

தரும சிந்தையன் வெள்விடை யவனடிச சார்ந்த
கருணை வாரிதி யிரக்கமெய் யெடுத்தெனக் காட்டு
முருவ மெய்யினன் வெண்பொடி யல்லதொன் றணியா
னருநி லத்துள வுயிர்க்கெலாந் தாயையொத் தளிப்பான்.

(இ - ள்.) புண்ணியக் கருத்துடையவன், வெள்ளிய இடபத்தையுடைய சிவபெருமான் திருவடியை இதயத் தமைந்த கருணைக்கடல், இரக்கமே யொரு வடிவெடுத்தாற்போலத் தோன்றுகின்ற அழகிய சரீரமுடையவன், திருவெண் ணீற்றைத்தவிர வேறொன்றும் அணியாதவன், நிலவுலகத்திலுள்ள அரிய ஆன்மவர்க்கங்க ளெல்லாவற்றையும் தாயைப்போல ஆதரிக்கின்றவன். எ - று.

பாரெ டுத்திடும் பணைநெடும் புயத்தவன் பால
ரோவ ருந்திறற் பாவசித் தென்றுள னொருவன்
சூர சித்தவென் றொருமகன் கோரசித் தொருவன்
வீர சிதனெனு மொருமக னல்வர்வெந் திறலோர்.

(இ - ள்) பூமிபாரத்தைச்சுமக்கும் பரந்து நீண்டதோள்களையுடைய அவன்புத்திரர் நால்வராகும். அந்நால்வரில் ஜேஷ்டனாகிய ஒருவன் ஒழிதற்கரிய பாவசித்தென்னும் பெயருள்ளவன், மற்றொருபுத்திரன் சூரசித்தென்னும் பெய ருடையவன். வேறொருவன் கோரசித்தென்னும் பெயர் பெற்றவன். பிறிதொரு புத்திரன் வீரசித்தென்னும் பெயர்கொண்டவன். இவர்கள் நால்வரும் பெரும் பராக்கிரமவான்கள். எ - று. (கக)

பொருந்த நால்வரும் பாவையு முழுதுமாக் கற்றோர்
பெருந்திறல் [illegible] பாங்கினை [illegible]
பொருந்த மன்னவர் [illegible] செருந்திறக் [illegible]
[illegible] றப்பொரு [illegible] தளிப்பார்.

(இ - ள்.) சொல்லிய இந்நால்வரும் நூல்களை யெல்லாம் முற்றுங்கற்ற வர்கள். மிகுந்தமெய்யன்போடு சேஷசயனத்தையுடைய திருமாலைத் துதி செய்து வேறுள்ள மன்னர்களை யடக்கிச் சுயங்கொண்டு அவர்களடங்கிய பின்னர், குறும்பரசர்களிருப்பதை யறிந்து அவர்களும் அழியும்படி யெதிர்த்து, தாங்களே ஏகசக்கிராதிபத்திய மெய்தியவர்களாய். எ - று. (கஉ)

தாதை சொல்வரம் பிகந்தில ரறத்தொடுஞ் சரிப்பார்
வேத நான்மறை யிராசசூ யப்பெரு வேள்வி
நீதி லன்பொடு மியற்றினர் தனித்தனிச் சிறந்தா
ரோது வேதமோத் துயர்ந்தன ரிந்நால்வரு மொருங்கே.

(இ - ள்.) தந்தைவாக்கியமாகிய எல்லையைக் கடக்காதவர்களாய் வேத சாஸ்திரோக்தமாய் இராஜசூயமென்னும் பெரியயாகத்தைக் குற்றமற்ற அன்போடு செய்தார்கள். யாவருஞ் சிறந்ததாச் சொல்லும் வேதங்களை யுணர்ந்து சிறப்பெய்தியவர்களாய் அந்நான்குபுதல்வர்களும் ஒருதன்மையராய் மேம்பா டுற்றார்கள். எ - று. (கங)

கால மிப்படிக் கழிதரு ஞான்றொரு கழற்கா
பால கர்ப்பயந் தீன்றவ னரனடி பணிந்தம்
மூல மூர்த்திதன் சிவநிசி நோற்றிட முயலா
வாலு மன்பினோ டெழுந்துகோ கன்னமுற் றடைந்தான்.

(இ - ள்.) இப்படி நல்வழியிலே நாள்கள் கழித்துவருங் காலத்தில், ஒப் பற்ற வீரகண்டாமணியணிந்த பாதங்களை யுடையவனாய்ப் புத்திரர் நால்வரை யும் பெற்ற சீலகனென்னும் அவ்வரசன், சிவபெருமான் திருவடிகளைவணங்கி அம்முழுமுதற்கடவுளுக்குரிய சிவராத்திரிவிரதத்தை அநுஷ்டிக்க முயன்று, விசேடித்த மெய்யன்போடு புறப்பட்டுக் கோகர்ணமென்னும் க்ஷேத்திரத்தை யெய்தினன். எ - று. (கச)

எந்தை நோன்புநோற் றங்கவ னிருதுமூன் றிருந்தான்.
சிந்தை யெம்பிரா னடைந்தரு சேவடி செலுத்தி
யந்தி வண்ணனார் விடைதரக் கிரிபுர மடைந்தா
னிந்து நீண்முடிக் கோயிலி னெடுங்கடை யிறுத்தான்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானுக்குரிய சிவராத்திரி விரதத்தை யநுஷ்டித்துவந்த அவ்வரசன் மூன்றிருதுக்கள் அத்தலத்திலேயே தங்கி யிருந்தான். அக்காலத்தில் அவன் மனதை எமது சிவபெருமான் திருவடிகளிற் செலுத்திச் செவ்வானம்போலும் நிறந்தங்கிய அப்பெருமான் விடைகொடுத் தருளவும், தன் நகரமாகிய கிரிபுரஞ் சேர்ந்தான். சந்திரன் தவழும் நெடிய சிகரத்தையுடைய தனதரண்மனையின் பெரிய வாயிலை யெய்தினான். எ - று. ()

வயங்கு மாமணி நெடுமுடி வேந்தரை மறங்கூ
ரியங்கு சேனையை யானையு நிறுத்தின னெய்தித்
தயங்கு பேரொளி மாமணி யரிப்பிடர் தாங்கும்
வியன்கொ ளாசனத் திருந்தனன் றனிக்குடை வேந்தன்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற சிறந்த இரத்தினங்கள் பதித்த பெரிய கிரீடங்களையணிந்த மன்னர்களையும் கொடுமைமிகுந்து விளங்கும் சேனைகளெல்லாவற்றையும் புறத்தே நிறுத்திவிட்டு உட்புகுந்து, ஒளி வீசும் பெரிய சோதியுடைய உயர்ந்த மணிகளிழைத்துச் சிங்கங்களின் பிடரியிற் சுமந்துகொண்டிருக்கும் பெருமை மிக்க ஆதனத்தில், ஒப்பற்ற வெண் கொற்றக்குடையையுடைய அவ்வரசன் வீற்றிருந்தான். எ - று. (௧௬)

இருந்த காலையி னெம்பிரா னிணையடிக் கமலம்
புரிந்த வன்பின னருட்சிவ தேசிகன் புகுந்தான்
றெரிந்த நூன்முறை யருச்சனை புரிந்தனன் சினக்கா
ருரிந்த போர்வையான் பூசைநன் றோவென வுரைத்தான்.

(இ - ள்.) இப்படிச் சிங்காதனத்திலிருக்குஞ் சமயத்தில், எமது சிவபெருமானுடைய செந்தாமரைமலர்போலும் இருபாதங்களைப்பூசிக்கும் விருப்பமுள்ள மெய்யன்பினையுடைய திருவருண்மிகுந்த சிவாசாரியசர் ஆங்கெய்தினர். அவன் உணர்ந்துள்ள நூன்முறைபபடி அவரைப் பூசித்து, கோபித்துவந்த(கயாசுரனென்னும்) யானையை யுரித்துப்போர்த்தவராகிய சிவபெருமானுக்குரிய பூசைசெய்வையாக நிகழ்கின்றதா? என வினவினன். எ - று. (௧௭)

அரச நின்னரு ளியற்கையா னாதனுடைப் பூசை
புரைய றதின நடந்ததுன் புதல்வரா லுனக்கு
வரைய றாஞ்சிவத் துரோகமுற் றடைந்தது மன்னா
வுரக நீணிலத் துரைக்கினெந் நாளது வொழிப்பாய்.

(இ - ள்) வேந்தனே! உன் காருண்யத்தன்மையால் சிவபெருமான் பூசை தினந்தோறுங் குற்றமற நடந்தேறியது. உன் புத்திரர்களாலே உனக்கு எண்ணிறந்த சிவத்துரோகங்கள் வந்து நேர்ந்தன. அரசனே! ஆதிசேடன் சுமக்கும் இந்நிலவுலகத்தில் அவற்றைக்குறித்துச் சொல்லுமிடத்தில் எக்காலத்தில் அவற்றை யொழிக்கப்போகின்றாய். எ - று. (௧௮)

என்றுரைத்தசொற் கேட்டலு மெறுழ்வலி வேந்தன்
றன்றுணைசெவி பொத்தினன் சிவனையுச சரியா
நின்று நெட்டுயிர்ப் பெறிந்தன னினைதொறும் வெதும்பி
யின்றெ னக்கஃ தியம்புதி யியம்புதி யென்றான்.

(இ - று.) என்று சிவாசாரியார் சொல்லிய சொற்களைக் கேட்டவுடனே, மிக்கவல்லபமுடைய அம்மன்னவன், தன்னிருசெவிகளையும் பொத்திக்கொண்டு சிவபெருமானைத் தியானஞ்செய்து, அச்சொற்களைக் கருதுந்தோறுந் துக்கமெய்திப் பெருமூச்செறிந்து நின்று இப்போதே அதை யெனக்குச் சொல்லுவீராக சொல்லுவீராக வென்று கேட்டான். எ - று. (௧௯)

வெயில்வி டுங்கழல் வீரசித் தடுதிறல் விடையோ
னெயில கத்துள செங்கனூற் திரட்டிபுக் கெடுத்தா
னயன்ம றித்திடை விலக்குறக் கேட்டில னிவையான்
புயனி றத்தவற காலயம் புதுக்கினன் போலும்.

(இ - ள்.) ஒளிவீசும வீரக்கழலணிந்த வீரசித்தென்பவன் கொன்றுதக்க வலிமையுடைய இடபாரூடராகிய சிவபெருமான் திருக்கோயின் மதிலினுள்ள இரு

நாற செந்நெற்களைப் புகுந்தெடுத்தான். அருகேயிருந்து தடுத்து மந்திரியில் விலக்கவும் கேட்கவில்லை அவன் அக்கற்களால் மேக நிறமுடையவராகிய திருமாலுக்கு ஆலயமமைத்தான்போலும். எ - று. (உ௦)

பின்னு மற்றொரு கோரசித னெனும்பெரும் பெயரா
னென்னை யாளுடை நாயகன் சினகரத் தெழுந்த
முன்னை யாமுத றடிந்தனன் விலக்கவு முனிந்தா
னின்னை யோர்ந்திலன் யாகசா லையிற்கொடு நிரைத்தான்.

(இ - ள்.) இன்னும், மற்றொருவனாகிய கோரசித்தெனும் சிறந்த பெயருடையவன், என்னை யடிமையாகவுடைய சிவபெருமான் திருக்கோயிலில் ஓங்கி வளர்ந்திருந்த பழமையாகிய மாமரத்தைவேரோடு வெட்டி யெறிந்தான். யான் வேண்டாமென்று தடுத்தபோது கோபித்தான். உன்கருத்தை யுணராதவனாகி யாகசாலையிற் கொண்டுபோய் அவற்றை நிரப்பிவிட்டான். எ - று. (உக)

சூரசித்தெனும் பெயருடை நின்னுடைத் தோன்ற
லார வார்சடை யெம்பிரா னாலயத் தமைந்த
ஈர நாண்மலர்த் தொகையுள யாவையு மெடுத்து
வேரி யங்குழற் றையலுந் தானுமாய் மிலைந்தான்.

(இ - ள்.) சூரசித்தென்னும் பெயருடைய உன்மகன், மாலையணிந்த நெடிய சடையுடைய எமது சிவபெருமான் திருக்கோயிலில் அமைந்திருந்த குளிர்ச்சி தங்கிய அன்றலர்ந்த மலர்க்கூட்டங்களையெல்லாம் பறித்துக்கொண்டு சென்று, வாசனையும் அழகுமுள்ள கூந்தலையுடைய மனைவிக்குச் சூட்டித் தானும் சூடிக்கொண்டான். எ - று. (உஉ)

இனைய யாவரு மென்னுரை திறம்பின ரெடுத்தா
ரனைய காப்பவர் பொறுத்திலர் தம்முயி ரகன்றார்
நினைவி னீயிது கேட்கிலை மறுத்தியே னின்முன்
வினையி னேனுயிர் விடுவது திடமென விரித்தான்.

(இ - ள்.) இவர்களெல்லாரும் என்வார்த்தையைத் தடுத்தவர்கள் எடுத்தார்கள். அவற்றைக் காவல்பூண்டிருந்தோர் சகியாதவர்களாய்த் தங்கள் உயிரைப் போக்கிக்கொண்டார்கள். நீ இதைக்கவனத்தோடு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டாயாகில் உனக்கு முன்னதாகவே, வினையேனாகிய நானும் உயிர்விடுவது உண்மையென்று சொல்லினர். எ - று. (உங)

கேட்ட வேந்தனு மடுசின மீக்கொடு கிளரத்
தோட்ட லங்கலார் சொற்படி யிவைசெயத் துணிந்த
மூட்ட பத்தரைக் கொணர்கெனக் கொணர்ந்தனர் முன்னி
வாட்டி றற்படை யாலுயிர் செகுத்துற வலித்தான்.

(இ - ள்.) இவற்றையெல்லாங் கேட்ட அம்மன்னவனும், கொல்லுதற்குக் கோபமானது மேலோங்கியெழுக, இதழ்களையுடைய மலர்மாலையணிந்த ஆசாரியர் வார்த்தையின்படி, இச்சிவத்துரோகங்கள் செய்தற்கு மனந்துணிந்தவர்களாகிய விசேடித்த பொய்யர்களை அழைத்துவாருங்களென்று கட்டளையிடவும் அப்படியே யழைத்துவந்தார்கள். உடனே யோசித்து [illegible] வலிமிக்க வாட்படையால் உயிர்போக்கும்படி உத்தரவளித்தான். [illegible]

எறிந்த மாவினை மீட்டெடுத் தெம்பிரான் கோயிற்
செறிந்து றப்பணித் தாஙகவ னெடுத்துறு செங்க
னறுந்து ழாயவன் சினகரம் பிரித்தொரு நம்ப
னெறிந்த புன்சடை யவன்பணிக் கிடுமென நிகழ்த்தி.

(இ - ள்.) வெட்டிய மாமரத்தை மீண்டுமெடுத்து, எமது சிவபெருமான் திருக்கோயிலிற் சேர்க்கும்படி கட்டளைசெய்து, மற்றொருவனெடுத்துவந்த செங்கல்லினாலாகிய மணந்தங்கிய துளசிமாலையணிந்த திருமாலின் திருக்கோயிலைப்பிரித்து, நெறிப்போடுகூடிய சிறுசடையையுடையவரான ஒப்பற்ற சிவபெருமான் திருப்பணிக்கு ஆக்கக்கடவீர்களென்று கட்டளைசெய்து, எ - று.()

இழைத்த தீவினை யொழிதரத் தனதுள மிரங்கிக்
குழைத்த செம்பொனு னவமணி யிடையிடை குயிற்றி
விழைத்த வன்பொடு மணிமுடி விரைவொடு மியற்றி
மழைத்த டக்கையா னீசனுக் களித்தனன் மரபின்.

(இ - ள்.) செய்த தீவினையானது கழியும்படி தன்மனமிரங்கி, உருக்கிய பசும்பொன்னால் நவரத்தினங்களை இடையிடையே பதித்து, விரும்பியபேரன்போடு இரத்தினகிரீடமொன்று அதிசீக்கிரத்திற் செய்வித்து மேகம்போலும் பூரித்தகையையுடைய அம்மன்னவன் அக்கிரீடத்தைக் கிரமப்படி சிவபெருமானுக்களித்தான். எ - று. (௨௬)

இருவ ரால்வரும் பாதக மிவ்வழி யொழிய
வரத னன்புறப் பூசனை பற்பல வகுத்தா
னொருவ னுண்மல ரெடுத்தணி பாதக மொழிப்பான்
கருதி யொன்றுமுற் றுணாந்தில னிருந்தனன் கவல்வான்.

(இ - ள்.) இருபுதல்வராற் சம்பவித்த சிவத்துரோகங்கள் இப்படிக்கழிய, சிவபெருமான் திருவுளமுவக்கும்படி பலவகைப்பூசைகள் செய்தவனாகிய அம்மன்னவன் மற்றொருபுத்திரன் அன்றலர்ந்த மலர்களை யெடுத் தணிந்தபாவத்தைப் பரிகரிக்கக்கருதி ஒன்றுமுணராதிருந்து கவலையுறுகின்றான். எ - று. ()

என்செய் தாற்றுது மிவர்பொருட் டாருயி ரிறந்த
வன்பி னுற்றிய மூவர்வந் தடைந்தவெம் பழியாற்
றுன்பு முந்துவீழ் கிரயமார் தொலைபபவர் சிவனே
புன்பு லைச்சடம் பொறுத்துயிர் வாழ்வனோ புவியில்.

(இ - ள்.) என்னபரிகாரஞ்செய்து சகிப்போம்? இப்புதல்வன் பொருட்டு உயிர் நீக்கிக்கொண்டவர்களாகிய, அன்போடு காவற் றொண்டுசெய்திருந்த அம்[illegible]வரால் நேரிட்டகொடும்பழியால் துயரமிகுந்த விழத்தகுந்த நரகவேதனையை அநுபவிப்போர் யாவர்? சிவபெருமானே! அடியேன் இழிவாகிய புலைத் தன்மையுடைய உடலைத்தாங்கி இன்னும் இப்பூமியில் உயிர்வாழ்வேனோ? எ - று.

யாது செய்திவை யொழிக்குவ னெம்பிரா னினிப்
போது புன்புலாற் புன்றலை பொறுத்தனன் றொலையாப்
பேதை சித்தனென் பாழ்வயிற் றுதித்தனன் பாவி
வேத நான்முகன் விதித்தவா றன்றென விளம்பும்.

(இ - ள்.) என்னபரிகாரஞ்செய்து இப்பழியை விலக்குவேன்? எமது சிவபெருமானுக்குரிய மலர்களை, கொடியபுலால் நாற்ற மெய்திய இழிதகைமையுடைய தன்சிரத்திற் சூடினனே. இத்தகைத் தீராப்பாவியாகிய இவன் பாவியாகிய என்பாழ்வயிற்றிற் பிறந்தனனே. வேதமுணர்ந்த பிரமன் எனக்கு விதித்தவகை நன்றே யென்று சொல்லுவான். எ - று. (௨௯)

ஒன்று காண்கில னொழிப்பதற் கின்னுயி ரொழிப்பே
னின்றெ னத்தழல் வளர்த்திரென் றிசைத்தன னிறைவன்
மன்ற னாண்மல ரெடுத்தணி மகனுமம் மலர்கொண்
டன்று சூடிய மருகியு மருகுற வழைத்தான்.

(இ - ள்.) பிராயச்சித்தம் ஒன்றுங் காணனாய், அம்மன்னவன் என்னுயிரையும் இன்று போக்கிக்கொள்வேனென்று தீயை வளர்க்கும்படி கட்டளையிட்டான். அதன்பின் வாசனையுடைத்தாய் அன்றலர்ந்த மலரைப்பறித்தணிந்த புதல்வனும் அம்மலரை யெடுத்துச் சூடிய மருகியும் அருகேவரும்படி யழைப்பித்தான். எ - று. (௩௰)

பரிவு ழந்தன ராகிய வுலகெலாம் பதைப்பச்
சொரிக ணீரொடும் விலக்குறக் கேட்கிலன் றூயோன்
பிரிவு றாவழி மைந்தனை மருகியைப் பிடித்தவ்
வெரிநு ழைந்தனன் றேவரு மழுதழு திரங்க.

(இ - ள்.) துன்பெய்தினோராகிய அந்நகரவாசிகள் யாவரும் பதைத்துச் சொரிகின்ற கண்ணீருடன் தடுக்கவுங் கேளானாகி, புனிதனாகிய அம்மன்னவன் மகனையும் மருகியையும் பிரியாமற் பிடித்துக்கொண்டு, தேவர்களும் புலம்பித் துக்கிக்கும்படி அவ்வக்கினியிற் பிரவேசித்தான். எ - று. (௩௧)

நுழைந்த செந்தழ லாங்கவன் றன்மையை நோக்கித்
தழைந்த தாமரை வனமெனக் குளிர்ந்தது தழலென்
றிழைந்த யாவையுங் குளிர்ந்தன விளம்பிறை பிணித்துக்
குழைந்த வேணியா னெற்றியங் கட்கனல் குளிர.

(இ - ள்.) பிரவேசித்த செவ்விய அக்கினியானது அவ்விடத்தில் அவனுக்குற்ற துணிபைநோக்கி, செழித்துள்ள தாமரைக்காடுபோலக் குளிர்ச்சியெய்தியது. இளம்பிறையையணிந்து குழைந்துள்ள சடைமுடியையுடைய சிவபெருமான் அழகிய நெற்றிக்கண் குளிர்ந்தமையால், தீயென்று ஒன்று கூடிய யாவும் குளிர்ச்சியெய்தின. எ - று. (௩௨)

வேந்த னின்றுளத் ததிசய மடைந்தனன் விரிநீர்ப்
பாந்தண் மாநிலப் பல்லுயிர் யாவையும் பணிந்த
வேந்து தேவதுந் துமிமுழக் கெழுதர விடையே
பூந்தண் மாமழை பொழிதரப் புரவல னின்றான்.

(இ - ள்.) அம்மன்னவன் அங்கே நின்றுபார்த்து அதிசயமடைந்தான். பரந்த கடலாற் சூழப்பட்டு ஆதிசேடனாற் றமக்கப்பட்ட பெரிய பூமியிலுள்ள பலவகை ஆன்மவர்க்கங்களெல்லாம் அரசனை வணங்கின. உயரத்திலிருந்து தேவதுந்துமிகள் ஒலித்துக்கொண்டிருக்க அதனிடையே குளிர்ந்த மலர்மாரி சொரிய அரசன் நின்றுகொண்டிருந்தான். எ - று. (௩௩)

கலைநிலாக்குழீஇ யொருவழித் திரண்டெனக் கயிலை*
மலைநடந்தன மால்விடை யுமையொடு மருவி
யலைநதிப்புனற் சென்னியோ டடகப் பொருப்புச்
சிலையினோனவ னெதிர்ந்தனன் கண்களி சிறப்ப.

(இ - ள்.) சோடசகலைகள் நிரம்பிய சந்திரர்கள் எண்ணிறந்தோர்கூடி ஓரிடத்திற் சேர்ந்தாற் போன்று, திருக்கைலாயகிரியே நடந்துவந்தாற்போன்ற மால்விடையின்பேரில் பார்வதிதேவியாரோடும் ஆரோகணித்து, அலைகள்பொருந்திய கங்காசலத்தையணிந்த திருமுடியுடையவரும் மேருமலையை வில்லாகவுடையவருமாகிய சிவபெருமான் அம்மன்னவன் விழிகள் மகிழும்படி ஆங்கெழுந்தருளினர். எ - று. (௯௪)

போற்றி னனகம் பொருமினன் புன்றொழிற் பிறவி
மாற்றி னனழு தாடினன் பாடினன் மம்ம
ராற்றி னன்மயிர்ப் புறம்பொடித் தடிக்கடி பணிந்தா
னேற்றி னன்றிரு வருள்பெறப் பெற்றன னிறைவன்.

(இ - ள்) இடபவாகனத்தை யுடையவராகிய சிவபெருமான் திருவருள் தனக்கு எய்தப்பெற்றுக் கொண்டவனாகிய அம்மன்னவன் துதிசெய்தான். மனம் வருந்தினன். இழிவாகிய செயல்கட்குரிய பிறவியை விலக்கியவனாய்த் துக்கித்து ஆனந்தக்கூத்தாடினன். பலகீதங்களைப் பாடினன். மயக்கமகன்றவனாய் மயிர்க்கூச்செறிந்து அடிக்கடி வணங்கினன். எ - று. (௯௫)

அறந்த ருந்தனி மன்னர்கோ னந்நிலை தன்னை
மறந்து நின்றனன் மைந்தர்செய் வன்பழி யாற்றா
திறந்த மூவரு மெழுந்தனர் வேந்தனை யெதிர்ந்தார்
மறந்த ருங்கொலைச் சூலியை மண்ணுறப் பணிந்தார்.

(இ - ள்.) தருமச்செயல்களைப்புரியும் ஒப்பற்ற அம்மன்னவன், அவ்வாறு தன்னைமறந்து நின்றான். அவன் புதல்வன்செய்த கொடும்பழியைச் சகியாதவர்களாய், உயிர்துறந்த காவலாளர்கள் மூவரும் பிழைத்து, அம்மன்னவனுக்கு எதிரேவந்து, கொடுமையைவிளைக்குங் கொலைத்தன்மை பொருந்திய சூலாயுதத்தையேந்திய சிவபெருமானைப் பூமியிற் படியவணங்கினார்கள். எ - று. ()

தோட்ட லங்கலஞ் சுடர்மணி யரசர்பொன் மகுடந்
தீட்டு வேற்படை மன்னவன் செய்கைகண் டிரங்கிக்
கோட்டு வெள்விடை நாயகன் றிருவுளங் குழைந்தா
னேட்ட ரும்பலர் தொடையலாற் கினையன விசைப்பான்.

(இ - ள்.) இதழ்களோடு கூடியமலர்மாலையும், அழகும் காந்தியு மமைந்த இரத்தினங்களிழைத்த பொற் கிரீடமும், கூராகத்தீட்டிய வேற்படையுமுடைய அம்மன்னவன் செயலை, இருகோடுகளையுடைய வெள்ளிய இடபாரூடராகிய சிவபெருமான்பார்த்துத் திருவுளமிரங்கி, அரும்புகள் விரிந்து இதழ்கள் மலரும் மாலையணிந்த அவ்வரசனுக்குத் திருவாய் மலர்ந்தருளுகின்றார். எ - று.

மன்ன நின்னுளத் தன்மையும் வளமையு மதிக்கிற்
இந்நி லத்தெவர்க் குளவென மகிழ்ந்தனர் தூயோ

யிங்கி ல்த்துள நாள்பல கழித்தினி தோம்பி
யன்னை யாமெனப் பல்லுயிர்க் களித்தனை யாகி.

(இ - ள்.) புனிதமானவனே! நிலைபெற்ற உன்மனத்தின் தன்மையையும் வளமையையும் மதிக்குமிடத்தில், அவை பழமையாகிய இப்பூலோகத்தில் யாவர்க்கு உண்டாமென்று திருவுளமகிழ்ந்தோம். இங்கிலவுலகத்தில் உனக்குள்ளனவாகிய பல நாட்களையுங்கழித்து, பலவுயிர்கட்கும் தாயைப்போல அருள் செய்பவனாகி இனிதாக அவற்றைப் பாதுகாத்து. எ - று. (௫௮)

ஈண்டி ருந்துளம் வெறுத்தபின் னெம்முழை விரும்பி
வேண்டு நாளெம வெள்ளிவெற் பேகுதி யென்னக்
காண்ட ருந்திறற் காட்சிதந் தெறுழ்வலிக் கணதேதா
ராண்டெ திர்ந்துறக் கயிலைசென் றடைந்தன னமலன்.

(இ - ள்.) இவ்வுலகத்திலிருந்து உன்மனம் வெறுத்தபிறகு, எம்மிடத்தில் விருப்பமெய்தி யிச்சிக்குந்தினத்தில், எம்முடைய வெள்ளிமலையாகிய திருகைலைக்குச் செல்லுகவென்று, காணுதற்கரிய வெற்றிதங்கிய தரிசனை யளித்து மிக்கவலிதங்கிய சிவகணங்கள் அப்பொழுது எதிர்கொள்ளும்படி, மலரகிதனாகிய சிவபெருமான் திருக்கைலாயகிரிக் கெழுந்தருளினர். எ - று. (௫௯)

எம்மை யாளுடை நாயகற் கினியனென் றிரங்கி
மைம்ம ழைப்புயல வண்ணனு மானமொன் றளித்தான்
கொம்மை வெம்முலைப் புலோமசைக் கொழுநனுங் குறுகி
மும்ம தத்தவெண் பகடளித் தேகினன் முறையால்.

(இ - ள்.) அம்மன்னவன், எம்மையடிமையாகவுடைய சிவபெருமானுக்கு இனியவனென்று, கரியமேகம்போல நீலநிறமமைந்த விஷ்ணுமூர்த்தியும் மனங்கனிந்து ஒருவிமானமளித்தனர். குவிந்து கடினமாகிய தனங்களையுடைய இந்திராணியின் கணவனாகிய இந்திரனும் அவன்பா லெய்தி மும்மதங்களையுடைய வெள்ளையானையை முறைப்படி கொடுத்துச்சென்றான். எ - று. ()

ஒளிப்ப சும்பொனாட் டிமையவர் யாவரு மொருங்கே
யளித்த யாவையும் பெற்றன னறந்தலை யெடுப்பக
களிந்த சிந்தையிற புரந்தனன் கனைகட லுலகந்
தளிக்க ரும்புயன் மும்முறை திங்களிற் றழைப்ப.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பசிய பொன்னாட்டில் வசிக்குந்தேவர்கள் யாவரும் ஒன்றாகக் கொடுத்த பல டரிசுப் பொருள்களையும் பெற்றவனாகி, அம்மன்னவன் தருமங்கள் தலைதூக்கும்படி குளிர்ச்சியுற்றுக் கருநிறமெய்திய மேகங்கள் மாதந்தோறும் மும்மாரிபெய்யும்படி ஒலிக்கின்றகடல் சூழ்ந்தபூமியைச் சந்தோஷித்தமனதோடு காவல்பூண்டனன். எ - று. (௬௧)

முள்ளெ யிற்றுவா ளரவணி சென்னியோன் முருகக்
கள்ளு றைக்கவிழ் தாமரைத் தாள்பெறுங் கருத்தா
னுள்ள நெக்குறச் சைவமே லோங்குற வுவந்தான்
வெள்ளொ ளிப்பொடி யல்லது பூணிலா வேந்தன்.

(இ - ள்.) வெள்ளிய காந்தியுடைய திருநீற்றினையன்றிப் பிறிதொன்றனையும் அணியாத அம்மன்னவன், மூட்போலும் கூரிய பற்களையுடைய ஒளிதங்கிய சர்ப்பங்களையணிந்த முடியையுடைய சிவபெருமானது மணம்வீசித்தேன் கசிந்தொழுகும் தாமரைமலர்போன்ற பாதங்களைப்பெறத்தக்க கருத்தோடு, மனம் நெக்குவிடச் சைவசமயம் மேலோங்கியவாறு களித்திருந்தான். எ - று.

காலநீடுறக் கண்ணக னெடுநிலங் காத்துப்
பாலலோசனன் கைலையங் கிரியுறப் படர்ந்தா
னூழ்பல கழிந்தபி னருங்கதி யடைந்தான்
கோலவெண்குடை யவன்செயல் யாவரே குணிப்பார்.

(இ - ள்.) காலமானது அதிகரிக்க, இடமகன்ற பெரிய நிலவுலகத்தை யரசுசெய்து, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுடைய அழகிய கைலாயகிரியையடைய, நல்வினைப்பயன்களை மிகுதியாக அநுபவித்தபிறகு அரிய முத்தியையடைந்தான். அழகிய வெண்கொற்றக் குடையையுடைய அவன்செய்கையை எவர்தாம் அளவிடுவார்கள்? எ - று. (௪௩)

மைந்தர் சொற்படி மாமுத றடிந்தவர் மதத்தால்
வெந்த வெஞ்சிலை யெடுத்தவர் மெல்லிதழ் விரிக்குங்
கந்த நாண்மல ரெடுத்தவர் கனற்படு நிரயத்
திந்த நாள்வரை யழுந்துவ ரெழுந்திலரின்னும்.

(இ - ள்.) அம்மன்னவனுடைய குமாரர்கள் சொல்லியபிரகாரம் மாமரத்தின் வேரை வெட்டியவர்களும், சுட்ட செங்கற்களை இறுமாப்போடு கல்லியெடுத்தவர்களும், மெல்லிய இதழ்களையலர்த்தும் மணந்தங்கிய அன்றலர்ந்த மலர்களையெடுத்தவர்களும் தீமிகுந்த நரகத்தில் இன்று தினம் வரையில் அழுந்தினவர்களாயுள்ளர். இன்னும் அதினின்று நீங்கவில்லை. எ - று. (௪௪)

சுருதி நாலுமற் றாகம புராணமுந் தொகுத்து
மாபி ணைதன் மாதொரு பாகனை மதியார்
புரைபு ரிந்தவர்க் கொன்றினு முய்திறம் புகாது
சரத மென்றெடுத் திசைப்பன சத்தியம் புகன்றேம்.

(இ - ள்.) உமாபிராட்டியாரை ஒப்பற்ற வாமபாகத்திலுடைய சிவபெருமானை மதியாதவர்களாய்க் குற்றஞ்செய்தவர்களுக்கு, நான்குவேதங்களும், (இருபத்தெட்டுச்) சிவாகமங்களும், (பதினெட்டுப்) புராணங்களும் தொகுப்பாக முறைப்படி சொல்வது ஒருவகையிலும் இவர்கள் பிழைக்கும்வகை யெய்தாதது உண்மையென்று சொல்லுவன சத்தியமென்று சொன்னோம். எ - று. (௪௫)

கலிநிலைத்துறை.

ஈசனுக் கினிதபி டேக மாகிய
வாசமென் கதலியின் கனியை வவ்விய
நீசர்வீழ் படுகுழி நிரயத் தாழ்வது
பேசுது மன்னது பெரிது கேட்டிரால்.

(இ - ள்.) சிவபெருமானுக்கு இனிதாக அபிடேகமாகின்ற, வாசனைதங்கிய மெல்லிய வாழையின்கனியைத் துராங்காரமாகக் கொண்ட நீசர்கள், வீழத்தக்க நரகப்படுகுழியிற் படிவதைச்சொல்லுவோம், அதனைப்பெரிது கவனித்துக் கேட்பீர்களாக. எ - று. (௪௬)

அங்கநா டெனுமொரு நாட்டினங்நகர்த்
திங்கள்வெண் குடையொரு வேந்தன் றீவினைப்
பங்கநீத் தொழுகிய பான்மை யானரு
டங்குசீர் புனைவிதா தாவென் பானுளன்

(இ - ள்.) அங்க நாடென்னும் ஒரு நாட்டிலே, அந்நகரத்தின் வெள்ளிய சந்திரவட்டக்குடையை யுடைய ஒரு மன்னவன், பாவமாகிய சேற்றினைக்கடந்து நடந்த தகுதியுடையவன், கிருபைதங்கிய சீர்த்திபுனைந்த விதாதாவென்னும் பெயரினனுண்டு. எ - று. (௪௭)

உலகெலாந் தன்னுயி ரென்ன வோம்புவான்
கலையெலா மொருங்குணர்ந் தளந்த கற்பினு
னிலையழி யசத்திய நிகழ்த்து றுன்றொழாக்
குலமுறை மன்னவா தொழுசெங் கோலினன்.

(இ - ள்.) தன்னுயிர்போல உலகிலுள்ள மன்னுயிர்களையெல்லாம் காப்பவன். எல்லாச்சாத்திரங்களையும் முற்றக்கற்றறிந் தளவிட்ட கல்வியுடையவன். நிலைகெடத்தக்க பொய்ம்மொழி புகலாதவன். வணங்காத குலமுறையுடைய அரசர்களும் வணங்கத்தக்க செங்கோலுடையவன். எ - று. (௪௮)

ஆங்கவன் றன்னுழை யசித்த னென்றரு
ளோங்கிய புரோகித னுரைத்த சொன்முறை
நீங்கல னாகியே நெறியி னின்றனை
னீங்கிவ னுயிர்புரந் தளிக்கு மெல்லையின்.

(இ - ள்.) அவ்வரசனானவன், அசித்தனெனும் பெயர்கொண்ட அன்புமிக்க புரோகிதன்சொல்லிய சொன்முறைதவறாதவனாகி நன்னெறியிலொழுகினவன். இவன் இந்நிலவுலகத்திலே உயிர்களைப்பாதுகாத்து அரசு செய்துவருங் காலத்தில், எ - று. (௪௯)

நுடங்கிய மேனிய னிழைத்த நோன்பின
னடகதர நான்மறை நவிற்று நாவினன்
விடம்படு களத்தினன் வியப்ப வீணைநா
விடம்படு நாரத முனிவந் தெய்தினான்

(இ - ள்.) ஒசிகின்ற திருமேனியுடையவரும், செய்ததவங்களையுடையவரும், நான்குவேதங்களும் நடிக்கும்படி சொல்லுகின்ற நாவையுடையவரும், விஷம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான் மகிழும்படி (மகதி) வீணையை வாசிப்பவருமாகிய நாரதமுனிவர் அங்குவந்தடைந்தனர். எ - று.

எதிர்ந்திடு முனிவனை யெதிர்கொள் வானில
மதிர்ந்திட வோடினன் கடன்கள் யாவையு
முதிர்ந்தெழு வேட்கையின் முறையின் முற்றமண்
பிதிர்ந்திட வணங்கின னினிய பேசினான்.

(இ - ள்.) ஐய்திய நாரதமுனிவரை யெதிர்கொள்ளும்படி பூமியதிரும்படியோடி, செய்கடன்களெல்லாம் அதிகரித்தெழுந்த ஆசையுடன் [illegible]படி செய்து முடிக்க, மண்ணிற்பதியும்படி நமஸ்கரித்து இனியவார்த்தை[illegible]றினன். எ - று. ([illegible])

ஆயவன் றனைத்தன் னன்பி னூற்றிய
கோயில்கொண் டெய்தினன் குறுகிப் பல்லுயிர்ப்
பாயரிப் பிடர்பொறுத் திட்ட பன்மணித்
தூயவா சனத்தினி திருத்திச சொல்லுவான்.

(இ - ள்.) அந்நாரதமுனிவரைத் தனது அன்பினாற்செய்த அரண்மனையில் உடன்கொண்டணைந்து, பல பல நகங்களையுடைய பரந்தசிங்கங்களின் பிடரிற் றாங்கிய பவரத்தினங்கள் பதித்த புனிதமாகிய ஆசனத்தில் இனிதாக வெழுந் தருளி யிருக்கச்செய்து சொல்லுகின்றான். எ - று. (௯௨)

யான்றரு தவங்கொலோ வியற்று மிந்நிலந்
தான்றரு தவங்கொலோ வூழின் றன்மையோ
தேன்றரு தெரியலா யெய்தச செய்தது
மூன்றுரு வொன்றென வெடுத்த மூப்பினோய்.

(இ - ள்.) திரிமூர்த்திகளும் ஓருருவெடுத்தாற்போன்ற வயோதிகரே! தேன்சொரியும் மலர்மாலையணிந்த முனிவரே! தேவரீரை இங்கெழுந்தருளும் படி செய்தது அடியேன் செய்ததவப்பலனோ? இந்நாட்டினோர் செய்ததவப் பலனோ? பண்டைய புண்ணியத்தின்பலனோ? . (யாதென்று முணர்கிலேன்.)

என்பன பலபல மொழிந்தேத் தினு
னன்பனு மினிதுவந் தருட்க ணோக்கினு
னின்புக லொருமொழி நிகழ்த்த வேண்டியாம்
பொன்பொரு மௌலியாய் புகுந்த தென்றனன்

(இ - ள்.) என்பனவாகிய பற்பல வார்த்தைகள் கூறித்துதித்தான். நாரத முனிவரும் இனிதாகச் சந்தோஷித்துக் கிருபாநோக்கஞ்செய்தனர். பொன் போலும் கிரீடமுடையவனே! உன்பால் சொல்லவேண்டிய ஒரு சொல்லைச் சொல்ல விரும்பி யான் இங்கு வந்ததென்றனர். எ - று. (௯௩)

யாதுகொ லிசைத்தியென் றரச னேத்துறப்
போதவிழ் கற்பகப் பொதும்பர் நீழனின்
றாதையின் றிரன்பெருஞ் சவையின் வைகுவா
னோதிய துன்னுடைக் குறுதிகே ளென்றான்.

(இ - ள்.) அதுகேட்ட மன்னவன் அஃதியாதோ? கூறுகவென்று துதி செய்ய, மலர்கள் விரிந்த கற்பகவிருக்ஷ நீழலில் உன்றந்தையானவன் இந்திர னுடைய பெரிய சபையினிடத்தே வசிக்கின்றவன், உனக்குச் சொல்லும்படி கேட்டுக்கொண்ட உறுதிமொழியைக் கேட்பாயாக வென்றனர். எ - று. (௯௪)

அல்லினும் பகலினு மறத்தை மேலவர்
சொல்வழி நிறுவிச் சுவர்க்க மேயினே
னல்லறத் துறைவழி நடந்து நின்னையும்
பல்லுயி ரோம்புறப் பணித்தியா லென்றான்.

(இ - ள்.) இரவிலும் பகலிலும் மேலோர் சொல்லியவழியைப் [illegible] தரு மத்தை [illegible]றுத்தி இச்சுவர்க்க பதவியையடைந்தேன். நல்ல தருமவழியின் [illegible]யும் பல உயிர்களைக் காக்கும்படி கட்டளையிடும்படி சொல்லினன்

ஈதவற் குரைத்தன னருகி னெய்திய
மாதவ னசித்தனை மரபி னோக்கிநின்
றாதைதென் புலத்தெறு தறுக ணாளரால்
வாதையுற் றொழிவுறா மம்ம ரெய்துவான்.

(இ - ள்.) இதனை அம்மன்னவனுக்குச் சொல்லினர் அவனருகேயுள்ள பெருந்தவமுடைய அசித்தனை முறைப்படி பார்த்து, உன்பிதா தென்றிசையிலுள்ள துன்புறுத்தத்தக்க அஞ்சாமையுடைய கால படர்களால் வதைசெய்யப் பெற்று நீங்காதமயக்க மெய்துகின்றான். எ - று. (௫௭)

உறுக்குவ ரூரப்புவ ருலங்கற் றோள்விசித்
திறுக்குவ ரீர்ங்கொடு வாளிட் டீர்ந்தற
வறுக்குவர் யாமவ னடைந்த காலையிற்
பொறுத்தன ராங்கவன் புகல்வ தாயினான்.

(இ - ள்.) அப்படர்கள் பயமுறுத்துகின்றார்கள் அதட்டுகின்றார்கள் திரண்ட கற்களாலாகிய மலைபோலுந் தோள்களைக்கட்டி இறுகப்பிடிக்கின்றார்கள். அரிதற்குரிய கொடியவாளை வீசித் துண்டுகளாக அரிகின்றார்கள். நாம் அங்குற்றகாலத்தில் சற்று பொறுத்திருந்தார்கள். அப்போது அவன் (என்னிடம்) சொல்வதானான். எ - று. (௫௮)

அகனிலப் பரவையி னங்க நாட்டகத்
திகலொழி மன்னவ ரமைச்சி னெய்தினேன்
மிகுபொருள் வேட்கையி னறத்தை வேராறுத்
தகலரும் பெரும்பொரு ளீட்டி யோம்பினேன்.

(இ - ள்.) கடல்சூழ்ந்த இடமகன்ற பூமியில் அங்கநாட்டில் அடியேன், பகையற்ற ஓரரசனுக்கு மந்திரியாக விருந்தேன், பொருளிற்கொண்ட மிகுந்த ஆசையோடு, தருமத்தை வேருடன்கெடுத்து, எல்லோரும் நீக்குதற்குரிய பெருஞ்செல்வத்தைச் சேகரஞ்செய்து காப்பாற்றினேன். எ - று. (௫௯)

அப்பெரும் பவத்தினா லலக்க ணெய்திமற்
றிப்பெருந் துயருழந் திரங்கி னேனிது
செப்பியான் றேடிய செம்பொ னோர்புரை
குப்புறு தறியடி குழித்திட் டேனென்றான்.

(இ - ள்.) அந்தப்பெரிய பாவத்தினாலே துன்பமெய்தி, இந்தப் பெரியதுக்கத்தை யநுபவித்து வருந்துகின்றேன், இதனைச் சொல்லி, யான் சம்பாதித்த பசும்பொன்னை என் வீட்டின் ஒரு தூண்விழுந்தவிடத்தில், ஒரு தூணின் கீழே புதைத்துவிட்டே னென்றனன், எ - று. (௬௦)

மதலைகீழ் வைத்ததென் மதலைக் கோதிலே
னிதனைநீ யவற்குரைத் திருந்த மாநிதி
யதனைநல் லறநெறி லழித்தத் தன்னையுங்
கதமெழரி நிரயவாய் கடத்தச் சொல்லென்றான்.

(இ - ள்.) தூணின் கீழே புதைத்துவைத்ததை என்மகனுக்குச் சொன்னேனில்லை. இதனைத் தேவரீர் அவனுக்கறிவித்து. அங்கிருக்கும் பெருஞ்செல்வத்தை நல்லதருமவழியிற் செலவிட்டு (அதனைத்தேடிய என்னையும், செலவிட்ட) தன்னையும் கோபம்பொருந்திய தீவாய் நரகத்தைத்தாண்டச் சொல்லவேண்டுமென்றனன், எ - று. (௬௧)

அரசனு மசித்தனு மறிய வோதிய
விரதநா ரதமுனி சுவர்க்க மீண்டனன்
கரையறு துயரினு னசித்தன் கண்ணகல்
புரைபுகுந் திடுதறிப் புறத்துய போக்கினான்.

(இ - ள்.) அரசனும் அசித்தனும் அறிந்து கொள்ளும்படி (அவர்கள் பிதாக்கள் சொல்லியவற்றை) சொல்லிய நல்விரதமுடைய நாரதமுனிவர் சுவர்க்க லோகத்திற்குத் திரும்பினர். அசித்தன் எல்லையில்லாத துக்கமெய்தியவனாய், இடமகன்ற வீட்டிற்புகுந்து, தூணினைப்பக்கத்திற் றள்ளினான். எ - று. ()

பாரகழ்ந் தெடுத்தனன் பசும்பொற் குப்பையைப்
போரமர்த் திகிரியான் கொடுத்த பொற்குவை
யோரகத் தடைத்தன னுருக்குஞ் சிந்தையா
னீரகத் தன்மையாற் றருமமீட்டுவான்.

(இ - ள்.) நிலத்தைத்தோண்டி, பசிய பொற்குவியலையெடுத்துக்கொண்டான். போர்செய்யும் ஆசக்கிரத்தையுடைய அரசன் கொடுத்த பொற்குவியலை ஓரறையிலிட்டுவைத்தான். தருமங்களைச் சேகரிக்கவேண்டுமென்னுங் கருத்தோடு மனங்கரைபவனாய். எ - று. (௬௩)

மங்கல மறையவர்க் கிளரும வல்லிளங்
கொங்கைய ராயிர கோடி யீந்தனன்
கங்கைமெ முதலிய தீர்த்தங் கண்ணுறுப்
பொங்குபோ சனமவர்க் கினிது பூரித்தான்.

(இ - ள்.) மங்கலராகிய அந்தணருக்கு, இளகியவலிய இளந்தனங்களையுடைய [ஆயிரகோடி] எண்ணிறந்த மாதர்களைக் கன்னிகாதானமாகக் கொடுத்தான். கங்கைமுதலாகிய தீர்த்தங்களிடஞ்சேர்ந்து, மிகுந்த சுவையுணவுகளை அவ்வந்தணர்களுக்கு இனிதாகக் கொடுத்தான். எ - று. (௬௪)

அனைய மறையவர்க் களவி லீந்தன
னேவற விளைவய லுலப்பி னல்கினான்
றுவறு பசும்பொனுந் திலமுந் தந்தனன்
மேவருங் கணக்கில விதியி னீந்தனன்.

(இ - ள்.) வேதியருக்குக் கணக்கில்லாத பசுக்களைத் தானஞ்செய்தான். விளைகழனிகளைக் கெடுதலற எண்ணில்லாது கொடுத்தான். அடைதற்கரிய பசும்பொன்னைக் கணக்கில்லாதனவாகத் திலத்துடன் விதிப்படி தத்தஞ்செய்து தானமளித்தான். எ - று. (௬௫)

ஆடகப் பசும்பொனு லிழைத்த வம்பலந்
தேடருஞ் சிவத்தலம் யாண்டுஞ் சென்றனன்
கூடிய வறுசுவைக் குலங்கொண் டத்தல
நீடிய வேதியர்க் கடிசி னேர்ந்தனன்.

(இ - ள்.) ஆடகமென்னும் பசும்பொன்னால் முகடுவேய்ந்த, பொன்னம்பலம் [சிதம்பரம்] முதலியதேடற்கரிய சிவக்ஷேத்திரங்கள் எங்குஞ் சென்று, அவ்வத்தலங்களிலெல்லாம் அறுசுவையோடு கூடிய போசனவகைகளைப் பெருமையிருந்த அந்தணருக்களித்தான். எ - று. (௬௬)

கல்லத ரடுஞ்சுரத் துலவைக் கானகஞ்
செல்லுநர் தெறுதுயர் தீரத் தீம்புன
லெல்லையி லமைத்தனன் குளங்க ளெண்ணில
வொல்லைகண் டருநெறிச் சாலை யோம்பினான்.

(இ - ள்.) சிறுகற்களும் நுண்மணல்களுஞ் சுடுகின்ற பாலைவனங்களிலும் கான்யாறுகள் பாயுங்காட்டு வழிகளிலும் வழிச்செல்வோரை வருத்துந் துன்பமகலும்படி, மதுரம்பொருந்திய நீரையுடைய தண்ணீர்ப்பந்தல்களை எண்ணிறந்தனவாக வமைத்தனன். அதிசீக்கிரத்தில் கணக்கில்லாத குளங்களையெடுத்து நெடிய வழிகளில் மரச்சாலைகள்வைத்து வளர்த்தனன். எ - று. (௬௭)

இந்நிலத் திவனிருந் தியற்றும் புண்ணிய
நன்னெறி யொன்றினா னாக நீங்கியே
யன்னவன் றந்தையோ ரம்பொன் மானமீத்
துன்னினன் பெறற்கருஞ் சுவர்க்க மேயினான்.

(இ - ள்.) இந்நிலவுலகத்திலே இவ்வசித்தனாகிய புத்திரன் நடத்திவருஞ் சிறந்ததருமநெறி யொன்றினாலேயே, அவன் பிதா நரகத்தினின்றும் நீங்கி, ஒப்பற்ற அழகுடைத்தாகிய பொன்மயமான விமானத்தில் ஆரோகணித்து அடைதற்கரிய தேவலோகஞ்சேர்ந்தனன். எ - று. (௬௮)

விடுசினைக் கற்பக நாடு மேயவன்
படுவளம் பற்பக லுகர்ந்து வைகினான்
றொடுகட னிலமிவர் பரித்துத் தொல்லைநா
ணெடிதறந் தழைதர நிகழ்த்து மெல்லையின்.

(இ - ள்.) கிளைகள்விட்ட கற்பக விருட்சத்தினையுடைய தேவலோகஞ் சேர்ந்தவன், அங்குள்ள போகங்களைப் பலகாலம் அநுபவித்திருந்தான். அரசனும் மந்திரியுமாகிய இவர்களிருவரும், தோண்டப்பட்ட கடல் சூழ்ந்த நிலவுலகத்தை வெகுகாலம் அரசுநடத்தி, மிக்க புண்ணியங்கள் அதிகரிக்க நடந்துவருங் காலத்தில். எ - று. (௬௯)

அருங்கழ லங்கநா டரசு மாரற
மொருங்கிய வசித்தனு மொழுகு வெண்ணிலாத்
தருங்கதி ரிடறிய குடுமித் தாழ்புன
விருஞ்சுனை விந்தியப பொருப்பி னெய்தினார்.

(இ - ள்.) அரியவீரகண்டாமணி தரித்த அங்கநாட்டரசனாகிய அம்மன்னவனும், பெருந்தருமங்கள் மிகுந்த அசித்தனென்னும் மந்திரியும், சந்திரன்விரித்துப் பரப்புகின்ற கிரணங்கள் தங்கிய சிகரமும் அருவிநீரொழுகும் பெரிய சுனைகளுமுள்ள விந்தியகிரியை யடைந்தார்கள். எ - று. (௭௦)

ஏகிய பொருப்பினி டருவி யீர்ம்புனல்
போகிய தெய்வமா நதிப்பு றக்கரை
யாகிய மறையவர்க் கடிமை யாக்குவா
னோகையி னுணர்ந்தகங் கொளப்பட் டானரோ.

(இ - ள்.) சென்ற அவ்விந்தியகிரியில் நீங்காதொழுகும் குளிர்ந்த சலமாகிய அருவிநீர் பாய்கின்ற சிறந்த தெய்வீகநதிக்கரைக்கருகே, அங்கே வசிக்கும் அந்தணருக்கு அன்னமளிக்கும் பொருட்டுக் களிப்புடன் யோசித்து, அப்படிச் செய்ய இணங்கினார்கள். எ - று. (௭௧)

நெய்ம்முத லாப்பொழி நிறைத்த பால்வரை
கைம்முதற் கொடுத்தனர் கொணர்ந்த காலையி
னம்மறை யவர்க்கினி தமைய செய்தபின்
செம்மையி னெழுபுனற் றீர்த்தந் தாடினார்.

(இ - ள்.) நெய்யை முதலாக, பசுகறக்கும் வெண்ணிறந் தங்கியபால் இறுதியாயுள்ள வேண்டும் பொருள்களுக்குத் தகுந்த திரவியந் தந்தனுப்பினார்கள். ஏவலாட்கள் அவற்றை வாங்கிவந்தசமயத்தில், அத்திரவியங்களைக்கொண்டு அந்தணருக்கு இனிய உணவு சமைத்தானபிறகு, செவ்வையாகிய அருவி நீராகிய தீர்த்தத்திலே மூழ்கினார்கள். எ - று. (௭௨)

கடனெழு புலரியிற் றொகுத்துச் செய்வன
கடன்முறை யாவையுங் கழித்து நான்மறைத்
தொடர்புறு மந்தணத் தொகையை வம்மெனப்
படரொளிப் பசும்பொனீர் பரிவி னல்கினார்.

(இ - ள்.) சூரியோதயமாகும் அதிகாலையில், தொகுப்பாகச்செய்யத்தக்கனவாகிய நித்திய கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு, நான்குவேதங்களின் சம்பந்தமுடைய அந்தணர்கூட்டத்தை வருகவென்றழைத்து, மிக்க காந்தியுடைய பொற்பாத்திரங்களில் கையலம்ப அன்போடு சலங்கொடுத்தார்கள்.

ஒழுங்குறு சாலையி னகவை யுள்புகத்
தொழுந்தகை வேதிய ரிருத்தித் துய்ப்பன
வழங்கினர் வழங்கலுஞ் சிலர்க்கு வாழையின்
கொழுங்கனி யின்மையிற் குறித்து நோக்கினார்.

(இ - ள்.) ஒழுங்காக அமைத்த அன்னசாலையின் உள்ளிடத்திற் செல்லும்படி விடுத்து, யாவரும் வணங்குதற்குரிய அந்தணர்களை உட்காருவித்து, புசிக்கத்தக்கனவாகிய உணவாதிகளைப் படைத்தார்கள். அப்படிப்படைத்தமாத்திரமே அவ்வந்தணரிற் சிலர்க்கு நிறைதங்கிய வாழைப்பழமில்லாமையால் அதைச் சிந்தித்துப்பார்த்தார்கள். எ - று. (௭௪)

தெரிமறை வேதியர் வாழைத் தீங்கனி
யரிதுகொ லெமக்கென வகங்க றுத்தனர்
பெரிதுறு விலைக்கெனுங் கிடைக்கப் பெற்றிலர்
புரிகுவ தியாதெனக் கவலும் போழ்திடை.

(இ - ள்.) (வாழைக்கனிகுறைதலை) தெரிந்துகொண்ட, வேதமோதிய அந்தணர்கள், இனியவாழைப்பழம் எங்களுக்கு மட்டும் அரிதாய்விட்டதோ வென்று மனத்திற் கோபங்கொண்டார்கள். பெருவிலைக்காயினும் கிடைக்கப் பெறாதவர்களாய் இதற்கு நாம் யாது செய்வோமென வருந்துஞ் சமயத்தில்.

அந்தண னுசித்தனை யரசு நோக்கினின்
சிந்தனை யெதுகொலோ வாழைத் தீங்கனி.

தந்தனை யாகினந் தன்றூ ழுண்பார்
ஆய்ந்தனம் யாமுமென் றுவப்பிற் கூறினான்.

(இ - ள்.) மன்னவன், அந்தணனாகிய அசித்தனென்னும் மந்திரியைநோக்கி, இதற்கு உன்கருத்தியாது? மதுரமாகிய வாழைக்கனிகளைக் கொண்டுவந்தனை யாயின், வேதியர்களும் புசிப்பார்கள். நாமும் பிராமணபோசனம் முடிப்பித்துக் கடைத்தேறுவோமென்று களிப்போடு சொல்லினன். எ - று. (எக)

இற்றைநா ளொழிந்தா லெழுந்த காலையிற்
பொற்றக டமைத்தன கதலிப் பூங்கனி
பெற்றுறத் தருகுவன் பிறங்கற் சுற்றிய
வற்றவிக் கானகத் தரிதென் றானரோ.

(இ - ள்.) இன்று தினஞ் சென்றால், நாளைய தினம் அதிகாலையில், பொற்றகட்டாற் செய்ததுபோலும் நிறந்தங்கிய அழகியவாழைக்கனிகள் (வேண்டிய மட்டும்) தேடிப்பெற்றுக்கொண்டுவந்து கொடுக்கின்றேன். இச்சமயத்தில் மலை சுற்றிய இக்காட்டில் அதுகிடைப்ப தரிதாகும். எ - று. (எஉ)

மன்னவ னசிந்தனை மலர்க்கை தீண்டிநீ
யென்னைவேண் டுதியெனிற் கதலி யீங்கனி
யன்னது நாடிவ னமைத்தி யென்றவட்
பின்னரும வேண்டிய யாவும் பேசினான்.

(இ - ள்.) அப்போது, அம்மன்னவன் அசிந்தனென்னும் அந்தணனை, தன் தாமரைமலர்போலும் கைகளாற் பரிசித்து, நீ யென்பால் பிரியமுள்ளவனாயின், குளிர்ச்சிதங்கிய வாழைக்கனிகள் நாடி இங்கேயழைப்பிப்பாயென்று, அவ்விடத்தில அதன்பின்னும் அதற்குரியவார்த்தைகள் யாவுஞ் சொல்லினன்.

இந்தலை யிவர்படுந் தவற்சி நோக்கின
னந்தலை மறையவ னொருத்த னஞ்சனின்
றுய்த்துறு மேற்றிசை யுலகங் கைதொழு
வைத்தவீ மேசமா மருங்கி லுண்டரோ.

(இ - ள்) இவ்விடத்தில் இவர்களிருவரும் படுகின்ற வருத்தத்தைப் பார்த்தவனாகிய அங்குள்ள அந்தணரிலொருவன் அங்கிருந்து செல்லுகின்ற மேற்றிசையிலே உலகினர் யாவரும் பணியும்படியுள்ள வீமேசுவரமென்னும் ஓர் சிவாலயம் அருகிலுள்ளது. எ - று. (எங)

ஆலயத் தகவையின் கதலி யாய்பொழிற்
கோலிய குலையொடும் பழுத்த கூறினை
நாலுறு மாயினன் சிலரை நோக்கினின்
றேனுறு விலைகொடுத் தியக்கி னானரோ.

(இ - ள்.) அச்சிவாலயத்தினுள் தனித்தவாழைச் சோலையில் வாழைக்குலைகளோடு பழுத்திருக்கின்றமையைச் சொல்லினன். உபதேசத்தின் ஆசாரியனையுடைய அசித்தன் அங்குள்ள சிலரைநோக்கி கேட்டு நின்று, அதற்குத்தக்க விலையக் கொடுத்தனுப்பினான். எ - று. (எச)

செல்குநர்க் கான்குளர் க்கெலித் திங்கனி
யொல்கிய தின்மைய துரைத்து ஈதற்கு
மலகபி டேகத்துக் கன்றி மற்றியா
நல்குவ திலையென மீண்டு நண்ணினார்

(இ - ள்.) அப்படிச் சென்றவர்களுக்கு அவ்வாலயத்திலுள்ளவர்கள், இனி மாம்பழக்கனிகள் குறைவில்லாமையைச் சொல்லி, சிவபெருமானுக்குச் சிறந்த அபிஷேகத்திற்கேயன்றி மற்றொன்றிற்குங் கொடுப்பதில்லையென்று கூற (போனவர்கள் அதனைக்கேட்டுத்) திரும்பிவந்தார்கள். எ - று. (அக)

ஆயது மொழிதலு மசித்தன் பின்னுநீர்
போய்விலை யவருழைப் போட்டுத் தோட்டத்
தேயறா திருங்கனி யெடுத்து வம்மினென்
றேய்வறு வெகுளியி னுரைகப் போயினார்.

(இ - ள்.) அதனையவர்கள் சொன்னவுடனே அசித்தனெனு மந்திரி அவர்களைநோக்கி, நீங்கள் மீண்டும் போய் விலையை அவர்களிடம் போட்டுவிட்டு, தோட்டத்திற் பிரவேசித்துப் பெரும்பழங்களாக நூறு எடுத்துவருகவென்று, ஒழியாதகோபத்தோடு சொல்லவும், ஏவலாட்கள் அப்படியேபோனார்கள். ([illegible])

அவ்வழி பருந்தன ரமைச்ச னேவையான்
வெவ்வழி யொழுக்கத்தார் விரகி லோமெனச்
செவ்வழி யுளத்தவ ருரைப்பச் சீறினு
ருவ்வழி யுணர்ந்திலர் படப்பை யுள்புகா.

(இ - ள்.) அசித்தன் கட்டளையால் அவர்கள் தோட்டத்திற் புகுந்தார்கள். அப்போது அங்கிருந்த செந்நெறியிற்பதிந்த சித்தமுடைய காவலாட்கள், துன்மார்க்க நடையினரை வெல்ல உபாய மறியோமெனக் கூறக் கோபமெய்தி, அவர்கள் கூறியவழியை உணராதவர்களாய்ச் சோலையுட் பிரவேசித்தார்கள்.

எறிந்தன ரிருங்குலை யெடுத்து மீண்டுற
மறிந்தன ராங்கது மறைய வர்க்கெலாஞ்
செறிந்துற வழங்கினர் கவ்வை தீர்ந்தன
ருறுநதுயர் நரகிழிந் துழைப்ப தோர்கிலார்.

(இ - ள்.) விலைப்பொருளை யெறிந்துவிட்டுப் பெருங் குலையாகவெடுத்துக் கொண்டு திரும்பிவந்தார்கள். அப்பழங்களை அங்குள்ள அந்தணரனைவர்க்கும் திருப்தியுண்டாகப் பரிமாறி, நரகில் வீழ்ந்து நுகரவேண்டிய துயரையுணராதவர்களாய், தங்கள் காரியத்தை முடித்துக்கொண்டார்கள். எ - று. ([illegible])

மேற்படுத் தெறிந்திடு விலைகை யேந்திலா
பாற்படு பூதியான் பரிப்பி லந்தணர்
வேற்படை யரசனை மேவிக் கூறினார்
தூற்றட மார்பினு னவரை நோக்கினான்.

(இ - ள்.) (ஒழுங்கின்)மேற்பட்டு ஏவலாளர்வீசியெறிந்த விலைப்பொருளைக் கையிலெடாதவர்களாய், பால்போலுந் திருவெண்ணீறணிந்து [illegible] குரிய மெய்யன்பராகிய வேதியர்கள், வேற்படையேந்திய [illegible] சென்று தெரிவித்தார்கள். உபவீதமணிந்த மார்புடைய மன்னவன் [illegible] பாராதானிலன்.

ஈங்கிவன் சிவுனிடத் திழைத்த நிமைகண்
டாங்கவ ருரைத்தசொற் கேட்டி லாமையாற்
றூங்கிய தடஞ்சினைத் தருவி னீழ்வா
யோங்கிவன் முதையை நிரயத் துய்த்தனர்.

(இ - ள்.) இவ்விடத்தில் இம்மன்னவன், சிவபுண்ணியத்திற்கு நேர்ந்த வெறிநிலையநோக்கி, அங்குள்ள அவ்வந்தணர் கூறியவார்த்தையைக் கொள்ளாது, விசாலமுற்றுக் கிளைகளையுடைய கற்பகவிருக்ஷ நிழலில் வசித்திருந்த பெருமை வாய்ந்த இவன் பிதாவை நரகிற்கனுப்பினன். எ - று. (அசு)

வயக்கடும் புரவியிம் மன்னன் மன்னிய
கயக்கொடும் பிணியினுற் கழிந்து மாண்டனன்
சயக்கொடுங் கதையின ரியம தண்டத்தா
ரியக்கொடும் புயம்பிணித் துடன்கொண் டேகினர்.

(இ - ள்.) அதிவேகம்பொருந்திய குதிரையையுடைய இம்மன்னவனை, விடாதிருந்த கொடிய க்ஷய ரோகத்தால் ஆயுண்முடிந்திறந்தனன். வெற்றி தங்கிய பெரிய கதாயுதமேந்திய இயமகிங்கரர்கள் அவன் இருதோள்களையும் சேர்த்துப் பிணித்துத்தங்களோடு இழுத்துச்சென்றார்கள். எ - று. (அஎ)

தந்தைவீழ் நிரயமுந் தனக்கு வாய்த்தறச்
செந்தழல் வயிரவான் கழுவிற் றீகின்று
னந்தரத் தியம்புநன் னாட்டை யன்னவன்
கொந்தளக் குழலியைக் குறும்பு கொண்டதால்.

(இ - ள்.) தன்தந்தை வீழ்ந்துகிடக்கும் நரகம் தனக்கும் கிடைக்க, தீயிற் போட்டிருந்த வயிரத்தாற் செய்யப்பட்ட உயர்ந்த கழுமரத்தில் வேகின்றான். தேவலோகத்தினரும் துதிசெய்யத்தக்க அவன் சிறந்த நாட்டையும் குழைந்த கூந்தலையுடைய அவன் மனைவியையும் குறும்பரசர் கைப்பற்றினர். எ - று. (அஅ)

அழிகவுள் யானையாற் கமைச்சி னோங்கிய
மொழிமறை யசித்தனை மன்னன் முன்னரின்
விழிசெகுத் தெடுத்தயல் விடுத்துப் போக்கின
ரிழிதகன் றன்னுயி ரிறந்து மாண்டனன்.

(இ - ள்.) மதஞ்சொரியுஞ் சுவட்டையுடைய பட்டத்து யானையைப் பெற்ற அம்மன்னனுக்கு மந்திரியாக மேம்பாடுற்றிருந்த வேதமோதிய அந்தணனாகிய அசித்தனை, அவ்வரசன் முன்னரே கண்ணைப்பறித்து எடுத்துப் பக்கலில் வீசினார்கள். குணவீனனாகிய அவனும் உயிர் நீங்கியிறந்தான். எ - று. (அகூ)

அவனையுந் தென்புலத் தரச னாணையாற்
கவெரி கொழுந்தெழுந் தெரியுங் கண்ணகன்
பவர்குழி நரகிடைப் படுத்தி னாரவ
ணிவருட னூறிலித் தழியு மின்னமும்.

(இ - ள்.) அவ்வசித்தனையும் மந்திரியையும், இயமனுடைய கட்டளையால், கடுந் தீயானது சிகைவிட்டெரிந்தெரியும் பரந்து நெருங்கிய குழிகளையுடைய நரகத்தில் அமிழ்த்தினார்கள். அந்நரகத்தில் இவ்விருவருடைய [illegible] பெறுமல் இன்னும் வருந்திக்கொண்டுள்ளன. எ - று. (கூ0)

புரிதரு மவன்றரு புண்ணி யத்தினு
லரியவெந் நரகொழிந் தும்ப ரெய்திய
பரிவுடைத் தாதையைப் பண்டு போலெடுத்
தெரிதரு நரகிடை யிழிச்சி னாரோ.

(இ - ள்.) பிதாவின் பொருளைக்கொண்டு இவன் புரிந்தவந்த புண்ணியத்தினாலே, தனக்குரித்தாயிருந்த நரகத்தை விலகிச் சுவர்க்கத்திற்புகுந்த இவனுக்கு அன்புடைய தந்தையைப் பண்டுபோலவே யெடுத்து, எரிந்துகொண்டின்ன தீவாய்நரகத்திலிட்டார்கள். எ - று. (௧௧)

வாழையின் றீங்கனி வழங்கி னல்லது
சூழிருந் தடிசிலுந் துய்க்கி லேமெனப்
பாழ்வயி றோம்பினோர் பண்ணை வன்பழ
மூழ்முறை கொணர்ந்துவோ ருரைத்துக் காட்டினேன்.

(இ - ள்.) இனிய வாழைப்பழத்தைப் பரிமாறினாலன்றி ஒன்றுசேர்ந்திருந்து அமுதுண்ணமாட்டோமென்று சொல்லிப் பாழ்வயிற்றினை நிரம்பச் செய்த அந்தணர்களும், சிவபெருமானுக்குரிய அப்பழங்களை வினவசத்தாற் கொண்டுவந்த ஏவலாட்களும், அத்தோட்டத்தில் உள்ளனவென வுணர்த்தி அடையாளஞ் சொன்னவனும். எ - று. (௧௨)

யாவரு மிப்பெரு நிரய மெய்தினர்
மேவருந் துயரொழிந் தின்னு மீண்டிலார்
சேவரு மெம்பிரான் சிவத்து ரோகத்தாற்
பாவியர் படுவன பிறவும் பன்னுவாம்.

(இ - ள்.) ஆகிய இவர்களெல்லோரும் இப்பெரிய நரகத்தையடைந்தார்கள், ஒருவராலும் அடைதற்கரிய துயரமகன்று இன்னும் திரும்பவில்லை. இடபவாகனத்தில் ஆரோகணித்தருளும் எமது சிவபெருமானுக்குச்செய்த சிவத்துரோக நிமித்தமாக, அப்படிச்செய்த பாவிகள் படுகின்ற நரகவேதனைகள் மற்றையவற்றையுஞ் சொல்லுகின்றோம். எ - று. (௧௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புலன்களோ ரைந்துங் காத்துப் பொதுநின்ற புலமைத் தன்மை
நலங்கிளர் பெருந்த வத்து நவையறுங் குணத்தி ரெந்தைக்
கிலங்கொளி பரிக லத்தி னமுதினுக் கியைந்த விட்ட
நிலங்கவர்ந் தெடுத்தோ ரின்னும் படுவன நிகழ்த்தக் கேண்மின்.

(இ - ள்.) ஐம்புலன்களையும் (விடயத்தொடக்குறாமல்) பாதுகாத்து, பொதுவாயுள்ள ஞானத்தன்மையின் நன்மைமிக்க பெருந்தவமுடைய குற்றமற்ற குணமுடைய முனிவர்களே! எமது தந்தையாகிய சிவபெருமானுக்குரிய மிக்கவொளிதங்கிய பரிகலத்திற்கான திருவமுதிற்காக, மனம் விரும்பியளித்த [illegible] நிலத்தை யபகரித்தநுபவித்தவர்கள் இன்னும் அநுபவிக்கின்ற நரக வேதனையைச்சொல்லக்கேட்பீர்களாக, எ - று. (௧௪)

செங்நெலங் கழனி வேலிச் சிங்கல மென்னுந் தேயத்
தந்நிலத் தகவை யிற்பூச் சக்கர மெனு மூதூ
ரந்தகர் சவிதா வென்னு மறையவ னன்பாற் றோன்றி
மன்னிய புதலவர் மூவ ரிவரொடு மகிழ்ந்து வாழ்வான்.

(இ - ள்) செந்நெற் கழனிகளே அழகிய வேலியாகவுடைய சிங்கலமென்னும் நாட்டிலே உள்ளிடத்திலே பூச்சக்கரமென்னும் பெயர்பெற்ற பழமையான மேப்பட்ட நகரத்தில் சவிதாவென்னும் அந்தணன், ஜீவகாருண்ணியமுடையவனாகத்தோன்றி, தனக்குப் பிறந்துள்ள மூன்று புதல்வர்களோடு மனமகிழ்ந்து வாழ்ந்திருந்தான். எ - று. (௯௫)

அனையவன் றன்பாற் றோன்றி யருமறை முழுது மோதுந்
தநயரின் முன்ன வற்குத் தம்பிய னெனு நாமம்
புனைதர மொழிந்தா னன்னோன் றனையுணா புலமைத் தன்மை
நினைவுறத் தெரிந்தான் சைவ நிலைதரு வரம்பி னின்றான்.

(இ - ள்.) அத்தகைய சவிதாவெனும் பிராமணனிடத்திற்பிறந்து அரிய வேதங்களையெல்லாம் ஓதுகின்ற குமாரர்கள் அம்மூவரில், மூத்தோனுக்குத் தம்பியனென்று பெயர் வழங்குப்படி சொன்னான், அப்புத்திரன் ஆன்ம விலக்கணமறியத்தக்க மெய்ஞ்ஞான வியல்பை மனநிற்றெளியும்படிகற்றனன், சைவசமயத்திற்குரிய நல்லொழுக்கத்திலிருந்தான். எ - று. (௯௬)

தன்னுடை நிலனுந் தேடும் பொருளுமத் தழற்கட் பால
முன்னவற் குதவி நீரோ டளித்தனன் றவத்தை முன்னி
யுன்னரு வெதிரி வெங்கா னடைந்தன னொழிந்த சின்னோ
னந்நிலம் பொன்னேர் பூட்டி யரீசுரர்க் குழுவ தானோர்.

(இ - ள்.) தனக்குரிய நிலத்தையுந் தான் தேடுகின்ற பொருளையும் நெற்றியில் விழியுடைய அச்சிவபெருமானுக்கே அர்ப்பிதஞ்செய்து தாரை நீரோடு தத்தமுஞ்செய்துவிட்டு, தவச்செயல் கருதி யாவரும் நினைத்தற்கரிய பெரிய வதரிகாச்சிரமஞ்சேர்ந்தான். சிலகாலஞ்சென்ற பின்னர், அந்நிலத்திலே அழகிய ஏர்பூட்டி ஹரீச்சுவரர்க்காக உழதொடங்கினான். (௯௭)

அத்தலை யுணர்ந்து வேத மளந்தறி சவிதா வென்போன்
செய்த்தலை யுழுத பொன்னேர் மறித்தனன் சினமீக் கொண்டா
னித்தலை யானு மீன்ற மதலையு ரிவரு முள்ளேம்
பித்தனீ திழைத்தா னென்று மக்கது பிலப்ப தன்றே

(இ - ள்.) வேதமுழுவதுமுணர்ந்த சவிதாவென்னும் அந்தணன் அக்காலத்தில் அச்செய்தியுணர்ந்து கோபமிருந்து, வயலினிடத்திலே உழுதுகொண்டிருந்த அழகிய ஏரைத் தடைசெய்தான். இவ்விடத்திலே தந்தையாகிய யானும் புதல்வரிருவரும் இருக்கின்றோம். சித்தப்பிரமையுடைய அவன் இப்படிச்செய்தால் உங்கட்கு அந்நிலம் சுதந்தரமாகத்தக்கதன்று. எ - று. ()

ஆவனு மாட்டி யெம்பா லகப்பட நீங்க ளீது
கோவினுக் குழுத னன்றோ வெனியவர் குடியி ரதோச
பாவியர் செய்த செய்தி ரின்னுயிர் பறிப்ப தல்லா
லாவிகொண் டிருப்ப தோரி னருமறைக் குலத்து ளேனே.

(இ - ள்.) இந்நிலத்து உரிமைச்சீட்டும் அனுபவமும் எங்களிடத்திலிருக்க இந்நிலத்தைச்சிவாலயத்திற்காக உழுவது நன்றாமோ? ஊரில் ஏழைகள் குடியிருக்கமாட்டார்களோ? பாவிகள் செய்த செயலைச்செய்தீர்கள். இப்போதே என்னுயிரைப்போக்கிக்கொள்வதன்றி உயிரோடிருக்க நினைப்பேனாகில் நான் பிராமணகுலத்திற் பிறந்தவனோ? எ - று. (௯௯)

என்னும்வழக் கெடுத்துக் கூறி யிருமைய ரிகலுங் காலை
மனுமுறை மரபிற் சொல்லு மன்றமுற் றிருந்து ளோர்பா
லனுதரித் திதனைச் சொன்னா லாங்கவ ருறுத்துச சொன்ன
பனுவலி னிற்று மென்றா னந்தண னதனைப் பாரான்.

(இ - ள்.) என்னும் வழக்கையெடுத்து விரிவாகப்பேசி இருதிறத்தாரும் பகைகொண்டகாலத்தில் மநுநூலின் முறைமைப்படி சொல்லுகின்ற நியாய சபையிற்போய்ச்சேர்ந்து, அவ்விடத்தில் உள்ளவர்கள்பால் வணங்கி,இவ்வியாச்சியத்தைச்சொல்லுவோமாகில், அவர்கள் தீர்மானப்படுத்திச்சொல்லிய சொல்லின்படி நாம் நிற்கக்கடவோமென்றார்கள். சவிதாவென்னும்வேதியன் அதனைக் கருதினானல்லன். எ - று. (௧௦௦)

எந்தைபொற் கோயிற் செய்கை செய்பவ ரிவனைக் கொண்டு
பைந்துண ரலங்கற் றிண்டோட் பார்த்திபன் முன்னர்ச் சென்றார்
தந்தமி லெடுத்த வெல்லா மொழிந்தனர் தனிச்செங் கோலோ
னந்தண னவனை நோக்கிச் சுளித்தன னறைவ தானான்.

(இ - ள்.) எமது சிவபெருமானுடைய திருக்கோயிற்றிருப்பணி செய்பவர்கள் இவ்வந்தணனை யழைத்துச்சென்று, பசிய பூங்கொத்துகளாலாகிய மாலை தரித்த வலிய தோள்களையுடைய அரசன் முன்னர்ச்சென்றார்கள். அப்போது இவ்விருதிறத்தினரும் தங்கட்குரிய நியாயங்களையெல்லாந் தெரிவித்தார்கள். நிகரற்ற செங்கோலையுடைய அம்மன்னவன் சவிதாவென்னும் அந்தணனை நோக்கிக்கோபித்துச்சொல்லுகின்றான். எ - று. (௧௦௧)

ஈசனுக் கிதுவென் றோரா வெண்ணினு மெம்பி ரான்றன்
பூசனைக் குரித்தா மண்ணிற் பொழிபுனல் விண்ணிற் செல்லி
னாசறத் திரும்பு மஃதென் றச்செறு வரனுக் காக்கிக்
காய்சினத் திவனை நோக்க மறையவன் கழன்று போனான்.

(இ - ள்.) இந்நிலம் சிவபெருமானுக்கென்று அபுத்திபூர்வமாகக் கருதினாலும் எமது சிவபெருமான் பூசைக்கே யுரியதாம். நிலத்திற் சொரிகின்ற நீரானது ஆகாயத்திற் செல்லுமானால் பழுதற்று மீண்டும் நீராகவே வரும். அதுபோன்றதன்றோ இச்சிவபுண்ணியமென்று கூறி, அந்தண்செய்நிலத்தைச் சிவபெருமானுடையதேயென்று தீர்மானித்து, கடுங்கோபத்துடன் சவிதாவை நோக்க அவ்வந்தணன் ஓடிப்போய்விட்டனன். எ - று. (௧௦௨)

பற்பக லொழிந்த பின்னர் வரைபொரப் பணைத்து வீங்கு
மற்பொரு திரடோள் வேந்த னிறந்தனன் வைய மெல்லாங்
கொற்றொள்வே லரசர் கொண்டார் மறையவன் குற்ற நோக்கான்
சுற்றுறு மனத்த னாகி வளைவய லெடுத்துக் கொண்டான்.

(இ - ள்.) பல தினங்கள் சென்ற பின்னர், மலைபோலப் பூசித்து விம்மிமத் தேர்செய்தற்குரித்தாய்த் திரண்ட தோள்களையுடைய அம்மன்னவன் மரண மடைந்தான். அவன் நகரமுழுவதையும் வெற்றிதங்கிய வேலேந்திய வேற்றரசர் கைப்பற்றினார்கள். சவிதாவெனும் வேதியன் அபராதத்தைக்கருதாமல் கடின சித்தமுடையவனாய், வளந்தங்கிய அவ்வயலை மீளவும் தான் சுவாதீனஞ்செய்து கொண்டான். எ - று. (௬௦௩)

இளநிலாப் புனைந்த வேணி யெம்பிரான் கோயிற் செய்கை
வளமுறப் பரிப்போர் சென்று மன்னவற் குரைப்ப மன்ன
னுளநெகிழ்ந் திரங்கி யந்த வேதியற் குளையச சொல்லி
வளவய றிருப்பி யீசற் காக்கினன் மறுத்துஞ் சொல்வான்.

(இ - ள்.) இளஞ்சந்திரனையணிந்த சடையையுடைய எமது சிவபெருமான் திருக்கோயிற் பணிவிடையைச்செவ்வனே பரிபாலிப்பவர்கள் சென்று, அவ்வேற் றரசனுக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ள, அதுகேட்ட மன்னவன் மனமுருகி யிரக்கமெய்தி, அவவேதியனுக்கு மனம் வருந்தும்படி கண்டித்துச்சொல்லி, வளப்பந்தங்கிய அவ்விளை நிலத்தைச் சிவபெருமானுக்கே யுரித்தாக்கி மேலுஞ் சொல்லுகின்றான். எ - று. (௬௦௪)

இற்றைநா ளளவும் பெற்ற விடுசில வொழியப் போக்கி
மற்றைய செந்நெ லெல்லாம் வழக்கினு லெடுத்துக் காட்டிப்
பெற்றவே றுதைத்தோற் கென்ன வாக்கினன் பெரிது நல்கி
யுற்றவன் றன்னை யிந்நா டொழிதரப் போதி யென்றான்.

(இ - ள்.) இன்று வரையில் அவன் பெற்றுக்கொண்ட நெல்லிற் செல வானதைக்கழித்துத்தள்ளி, மிகுந்த செந்நெற்களையாவும் இடபாரூடராகிய சிவபெருமானுக்கெனத் தீர்மானஞ்செய்து வருவித்துக்கொடுத்து, அவ்வந் தணனை இந்நாட்டைவிட்டு ஓடிப்போகவெனக் கட்டளை தந்தான். எ - று. ()

அந்நிலை நாடு நீங்கிச் சேணெறி யரிதிற் சென்று
வின்னலங் கடலுட் டாழ்ந்து மகதநா டுறுத்தா னங்கண்
மன்னவற் கண்டு சொல்லு மாசிகண் மரபிற் சொன்னான்
பின்னரி னிகழ்ந்த வெல்லா மவனுழைப் பெரிது சொன்னான்.

(இ - ள்.) அப்பொழுதே அந்நாடு கடந்து அரிதாக வெகு தூரம் போய் விட்டான். துன்பக்கடலிலமிழ்ந்து மகதநாடு சேர்ந்தான். அங்குள்ள அரசனைக் கண்டு அந்தணர் கூறும் ஆசிமொழிகளைக்கிரமப்படி சொன்னவனாய், அதன் பின்னர், தன்னூரில் தனக்குற்றவிர்த்தாந்தங்களையெல்லாம் அம்மன்னவன்பால் விளக்கிச்சொன்னான். எ - று. (௬௦௫)

ஓர்பொழு தொருநா ளெம்பா லாசிவந் துரைத்துப் போதி
நேர்வர வுனக்கு வேண்டும் யாவையு நிரப்பித் தந்து
ளாரகத் திருத்து மென்றான் மன்னவ னுரைத்த வாய்மை
சோர்வற வுணர்ந்து கொண்டான் றொலைந்தன சிலநா [illegible]

(இ - ள்.) தினமொன்றுக்கொருவேளையாக எம்பா[illegible]
செல்லக்கடவாய். உனக்கு வேண்டிய எல்லாவற்[illegible]

யெய்தும்படி அதிகமாகக்கொடுத்து, உன்னூரிலிருக்கும் வகையாகச்செய்கின்றேன் என்றான். அம்மன்னவனுரைத்த உண்மையை மறவாமல் எண்ணிக்கொண்டிருந்தான், அப்படிச் சில தினங்கள் சென்றன. எ - று. (௧௦௭)

ஈதறிந் தரசற் புல்லி யிவனிலை சொல்லி யின்றிப்
போதிவற் கோறி யென்றான் புரகித விசாந்த னென்போன்
தீதுறு சிவதது ரோகர்த் தீண்டலு மாகா கோறற்
கேதுவே தென்னி லின்னே யென்னுயி ரிறப்ப னென்றான்.

(இ - ள்.) அம்மன்னவனுக்குப் புரோகிதனாகியவிசாந்தகனென்போன்இச்செய்தியை யறிந்து அரசன்பாலெய்தி, இச்சவிதாவென்னும் அந்தணன் தன்மையைச்சொல்லி, இன்று இப்போதே இவனைக்கொல்லுகவென்றான். கொடுமைதங்கிய சிவத்துரோகியைத் தொடுவதும் பாவம். அவனைக்கொல்லக் காரணம் யாதெனை வினவில் இப்போதே யென்னுயிரை விடுவேனென்றான். (௧௦௮)

ஆங்கதற் கரச னெவ்வா னறிந்தனன் விசாந்த னென்போன்
பாங்குறு மொருவன் கையி னேந்தகம பறறி வாங்கி
யோங்குற வெறித லோடு முருண்டதம் மறையோன் சென்னி
வீங்குறு தடந்தோள் வேநதன் வெகுண்டெரி விழித்து நின்றான்.

(இ - ள்.) அரசன் அப்படிக்கொலைசெய்ய விணங்காததைவிசாந்தகனுணர்ந்து அருகே நின்றுகொண்டிருந்த ஒருவன் கையிலேந்திய வாளைப்பறித்துத் தன் கையிற் பற்றிக்கொண்டு ஓங்கிவீசியவுடனே அவ்வந்தணன் சிரம் அறுபட்டுருண்டது. விசாலித்த தோளையுடைய மன்னவன் விம்மிதமெய்திக்கோபித்து விழிகளில் தீப்பொறி சிந்தப்பார்த்திருந்தான். எ - று. (௧௦௯)

அடைக்கலம் யானே யாக வடைந்தனன் மறையோன் சென்னி
புடைத்துமண் கிடப்ப வாளா லெறிந்தனை யென்னப் பொங்க
விடைக்குலம் வெகுண்டா லென்ன விசாந்தகன் வெகுண்டு வேந்த
னுடைத்தட மகுடச சென்னி தன்னையு முருட்டி வீழ்த்தான்.

(இ - ள்.) யானே யடைக்கலமென்று, என்பால் வந்து, அடைந்தவனாகிய அவ்வந்தணன் சிரம் வெட்டுண்டு பூமியிற் புறளும்படி வாட்படையால் வீசினையல்லவா? எனக்கோபிக்க, இடபவேறுகள் சினங்கொண்டாற்போல விசாந்தகன் கோபமெய்தி, அம்மன்னவனது விசாலமான கிரீடத்தையணிந்த சிரத்தையும் வெட்டிப்பூமியிற் புரட்டித்தள்ளினான். எ - று. (௧௧௦)

சாந்தகன் பிரமை கொண்டா னென்றுளஞ் சலித்துப் பொங்கி
வேந்தர்கோன் சேனை யாவும் விசாந்தகற் பிடித்துக் கொல்வா
னேய்ந்தெதி ரெழுந்த காலைத் தம்மிலோ ரிகலுண் டாகச்
சேந்தகட் கடைத்தீப் பொங்க விளைத்தனர் திமிலத் திண்போர்

(இ - ள்.) விசாந்தகன் இப்போது இத்தப்பிராமணனைக்கொன்றானென்று மன்னவனைக்கோபித்து, அம்மன்னவனது சேனைமுழுவதும், விசாந்தகனைப் பற்றிக்கொண்டு கொல்லுதற்கு எதிர்த்துத்தோன்றிய காலத்தில், [illegible] ஒரு பகைமையுண்டாக, சிவந்த கடைக்கண்களில் தீப்பொறி [illegible] கடும்போர் செய்தார்கள். எ - று. (௧௧௧)

கையற்றார் கால்க ளற்றார் கழுத்தற்றார் கவசத் தோடு
மெய்யற்றார் புயங்க ளற்றார் விரலற்றார் மிடலொன் றற்றார்
தொய்யற்செஞ் சோரி பாயத் துடித்தனர் தொலைந்து மாண்டார்
தையற்பங் குடையோன் றன்மை யாவரே சாற்றற் பாலார்.

(இ - ள்.) கைகள் அறுபட்டவர்களும், அணிந்த [கவசம்] இருப்புச் சட்டையோடு உடல் அறுபட்டவர்களும், தோள்கள் அறுபட்டவர்களும். விரல்கள் அறுபட்டவர்களும், வலிமையற்றவர்களுமாகி, சேறுகத்தக்க செவந்த உதிரமோடும்படி துடி துடித்து உயிர் நீங்கி மாண்டார்கள். உமாதேவி பாகராகிய சிவபெருமான்றன்மையை எவர்தாம் சொல்லுந்தன்மையுடையார்?

தந்தைபட் டிறந்த வாறு மறையவற் றடிந்த வாறு
முந்து றுஞ் சேனை தம்மிற் பொருதற முடிந்த வாறுஞ்
சிந்தைபெற் றுணர்ந்தான் வேந்தன் சிறுவனுங் கெழுந்து சென்றான்
பைந்துணை ரலங்கற் றிண்டோள் விசாந்தகற் பணிந்து நின்றான்.

(இ - ள்.) தன் தந்தை வெட்டுண்டிறந்ததையும், (அடைக்கலம்புக்க) அந்தணனை வெட்டியதையும், முற்பட்டு எதிர்த்த சேனைகள் தங்களிலேயே போர்செய்து முற்றும் இறந்ததையும் அம்மன்னவன் மகன் மனதிற் கருதி யுணர்ந்தவனாய், அங்கிருந்து எழுந்து சென்று, பசிய பூங்கொத்துக்களாலாகிய மாலையணிந்த வலிய தோள்களையுடைய விசாந்தகனைப்பணிந்து எதிரிலே நின்றான். எ - று. (௧௧௩)

என்னைகொ லிதுமற் றொன்று மறிந்தில னிசைத்தி யென்னாப்
பின்னரும் பணிய நோக்கி விசாந்தகன் பேசக் கேட்டா
னென்னையா ளமலன் செய்கை யீதென வறிந்தா னீங்கென்
றன்னையுங் கோறி யென்னாக் குமாரனு மகுடஞ் சாய்த்தான்.

(இ - ள்.) இது யாது காரணமோ? ஒன்று முணரேன். இதன் காரணத்தைச்சொல்லுகவென்று மீண்டும் பணிவதைக்கண்டு, விசாந்தகன் நடந்தவற்றை யெல்லாஞ் சொல்லக்கேட்டவனாய், என்னை அடிமையாகவுடைய சிவபெருமான் செயலாகும் இது வென்றறிந்து, இவ்விடத்தில் என்னையுங்கொல்லுகவென்று அவ்விராச குமாரனும் திருமுடியைச்சாய்த்தான். எ - று. (௧௧௪)

அவ்வழி யிரங்கி நோக்கி விசாந்தக னருளு நெஞ்சன்
செவ்வழி யுளத்தோய் நன்றுன் றிறத்துள செய்கை யென்னா
வெவ்வழி நினக்கு வேண்டு மியம்புதி யென்ன லோடும்
வெவ்வழிச் சேனை தம்மில் விளிந்துறு தளித்தி யென்றான்.

(இ - ள்.) விசாந்தகன் இரக்கமெய்தி நோக்கிக் கருணைதங்கிய மனமுடையவனாய், செவ்விய வழியிற்செலுத்திய சித்தமுடையவனே! உனது பத்திமைத் தன்மையின் செயல் நன்றாயுளதென்று சொல்லி, உனக்கு யாது வரம் வேண்டும் சொல்லுகவென்றவுடன்; பெருந்தொகையான சேனைகள் தங்களுக்குள்ளேயே மரணமெய்தாது காத்தருளவேண்டுமென்று யாசித்தான். எ - று. (௧௧௫)

வாலிளங் குமரன் கூறக் கேட்டனன் மறையோ னெந்தை
பாலலோ சனனை நெஞ்சம் படுத்தினின் றிரக்கங் கூர்ந்து

னவிய சேனை தம்மா ழெழிந்துகை யயர்ந்து நின்ற
மேலெழ நறும்பூ மாரி பொழிந்தனர் விண்ணு ளோர்கள்.

(இ - ள்.) புனிதனுன அரசிளங்குமரன் இப்படிச்சொல்ல, விசாரதக னென்னும் வேதியன் கேட்டு, எமது பெருமானுகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை மனதிற் கருதி இரக்கமெய்தினன். கோஷிக்கின்ற சேனைகள் தங்கள் பகைமை விலகிச்சேர்ந்திருந்தன. அந்தரவாசிகளாகிய தேவர்கள் ஆகாயத்திலெழும்பும்படி மணமுள்ள மலர்மாரி சொரிந்தார்கள். எ - று. ()

எண்டிசை யீறு காறு மெழுந்தெதிர் முழக்கங் காட்டி
மண்டுதுந் துமியி னொப்புச செவிபுக வானத் தூடு
கொண்டிறக் கினர்பொன் மானங் கணத்தவர் குறுகி நின்றார்
கண்டவர் விசாரந்தற் போற்றிக் கைகுவித் திவைய சொல்வார்.

(இ - ள்.) எட்டுத் திக்குகளினிறுதிவரையிலும் மேலோங்கியெழுந்து எதிர்முழக்கங்காட்டி நெருங்கிய தேவதுந்துமியின் கோஷம் மாறுடர் செவி களிலுங்கேட்க, ஆகாயவழியாகச் சிவகணத்தவர்கள் பொன்மயமான விமானங் கொண்டு வந்திறக்கி அருகே நின்றார்கள். (அப்பொழுது) அச்சிவகணத்தோர் விசாரதகனை நோக்கித் தோத்திரஞ்செய்து, கைகளைச்சிரமிசைக்குவித்து இப்படிக்கூறுகின்றார்கள். எ - று. (௧௧௭)

பத்தியும் பயமும் பத்தி வயிரமு முலகத் துன்னை
யொத்துள ரிற்றை நாளு மொருவரைக் கண்டி லேம்யா
முத்திவித் தாக நின்ற நந்திசொன் மொழியால் வந்தே
மத்தநீ மானந் தாங்கக் கைலைவந் தடைதி யென்றார்.

(இ - ள்.) (சிவபுண்ணியத்திற்) பத்தியும் பயமும் பத்திமைக்காக வைராக் கியமும் இந்நிலவுலகத்தில் உம்மைப்போல் அடையப்பெற்றவர்கள் ஒருவரை யும் இன்றுகாறும் நாங்கள் கண்டதின்று. முத்தியின்பம் விளைதற்கொரு விதைபோல்வாராகிய திருநந்திதேவர் கொடுத்த கட்டளையால் இங்கெய்தி னோம். ஆதலின், புனிதமானவரே! அடியேங்கள் விமானந்தாங்கும்படி தேவரீர் திருக்கைலாயத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று கூறினார்கள், எ - று. ()

தாங்குறு மானத் தேறித் தன்னுயிர்க் கிளைக ளோடு
மோங்கின னும்பர்ச சென்று னிந்திர னுவந்து வாழ்த்தத்
தேங்குநீர்ப் பவள வேணி யெம்பிரான் றிருமுன் சென்றுன்
பூங்கழ லிமையோ ரேத்தக் கைலைபுக் கிருந்தா னன்றே.

(இ - ள்.) சிவகணங்கள் சுமக்கும் விமானத்திலேறி, தனது உயிர்போன்ற உறவினரோடு மேலோங்கித் தேவலோகமெய்தி அங்குள்ள இந்திரன் மனங் களித்துத் துதிசெய்ய, தேக்கெடுக்கும் கங்காசலத்தைதயணிந்த சடைமுடியை யுடைய எமது சிவபெருமான் திருச்சந்நிதானத்தின் முன்னரடைந்து, அங் குள்ள தேவர்கள் யாவரும் தனது அழகிய பாதங்களைத் துதி செய்யும்படி திருக் கைலாயபதவியை யடைந்து வாழ்ந்திருந்தனன். எ - று. (௧௧௯)

தேவனுக் களித்த நன்னீர்ச் செந்நெலங் கழனிச் செய்வேட்
டாளிய மறையோன் மைந்த னீவரோ டலங்க செந்தீ

மேவிய விரயும் புக்கா னிங்கிவன் விரும்பிச் சென்ற
கோவியன் மகதர் கோனு மக்கொடு நிரயம் புக்கான்.

(இ - ள்.) சிவபெருமானுக்குத் தத்தஞ்செய்து கொடுத்த நல்ல நீர்வளம் பெற்ற செந்நெல் விளையத்தக்க மருதநிலத்திலுள்ள வயலை விரும்பிய சவிதா வென்னும் அந்தணன், தன் புத்திரர் இருவரோடு, பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெந்தீ நிறைந்துள்ள நரகத்திற் சேர்ந்தான். இவ்வேதியன் அபேக்ஷைகொண்டு அடைக்கலம் புகவிருந்த அரசத்தன்மை பொருந்தியுள்ள மகதநாட்டு மன்னனும் அந்தக்கொடுமைவாய்ந்த நரகத்திலேயே யடைந்தனன். எ - று.

இப்பெருங் கதை கேட்டு மீர்ஞ்சடை முநிவீ ரந்தை
செப்பருஞ் சிவத்து ரோகஞ் செய்வரோ செய்தா ரன்னி
லொப்பரும் பத்தர் வாழு மூரகம் புகுத லாகா
வெப்பரு நிரயத் தாழ்வர் மீட்கலா நெறியு முண்டோ.

(இ - ள்.) குளிர்ந்த சடையையுடைய நைமிசாரணிய முனிவர்களே! இப் பெரிய சரிதையைக்கேட்ட பிறகும் எமது சிவபெருமானுக்குச் செய்வதாகிய சொல்லமுடியாத சிவத்துரோகத்தைச் செய்வார்களோ? அதன் பிறகும் செய் தார்களாகில், ஒப்பற்றவர்களாகிய அன்பினையுடையவர்கள் வசிக்கின்ற முத்தி நகரத்திற் சேரலாகாது. அதிவெப்பந்தங்கிய நரகத்திற் படிவார்கள். அவர்களை அந்நரகத்திலிருந்து கரையேற்றத்தக்க வழியும் ஒன்றுள்ளதோ? எ - று. ()

கலிவிருத்தம்.

இக்கதை முற்று மிசைத்தன மீச
னக்கினி மேனி குளிர்பபுற வமிர்தந்
தொக்கப சுக்கவர் தீமைசு மந்தோர்
புக்கது யர்க்கொடு மூப்பது புகல்வாம்.

(இ - ள்.) இச்சரிதத்தை முற்றுஞ்சொன்னோம். சிவபெருமானுடைய அக்கினியைப்போலும் செவந்த திருமேனி குளிரும்படி பாலினைக்கொடுப்ப தாகிய பசுவினைக் களவுசெய்த பாவத்தையடைந்தவர்கள், தமக்கு நேர்ந்த துயரங்கொண்டலைவதைச்சொல்லுவோம். எ - று. (கடஉ)

பாண்டவ னென்றொரு பார்த்திவ னன்னோற்
காண்டகை மைந்த ருருந்திற லைவர்
காண்டகை முன்னவ னன்பு கனிந்தே
மூண்டெழு சிந்தையன் வெந்திறன் மொய்ம்பன்.

(இ - ள்.) பாண்டவனென்னும் பெயர்பெற்ற ஒரு மன்னவனிருந்தான். அம்மன்னனுக்கு ஆண் தன்மையுடையவர்களும் அரியவல்லமையுடையவர்களு மாய் ஐந்து புதல்வரிருந்தனர். அவரில், காண்டற்கினியவனாகிய ஜேஷ்டன் கிருபையிருந்து மேம்பட்டுயர்ந்த மனமுடையோன். புயபலபராக்கிரமமுள்ளவன்.

கருணை முழுங்கு பெருங்கட லன்னான்
றரும நிரப்பிய சாலெறி கர்ப்பா

றொருவ னுயிர்ப்பொறை யாருயி ரோப்பா
னருமக ரக்கடல் வையம ளிப்பான்

(இ-ள்.) இன்னும் அப்பெரியோன் கருணையிருந்த பெரிய சமுத்திரம் போன்றவன். தருமங்களையெல்லாம் நிரப்பியுள்ள ஒரு பண்டசாலைபோன்றவன். ஆன்மாக்கடோறும் அமர்ந்துள்ள பரமான்வாவைப்போன்றவன். அரிய மகா மச்சங்கள் வசிக்கும் கடல் சூழ்ந்த பூமியை யாள்பவன். எ-று. (௧௨௪)

தருமனெ னும்பெயர் தந்துயி ரன்னு
ரொருவரு தம்பியா நால்வரொ டும்போய்த்
திருவுசி னத்துரி யோதன னைச்செற்
றிருநில முற்றுமெ திர்ந்துற வாழ்வான்.

(இ-ள்.) தருமனென்னும் பெயரேற்றவனும், தன்னுயிர்போற் பிரிதற்கரிய சகோதரர் நால்வரோடும்போய், மேம்பட்ட கோபமுற்றோனாகிய துரியோதனனை மாய்த்து, பெரிய நிலவுலகத்திலுள்ளவர்கள் யாவரும் எதிர் வந்து பணியும்படி வாழ்கின்றவன். எ-று. (௧௨௫)

நீடவி ரித்த நெடுங்குடை நீழ
லாடர வுச்சிய கன்புவி பன்னு
ளோடந டத்தியு டம்பொடு மும்ப
ரேடவிழ் தாமனெ திர்ந்திடு மெல்லை.

(இ-ள்.) மிக விரிந்துள்ள பெரிய வெற்றிக்குடை நிழலிலிருந்து, ஆதிசேடன் தன் முடிமேல் தாங்கிய இடமகன்ற பூமியில் பல காலம் தன் செங்கோல் செல்லும்படி செலுத்தி, இதழ்கள் விரிந்த மலர்மாலையணிந்த தருமன், சரீரத்தோடு சுவர்க்கஞ் சேருஞ் சமயத்தில். எ-று.

தென்றிசை யாளிதி ரண்டது ணைத்தோட்
குன்றன சித்திர குத்தனொ டும்போய்த்
தறன்னி மைந்தனெ னத்தகு தருமற்
கன்றெதிர் சென்றிவை யன்பினு ரைப்பான்.

(இ-ள்.) தென்றிசையை யரசாளும் இயமன், மலைபோலத் திரண்ட இரு தோள்களையுடைய சித்திரகுத்தனோடு போய், தன் ஒப்பற்ற புத்திரனென்று சொல்லப்பட்ட தருமனுக்கு அப்பொழுது எதிர்கொண்டு அன்போடு இப்படிச்சொல்லினன். எ-று. (௧௨௭)

சத்திய மன்றிய சத்திய மறியீர்
புத்திரெ னும்பவன் புத்திரெ னும்பா
ருய்த்தொரு கவிகை நிழற்றிய வந்தீர்
மெத்தவே வொன்றும் வப்பாம யன்றோ.

(இ-ள்.) நீர் உண்மைமொழியே யன்றிப் பொய்ம்மொழியை யறியமாட்டீர்... புத்திரனென்... முடிகளின் வரிசையில் ஆதிசேடனுற் ...

படும் பெரிய நிலவுலகத்திற் செங்கோல்செலுத்தி ஒப்பற்ற வெற்றிக்குடை நிழல்செய்து மகிழ்ந்தீர். மும்மூர்த்திகளும், சந்தோஷிக்கும்படி மூயற்சி செய்தீர்.

பாரத முற்றிய சேனைப டப்பான்
கார்முகில் வண்ணனு ரைப்படி கண்ணுற்
றோர்வற நின்றது ரோணனு டன்பைந்
தார்புனை யசுவத் தாமனி றந்தான்.

(இ - ள்.) பாரத நிகழ்கையில், சேனைகள் யாவும் அழியும்பொருட்டு, கருநிறந்தங்கிய மேகவண்ணராகிய கண்ணபிரான் சொற்படி, யுத்தத்தை நோக்கி யுணர்ச்சியற்று நின்றிருந்த துரோணாசாரியரோடு பசிய மலர்மாலை சூடிய அசுவத்தாமன் இறந்தான். எ - று. (கஉக)

என்னவு ரைத்திடு பொய்ம்மைத டைப்பான்
பின்னமொ ரேத்தொரு பேரினி சைக்குங்
கன்னம தக்கரி யென்று கழன்றீ
ரன்னதொர் பொய்ம்மை யடைந்தது நும்மை.

(இ - ள்.) என்று சொல்லிய பொய் வார்த்தையை நீக்கும்பொருட்டு, அதன் பின்னர், ஒரே பெயரின் சம்பந்தமுடையதாகிய கன்னமதம்பொழியும் யானையென்று விளக்கிச்சொன்னீர். அவ்வகைப்பட்ட ஒரு பொய்ம்மொழியால் வந்த பாவம் உம்மையடைந்தது. எ - று. (கஉ0)

ஓதிய பொய்ம்மையி னுவியொ ழிந்து
காதக ளத்தின நேகர்க ழிந்தார்
நீமொழி யத்தகு மென்னக ரண்மிப்
போதுதி ரென்றுபு கன்றிடு மெல்லை.

(இ - ள்.) நீர் சொல்லிய அப்பொய்ம்மொழி ஒன்றினாலேயே கோபமதிக மிக்கத்தக்க யுத்தகளத்திலே எண்ணிறந்தவர்கள் மாண்டார்கள். இப்பாவம் உம்மைவிட்டு நீங்கும்படியாக, என் நியமபுரத்திற்கு வந்து போகக்கடவீரென் றுரைக்குஞ் சமயத்தில். எ - று. (கஉக)

தந்தையு ரைததவு ளங்கொடு தருமர்
புந்திம கிழ்ந்தொரு தென்றிசை புக்கா
ரந்தநி லத்தன லாசிய மென்னும்
வெந்தழ னிரயம் விழித்தெதிர் கண்டார்.

(இ - ள்) தந்தையாகிய இயமன் வார்த்தைகளைத் தருமர் அங்கீகரித்து மனமகிழ்ந்து ஒப்பற்ற இயமபுரஞ் சென்றார். அந்நகரத்திலே அனலாசிய மெனும் பெயர்வாய்ந்த தீயுமான கொடிய நரகத்தைத் தமக்கெதிரே கண் விழித்துக்கண்டார். எ - று. (கஉஉ)

அந்நிர யத்தின ருந்துய ரெய்தா
வின்னலு ழிக்குமி வற்குள தீமை
யென்னிவன் யாவனெ னத்திகழ் தென்பான்
மன்னவ னைக்கை வணங்கிமொ ழிந்தார்.

(இ - ள்.) அந்த அனலாச்சியமெனனும் நரகத்திலே யிருந்து கொடுந்துய ரெய்தி வருந்துகின்ற இவனுக்குச் சம்பவித்துள்ளபாவம் யாது? இவன் யாவன்? என்று, விளக்கமெய்திய தென்றிசைக்கிறைவனாகிய இயமனைக் கைகுவித்து வணங்கிக்கேட்டனர். எ - று. (கசுங)

மைந்தனு ரைத்தம னக்கொடு மறலி
யிந்தவி வன்சிவ பாதக னிவனால்
வந்தசி வதுரோ கம்புகல் வாமென்
றுந்துசி னங்கொடு ரைக்குவ தானான்.

(இ - ள்.) தன்மகன் தருமன் சொல்லியதை இயமன் மனதிற்கருதி, இந்த அனலாச்சிய நரகத்திலிருக்கும் இவன் சிவாபராதஞ்செய்தவனானவன். இவனால் நேர்ந்த சிவாபராதத்தைச் சொல்லுகின்றேனென்று, (சிவாபராதத்தை நினைத்தலா லுண்டாகிய) கோபத்துடன் சொல்லுகின்றான். எ - று. (கசுச)

கலிநிலைத்துறை.

கோடு நீணதி புடைபடு குஞ்சர மென்னு
நாட திற்படு வசுதையென் றொருதிரு நகர
மூட திற்பெரு நான்மறைக் குலத்துமோ ரொருவ
னீடு நூனெறி யறத்தொடு மொருதனி நின்றான்.

(இ - ள்.) கரைபொருதிய நெடியநதியாற் புடைசூழப் பெற்றகுஞ்சர மென்றநாட்டில் விளங்குகின்ற வசுதையென்னும் அழகிய நகரமொன் றுண்டு. அந்நகரத்தினுள்ளே பெருமைதங்கிய நான்குவேதங்களுக்குரிய அந்த ணர்குலத்திற் பிறந்தவனொருவன். மேம்பாடுதங்கிய சிவாகமநெறியாகிய புண் ணியத்தோடு ஒப்பற்றவனாக வாழ்ந்திருந்தான். எ - று. (கசுரு)

வேத கோத்திரத் துதித்துள விப்பிர மணியென்
றோது நீதிய னியல்பினை யிந்திர னுணர்ந்தான்
போதன் மேயவற் றழீஇக்கொடு விண்ணகம் புகுவா
னாத வன்புரை யாரமொன் றவன்களத் தணிந்தான்.

(இ - ள்) வைதிக கோத்திரத்திற் பிறந்துள்ள விப்பிரமணியென்று பல ருஞ் சொல்லுகின்ற அவ்வந்தணன் ஒழுகுகின்ற நீதிமார்க்கத்தின் றன்மையை இந்திரனுணர்ந்து, பிலவுலகத்திற்குவந்து இவனைக்கண்டு தழுவிக்கொண்டுதனது தேவலோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், சூரியனைப்போன்ற ஒருமாலை யை அவ்வேதியன் கழுத்திலணிந்தான். எ - று. (கசுசு)

ஆர மொன்றளித் தருமறை யவன்றனை நோக்கிப்
பேரொ ளிப்புனை யாரமீ தவிரொளி பிறக்கச்
சேர்ப சும்பொனா யிரமொரு வைகலிற் சுரக்கும்
பார கத்ததுக் கொண்டுநீ பேரறம் பரிப்பாய்.

(இ - ள்.) ஒருமாலையைக்கொடுத்து, அரியவேதமுணர்ந்த அவ்வந்தணனை நோக்கி, மிகுந்தகாந்திபெற்றதாகிய இம்மாலையானது விளக்கந்தங்கிய ஒளிவீ சும்படி ஆயிரம் பசும்பொற்காசை நாளொன்றிற்கொடுக்கும். பிலவுலகத்திலே அப்பொன்னைக்கொண்டு நீ பெரியதருமங்களைச் செய்வாயாக. எ - று.

என்று போக்கின னிந்திரன் வேதிய னெய்தி
யன்று நாண்முதல் வைகலொன் றாயிரம் பசும்பொன்
றான்று பேரொளிப் புனைகலன் சுரந்திடப் பெற்று
ணின்று புண்ணிய மெவற்றையும் புரிந்தன னெடுநாள்.

(இ - ள்) என்றுகூறி இந்திரன் அவ்வந்தணனை யனுப்பிவிட்டான். விப்பிரமணியென்போன் நிலவுலகமடைந்து அன்றுமுதலாகத்தினமொன்றிற்கு ஆயிரப்பசும்பொற்காசுகளை, மிகுந்தபேரொளியுடைய அம்மாலையானது கொடுத்து வரப்பெற்றுக்கொண்டு நிலவுலகத்திலே வெகுநாளிருந்து எல்லாப்புண்ணியங்களையுஞ் செய்தான். எ - று. (௪௬௮)

பாக்கும் வெண்டிரை பரந்தட னெடுநிலப் பரப்பிற்
சுரக்கு மாவின மந்தணர்க் களவறக் கொடுத்தா
னிரக்கு மாக்கொடி வரிற்றினிடை நிலாக்கொழுந் திகழ்
கரக்கும வார்சடை யவன்பசு வொன்றுபோயக் கரப்ப.

(இ - ள்.) பரவியுள்ள வெள்ளிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகத்திலே, விசேஷித்த பசுக்கூட்டங்களை அந்தணருக்கு அளவின்றித்தானங் கொடுத்தான். பசுக்களை வரிசைப்படக்கட்டியிருக்குந்தொழுவங்களில் ஒன்றில் பிறைச்சந்திரனையுங் கொன்றைமாலையையும் மறைக்கின்ற நெடியசடையையுடைய சிவபெருமான் பசுவொன்றுபோய்க்கலந்திருக்க. எ - று.

எடுத்த நீரொடு மறையவர்க் குதவுமா னினர்தோ
டடுத்த னிரதனு லாவையு மாங்கவர்க் களித்தான்
கடுக்க ளத்தனு லையட்பரிக் குநாது கண்டார்
திடுக்க மெய்தின ரோடின ரப்பசுச் செறுத்தார்.

(இ - ள்.) கையிலெடுத்துக்கொண்டதாரைநீரோடு அந்தணருக்குத்தானஞ் செய்கின்ற பசுக்கூட்டத்துடன் கலந்திருந்த சூலக்குறியிடப்பட்டுள்ள அப்பசுவையும் (தெரிந்துகொள்ளாமல் தன்னுடையதென்று) அவர்களுக்குத்தானமாகக்கொடுத்தான். விஷமுண்ட கண்டத்தையுடைய சிவபெருமான் திருக்கோயிலைப்பரிபாலனஞ்செய்வோர் அதுகண்டு நடுங்கியோடி அப்பசுவைத்தடை செய்தார்கள். எ - று. (௪௭௦)

செறுத்த காலையி லப்பசு வேற்றவன் றிரும்பி
வெறுத்த சிந்தையின் விப்பிர மணிதிறந் துரைப்பக்
கறுத்த சிந்தையன் வெகுண்டனன் பாதகங் கருதான்
மறுக்க ளத்தன தாலயத் தவர்க்கிது வலிப்பான்.

(இ - ள்.) அப்படித்தடைசெய்தபோது, அப்பசுவைத்தானமாகப் பெற்றவன் திரும்பிவந்து, மனவெறுப்போடுவிப்பிரமணியெனும் வேதியனிடஞ்சொல்ல, கடினசித்தமுடையவனும்கோபங்கொண்டு, சிவாபராதத்தைச் சிறிதுங் கருதாது ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமான் திருக்கோயிற் பரிபாலகருக்கு இதனைச்சொல்லுகின்றான். எ - று. (௪௭௧)

வைக லாயிரம் பசும்பொனெம் பாற்றர வழங்கிச்
செய்க லன்புரிந் தளித்தனன் புரந்தரன் சிவனுக்
கெய்து மென்னுழை யோர்பசுத் தந்தனி விடுபோ
வெய்து ரைத்தனி ரழிவழுக் கெனச்சொலா விடுத்தான்.

(இ-ள்.) நாளொன்றுக்கு ஆயிரம் பசுப்பொற்காசுகள் எனக்குக்கொடுக்கத் தக்க மாலையை இந்திரன் விருப்பத்தோடு கொடுத்துப்பாலித்தான். (இப்படியிருக்க) என்பாலெய்திய ஒருபசுவைக்கொடுத்தால் சிவபெருமானுக்குத்தாழ்ச்சியுண்டாமோ? வீண்வழக்கை விருதாவாக என்னிடம் வந்து சொன்னீர்களென்றுசொல்லி அவர்களையனுப்பிவிட்டான். எ - று. (௧௪௨)

ஐய னாலயம் பரிக்குந ரரசவை புகுந்தார்
மையு ருங்களத் தார்வசந் தேசுரர்க் குளதாந்
தெய்வ மாப்பசுப் பிடித்தொரு மறையவன் செங்கைப்
பெய்யு நீரொடுங் கொடுத்தனன் விப்பிர மணியே.

(இ - ள்.) சிவபெருமானுடைய திருக்கோயிற் பரிபாலனஞ் செய்வோர இராசசபையை யடைந்தவர்களாய், விஷந்தங்கிய கண்டத்தையுடைய வசந்தேசுவரருக்கு உள்ளதாகிய தெய்வீகம்பொருந்திய சிறந்தபசுவை விப்பிரமணியெனும் வேதியன் பிடித்துக்கொண்டு, வேறொரு வேதியன் கையில் தாரைநீரோடுந் தானஞ்செய்து கொடுத்துவிட்டான். எ - று. (௧௪௩)

என்னு மவ்வுரை கேட்டனுங் கேட்டிலான் போல
மன்ன னொன்றுமற் றுரைத்திலன் புரோகித மறையோ
னன்ன காலையி லரசனுக் கடுத்தடுத் துரைத்தான்
மின்னு வேணிய னாலயச் சுரபியீட் டளிப்பான்.

(இ - ள்.) என்றுசொல்லிய அவ்வார்த்தைகளைக்கேட்டும் கேளாதவன் போல் மன்னவன் மறுமொழியொன்றுங்கூறாமலிருந்தான். அச்சமயம், அங்கிருந்த புரோகிதன், பிரகாசிக்கின்ற சடைமுடியையுடைய சிவபெருமான் திருக்கோயிற் பசுவைவாங்கிக்கொடுக்கும்படி அரசனுக்கு அந்தமுறைசொல்லினன்.

இருக்க ளாதி புரோகித மறையவ னிசைத்த
கருத்தி லொன்றுமற் றுணர்ந்திலன் கழல்வேந்த
னுருத்தெ ழுந்தனன் சிவத்துரோ கத்தரை யொருங்கே
முருக்கி யாருயிர் முடித்திற நான்மறை மொழிந்த.

(இ - ள்.) வேதங்களைமுற்றுமுணர்ந்த புரோகித வேதியன் சொல்லிய நீதிகளில் ஒன்றையும் சத்திகின்ற வீரகண்டாமணிதரித்தவன் உணராதவனாயிருந்தான். அப்போது அப்புரோகிதன் கோபித்தெழுந்து, சிவத்துரோகிகளை முற்றும் அழித்து உயிர்போக்கும்படி நான்குவேதங்களுங் கூறுகின்றன.

ஆத லாலிவற் கோறியென் றிசைத்தன னரச
னோது நான்மறை யமைச்சனை நோக்கின னும்பர்த்
தாது லாவருங் கற்பக வாசனன் றனக்கென்
றேதி லாரமொன் றளித்தவன் றழீஇக்கொள விருந்தான்.

(இ - ள்.) ஆதலால் இவனைக்கொல்லுகவென்றான். அப்போது அரசன் நான்குவேதங்களையோதுகின்ற மந்திரியாகிய அப்புரோகிதனைநோக்கி, தேவலோகத்திலுள்ளதும் மகரந்தங்கள் நிரம்பியதுமான கற்பகமலர் மாலைதரித்த இந்திரன் தனக்கென்றுயர்ந்த ஒருமாலையையளித்து அவனை தழுவிக்கொள்ளவும் இருக்கின்றான். எ - று. (௧௪௪)

அச்சி றப்புடை யந்தண ளுருயி ரவன்பான்
மெய்ச்சி றப்பற விளித்துமேல் விளைவன யாதோ
கொச்சை மக்களி னுரைத்தனை வருவன குணியா
விசசை கற்றுணர்ந் தளந்தறி யுணர்வெலாம் விடுத்தாய்.

(இ - ள்.) அத்தகைச்சிறப்புற்ற அந்தணனுயிரை, அவனுடலின் பெருமை யகலும்படிபோக்குவோமாயின், யாதுவிளையுமோ? வேதங்களையோதியுணர்ந்துள்ள அறிவுமுழுவதையும் போக்கினவனாய், மேல்வருவனவற்றைக்கவனியாது [கொச்சை] மூடமனிதர்போலக் கூறினாய். எ - று. (௧௭௭)

என்றி ழித்தன னிவனுரை யாவையு மிறைவன்
ளுன்று தொட்டர னடிமைபூண் டொழுகிய தூயோ
னின்றி வன்றிறத் திருப்பினுந் தீண்டினு மெரிவாய்
தென்றி சைப்படு நிரயமுற் றிழிவது திண்ணம்.

(இ - ள்.) என்று அரசன் (புரோகிதனை) இகழ்ந்துபேசினான். இவன்சொல்லியவார்த்தைகளையெல்லாம், பண்டைக்காலந்தொடங்கிச்சிவபெருமான்திருத்தொண்டினைப்புரிந்துவந்த புனிதனாகிய அப்புரோகிதமறையோன்கேட்டு, இப்போது நாம் இவனிடத்திலிருந்தாலும் இவனைப்பரிசித்தாலும், இயமபுரத்திலுள்ள தீவாய் நரகத்தில் இழிவது சத்தியம். எ - று. (௧௭௮)

பூதி வேண்டியு முருத்திர மாமணி புனைந்து
மாதி யஞ்செழுத் துணர்ந்துமுற் றருந்தவம் யாவுஞ்
சேதி யாவருஞ் சிவத்துரோ கத்தினைத் தெரியா
னேதி லானிவன் றன்மைநன் றலவென விகழ்ந்தான்.

(இ - ள்.) திருநீறணிந்துகொண்டிருந்தும், சிறந்த உருத்திராக்கமணிதரித்துக்கொண்டிருந்தும், தலைமையாகிய பஞ்சாக்ஷரத்தைச்சபித்துக்கொண்டிருந்தும், முடித்துள்ள அரியதவங்களை யெல்லாங்கெடுக்கத்தக்க சிவத்துரோகத்தை உணராதிருக்கின்றான். இவனியல்பு நன்றன்று. இவன் நமக்குப்பகைவனென்று அவமதித்தான். எ - று. (௧௭௯)

நோக்கி னன்றனி நெறிப்பரி யரசனைத் தெளிநீர்
தேக்கு செஞ்சடை யவற்கடாச் சிவத்துரோ கங்க
ளாக்கு வாரதற் கியைகுவா ரன்னவர்த் தொடினும்
வாக்கி னலுரைத் திடினும்வந் தடுக்குமா நிரயம்.

(இ - ள்.) ஒப்பற்றவேகமுடைய குதிரையைப்படைத்த அம்மன்னவனை நோக்கி, தெளிந்தகங்கைநீர் கூற்றெடுக்கும் சிவந்தசடையையுடைய சிவபெருமானுக்குச்செய்யத்தகாத சிவத்துரோகங்களைச்செய்பவர்களும், அதற்கு உடன்பட்டிருப்பவர்களுமாகிய அவர்களைத் தொட்டாலும் அவர்கள்பெயரை வாயாற்சொன்னாலும் கொடிய நரகவேதனை சம்பவிக்கும். எ - று. (௧௮௦)

என்று ரைத்தன னெழுந்தன னிடையிடை காணுஞ்
சென்று புக்கனன் புரோகிதன் செஞ்சடைப் பரனைக்
குன்ற மன்னவன் கோயிலார் கோவிய னுரைப்
புன்றொ ழிற்புலை வேந்தனென் றனைவருந் தேரனுர்.

(இ - ள்.) என்று புரோகிதன்கூறி, அங்கிருந்து புறப்பட்டுநெருங்கியகாட்டினிடத்திற் சேர்ந்திருந்தான். சிவந்தசடையையுடைய பவளமலைபோலும் சிவபெருமான் திருக்கோயிற் பரிபாலனஞ்செய்வோர்யாவரும், அரசரிலைமைத் தன்மையுணராத அற்பத்தொழிலையுடைய இழிந்தமன்னவனென்று மனதிற் கருதிச்சென்றார்கள். எ - று. (௧௰௧)

மின்ன லங்கொளி வேற்படை வேந்தனு நெடுங்கான்
மன்னு மாமறைப் புரோகிதன் றன்னுழை வருவான்
சொன்ன தூதரை விடுத்தலு மன்னவன் சுளியாத்
துன்ன ருங்கடுங் கானகத் திருந்துநா டொலைத்தான்.

(இ - ள்.) மின்னற்கொடிபோல் அசைகின்ற ஒளியையுடைய வேற்படை தாங்கிய மன்னவனும், பெரியகாட்டில் வசித்திருக்கும் சிறந்தவேதமுணர்ந்த புரோகிதன் தன்பால்வரும்படி சொல்லித் தூதுவர்களைவிடுப்பவும், அப்புரோகிதன் கோபித்துக்கொண்டு, ஒருவரும் அடைதற்கரிதான அக்கொடியகாட்டிலே யிருந்துகொண்டு காலங்கழித்தான். எ - று. (௧௰௨)

கள்ளி காய்வெடித் தெழுதருஞ் சில்லொலி கலிக்கு
முள்ளு டைநெடுங் கானகத் திருந்தது முனைநா
ளுள்ள செம்பொனற் றொழிதர வறுமையி னுழந்தான்
வெள்ளை வாரண முங்கது வுணர்ந்தனன் விரைவான்.

(இ - ள்.) கள்ளிசெடிகள்காய்ந்து வெடித்தலாலுண்டாகும் சிற்றொலி யொலிக்கின்ற, முட்கள்நிறைந்த கடுங்காட்டிலே வசித்துக்கொண்டிருக்க, முன்னாளில் தன்பால் தேடிவைத்திருந்த திரவியங்களெல்லாம் செலவாய் விடுதலும் தரித்திரத்தினாலே வருந்தினான். வெள்ளையானையையுடைய இந்திரன் உடனே அதனையறிந்தான். எ - று. (௧௰௩)

கார்ந்தசடைப்பர னெம்பிரா னினியனின் றுழக்குஞ்
சார்ந்த நல்குர வென்றெழுந் தவனங் குறுகி
நேர்ந்து தெய்வமாச் சுரபிதந் தனன்றன னினையா
வோர்ந்த யாவையும புரோகிதற் குதவென வுரைத்து.

(இ - ள்.) குளிர்ந்த சடையையுடைய [பரமன்] மேலோனாகிய எமது சிவபெருமானுக்கு மெய்யன்பினையுடையோன், விசேடித்த தரித்திரத்தில் இப்போது வருந்துகின்றானென்று புறப்பட்டு அக்காட்டினையடைந்து அவனைப் பார்த்து, தெய்வீகமுள்ள சிறந்த காமதேனுவுக்கு, இப்புரோகிதன் நினைத்து வேண்டியவற்றையெல்லாங் கொடுத்துவருகவெனக் கட்டளைதந்து, அதைக் கொடுத்துப்போயினன். எ - று. (௧௰௪)

சுரபி யன்னவற் கிந்திர னளித்தலுந் தொலையாப்
பரவு நல்வள மாங்கது பயப்பதும் பகர்ந்தா
ராசர் கோமக னளவறு சேனைகொண் டகன்று
புரகி தற்கொணர்ந் திருத்துவா னெடுநெறி புகுந்தான்.

(இ - ள்.) அப்புரோகிதனுக்கு இந்திரன் காமதேனுவைக்கொடுத்ததும், குறையாமல்பெருக்கெய்துகின்ற மேம்பட்டசெல்வங்களை அதுவிரும்பியவண்ணம் கொடுத்துவருவதும் அரசனுக்குரைத்தார்கள். அதனைக்கேட்ட அம்மன்ன

வன் அப்புரோகிதனையழைத்து வந்து தன்பால் அமர்த்திக்கொள்ளும்படி அளவற்றசேனைகளைக்கூட்டிக்கொண்டு அரண்மனையினின்று வெகுதூரம் சென்றான்.

புகுந்த மன்னவன் கனப்பெருஞ் சேனையுட் புடைவீழ்
பகுந்து பாய்மதப் பணைமருப் பொருத்தன்மால் யானை
மிகுந்த மும்மத நிரையழி தரத்தனி வேந்தன்
றொகுந்தி றற்படை யனைத்தையு நிலனுறத் துவைத்து.

(இ - ள்.) அப்படிச்சென்ற மன்னவனுடைய மேன்மைதங்கிய பெருஞ் சேனைகளில், பக்கங்களில் ஒழுகுவதாய் இருபிளவாகப்பாயும் மதநீரையும், பருத்ததந்தங்களையுமுடைய பெரிய ஆண்யானையானது, மிக்கமும்மதம்பாயும் படி ஒப்பற்ற அம்மன்னவன் சேர்த்துக்கொண்டுவந்தவல்லமை மிகுந்தசேனைகளையெல்லாம் நிலமிசைத்தள்ளிக்கால்களால் மிதித்துச்சிதைத்தது. எ - று.

புரைபடுங்கரங் காலொடு மருப்பொடும் புகுந்தோர்
வரைதிரிந்தென வுழக்கிய மன்னவன் சேனை
தரைபடுத்திய தடுத்திறற் றனிக்குடை வேந்தை
யரைபடுத்திய தகணிலத் தக்கடுங் களிறு.

(இ - ள்.) துவாரம்பொருந்திய துதிக்கையோடும் கால்களோடும் தந்தங்களோடும் ஒருமலையானது வந்து சுழன்றதுபோலும் அவ்வரசன் சேனைகளையழித்துவிட்ட அக்கொடிய யானையானது, பகைஞரைக்கொல்லும் வலிமையும் ஒப்பற்றவெண்கொற்றக்குடையுமுடைய அம்மன்னவனை நிலமிசைத்தள்ளி, தரையிற் கால்களால் தேய்த்தரைத்துவிட்டது. எ - று. (௧௫௭)

ஒழிந்த சேனையுங் காவலர் யாவரு மொருங்கே
யிழிந்த கட்புன லாறலைத் தெழுவழு திரங்கிப்
பொழிந்த துன்பொடு மாநகர் புகுந்தனர் புலம்பி
யழிந்த தண்டமென் றெழுந்தன வழுகுர லமலை.

(இ - ள்.) எஞ்சியசேனையும் சேனாநாயகர்களுமாகிய யாவரும் ஒன்றுசேர்ந்து கண்ணீர் ஆறாகப்பிரவகிக்க அழுதுபுலம்பி, மிக்கதுயரத்தோடு சிறந்த தங்கள்நகரத்திற்குப் போனார்கள். உடனே உலகமுழுவதும் அழிந்துவிட்டதென்று சொல்லும்படி துக்கப்பட்டுப்புலம்புகின்ற அழுகுரலோசையானது எல்லாவிடங்களிலுங் கோஷித்தன. எ - று. (௧௫௮)

கனைபொ லன்கழ லரசுபட் டிறந்தமை காணு
வினைக ருந்தனிக் குமரனை யரசி ருத்தித்
துனைக டும்பரிச் சேனையர் யாவருந் தொழுதா
ரனைய னவ்வர சிருந்தினி தளித்தன னவனி.

(இ - ள்.) சத்திக்கின்ற அழகியவீரகண்டாமணிதரித்தமன்னவன், யானைக்காலில் மிதிபட்டிறந்தமையை நோக்கி, மற்றுள்ளவர்கள், தந்தைக்காகவும் சேனைக்காகவும் வருந்துகின்ற ஒப்பற்ற அரசிளங்குமரனை அரசுபுரியநியமித்து அதிவேகமுடைய குதிரைகளையுடைய சேனைகளெல்லாரும் வணங்கினார்கள், அக்குமாரன் அரசாட்சிசெய்துகொண்டிருந்து உலகினை இனிதாகப் பாதுகாத்தான். எ - று. (௧௫௯)

நடந்த நாள்பல நண்ணருஞ் சிறுநெறி யடவி
யடைந்து புக்குநல் லமைச்சுடை யந்தணர்க் கொணர்வான்
றொடர்ந்த நாலவரை விடுத்தலுஞ் சென்றனர் தொழுதார்
படர்ந்த காரண மென்னெனத் தனித்தனிப் பகர்வார்.

(இ - ள்.) பலநாட்கள் சென்றன. மாநிதித் தன்மையமைந்த அவ்வந்தணரையாவரும் அடைதற்கரிய சிறுவழியையுடைய காட்டையடைந்து உள்ளே சென்று அழைத்துவரும்படி, ஒருவர்பின்னொருவராகத் தூதுவர் நால்வரையனுப்பவும், அவர்கள் அங்ஙனமே சென்று அவரைவணங்கினார்கள். அப்பொழுது நீங்கள் வந்தகாரணம் யாதெனவினவ, அவர்கள் தனித்தனிசொல்லுகின்றார்கள். எ - று. (கசு0)

தெளித்த வெண்குடை வேந்தனீ செல்வனத் தெதிர்ந்து
விளித்தல் வேண்டினன் மேலுமவ் வெருளிவே கத்தாற்
களித்த மும்மதக் களிறுசெற் றிறந்தனன் காணு
வளித்த வன்பினோ டழுது மீண் டடைந்தவவ் வனிகம்.

(இ - ள்.) தெளிவான வெண்கொற்றக்குடையையுடைய மன்னவன், நீ சென்ற இவ்வனத்திலடைந்து உன்னையழைக்கவந்தனன். அப்படிவரவும் மும்மதஞ்சொரிதலால் களிப்படைந்த பட்டத்து யானையானது கோபத்தாற்கொல்ல இறந்தான். அதனைநோக்கி அம்மன்னன்பால்வைத்த அன்பினால் அச்சேனைகள் அழுதுதிரும்பின. எ - று. (கசுக)

அன்ன வன்றனிக் குமாரனவ் வரசுகொண் டிருந்தா
னின்னை வேண்டுறு மன்புடை நிலைமையா னுளன்
பின்ன ரெங்களை நின்னுழை விடுத்தனன் பெரியோ
யென்ன வன்னவ னுங்கவாக் கெடுத்தெடுத் தியம்பும்.

(இ - ள்.) அம்மன்னவனுடைய ஒப்பற்றபுத்திரன் அவ்வரசுரிமையைக் கைப்பற்றிக்கொண்டிருக்கின்றான். அவனே உன்னைவிரும்புகின்ற அன்புடைய இயல்பினனாயுள்ளான். ஆதலால், பெரியோனே! அதன்பின்னர், எங்களை உன்பால் (அழைத்துவரும்படிசொல்லி) அனுப்பினன் என்றுகூற, அவ்வேதியன் அத்தூதர்களுக்கு எடுத்தெடுத்துச்சொல்லுவானானான். எ - று. (கசுஉ)

செயற்க ருந்தனிச் சிவத்துரோ கஞ்செயுந் தீயோ
னயர்த்த சிந்தையன் விப்பிர மணியெனு மவனை
வயக்கு வாளெறிந் துயிர்செகுத் தொழித்திடின் வருநங்
கயக்க ருங்கட னிலந்தனைக் கைதொழத் தருமால்.

(இ - ள்.) ஒருவருஞ்செய்தற்கரிய ஒப்பற்ற சிவாபராதஞ்செய்தகொடியோனும் நன்மார்க்கத்தைமறந்த மனமுடையோனுமாகிய விப்பிரமணியெனும் அவ்வேதியனை, வெற்றிகொண்டவாளால் வீசி உயிர் போக்கியொழித்தால் நாம் அங்குவருவோம். அப்பொழுது ஆழமுள்ளதும் கருநிறமுற்றதுமான கடலாற் சூழப்பட்ட நிலவுலகமுழுவதும் தன்னைக் கைகுவித்துப்பணியவுந் தரும். எ - று. (கசுங)

நிழலில் வெண்குடைப் படிமிழ் லின்னுயி ரோங்கு
ரூழ்வ ருந்தனித் திருவருள் புரிகுவர் முறையாற்
றேவர் யாவருஞ் செல்வனைத் தொழுவர்நீ ணிலத்துத்
தாவி லன்புடை யறங்களுந் தனித்தனித் தழைக்கும்.

(இ - ள்.) (அன்றியும்தன்) கெடுதலில்லாத வெண்கொற்றக்குடைநிழலில் வாழும் ஆன்மாக்களெல்லாம் கடைத்தேறும். திரிமூர்த்திகளும் தங்கள்நிகரற்ற கருணையைப்பாலிப்பார்கள். தேவர்களெல்லாரும் அவ்வரசிளங்குமாரனைமுறைப் படிவணங்குவார்கள். நெடிய இந்நிலவுலகத்தில் கெடுதலில்லாத அன்புடைய தருமங்களுந் தனித்தனிவளரும். எ - று. (௧௧௪)

விலங்கொ ழுக்குடை விப்பிர மணியைவெள் ளொளிவிட்
டலங்கு வாளெறிந் தாருயி ரகற்றுவா னறைவீர்
பொலன்க ழற்றனிக் குமரன்மாட் டினிதுறப் புகுவேம்
வலங்கொண் மொய்ம்பினீ ரன்றெனில வருகல மென்றான்.

(இ - ள்.) ஒழுக்கமீனனாகியவிப்பிரமணியென்னும் அவ்வாதணனை, வெள்ளியகாந்திவிட்டு அசைகின்ற வாட்படையை வீசி உயிர் போகும்படி, கூறுவீர்களாக. அப்பொழுதுதான், பொற்கழலையணிந்த நிகரற்ற அவ்விளவரசன்பால் வருவோம்வல்லமைவாய்ந்த தோள்களையுடையவர்களே! அப்படிச்செய்யாவிட்டால் அங்குவரமாட்டோமென்றனன். எ - று. (௧௧௫)

நல்லொ ழுக்குடைப் புரோகித னுரைத்தமை நவின்றார்
மல்லொ ழுக்குடை வரைப்புய சித்திர சேனன்
புல்லொ ழுக்குடை விப்பிர மணிவரப் புகன்றான்
சொலலொ ழுக்குடை மறையவ ராயவ ருந்தொகுத்தான்.

(இ - ள்.) நல்லொழுக்கத்தையுடைய புரோகிதன் சொல்லியவற்றை (அத்தூதர்கள் அரசகுமாரனிடஞ்) சொன்னார்கள். மற்போரில் தேர்ச்சிபெய்திய மலைபோலும் புயங்களையுடைய சித்திரசேனனென்னும் அவ்விளங் குமரன், தீயொழுக்கம் வாய்ந்த விப்பிரமணியென்னும் அப்பறையோனைவரும்படி கட்டளைதந்து, வைதிகவொழுக்கமுடைய அந்தணர்களனைவரையுஞ் சேர்த்தனன். எ - று. (௧௧௬)

அந்த ணர்குழா மடைந்திடு மரசவை யரசன்
வெந்த சிந்தையன் விப்பிர மணிமுக நோக்கி
யெந்தை யாக்கவர் கள்வனீ செய்வன யாவுஞ்
செந்து வர்ச்சடை யவர்க்கரு ளன்றெனச் சீறி.

(இ - ள்.) வேதியர் குழாமுழுதும் சேர்ந்துள்ள அவ்வரசசபையிலிருந்த அரசிளங்குமாரன், கோபமெய்தியமனமுடையவனாய் விப்பிரமணியென்போன் முகத்தைநோக்கி, எமது சிவபெருமானுக்குரிய பசுவையபகரித்தகள்வனே! நீ செய்யுந்திருத்தியங்களெல்லாம், சிவந்த பவளம்போலுஞ் சடையையுடைய சிவபெருமான் திருவுள்ளத்திற்கு உவப்பனவல்ல வென்றுகோபித்து. எ - று.

கண்ணனி ஞேக்கினு நின்பெய ருரைக்கினுங் கருத
னெண்ணனி நோக்கினு நரகமல் லாற்பிறி தில்லை
வண்ண மாநகர் வேதியர்க் கேளென வழங்கி
வெண்ணி லாப்பொழி நெடுங்குடைப் புரவலன் [illegible]

(இ - ள்.) உன்னைக்கண்ணாற்கண்டாலும் உன்பெயரை வாயாற்சொன்னாலும், மனதால் உன்னை நினைத்துப்பார்த்தாலும் நரகமடைவதன்றி வேறொன்றில்லை. அழகிய இப்பெரிய நகரத்தில்வசிக்கும் பிராமணர்களே! கேளுங்கள் என்றுசொல்லி, வெள்ளியசந்திரிகையை வீசும் நெடிய வெண்கொற்றக்குடையுடைய அரசகுமாரன் கோபித்தான். எ - று. (௧௬௮)

கொண்டு போதிரென் றுரைத்தன னேவலர் குறுகித்
தண்டு தாங்கினர் பிடித்துருத் தந்நகர் தணந்தார்
மண்டை துண்டுற விபபிர மணியுயிர் மடித்தார்
திண்டி றற்பரிக் குமரனு மனமகிழ் சிறந்தான்.

(இ - ள்.) கொண்டுபோங்களென்று (தண்டலாளர்க்குக்) கூறினன். அக்கட்டளையேற்றவர்கள் அநுகெயதி, கையிற்றண்டந்தாங்கி அவ்விப்பிரமணியைப்பிடித்துக்கொண்டு கோபித்து அந்நகர்விட்டு நீங்கி (வெளியேசென்று) மண்டை பிளவுறும்படி விப்பிரமணி உயிரை நீக்கினார்கள் வலிய வெற்றிபொருந்திய குதிரையையுடைய அரசகுமாரனும் மனககளிப்புமிகுந்தான்.

கண்ணொ ராயிர முடையவன் கண்டுகண் களித்தான்
மண்ண கத்திழிந் தேத்தினன் குமரனை வழுத்தி
யெண்ணி விப்பிர மணிக்கரு ளாரமுற் றெடுத்தா
னண்ணல் வேற்படை யரசிளங் கோளரிக் களித்தான்.

(இ - ள்.) ஓராயிரம் விழிகளையுடைய இந்திரன் இச்செயலைப்பார்த்துக் கண்களிப்பெய்தினான். நிலவுலகத்திலிறங்கிவந்து அரசகுமாரனைப்புகழ்ந்து துதிசெய்து, முன்தான் விப்பிரமணிக்குக்கொடுத்த ஆரத்தை யாலோசித்து எடுத்து, பெருமைதங்கிய வேலாயுதமேந்திய ஆண் சிங்கத்தையொத்த அரசிளங்குமாரனுக்குக்கொடுத்தான். எ - று. (௧௭௦)

இதுவு ணர்ந்தனா புரோகித னிருத்தலுந் தூதர்
புதுமொ ழிந்துறக் கேட்டனன் மயிர்ப்புறம் பொடித்தான்
கதுமெ னப்புகுந் தெய்தின னரசனைக் கண்டா
னதுவு ணர்த்திருந் தளவளாய் மகிழ்ந்தன னமைசசன்.

(இ-ள்.) இச்செய்தியை யறிந்துகொண்டவனாய்ப் புரோகிதனிருக்கையில், தூதர்களெய்தி இப்புதிய சங்கதியைச்சொல்லக்கேட்டு மயிர்கூச்செறிந்தவனாய் அதிசீக்கிரமாகவந்து அரசகுமாரனைக் கண்டுகொண்டான். அப்படிப்புரோகிதன் வந்ததையுணர்ந்து அரசகுமாரனும் அளவளாவி மனக்களிப்படைந்தான். எ-று.

தாரை நீரொடு மாத்தர வேற்றவன் றவழ்ந்த
கார்தொ டுங்கொடிக் கச்சதே யத்துள வசுவுக்
கீர வெண்ணிலாக கொழுந்தணி யெம்பிரான் சுரபி
யோர்வில் சிந்தையாய் விடுதியென் றெழுதினை ரோலை.

(இ - ள்.) தாரை நீருடன் பசுவைத்தானங்கொடுக்கப் பெற்றுக்கொண்டவனுகிய, மேகமண்டலம்வரை வளர்ந்துயர்ந்த கொடிகள் கட்டிய கச்சதேசத்திலுள்ள வசுவென்னும் வேதியனுக்கு, அறிவில்லாத மனமுடையவனே! குளிர்ந்த வெள்ளிய நிலவையுடைய இளம்பிறைச்சந்திரனை யணிந்த எமது சிவபெருமானுக்குரிய பசுவைத் திருப்பிவிடக் கடவாயென்று ஓலை யெழுதி விடுத்தார்கள்.

எழுது மோலைகை யேற்றில னீசனுக் கீர்ம்பால்
பொழியு மப்பசு விடுத்திலன் புரவலன் வெகுண்டான்
வழுவ றுங்குணக் கச்சதே யத்துள மன்னற்
கொழுகு மன்புகொண் டெழுதினன் விடுத்தன னோலை.

(இ - ள்.) (அவ்வோலையை ஏவலாளர் கொண்டுவரக்கண்ட வசுவென்பான்) மன்னவன்விடுத்த வோலையைக் கையில் வாங்காதவனாய், குளிர்ந்த பாலினைக் கறக்கும் அப்பசுவைச் சிவபெருமானுக்கு விடவில்லை. அதுகண்ட அரசிளங் குமரன் கோபமெய்தி, குற்றமற்ற நற்குணமுடைய அக்கச்ச தேசத்திலுள்ள மன்னனுக்கு மிக்க அன்புடன் ஓரோலை யெழுதி யனுப்பினான். எ - று. (௧௭௫)

செறிந்த வார்கழற் சித்திர சேனனீட் டவிழா
வறிந்த வாசகத் தாங்கவற் பிடித்தகைத் தனுப்பி
நெறிந்த பான்முலை யாவொடும் விடுத்தன னிறைவன்
டெறிந்து லாவருந் தாரினான் முன்னரி னிறுத்தார.

(இ - ள்.) நெருங்கி நீண்ட வீரக்கழலணிந்த சித்திர சேனனென்னும் அவ்வரசிளங்குமரன் எழுதியனுப்பிய ஓலையைப்பிரித்துப்பார்த்து, அதிலுள்ள வாசகத்தால் விடயத்தையுணர்ந்துகொண்டு, அத்தேயத்திலுள்ள அவ்வசு வென்னும் மறையோனைக்கண்டு பிடித்துக்கட்டிக்கொண்டு வரும்படி ஏவலர் களை விட்டு, பால் கறக்கும் [செருத்தல்] மடியையுடைய அப்பசுவோடு சித்திர சேனனென்னும் அரசன் பாலனுப்பினான். அக்காவலாளர் வண்டுகள் நிறைந்து பண்பாடி வசிக்கும் மாலையணிந்த சித்திரசேனன் முன்னே விடுத்தார்கள்.

இறுத்த காலையி னப்பசு வீசனுக் கீந்தான்
கறுத்த சிந்தையின் வசுவிரு கண்பறித் தெறிந்தா
னிறுத்த கோமுறை தழைதர வறத்தொடு நின்றான்
வெறுத்த தீவினைக் கீழ்ப்பட வெண்குடை விரித்தான்.

(இ - ள்.) அப்படி விடுத்தபோது, அப்பசுவை முன்போலவே சிவாலயத் திற்குக்கொடுத்துவிட்டான். கோபம் அதிகரித்த மனமுடையவனாய் வசுவென் னும் மறையோனுடைய இருவிழிகளையும் பறித்தெறிந்தான். நிலைபெற்ற அரசுரிமைத்தன்மை அபிவிர்த்தியெய்தும் வண்ணம் தருமவழியிலிருந்தான். எல்லோரும் வெறுக்கத்தக்க பாவங்களெல்லாம் தாழும்படி வெள்ளிய சந்திர வட்டக்குடை நிழலைப்பரப்பினான். எ - று. (௧௭௬)

கட்பு லங்கடந் தேகிய கடுங்கண்மா மறையோ
னுட்பு லங்கலைந் திறந்தன னமருருத் தெழுந்து
கொட்பு றும்புயம் பிணித்தன ரிறுக்கினர் கொணர்ந்தார்
தட்ப நீங்கண லாச்சியத் திட்டனர் சலித்து.

(இ - ள்.) காணுதற்குரிய கண்களிழந்து சென்ற மிக்க கொடுமையுடை யோனாகிய அவ்வசுவென்னும் வேதியன் மனங்கலங்கி யிறந்தான். இயம படர் கள் கோபாவேசத்துடன் புறப்பட்டு, வளைந்திருக்கின்ற அவனுடைய இருவலிய தோள்களையும் சேர்த்திறுக்கிக்கட்டிக்கொணர்ந்து, வெறுப்போடு குளிர்ச்சி யற்ற அனலாச்சியமென்னும் இந்நரகத்திலிட்டார்கள். எ - று. (௧௭௭)

பரம னாலயப் பசுப்பிடித் தளித்தவ னதனை
யிரவு சிந்தையி னுணர்ந்துமீட் டளித்துறு வேந்த
னிரவு நன்பக லுங்கன லாச்சிய மெனுமிந்
நரகு வீழ்ந்தனர் கற்பமோ ராயிர நடந்த.

(இ - ள்.) சிவபெருமான் திருக்கோயிலுக்குரிய பசுவைப்பற்றித்தானமாகக் கொடுத்தவனும், அப்படித்தானஞ்செய்ததைத் தன் மனதிற்றெளிவெய்த உணர்ந்திருந்தும் அப்பசுவை வாங்கி மீண்டும் சிவாலயத்திற்குக்கொடாத மன்னவனும், இரவும் பகலும் வேதனைசெய்வதாகிய இந்த அனலாச்சியமென்னு நரகத்தில் வீழ்ந்தார்கள். ஓராயிரங் கற்பங்கள் சென்றன. எ - று. (௧௭௭)

இன்ன ரன்றியு மீங்கிவர் குலத்துளோர் யாருந்
துன்ன ரும்பெரு நரகுவீழ்ந் தளவிறு டொலைப்பா
ரென்ன வெந்திற லந்தக னியம்புறக் கேட்டா
ரன்ன கேட்டுழித் தருமரு மதிசய மடைந்தார்.

(இ - ள்) இவர்களல்லாமல், இவர்கள் குலத்திற்பிறந்தவர்கள் யாவரும் வீழ்தற்கரிய மேற்கூறிய அனலாச்சியமென்னு நரகத்தில் வீழ்ந்து கணக்கில்லாத காலங்கழித்து வருகின்றார்கள். என்று பெருவல்லபமுடைய இயமன் கூறத் தருமர் கேட்டார். அப்படிக்கேட்கும்போது தருமரும் வியப்பெய்தினர்.

உரைத்த பொய்ம்மையாற் றருமரு நரகுகண் டொழித்தார்
நிரைத்த மாமணி மானமீச் சிறந்தனர் நிரைத்து
விரைத்த பூமழை யிழிதர விண்ணவர் வியப்ப
விரைத்த வன்பொடுங் கற்பக நீழல்வீற் றிருந்தார்.

(இ - ள்.) (பாரதயுத்தத்தில்) சொல்லிய ஒரு பொய்ம்மொழியால் தருமரும் அக்கொடிய நரகத்தைக் கண்களாற் கண்டு அப்பாவத்தை யகற்றிக்கொண்டார். அதன் பின்னர், வரிசையாயுள்ள சிறந்த நவரத்தினமிழைத்த விமானத்திலாரோகணித்து, நிரம்பிய மணங்கமழும் மலர்மழையைத் தேவர்கள் சொரிந்து சந்தோஷிக்கும்படி மிகவும் அதிகரித்த அன்போடு கற்பகவிருட்ச நீழலில் வசித்திருந்தனர். எ - று. (௧௭௯)

காதை யின்னமொன் றுளததது புகல்வது கருதித்
தீதின் மாதவர் கேண்மினென் றருந்தவத் திருத்துஞ்
சூத மாமுனி சொற்றன னங்கவர் தொகுப்பா
யேதின் மாக்கதை யென்றலு மெடுத்தெடுத் திசைப்பான்.

(இ - ள்.) இன்னுமொருசரிதையுள்ளது. அதனையுஞ்சொல்லுவோம், குற்றமற்ற பெருந்தவமுடையோரே! கவனத்துடன் கேட்பீர்களாகவென்று, அரிய தவமார்க்கத்தில் மனத்தை நிறுத்திய பெருமைதங்கிய சூதமுனிவர் சொல்லினர். அந்த நைமிசாரணிய முனிவர்கள் எல்லோரும் அச்சிறந்த சரித்திரம் யாதென்று வினவவும், விரித்து விரித்துச்சொல்லுகின்றனர். எ - று. (௧௮௦)

தொல்லை நேமியோ னுந்தியந் தாமரைத் தூயோ
னெல்லை காண்பரு முலகெலாங் காண்பதற் கெண்ணி
யொல்லை யோதிம முகைத்தெழுந் தவ்வழி யொருங்கே
செல்ல நோ[illegible]னன் கடைமுறை யடைந்தனன் றென்பால்.

(இ - ள்.) பண்டொருகாலத்தில், சக்கராயுததாங்கிய திருமாலின் அழகிய உந்திக்கமலத்திலுதித்த பிரமதேவன், அளவு காணுதற்கரிய உலகங்களையெல்லாம் பார்ப்பதற்குக்கருதி, அதிவேகமாகத்தனது அன்னவாகனத்தை நடத்திக்கொண்டு புறப்பட்டு, முழுவதுஞ்சென்று பார்த்துவிட்டுக் கடைசியில் இயமபுரத்திலெய்தினன். எ - று. (கஅ௨)

செலவு மத்திசை நரகெலா மொருங்குறத் தெரிந்தா
னலலன் மன்பதை யலமர வெருவிநெஞ் சழிந்தான்
சொல்லு மாத்திரை விண்புகு மனத்தொடுஞ் சுழலா
நில்லி தற்கயல் போகலை யென்றனன் விமலன்.

(இ - ள்.) தான் சென்ற அத்திசையிலுள்ள நரகங்களில் ஆன்மகோடிகள் துயரத்தோடு வருந்திக்கொண்டிருக்கப்பயந்து மனங்கலங்கினன். சொல்லிய மாத்திரத்திலேயே தேவலோகத்தை யடையத்தக்க அன்னவாகனத்தோடு, இதற்கப்பாற் செல்லவேண்டாம் சுழலாமல் நிற்கவென்று பிரமன் கூறினன்.

ஆதி நான்முகத் தந்தண னுரைத்தலு மன்ன
மேதி தற்கய லென்னலு மேறுகைத் தவற்குத்
தீதி ழைத்திடு சிவத்துரோ கரைநெறு நிரையம்
போத லாங்கவர்க் காண்பரி தென்றனன் புனிதன்.

(இ - ள்.) (முதற்றொழில்களில்) முதற்றொழிற்றலைவனாகிய பிரமன் இப்படிச்சொல்லவும்; இதனருகே யாது உள்ளது? என அன்னம் வினவவும், இடபவாகனத்தைச்செலுத்துஞ் சிவபெருமானுக்குத் தீமைசெய்த சிவத்துரோகிகளைத் தண்டனைசெய்யும் நரகங்கள் வரப்போகின்றன. அங்கேயுள்ள அவர்களைக்காண்பது அரிதாகுமென்று பிரமன் சொன்னான். எ - று. (கஅ௩)

செய்த பாதக மெவற்றினுஞ் சிவத்துரோ கங்கள்
வெய்து கொலலெனப் பின்னரு மோதிமம் வினவக்
கொய்து ரைப்பன மறைகளு மாகமக் குலமு
மூய்த ரும்பல புராணமு முரைப்பன வுணராய்.

(இ - ள்.) ஒருவன்செய்த பாதகங்களெல்லாவற்றினும் சிவத்துரோகங்கள் மிகக்கொடுமையானவைகளா? என மீண்டும் அன்னவாகனம் கேட்க, விரித்துச்சொல்லுவனவாகிய வேதங்களும் சிவாகமதொகுதிகளும் ஆன்மாக்கள் கடைத்தேறும் வழியைப்போதிக்கும் பல புராணங்களும் முறையிடுவனவற்றைத்தெரிந்தாயில்லை. எ - று. (கஅ௪)

உருத்த பாதக மென்றுள யாவையு மொருங்கே
திருத்து மன்னவர் புண்ணியத் தாலவை தீருஞ்
செருக்கு வார்சடை யெம்பிரான் சிவத்துரோ கங்கள்
கருத்தி னோர்ந்துசெய் யெவற்றினுங் கழியுமோ கழியா.

(இ - ள்.) பெரும் பாதகமென்றுள்ளனவெவையோ அவையெல்லாம், அவற்றைச்செய்தவர்கள் செய்கின்ற புண்ணியத்தால் முற்றும் நீங்கும். ஆனால், செருக்குள்ள நெடிய சடையையுடைய எமது சிவபெருமானுக்குச்செய்த சிவத்துரோகங்கள் மனதினால் அறிந்து செய்கின்ற எப்படிப்பட்ட பிராயச்சித்தத்தினாலும் நிவாரணமாகுமோ? நிவாரணமாகாது. எ - று. (கஅ௫)

என்றெடுத்தெடுத் திசைப்பன மறைகளும் யாவு
மின்றவர்செல நோக்கினும் பழிவரு மெமக்கு
மின்று மீளுதி யென்றனனெடுமலர்க் கிழவ
னன்று வெண்சிறை யன்னமற் றயற்கிது சொல்லும்,

(இ - ள்.) என்று வேதங்களும் மற்றுள்ள எல்லா நூல்களும் விரித்து விரித்துச்சொல்லுகின்றன. இப்போது அவர்கள் படுந்துன்பத்தைப்பார்த்தோமானாலும் நமக்கு பாதகம் சித்திக்கும், ஆதலால் இங்கு நின்றும் திரும்பிவிடுகவென்று சிறந்த செந்தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமன் சொல்லினன். அப்போது வெள்ளிய சிறகுகளையுடைய அன்னம் பிரமனுக்கு இப்படிச் சொல்லுகின்றது. எ - று. (௧௮௭)

கொழுந்து விட்டெரி வடவையங் கொழுந்தழ னடுவ
ணெழுந்த வச்சிர நெடுந்தறிக் காயபிணித் திறுக்க
வழுங்கு மெய்துடித் தரற்றின னொருவனிங் கிவனு
லொழுங்க றப்படு பாதக மிதுவென வுரைபபாய்.

(இ - ள்.) கொழுந்துவிட்டெரிகின்ற கொழுவிய வடவாமுகாக்கினியின் இடையிலே விளங்கிய நீண்ட வச்சிரதம்பத்திலே, ஒருவன் தன் கைகளைச் சேர்த்துக்கட்ட வருந்தப்படுகின்ற உடல் துடித்துப்புலம்பினன். இங்குள்ள இவனாலே நீதியற்றதாகச்செய்த பாதகம் இதுவென்று கூறவேண்டும். எ-று.

எனப்புகன்றிடு மோதிமத் தெதிருற நோக்கி
யுனக்குரைக்குது மீங்கிவன் றன்மையென் றுரைப்பான்
புனற்படுஞ்சவு ராட்டிர நாட்டகம் பொருந்தி
மனக்குவப்பன புரிவது சவுரமா நகரம்.

(இ - ள்.) என்று சொல்லுகின்ற அன்னத்தைநேராகப்பார்த்துப் பிரமன் இவன் தன்மையை உனக்குச்சொல்லுகின்றேனென்று சொல்லுகின்றான். நீர்வளம்பொருந்திய சவுராஷ்டிரநாட்டில பொருந்தி மனத்திற்குப்பிரியமுள்ளனவற்றைச்செய்வது சிறந்த சவுரநகரம். எ - று. (௧௮௮)

அந்த மாநகர்ப பரதவர் கோத்திரத் தமைமா தான்
சிந்தை நல்லொழுக் குணர்ந்துறச் செலுத்திய செல்வன்
விந்தை பூசனை யுவப்பினு விருந்தி மிகையா
லுந்து சிந்தையன் சுத்தனென் றொருபெய ருடையான்.

(இ - ள்.) அந்தச்சிறந்த சவுரநகரத்திலேயுள்ள வைசியர்குலத்திற் பிறந்தவனும், மனமானது நன்மார்க்கத்தைத் தெளியும்படி செலுத்திய செந்நெறியுடையவனும் [விந்தை] காளிகாதேவியைப்பூசைசெய்த களிப்பினாலே பெருஞ் செல்வப்பெருக்கிலே செலுத்திய கருத்துடையவனுமாகிய சுத்தனென்னும் பெயர்பெற்றவனொருவனிருந்தான். எ - று (௧௮௯)

தரும நீதியன் றயவினுற் றுவினு மூரிய
னொருவ னுற்றனித் தொழிற்படுத் தொருவனைப் படுத்தான்
மருவு நாள்பல அழிந்தபின் னொருகெட லேறிப்
பொருவ ருங்குல வாணிபத் தொருநெறி போனான்.

(இ - ள்.) தருமநீதியுடையவனும், கிருபையில் அன்னையினுஞ் சிறந்தவனு மாகிய அவன், ஒழிவில்லாத மிக்க கொடூரமான வேலையைக்கொடுத்து ஒருவனைக்கொன்றான். கழிந்துகொண்டிருக்கும் பல தினங்கள் கழிந்தபின்பு, (சகரரால்) தோண்டப்பட்ட கடலில் மரக்கலமிவர்ந்து, ஒப்பற்ற தங்கள் குலவியற்கையாகிய வர்த்தகத்திற்காக ஒருவழியாகப்போனான். எ - று. (௧௬0)

ஓட்டு வெண்டிரை நெடுங்கட னடுவகத் துற்றான்
மூட்டு தீவினை யிருந்தவ முழக்கெழும் புயலா
னீட்டு மாருத மலைப்புற நெடுங்கலங் கவிழ்ந்து
மாட்டி ருந்திரை யெடுத்தெடுத் தெறிதா மருண்டான்.

(இ - ள்.) பாய்கின்ற வெள்ளிய அலைகளையுடைய நெடிய கடலினிடையே போயினன், அப்பொழுது அதிகரித்த கொலைபாதகமிருந்து, அவ்விடத்திலே கர்ச்சிக்கின்ற மேகத்தினாலே, விசேடித்த சுழல்காற்றுவீச அவன் ஏறிச்சென்ற மரக்கலமானது கவிழ்ந்து, பாய்கின்ற பெரிய அலைகள் மரக்கலத்தைத்தூக்கித் தூக்கியெறிந்ததால் மயங்கினான். எ - று. (௧௬௧)

கருங்க டற்கலங் கவிழ்தர வெருவருங் காலை
முருங்கு முத்தலைச் சூற்படைக் கொற்றவை முன்னி
வருந்து றுவழி யக்கல னவனொடும் வருத்தித்
திருந்து சிந்தையன் போயின னிதியொடுஞ் சிறந்தான்.

(இ - ள்.) கரியகடலில் மரக்கலங்கவிழப் பயமெய்தியிருக்குந்தருணத்தில் பகைவர்களை யழிக்கத்தக்க, முத்தலைச்சூலப்படைதாங்கிய காளிகாதேவி திருவுளங்கொண்டு, அவன் வருத்தமெய்தாதவகையாக அம்மரக்கலத்தை அவனோடு கரையில் வருவிக்க, தெளிந்தமனமுடையவனாய்ச்சென்று செல்வப் பெருக்கத்தோடு வாழ்ந்திருந்தான். எ - று. (௧௬௨)

மடுத்த வங்கமு மேறிய மாக்களும் வங்கங்
தொகுத்த பல்பொருள் யாவையுந் தோமறக் கிடைத்தான்
பகுத்த சூற்படைக் கவுரியாற் பயந்தன னென்று
நெகிழ்ந்த சிந்தையா னெடுநிலந் தொழுதுற நின்றான்.

(இ - ள்.) நியமனஞ்செய்துகொண்ட மரக்கலமும், அதிலேறிய மாந்தர்களும், அம்மரக்கலத்தில் ஏற்றியிருந்த பலவகைச்சரக்குகள் யாவும், பழுதறக் கிடைக்கப்பெற்றான். முத்தலையாகப் பிரிந்த சூலப்படைதாங்கிய காளிகையினாற் காப்பாற்றப்பெற்றானென்று, உருகிய மனதோடு நெடிய நிலவுலகத்தார் பலரும் பணியும்படியிருந்தான். எ - று. (௧௬௩)

ஆய காலையி னன்னவன் கடிமனை யகத்துத்
தூய மங்கல மணவினை யயர்தரத் தொடுத்தான்
வாயில் காவணம் வகுத்தனன் வேண்டுவ வருத்தி
மேய போனக மமைத்தனன் குலத்துளோர் வியப்ப.

(இ - ள்.) அக்காலத்தில் அவனுடைய காவல்பொருந்திய வீட்டில், புனிதமான மங்கலகரமாகிய திருமணச்சடங்கு நடத்தும்படி தொடங்கினான்; வாசற்படியிலே பந்தரிட்டு, அத்திருமணத்திற்கு வேண்டியவற்றை வருவித்து தங்கள் குலத்திலுள்ளவர்கள் யாவரும் அதிசயமெய்தும்படி பொருத்தமான போஜனம் சமைப்பித்தான். எ - று. ([illegible])

தூரி யம்பல முழங்குறச் சுரிமுக மிரங்க
வூரி யாவரு மிடைந்துற நான்மறை யொழுங்கான்
மூரி வேதியர் வரன்முறை மொழிதர முயன்று
பூரி கோடியின் மேற்செல மணவினை புரிந்தான்.

(இ - ள்.) பலவித வாத்தியங்களொலிக்கவும், (சுரிமுகம் = சுரிந்தமுகத்தை யுடையது) சங்குகள் முழங்கவும், அந்நகரத்திலுள்ளவர்கள் யாவரும் சேர்ந்திருக்கவும், நான்கு வேதங்களின் முறைப்படி பெரியோர்களாகிய வேதியர்கள் கிரமமாக விவாகச்சடங்குகளைச்சொல்லிக்கொண்டுவர, அப்படியே செய்து முடித்து, கோடிக்கு அதிகப்பட்ட அந்தணர்கட்குப் பூரிகொடுத்துத் திருமணமுடித்தான். எ - று. (கசு௫)

பாடு மின்குரல் வயிரியர் கண்ணுளார் பரதத்
தாடு கோகிலக் குதலையர் புகழ்ந்தவ ரடைந்தா
ரேட விழ்ந்தல ரிதழியஞ் சடைமுடி யெமமா
னீடு மாலயத் தாதியர் யாவரு நிறைந்தார்.

(இ - ள்.) பாடுகின்ற இனிய குரலோசையையுடைய பாணர்களும் நாடகர்களும், பரதநூன்முறைப்படி நடனஞ்செய்யும் குயில்போலுங் குதலைச்சொல்லையுடைய கணிகைமாதர்களும், புகழ்ந்துபாடுகின்றவர்களும், அத்திருமணத்திற்கு வந்திருந்தார்கள். இதழ்கள் விரித்து மலர்கின்ற கொன்றைமலர்மாலைதரித்த அழகிய சடைமுடியையுடைய எமது சிவபெருமானுக்குரிய திருக்கோயில் உருத்திர கணிகையர்களும் நிறைந்திருந்தார்கள். எ - று. (கசுசு)

செல்ல நின்றவர்க் கினியன வடிசிலுஞ் சிறப்பு
மல்ல லோங்குறப் புரிந்தனன் மணவினை முற்று
மெல்லை நாட்சவு ரேசுரத் தாதியெம் பெருமான்
புல்ல முத்திரை பொறித்தவட் களித்தனன் புந்தி.

(இ - ள்.) சென்றிருந்தோர் யாவர்க்கும் இனிமையான போசனமும் வரிசைகளும் வளப்பம் அதிகமுறச்செய்தனன். திருமணச்சடங்கு முடிகின்ற கடைசிநாளில், சவுரேச்சுவரமென்னும் அவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள எமது சிவபெருமானுடைய இடபமுத்திரை போடப்பட்டிருக்கும் தாசியின்மீது அவன் மனதைச்செலுத்தினன். எ - று (கசுஎ)

அளவ றுந்தன மளித்தன ளுங்கவட் கயர்ந்து
புளக வெம்முலை தாயினன் வெள்ளிடைப் புகுதா
னிளகு நெஞ்சினன் விடுதில னவளையா துணர்ந்தா
ரளவ வாணனை யிடத்திலே ளுலயத தவர்கள்.

(இ - ள்.) அளவிறந்த செல்வத்தை அவளுக்காக மனமுருகிக்கொடுத்தான். விம்மிதமெய்தி விருப்பந்தரத்தக்க அவள் தனங்களில் தோய்ந்தான். அன்பால் மனமுருகிய அவன் வெளியேவராது அவளை நீங்காதிருந்தான். அரும்புபோல் ஒளிதங்கிய தந்தங்களையுடைய உமாபிராட்டியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் திருவாலயத்தினர்கள் இச்செய்தியை யுணர்ந்தார்கள், எ - று. (கசுஅ)

ஆவி னேற்றிறை யாலயப் பரிகலத் தவளை
மேவு சிந்தையின் மனையகத் திருத்துதல் வழக்கோ
மேவு மன்னவள் வெளிவர விடுதியென் றிசைத்தார்
பாவி யன்னளை விடுத்தில னாசையுட் படலால்.

(இ - ள்.) இடபவாகனமுடைய சிவபெருமான் திருக்கோயிற்றாசியை இச்சித்த மனதோடு உன் வீட்டில் வைத்துக்கொண்டிருப்பது தருமமோ? உன்பால் வந்திருக்கும் அத்தாசியை உன் வீட்டிற்கு வெளியே வருமாறு விட்டு விடுவாயாகவெனச் சொன்னார்கள். அப்போதும் அவள்மேல் வைத்த ஆசைக்குத்தான் உட்பட்டிருப்பதால், பாவியாகிய அவன் அவளை விடவில்லை. எ - று.

அலங்கு பொன்முடி யரசனுக் குரைத்தன ரரசன்
வலங்கொ டூதரா லமைச்சனை வரவழைத் தருளி
நலந்த ருஞ்சிவ ரேச்சுரத் தாதியை நயப்பான்
விலங்கு சிந்தையன் விடுத்திலன் போலுமோர் வினைஞன்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பொன்முடியணிந்துள்ள அரசனுக்கிதனைத் தெரிவித்தார்கள். அதுகேட்ட மன்னவன் உடனே வல்லமையுள்ள தூதர்களால் மந்திரியை வருவித்து யாவருக்கும் நன்மையைச்செய்கின்ற சிவரேச்சுரமென்னுந்திருக்கோயிற்றேவதாசியை ஆசையினாலே, நன்மார்க்கத்தினின்று நீங்கிய சித்தமுடைய ஒரு பாவிதனியே விடவில்லை. எ - று. (௨௦௦)

நீய வட்புகுந் தக்குலத தாதியை நிமலன்
கோயி லுட்பட விடுத்தனை வருகெனக் குணியா
வேய வேந்தனை தொழுதன னமைச்சனு மெழுந்து
போய வற்குரைத் தருத்தன னங்கவள் பொருட்டான்.

(இ - ள்.) நீயங்கேபோய அத்தேவதாசியைச் சிவாலயமெய்தும்படி விட்டு விட்டு வருவாயாகவெனக் கட்டளைதந்தான். அக்கட்டளையைக்கேட்ட மந்திரியும் அதனைக்கவனித்து நன்மை தங்கிய மன்னவனை வணங்கிப்புறப்பட்டுப்போய், அவ்வுருத்திரகணிகையைக்குறித்து அவ்வைசியனுக்கு மன்னவன் கட்டளையையுணர்த்தி அதட்டினான். எ - று. (௨௦௧)

அரச னாற்றிய கடன்முறை யுணர்ந்துசொல் லமைச்சைப்
பரவி வேண்டிய பசும்பொனாற் றன்வசப் படுத்தான்
விரசி மீண்டன னமைச்சனு மாங்கிதி விருப்பா
லுரவு வேந்தனுக் கருளசின மாற்றிநின் றுரைத்தான.

(இ - ள்.) அரசன்கொடுத்த கட்டளையை யுணர்ந்துகொண்டு தன்பாற்கூறும் மந்திரியை வணங்கி, அவனுக்குவேண்டிய செல்வங்களைக்கொடுத்துத் தன் வசஞ்செய்துகொண்டான். பெரும்பொருள் வேட்கையால் அம்மந்திரியும் திரும்பி நெருங்கி, வலிதங்கிய அம்மன்னவனுக்கு நிகழ்ந்த சுங்கோபத்தைத்தணித்து நேர்நின்று இப்படிச்சொல்லுகின்றான். எ - று (௨௦௨)

அற்ற நோக்கினின் றனிப்பவ னிருநிலத் தெவர்க்கும்
பெற்ற தாயினு முனிவனிப் பெரும்பிழை பொறுத்தவன்
மற்று ரைப்பதென் கோடியின் மேற்செல வழங்கு
மிற்றை யின்றுகொண் டொழிதியென் றமைச்சனு மிசைத்தான.

(இ - ள்.) (அவ்வைசியன்) சமயம்பார்த்து யாவர்க்கும் உதவத்தக்கவன். பெரிய உலகினர்க்கெல்லாம் பெற்றதாயைப்பார்க்கிலும் உரிமைவாய்ந்தவன். அவன் செய்துவிட்ட இப்பெருங் குற்றத்தை மன்னித்துவிட்டால் நான் வேறு சொல்லவேண்டிய தென்னவிருக்கிறது? இன்று இப்பொழுதே கோடிப்பொன் னுக்கும் அதிகமாகக்கொடுப்பான். பெற்றுக்கொண்டு கேசபந்தவிர்ப்பீராக வென்று மந்திரியாகித்தான். எ - று. (௨௦௬)

எதிர மைச்சனை யழலெழ வெகுண்டன னிறைவ
னிதிவி ருப்பினு லுரைத்தனை நிலாப்புனை வேணிக்
கதிர்ம ழுப்படை யெம்பிரான் றிருவருள் கறுப்பி
னதிர்ப கட்டுடை யந்தகன் படுப்பதொன் றறியாய்.

(இ - ள்.) நேர்நின்று மந்திரியை மன்னவன் தீப்பொறிபறக்கப் பார்த்துக் கோபித்து நீ பொருள்வேட்கையால் இப்படிக்கூறினை. சந்திரனையணிந்தசடை முடியும் ஒளிவீசும்மழுவாயுதமுமுடைய எமதுசிவபெருமான் திருவருள்கோபித் தாயின், அதிர்ச்சியோடு கூடிவருகின்ற எருமைக்கடாவாகனமுள்ள இயமன் செய்யும்வேதனையொன்றையும் நீயறிந்தாயில்லை. எ - று. (௨௦௭)

போதி யீசன தாலயப் பணிவிடை புரியுந்
தாதி யின்றொடு விடுக்குதி யெனுமுறை சாற்று
நீதி நேர்ந்துடன் விடுக்கினன் றல்லது நிகழ்த்திற்
பாத கத்தனவ் வணிகனைக் கொணர்கெனப் பணித்தான்.

(இ - ள்.) நீ மீண்டும் செல்க. சிவாலயப் பணிவிடைசெய்யுந்தேவதாசியை இன்றேவிட்டுவிடக் கடவாயென்றும் நமது கட்டளையைச் சொல்லுக. இந்நீதிக் கிசைந்து உடனே விட்டுவிட்டால் நன்று. அதற்குமாறாகக் கூறுவானாயின், அதிபாதகனாகிய அவ்வைசியனை ஈண்டழைத்துவருகவெனக் கட்டளைதந்தான்.

மொழிந்த தொன்றுமுற் றுணர்ந்தில னமைச்சனு முறைமை
கழிந்த மாநிதி விருப்பினு லாங்கது கருதாப்
பொழிந்த மாமணிக் கனைகழற் புரவலன் பொருமா
வெழுந்த சீற்றமிக் கெழுந்தனன் வணிகனில் லிடத்து.

(இ - ள்.) அம்மந்திரியும் மன்னவன் கூறியவற்றில் ஒன்றையும் நீதியற்ற பெரும்பொருள் விருப்பத்தால் தெரிந்துகொள்ளவில்லை. சிறந்த நவரத்தினங்க ளிழைத்துச் சப்திக்கின்ற வீரகண்டாமணி தரித்த அம்மன்னவன் இதனைக் கருதி, விசேடித்துத்தோன்றிய கோபமிகுந்து அவ்வைசியன் வீட்டிற்குப்போ யினன். எ - று. (௨௦௮)

உருத்த சீற்றமிக் குருவுகொண் டனையவற் கொருங்கே
பெருத்த சேனையும் பிறகுற வணிகனிற் புகுந்து
மருத்த வார்குழற் றுதியை வம்மென வருத்தி
யருத்தி யீசன தாலயம் புகுந்துற வணித்தான்.

(இ - ள்.) கவ்வேகோபம் மிகுந்து ஓருருவெடுத்தாற்போன்ற அம்மன்னனுக் குத்துணையாக ஒன்றுகூடிக்கிரண்ட சேனைகளும் பிற்பட்டுச் செல்லும்படி அவ்வைசியன் வீட்டினுட்புகுந்து, மணமுடைத்தாகி நீண்டகூந்தலையுடைய அத்தேவதாசியை வருகவென்று வரவழைத்து, ஆனந்தத்துடனம் பரியம்விளங்கு மாறு திருக்கோயிலையடையும்படி செய்தித்தான். எ - று. (௨௦௯)